மொழியியல்

தொகுதி 10 ஜூலை-ஜூலை எண் 1, 2, 3 & 4

பதிப்பாசிரியர்கள்

ச. அகத்தியலிங்கம்

சு. இராசாராம்

அ. ஜேம்ஸ்

சிறப்புப் பதிப்பாசிரியர்

அ. காமாட்சிநாதன்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகத்தின்
காலாண்டு இதழ்
1987

T13398
R005A07

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர் : டாக்டர் செ. வை. சண்முகம் (அண்ணாமலைநகர்)

துணைத் தலைவர் : டாக்டர் வி. ஆர். பிரபோத்சந்திரன் நாயர் (கேரளம்)

செயலாளர் : டாக்டர் ச. அகத்தியலிங்கம் (தஞ்சாவூர்)

பொருளாளர் : டாக்டர் க. பாலசுப்பிரமணியன் (அண்ணாமலை நகர்)

உறுப்பினர்கள்: திரு. எம். ஏ. நுஃமான் (இலங்கை)
திரு. டி. கெ. இரகுநாதன் (சென்னை)
திரு. க. மகாலிங்கம் (அஸ்ஸாம்)
டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் (மைசூர்)
டாக்டர் ஏ. கோபால் (அல்ஜிரியா)
திரு. இரா. இளவரசு (சென்னை)
செல்வி. இரா. பானுமதி (கல்கத்தா)
திரு. க. இராசரத்தினம் (கிருட்டிணகிரி)

மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்

காலாண்டு இதழ்

கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் கட்டணம்	ரூ 300-00	US $ 75-00
ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 450-00	US $ 112-00
ஆண்டுக் கட்டணம்	ரூ 30-00	US $ 7-50
ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 45-00	US $ 10-50
ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு)	ரூ 15-00	

செய்கைகள் சொற்களைவிட உரக்கப் பேச வல்லவை
"Action Speaks Louder than words"

வி. கீதா & எஸ். கிருட்டிணமூர்த்தி

அண்ணாமலை நகர்

சுருக்கம்

மொழி என்பது எண்ணங்களின் வடிவ அமைப்பாகும். அம்மொழியினை i. வாய்மொழியானவை ii. வாய்மொழியல்லாதவை என இருவகையாகப் பிரிக்கலாம். வாய்மொழியானவற்றில் சொற்களின் பரிமாற்றத்தை அறிய முடிகிறது. ஆனால் வாய்மொழியில்லாதனவற்றில் முகக் குறிப்பு, கண் தொடர்பு, சைகைகள் போன்ற பல கூறுகளைக்கொண்டு தான் உணர முடிகிறது. இக்கூறுகளைப்பற்றி பல்வேறு அறிஞர்கள் தங்கள் கருத்தினை எடுத்துரைக்கிறார்கள். ஆபர்க்குரோம்பி, ஜான்லாபர், சான்டி ஹட்சிசன், ஜர்கன்ரூஷ்-வெல்டன்நீஸ் போன்றோர்கள் இக்கூறுகளின் இன்றியமையாமையை விளக்கியுள்ளார்கள்.

உதாரணமாக ஆங்கிலத்தில் வரும் வியப்பிடைச் சொற்களான Whew, Un-huh, ahem முதலியன. மற்றும் தமிழில் வரும் ச்சீ. ம்ஹீம், த்சொசொ முதலியவற்றின் உச்சரிப்பு வாய்மொழி உச்சரிப்புகளுடன் தொடர்பற்றதாயினும் மனிதர்களின எண்ணங்களைப் பிரதிபலிப்பதில் வாய்மொழியுடன் தொடர்புடையனவாக இருப்பது நோக்கத்தக்கது.

இத்தகைய வாய்மொழியல்லாத கூறுகளாகிய வாய்மொழித் தொடர்பு, கண்வழித்தொடர்பு, சைகைகள் வழித்தொடர்பு முதலியவற்றை மேற்கூறிய அறிஞர்களின் கருத்துக்களின் அடிப்படையில் விளக்குகிறது இக்கட்டுரை.

1-0 முன்னுரை

மக்கள் தங்களுடைய எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்க உதவும் ஒரு கருவியாக மொழி பயன்படுகிறது. வாய்மொழி (Verbal language) மட்டுமின்றி வாய்மொழியல்லாத பிறவும் (Non-verbal) மொழிக் கூறுகளும் தகவல் தொடர்பிற்கு (Communication) உதவி செய்கின்றன. வாய்மொழித் தொடர்பின்போது குரல் நாண்கள் அதிர்ந்து ஒலிகளை எழுப்புவதன் மூலம் கருத்துப் பரிமாற்றம் நடைபெறுகிறது. ஆனால், 'உரையாடலின்போது நமது முழு உடலையும் பயன் படுத்துகிறோம் அதில் வெறும் சொற்பரிமாற்றத்தை விட மேலும் பல செய்திகள் அடங்கியுள்ளன,' என்பார் ஆபர்க்குரோம்பி (Abercrombie D : 1968). பேராசிரியர் ஜான் லாவர் மற்றும் சான்டி ஹட்சிசன் (John Laver & Sandy Hucheson : 1972) தங்களுடைய புத்தகத்தின்[1] முன்னுரையில் வாய்மொழியல்லாத மொழிக்கூறுகளின் இன்றியமையாமையைப் பின்வருமாறு விளக்குகிறார்கள்:

"உரையாடல் (எனும் ஆடையை நெய்ய) பேச்சாகிய பாவு இழைகளோடு முகக்குறிப்பு, கண்தொடர்பு, சைகைகள் (உரையாடுவோரிடையே உள்ள) நெருக்கம், உடல் அமைப்பு... ... முதலிய ஊடு இழைகளும் தேவையாகும்"

எனவே உடலசைவுகள், பொருளற்ற ஒலிகள் (Meaningless verbal sounds) முதலியவற்றையும் பயன்படுத்தி நமதுகருத்தைக் கேட்

போருக்கு வலியுறுத்திக் கூறுகிறோம். மேலும் இவைபேசுவோர் கேட்போரின் பலவேறு உளநிலை உணர்வுகளை அவர்களை அறியாமலேயே குறிக்கும் காரணிகளாக அமைகின்றன. இத்தகைய வாய்மொழியல்லாத தகவல் தொடர்புக் கூறுகளில் சைகைகள் (Gestures), குறிமொழி (Sign), தனித்தோற்ற அமைவு (Postures), அசைவுகள் (Kinesic movements), நெருக்கவியல் (Proxemics) முகக்குறிப்பு (Facial expression), கண்வழித் தொடர்பு (Eye contact) முதலியவை அடங்கும். இவை மொழிக்கு அப்பாற்பட்டு இருப்பினும், மொழிவழிச் செய்திகளுக்குக் கூடுதல் பொருள் சேர்த்தலின், இவைகளைத் துணைமொழி (Paralanguage) எனலாம் என்பர் ஆபர்க்குரோம்பி.[2]

இக்கட்டுரையில் தகவல் தொடர்பிற்குப் பயன்படும் சில வாய்மொழியல்லாத கூறுகளைப் பற்றி காண்போம்.

1.1 வரலாற்றுப் பின்னணி

வாய் மொழியல்லாத தகவல் தொடர்புத் துறையில் ஆய்வு மிக அண்மைக் காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்கச் சமூகவியல் அறிஞர்கள் முதன் முறையாக இத் துறையில் கவனம் செலுத்தினர். அவர்களில் ஒருவரான பேர்டுவிஸ்டல் (**Bird whistel R. L:** *1961*) நவீன காலத் தகவல் தொடர்புத் துறையின் கோட்பாடுகள் மற்றும் பிற ஆய்வுகளுக்கு டார்வினின் (**Darwin:** 1872) கட்டுரை[3] ஒன்றை அடிப்படையாகக் காட்டுகிறார். அதில் டார்வின் மனிதன் மற்றும் விலங்குகள் தங்களின் உணர்ச்சிகளை (Emotions) வெளிப்படுத்துவதன் மூலம் தங்களுக்குள் கொள்ளும் தகவல் தொடர்பு முறைகளைத் தொகுத்து ஒரு சீரான கோட்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிததுள்ளார். அதன் பின்னர் சப்பீர் (**Sapir:** 1927) தம் கட்டுரைகளில்[4] மனிதனின் பேச்சு எவ்விதம் அவனுடைய ஆளுமை (**Personality**)யை வெளிப்படுத்துகிறது என்று விளக்கும் போது குரல் (Voice), ஒலியேற்றம் (**Intonation**) போன்றவற்றின் இன்றியமையாமையைக் குறிப்பிடுகிறார். இதைத் தொடர்ந்து வந்த கட்டுரைகள் பெரும்பாலும் மனநோய் மருத்துவர் நோயாளிகளிடம் நடத்தும் நேரடி உரையாடலின் போது நோயாளி அமர்ந்-

திருக்கும் விதம், பேசும் விதம் பயன்படுத்தும் சைகைகள், அசைவுகள், கண் வழித் தொடர்பு முதலியவற்றைத் தொகுத்து இவைகள் ஒலிவழிச் செய்திகட்குப் பொருள் சேர்க்கும் விதம் பற்றிக் குறிப்பனவாக அமைகின்றன. லாபர் (LaBarre: 1947) தன் கட்டுரையில்[5] சைகைகள் எவ்விதம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன என்று விவரிக்கும் போது இவைகளை" Sub linguistic 'language" என்று குறிக்கிறார். ட்ரேகர் மற்றும் ஸ்மித் (Trager & Smith: 1951) ஆங்கில மொழியின் ஒலியேற்ற அமைப்புகளைக்[6] (Intonation Structure) குறித்து விளக்கமாக ஒரு நூலை எழுதினர்கள். அதில் ஹில் (Hill, A. A: 1951) என்பவரின் பரிந்துரைப்படி ஒலியேற்றம் முதலியவற்றைத் துணைமொழி (Para language) என்று குறிப்பதாகக் கூறுகின்னார்கள். பேர்டு விஸ்டல் முன்னரே குறிப்பிட்ட கட்டுரையில் முன்மொழி (Pre- linguistics) எனற சொல்லைக் குறிப்பிட்டு "இது நாம் பேசும்போது பேச்சில் நுழையும் இயற்பியல் (Physical) மற்றும் உயிரியல் (Biological உடனிகழ்ச்சிகளாக ட்ரேகரால்[8] பேச்சு மொழியிலிருந்து வேறுபடுத்தப் படுவாதகக் கூறுகிறார் எனவே Para-, Sub- என்ற ஆங்கில முன்னொட்டுகள் ஒரே பொருளான துணை (மொழி) என்பதைக் குறிப்பதாகக் கொண்டாலும் இதிலிருந்து முன்மொழி எவ்விதம் பிரித்து உணரப்படுகிறது என்பது தெளிவாக விளக்கப் படவில்லை" மேலும் கூடுதல் மொழி (Extra linguistics) என்ற மொழிக்குப்புறம்பான கூறுகளைப் பற்றிச் சொல்லுமிடத்தில்

"இவை வாய்மொழியல்லாத (Non verbal). மொழியல்லாத (Non-linguistic) துணைமொழிஅற்ற ஆனால் குரலுடன் (vocal) அல்லது குரலற்று (Non-vocal) வரும் கூறுகள்" என்று லாபர் குறிப்பிடுகிறார்.

ஆபர்க்குரோம்பி துணைமொழியை நாம் பேசும்போது ஒலிமொழியோடு கையாளும் ஒலியற்ற செயல்களாகவும் இவை நம் கருத்தை ஏற்றிக்கூற உதவுவதால் துணைமொழி என அழைக்கலாம் என்பார்.

ஆனால் ஆர்கைல் (Argyle : 1975) எது வாய்மொழி (verbal) எது குரல் மொழி என்பதில் சில ஐயப்பாடுகளை எழுப்பு-

கிறார்[9] எனவே நாம் ஜான் லாபரின் (1972 : பக் 12-13) பின் வரும் விளக்கத்தைக்கொள்ளலாம்;

"துணைமொழிக் கூறுகளானவை உரையாடலில் நாம் பயன் படுத்துகிற மொழியற்ற. வாய்மொழியற்ற கூறுகளாகும். இதில் குரல் மற்றும் குரலற்ற கூறுகளும் அடங்கும. இவை உரையாடலின் போது மிகத் திறமையான கட்டுப்பாட்டுடன் கையாளப்படுகிறது,"

மேலும் இது தொடர்பாக அவர் கீழ்க்கண்ட விளக்கங்-களையும் தருகிறார்[10].

1.1.1 குரல் வழித் தொடர்பு (vocal): பேச்சை உண்டாக்கும் போது உடன் நிகழும் அனைத்துச் செயல்களும் இதில் அடங்கும்.

1.1.2 குரல்வழியல்லாதவை (Non-vocal) பேச்சைத்தவிர ஏனைய தகவல் தொடர்புச் செயல்களின்போது நிகழும் இவற்றில் சைகை, தோற்ற அமைவு முதலியன அடங்கும்.

ஒலிவழித்தொடர்பு (verbal) உரையாடலில் வழங்கும் உண்-மையான மொழியின் அலகுகளாக விளங்கும் சொற்கள் இதில் அடங்கும். இவை எவ்விதம் உச்சரிப்பைப் பெறுகின்றன போன்ற செய்திகள் குரல் பற்றிய தன்மைகளிலிருந்து பிரித் தறியப்பட வேண்டும்.

1.1.3 வாய்மொழியல்லாதவை (Non - Verbal) அனைத்துக் குரல்வழி மற்றும் குரலற்ற உரையாடல் நடத்தைகள் இதில் அடங்கும் மேற்குறிப்பிட்ட பொருளில் இவை ஒலியற்றவை.

மேலே சுட்டப்பட்ட துணைமொழிக் கூறுகள் ஒன்று மற்றொன்றுடன் இணைந்து நின்று அறுவகைப் பாகுபாடுகளை காட்டுவதாக லாபர் கூறுகிறார்.[11] அவையாவன:

1. குரல்- ஒலிக் கூறுகள் (Vocal– Verbal elements) மொழியின் அலகுகளாகப் பேசப்படும் சொற்கள்.
2. குரல் (ஆனால்) வாய்மொழியல்லாத கூறுகள்;(Vocal– Nonverbal elements):

ஒலியேற்றம், பேச்சின் அழுத்தம், குரல் தன்மை முதலியன.

3. வாய்மொழியல்லாதக் கூறுகள்: (Non-Verbal elements): மொழியின் அலகுகளாக எழுதப்படும் மற்றும் அச்சில் வடிக்கப்படும் சொற்கள்.

4. குரலில்லாத வாய்மொழியல்லாதக் கூறுகள்: Non-Vocal Non-Verbal elements): முகக்குறிப்பு, சைகை, தோற்றத்தகு அமைவு முதலியன.

5. குரல் வழித் துணைமொழிக் கூறு; (Vocal- Paralinguistic குரலின் ஏற்ற இறக்கம் போன்றவை,

6. குரல் வழியல்லாதத் துணை மொழிக் கூறு: (Non-Vocal Paralinguisitic) சைகைகள், தோற்றத்தகு அமைவு, முகக் குறிப்பு, கண்வழித் தொடர்பு போன்றவை.

இந்த ஆறுவகைப் பாகுபாடுகளை நோக்குங்கால் அவற்றில் சில முறைமீறல் (Overlap)களாக இருப்பது கண்கூடு.

1.2 துணைமொழிக்கூற்றின் இயல்புகள்

ஆபர்க்குரோம்பி பின் வருவனவற்றைத் துணைமொழிக் கூறுகளின் இயல்புகளாகக் குறிப்பிடுகிறார்.

1. இவை உரையாடல் கலப்பின் (Conversational interaction) ஒரு பகுதியாக அமைந்து தகவல் தொடர்பிற்கு உதவும்.

2. இவை ஒரு சமூகக் குழுவிற்கும், பண்பாட்டுக் குழுவிற்கும் பொதுவானவையே அன்றித் தனிப்பட்டவரின் (Idiosyncratic) இயல்புகளாகா.

3. மனிதன் சார்ந்திருக்கும் பண்பாடே இவைகளை நிர்ணயித்தலால் ஒவ்வொரு சமூகக் குழுவிற்கும் இவை வேறுபடுகின்றன.

4. இவ்வேறுபாடுகள் அவ்வக் குழுக்களின் மொழிவேறுபாடுகளோடும், கிளைமொழி வேறுபாடுகளோடும் இணைந்து காணப்படுகின்றன. சில சமயம் ஒரு மொழி எல்லையைத் தாண்டியும் வழங்கப்படலாம்.

5. இவை பேச்சு மொழியோடு ஒரே சமயத்தில் வெளிப்படுத்தப்பட்டு முழுமையான தகவல் தொடர்பு ஒருங்கமைப்புக்கு (Total Communication System) வகை செய்கின்றன.

6. இவை நம்மை அறியாமலேயே, நமது உணர்வின்றி பேச்சுடன் வெளிப்படுத்தப்படும்.

7. இவற்றில் சில தனித்துப் பொருள் தரும். வேறு சில பேச்சு மொழியோடு வரும்போது மட்டுமே பொருள் தரும்.

8. இவை உரையாடுவோரின் உளநிலை (Psychic state ஆளுமை (Personality), சமூக உறவு (Social relation போன்ற பல பண்பாட்டுக் கூறுகளை எடுத்துக் காட்டுவனவாக அமைகின்றன.

1.3. வாய்மொழி மூலம் விலங்கினங்கள் குறிப்பாக கீழினங்கள் (Lower Animals) வாய்மொழியின்றி தங்களுக்குள் தொடர்பு கொள்கின்றன. பரிணாமக் கோட்பாட்டின்படி மனிதன் விலங்கினத்தில் பாலூட்டிகளின் பிரிவில் அடங்குவான. குரங்குகளின் மேம்பட்ட பரிணாமக் கட்டமே மனிதனாவான். பேசும் சக்தியும், பேச்சு மொழியும் மனிதனுக்கே உரித்தானவை. இது பற்றியே உயிரியலார் மனிதனை (Homo loquens) என்பர். அறிவியல் வகைப்பாடுகளின்படி மனிதன் (Homo sapiens) என்ற பிரிவில் வருவான். மனிதனின் மொழிவழித் தொடர்புக்குச் சில அடிநிலை உயிரினங்களின் செய்தித் தொடர்பு முறைகளையே மூலமாகக் கூறலாம். மனிதனிடம் இன்றும் வழக்கிலிருக்கும் மொழியல்லாத் தகவல் தொடர்புக் கூறுகள் பரிணாமக் கட்டத்தில் அவனிடம் தங்கிவிட்ட எச்சங்கள் (Relics) ஆகும். மனிதன் தன் கைகளை உபயோகிக்கத் கற்றுக் கொண்டதை மானிடவியலாரும், உயிரியலாரும் அவனது பரிணாம வளர்ச்சி-

யின் சிறப்பாக கட்டமாகக் கருதுகிறார்கள். கைகள் அவனுக்கு ஆயுதம் முதலியவற்றைச் செய்யப் பயன்பட்டதோடு தனது எண்ணங்களைத் தெரிவிக்கச் சில சைகைகளைச் செய்யும் கருவியாகவும் பயன்பட்டன. ஒவ்வொரு சைகைக்கும் ஒரு பொருளைக் கொண்டான். இவையே சித்திர எழுத்துகளுக்கு அடிப்படையாக அமைந்தன. நாளடைவில் இத்தகைய சைகை-களுடன் குரல் நாண்களையும் முறையாகப் பயன்படுத்தக் கற்று கொண்டு, ஒலிகளை எழுப்பி, காலப் போக்கில் மொழியை அமைத்துக் கொண்டான். ஆயினும் அவனை அறியாமலேயே அவனது விலங்கின மூதாதைகளின் குணநலன்கள் (சைகைகள், உறுமல்கள் இன்னபிறவற்றால் குறிப்பை உணர்த்துதல்)இன்றும் அவனது பேச்சு மொழியோடு வழக்கிலிருக்கின்றன.

1.4 மொழியில்லாத் தகவல் தொடர்பின் பகுப்புகள் இவற்றைப் பொதுவாக 1) சைகைகள். 2) அசைவியல், (Kinesics). 3) நெருக்கவியல் (Proxemics) 4) முகக்குறிப்புகள் 5) கண் வழித் தொடர்பு என்று வகைப்படுத்தலாம். முதலிய இவை யனைத்துமே துணைமொழிக்கூறுகளாய் அறியப்பட்டன ஆயினும் இவற்றுள் தகவல் தொடர்பிற்குப் பயன்படாத செயல்களும் அடங்கும்.

1.4.0 ஆபர்க்குரோம்பியின் பகுப்பு முறை (Abercrombies classification) ஆபர்க்குரோம்பி துணைமொழிக் கூறுகளை 1) கட்புலனாகும் கூறுகள். 2) செவிப் புலனாகும் கூறுகள் என்று பிரித்து இவை ஒவ்வொன்றையும் பேச்சு மொழியைச் சாந்து வருபவை, சாராது தனித்து வருபவை எனவும் பிரிக்கிறார்.

1.4.1 கட்புலனாகும் துணை மொழிக் கூறுகள் (Visible-Movements and Postures): இதற்கு எடுத்துக் காட்டாக உரையாடலில் பங்குபெறும் ஒருவர் அடுத்தவரின் கருத்தை ஆமோதித்து 'ஆம்' என்று கூறும் போது தன் தலையை மேலும் கீழுமாக ஆட்டலாம். அல்லது எதுவும் கூறாமலே வெறும் தலையாட்டல் மூலம் தன் ஒப்புதலைத் தெரிவிக்கலாம். இது பேச்சு மொழி இன்றி தனித்தே பொருள் தருதலின் சார்-பற்ற துணைமொழிக் கூறு எனலாம். சில உடலசைவுகள்

சைகைகளாகப் (Manual gestures) பயன்படுமிடத்தில் அவை பேச்சு மொழியோடு ஒரே நேரத்தில் வெளிப் படுத்தப்படும் தனித்துப் பொருள் தராது; எடுத்துக் காட்டாக ஒருவர் கூட்டத்தில் பேசுகின்ற சமயத்தில் தன் கருத்தை வலியுறுத்திக் கூறும்போது மேசையைக் கையால் குத்துதலைக் கூறலாம். தமிழில் வழங்கும் 'அடித்துச் சொல்வேன்' போன்ற வழக்கு ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. மேலும் மேடைப் பேச்சிகளில் பேச்சாளர் பயன்படுத்தும் கையசைவுகளையும் இந்தப் பிரிவில் வைகைப்படுத்தலாம். இவை போன்றவை சார்புடைய துணை மொழிக் கூறுகளாம்.

பெரும்பான்மையான கட்புலனாகும் சார்புடைய துணை மொழிக் கூறுகள் தனித்தோற்ற அமைவில் அடங்கும். அதாவது உரையாடும்போது நாம் உடல் முழுமையும் எப்படி வைத்து கொள்கிறோம் என்பதே தனித்தோற்ற அமைவு (Posture). ஒவ்வொரு தோற்ற அமைவுக்கும் உரையாடலில் ஒருவர் பெறும் பங்கைப் பொறுத்துத் தனிப்பொருள் உண்டு. இது உரையாடலில் தொடர்ந்து மாறுபடுவதாக ஷெப்லன் (Sheflen : 1964) என்பார் கருதுகிறார். இது பேசுவோர் மற்றும் கேட்பவரின் கருத்துக் கலப்பின் ஆரம்பம், முடிவு, புதிய கருத்துகளைக் கூறுமிடம், அதில் பங்கேற்போரின் சமூக உறவு முதலியவற்றையும் உணர்த்துகிறது. ஏனைய துணை மொழிக் கூறுகளைப் போலவே தனித்தோற்ற அமைவும் ஒவ்வொரு பண்பாட்டுக் குழுவிற்கும் வேறுபடுகிறது. ஆங்கிலேயர் அமர்ந்து உரையாடும் போது தங்கள் காலகளைக் குறுக்கே போட்டுக் கொள்வது அமெரிக்க மக்கள் போட்டுக் கொள்ளும் விதத்திலிருந்து வேறுபடுகிறது என்பார் ஆபர்க்குரோம்பி. இதுபற்றிய தனித்துறையே உடற்பொருளியல் (Body Semantics) எனப்படும். தமிழ்ச் சமுதாயத்தில் பொது இடங்களில் பெரியவர்கள் முன்னிலையில் அமர்ந்து பேசும்போது கால் மேல் காலைப் போட்டுக் கொண்டு பேசுவது தவறாகக் கருதப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

1.4.2 செவிப் புலனாகும் துணைமொழிக் கூறுகள் (Audible Paralinguistic elements) இவற்றிலும் சார்புடையன, சார்பற்றன என்ற உட்பிரிவுகள் உண்டு. வியப்பிடைச் சொற்கள் சார்பற்ற

உட்பிரிவில் அடங்கும். இவை மொழிக்கு இயல்பான ஒலியனியல் நெறிகளுள் அடங்கா ஆங்கிலத்திலுள்ள பின்வரும் வியப்பிடைச் சொற்களை ஆபர்க்குரோம்பி எடுத்துக் காட்டாகக்காட்டுகிறார் Whew, uh-huh, ahem முதலியன. இவை குறிக்கும் எழுத்தைப் பின்பற்றி ஏனைய சொற்களை உச்சரிப்பதுபோல இவற்றைப் படிக்க முடியாது. தமிழில் சில சமயங்களில் உறவு முறைப் பெயர்கள் (Kinship terms) வியப்பிடைச் சொற்களாகப் பயன் படுத்தப்படுகின்றன. அப்போது அவை ஒலியனியல் நெறிகளுள் அடங்கலாம். மற்ற நேரங்களில் உதாரணமாகத் தமிழில் வழங்கும் ச்சீ (cci :), ம்ஹீம், த்சொசொ போன்ற வியப்பிடைச் சொற்களில் மொழி முதலில் மெய்யெழுத்து ஒற்று (ச், ம், த்) வழங்கக் காண்கிறோம். இது தமிழ்மொழி ஒலியனியலில் அனு மதிக்கப்படாதது.

செவிப்புலனாகும் சார்புடைய துணைமொழிக் கூறுகள் பல்வேறு திறத்தவை. இவையெல்லாம் குரலியலில் (Voice Dynamics) அடங்கும். இதில் குரலின் ஏற்ற இறக்கம் (Tones of-Voice) பற்றி அறியப்படுகிறது. இத்தகைய துணைமொழிக் கூறுகள் இயல்பான சமூக மொழியியல கூறுகளினின்று ஒலிப் பளவு (Loudness), விறுவிறுடபு (Tempo) குரல் மாறுபாடு (Register) போன்ற வகையில் வேறுபடுத்தப்படுவதால் உரு வாக்கப்படுகின்றன, இது மட்டுமின்றி அழுகையினிடையே வரும் கேவல்கள் (Sobs), நகைப்பிடை பேச முற்படுதல், மென் குரல் பேச்சு (Whispering) முதலியவற்றையும் குரலியலில் அடக்குவார் ஆபர்க்குரோம்பி.

1.5 ட்ரேகரின் பகுப்பு முறை (Trager's Classification)

ட்ரேகர் (1965) மொழியுடன் வழங்கும் ஒலியின் இயற் பியல் கூறுகளையே (The Acoustic phenomena which accompany Language......) துணைமொழி என்று குறிக்கிறார். இதில் குரல தொகுப்பு (Voice set), குரல் தன்மை (Vocie Quality) குரல் மயமாக்குதல் (Vocalizations)] என்ற உட்பிரிவு களைக் கூறுகிறார்.

1.5.1 குரல் தொகுப்பு

இது பேசுவோரின் சமூகச்சார்பு, வயது, பால், உடல்நிலை உடலியல் மற்றும் இயற்பியல் தனித்தன்மைகளை (Physiological and Physical Peculiarities) விளக்கும். இது மொழிகளும், குரல் தன்மை, குரல்படுத்துதல் ஆகியவற்றிற்கும் அடிப்படையாக விளங்குகிறது.

1.5.2 குரல் தன்மை

இது பேச்சுக் கூற்றின் ஓசைப் பரப்பு (Pitch range of utterance) குரல்வளை மடல் கட்டுப்பாடு (Vocal lip control), குரல் வளைக் கட்டுப்பாடு (glottis control) எதுகை, மோனை அல்லது ஒலியிசை (Rhythm) கட்டுப்பாடு, இசைமைக் கட்டுப் பாடு (Resonance control), விறு விறுப்பு (Tempo) முதலிய வற்றைக் குறிக்கும்.

1.5.3 குரல் படுத்துதல்: இதில்

1) குரலின் குணநலன்கள் (Voice Characteristics)
2) குரல் தகுதியளிப்பான் (Voice Qualifiers)
3) குரல் கோப்பு (Voice Segregate) முதலியவை அடங்கும்.

குரலின் குணநலன்களில் சிரித்தல், அழுதல், மென்குரல் பேச்சு, உறுமல் வலியின்போது ஏற்படும் முனகல், கேவல் முதலியன அடங்கும்.

குரல் தகுதியளிப்பானாக உரப்பு (Intensity) ஒலிஅழுத்த உயர்வு (Pitch height) மற்றும் நீட்டம் (Extent) முதலியவற்றை ட்ரேகர் குறிக்கிறார்.

குரல் கோப்பில் மொழியின் வழக்கமான ஒலியனியல் நெறி களும் அடங்காத ஒலிகளை அடக்குவர். ஆங்கிலத்தில் uh-uh என்பது எதிர்மறையையும் uh-huh என்பது ஒப்புதலையும், uh என்பது தயக்கத்தையும் குறிப்பதாகக் கருதுகிறார். தமிழிலும் கிட்டத்தட்ட இதே போன்ற ஒலிகள் எடுத்துக்கட்டாக 'ம்ஹீம்

என்பது எதிர் மறையையும் 'ம்' என்பது ஒப்புதலையும் ம்...ம் என்பது தயக்கத்தையும் காட்டுகின்றன. (ம் என்பது ஆரம்பித்து உடனே முடிகிறது. ஆனால் ம்...ம் என்பதில் ஒலித்தல் நீட்டப் படுகிறது).

ட்ரேகரின் இத்தகைய துணைமொழிக் கூறுகள் பற்றித் தங்களது சோதனைகளில் டிட்மன் மற்றும் வைன் (Dittman& Wyne: 1961) என்போர் இவை நம்பத் தகுந்ததல்ல எனக் கருத்துத்தெரிவிக்கின்றனர்.

1.6 ஜர்கன்ரூஷ் - வெல்டன்நீஸ் (Jurgen Ruesch & Weldon-knees) பகுப்புமுறை: இவர்கள் ஒலிமொழியற்ற தகவல் தொடர்பை மூன்றாகப் பிரிக்கின்றனர். அவையாவன:-

1) குறிமொழி (Sign language): இது மொழிக்கு (அதாவது சொற்களுக்குப்)பதிலாக பயன்படுத்தும் சைகைகளைப்பற்றியது.

2) செயல்மொழி (Action language) : அடிப்படையில் தகவல் தொடர்பிற்காக ஏற்படுத்தப்படாத ஆனால் அதற்குத் துணைபுரியும் எல்லாவகையான உடல் அசைவுகளையும் இது குறிக்கும்.

3. பொருள் மொழி (Object language) : சில பொருட்களை அடையாளமாக அணிந்து கொண்டு நமது கருத்தைத் தெரிவிப்பது இதன்பாற் படும். எடுத்துக்காட்டாக துக்கத்தின்போது கருப்புத்துணி அணிவது, கைம்பெண்கள் வெண்ணிறச்சேலை அணிவது, மணமான பெண்கள் காலில் மெட்டி அணிந்து கொள்வது முதலியவற்றைக் கூறலாம்.

இவை தவிர ஒலிமொழியற்ற தகவல் தொடர்பில் காலமும் இடமும் பெரும் பங்கு வகிக்கின்றன என்பது ஹால் (Hall 1959 as quoted by Harrison) என்பவரின் கருத்து.[12]

1.7 தனித்துறையாகச் சிறப்புற்று வழங்கும் துணைமொழிக் கூறுகள்

துவக்கத்தில் துணைமொழியின் பகுதியாக இருந்து பின்னர் தனித்துறையாக விளங்கும் அளவிற்குச் சிறப்பான ஆய்வுகள்

நடத்தப் பெற்ற நெருக்கவியல், அசைவியல் முதலியவற்றைப் பற்றிக் கீழே காண்போம்.

1.7.1 அசைவியல் (Kinesics)

ஒலிமொழியில்லாத் தொடர்புகள் துவக்கத்தில் கருவி மொழியியல் (Metalinguistics) என்று அழைக்கப் பட்டதாகவும் (Smith: 1950) அப்போது அதில் ஒலிப்படுத்துதல் தவிர அசைவியலும் அடங்கியதாக இருந்தது என்று ஆபர்கக்ரோம்பி குறிப்பிடுகிறார். பின்னர்த் தகவல்தொடர்பிற்குப் பயன்படாத உடலசைவுகளையும் உள்ளடக்கி ஆராயத் தலைப்பட்ட போது அசைவியல் தனித்து இயங்கத் துவங்கியது: இதையே பேர்ட் விஸ்டல்' தகவல் தொடர்பிற்குத் துணைநிற்கும் (நம்மால்) அறியப்பட்ட ஒழுங்கு முறையுள்ள உடலசைவுகள் பற்றிய நடத்தைகளையே அசைவியல் விவரிக்கிறது'' என்பார்.[13]

இத்துறையிலும் மொழியியல்போன்றே அசைவன் (Kine) அசைவுருபன் (Kinemorph) போன்ற அடிப்படை அலகுகள் வழங்குகின்றன.

ஹால்ட் (Halt: 1931) என்பார், 'ஆம்' என்பதற்கும், 'இல்லை' என்பதற்கும் மனிதனின் தலையசைவு உதவுவதை விளக்க, குழந்தை தாயிடம் பால் வேண்டும் போது தலையை மேலும் கீழும் ஆட்டுவதை 'ஆம்' என்பதற்கான தலையசைவுச் செய்கையாகவும்; தேவையான பால் உண்டபின் மறுத்து ஒதுக்குவதை' இல்லை' என்பதற்கான தலையசைவுச் செய்கையாகவும் கருதுகிறார். குழந்தையாய் இருக்கும் போதே மனிதன் இத்தகைய இயங்கு திறனை (Motor Still) வளர்த்துக் கொள்கிறான் என்பார். ஆனால் இது உலகப் பொது வழக்காக (Universal) இல்லாததால் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று மறுக்கப்படுகிறது. ஜப்பான் நாட்டு அய்னுமொழி (Ainu language) மக்களிடம் தலையசைத்தல் வழக்கிலின்றி கைகளின் வேறுபட்ட அசைவுகளை ஒப்புதல் அல்லது மறுப்புக்குப் பயன்படுகிறது என்பதை லாண்டர் என்பவரை மேற்கோள்காட்டி லாபார் என்பவர் விளக்குகிறார். (Labarre : 1947), மேலும் அவர் தன் கட்டுரையில்[14] உலகின் வேறுபட்ட இனத்தைச்

சேர்ந்த மக்களின் வரவேற்பு முறை உடலசைவுகள். பெரு மூச்சு விடுதல், ஸ்....ஸ்...என்ற ஒலி எழுப்பல் (Hissing சிரிப்பு முதலியவை தகவல் தொடர்பில் பெறும் சிறப்பான பங்கை விவரித்துக் கூறுகிறார். இவை பற்றி நடத்தை உளவியலார் (Behavioural Psychologists) இன்னும் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள்.

1.7.2 சைகைகள் (Gestures)

தனித்தோற்ற அமைவின் மேல் ஏற்றப்படுபவை சைகைகள் எப்போதும் குறைந்த அளவான உடலசைவும், அடிக்கடி வேக மாக மாறுபடும் இயல்பும் உடையவை இவை. இவையும் பண் பாடு பற்றி வேறுபடும்.

சில சமூகச்சூழல்கள் சில சைகைகளை உபயோகப்படுத்த வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துகின்றன. சிலவற்றைப் பொதுவாக எல்லோர் முன்னிலையிலும் சொல்லல் அவமரியா தையாகக் கருதப்பட்டுச் சைகைகள் மூலம் தெரிவிக்கப் படுகின் றன. எடுத்துக் காட்டாக பள்ளிகளில் மாணவர்கள் சிறு நீர் கழிக்க வெளியே செல்லும் பொருட்டு ஆசிரியரிடம் அனுமதி வேண்ட ஆட்காட்டி விரலைக் கொக்கி போல வைத்து சைகை மூலம் தெரிவித்தலைக் கூறலாம். ஒலிமொழிக்கு வழியில்லாத சூழ்நிலையில் போக்குவரத்தும் காவலரின் சைகைகளையும் இங்கு குறிப்பிடலாம்.

காதுகேளாதவரின், குறிப்பாக பிறவிச் செவிட்டூமைக் குழந்தைகளின் சைகை மொழி நன்கு வளர்ந்த ஒரு தனி மொழியாகவே விளங்குகிறது. அக்குழந்தை தன்னைச் சுற்றி யுள்ள தகவல் தொடர்பு மண்டலத்தில் வழங்கிவரும் அசை வியல் மற்றும் துணைமொழிக் கூற்றுத் தொடர்புகளின் மூலம் தனது தொடர்புத் திறமையைப் பெரிதும் வளர்த்துக் கொள்கி றது. (Trager: 1958 as Quoted in Vetter; 1969) வட அமெரிக்கப் பழங்குடி மக்களிடையே இன்றும் இம்முறையே முதன்மையான தகவல் தொடர்புக் கருவியாகப் பயன்படுத்தப் படுகிறது. டாக்டர் தாமஸ் ஹாப்கின்ஸ் காலாடெட் (Dr

Thomas Hopkins Gallaudet) பிரான்சு நாட்டிலிருந்து அமெரிக்காவில் 1816இல் குடியேறிய போது இதனை அறிந்து, சில மாற்றங்களுடன் இதனை அமெரிக்கர்களுக்கு அறிமுகப்படுத்தினார். இந்தச்சைகை மொழியே கனெக்டிக்கட் (Connecticut) என்ற நகரத்தில் உள்ள செவிடர் பள்ளியில் பயிற்று முறையாகப் பயனபடுத்தப் படுகிறது. புத்தகத்தைக் குறிப்பதற்கு புத்தகத்தைக் கையால் விரிப்பது போலச் சைகை செய்வது ஒலிக்குறிப்புச் செய்கை (Onamatapoetic Sign) என்றும் அதை எல்லோரும் புரிந்து கொள்ளலாம் என்றும் ஆனால் அன்பு, நேர்மை, வெண்மை போன்ற பண்புப் பெயர்களை குறிக்கப் பயன்படுத்தும் சைகைகளை, இம்மொழியை அறியாதவர்களால் எளிதில் புரிநது கொள்ள முடியாது என்றும் வெட்டர் குறிப்பிடுகிறார்.

டெர்வுர்ட் (Tervoort : 1961) என்பார் டச்சுநாட்டைச் சேர்ந்த காதுகேளாக் குழந்தைகள் பள்ளியில் நடத்திய ஆய்வுகளின் மூலம் கைகள் முதலியவற்றால் செய்யும் சைகைகள் உதட்டசைவுகளோடு சேர்த்துச் செயயப்பட்டால் தான் கேட்போரால் எளிதில் புரிந்து கொள்ள முடியும் என்றும், உதடுகளை மறைத்துக்கொண்டு செய்யப்படும் சைகைகள் மற்றொரு செவிட்டுக் குழந்தையினால் புரிந்து கொள்ளப்படுவதில்லை என்றும் முடிவு செய்கிறார். சீனத்தலைவர் மாசேதுங்கு தனது இறுதிக்காலத்தில் பேசும் சக்தி இழந்து படுக்கையில் இருந்த போது சைகைகளாலும் உதட்டசைவுகளாலும் மட்டுமே தகவல் தொடர்பு கொண்டார் என்பதும் அதைப் புரிந்து கொள்ள உதட்டசைவு அறிஞர் (Lipreading Specialists) களை வைத்திருந்தார் என்பதும செய்தித்தாள்கள் மூலம் அறிகிறோம்.

அமெரிக்கர்களின் இந்தச் 'சைகை மொழியின் அமைப்பை ஸ்டோக்கோ (Stokoe: 1960) முதலில் ஆராய்ந்தார். சைகைகளும் ஒலியியலில் காணப்படும் அடிப்படை அலகான ஒலியன்களைப் போல ஷீரீம்ஸ் (Cheremes)[15] என்ற அடிப்படை அலகுகளால் ஆனவை என்கிறார் ஸ்டக்கோ. அவர் மேலும், தொடரியல் பகுதிகளைக் குறிக்க உதவும் மூன்று முகக் குறிப்புகளையும்

சேர்த்து மொத்தம் 57 குறிகளின் மூலம் எந்தப் பொருளையும் செய்தியையும் நம்மால் சைகை மொழியால் குறிப்பிடமுடியும் என்கிறார். பேச்சு மொழியைவிட மும்மடங்கு அதிக விரைவில் சைகை மொழியால் செய்திகளை உணர்த்த முடியும் என்பதும் அவரது ஆய்வின் முடிபு. உலகின் பல பாகங்களில் வசிககும் செவிட்டூமைகளின் சைகை மொழி அதிக அளவில் ஒத்துக் காணப்படுகிறது. இம் மொழிக்கான ஒரு பழமையான தொடரியல் (Primitive Syntax) இருப்பதாக ஹரால்ட் வெட்டர் (Harold Vetter: 1969) கருதுகிறார்.[16] மொழியைப் போலவே சைகைமொழியிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதாவது பழைய குறிகள் வழக்கொழிந்து புதிய குறிகளும் தோற்றுவிக்கப்படுகினறன.

1.7.3 விலங்கினங்களின் சைகைமொழி: ஆலன், பேடரஸ் கார்ட்னர் (R. Allen Beatrice Gardner) இருவரும் அமெரிக்காவில் வழங்கி வரும் சைகை மொழியான 'அமெஸ்லான்' (Ameslan= American Sign Language) என்னும் சைகை மொழியை சிம்பன்ஸி இன மனிதக் குரங்குகளுக்கு கற்பித்தனர். அது 132 சைகைக் குறியீடுகளை பயன்படுத்தக் கற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கின்றனர், பிரான்சைன் பேட்டர்ஸன் (Francine Patterson) ஒரு வயதுக் கொரில்லா குரங்குக் குட்டிக்கு இந்தச் சைகை மொழியைக் கற்பித்துச் சோதனைகள் நடத்தினார். 'தண்ணீர்' 'உணவு' முதலியவற்றை அதிகம் விரும்பும்போது 'இன்னும் தேவை' என்பதற்கான சைகைகளைச் செய்ய, அக்குட்டி, பயற்சி துவங்கிய முதல் ஓரிரு வாரங்களுக்குள் கற்றுக் கொண்டதாகவும்: ஒவ்வொரு மாதமும் ஒரு புதிய சைகையை அது அறிந்து கொண்டு அதைத் தக்கபடி பயன்படுத்தவும் முனைந்ததாகத் தெரிவிக்கிறார். இப்போது அந்தக் கொரில்லாவில ஆகாயவிமானம், பெல்லிபட்டன, வாலிபாப், நணபன் மருத்துவரின் ஸ்டெதாஸ்கோப் முதலியவற்றை நமக்குச் சைகைகள் மூலம உணர்த்த முடியும் என்றும் அது முநநூற்றி எழுபத்தைந்து சைகைமொழிக் குறிகளை தன்னுடைய சொற்கோவையில் (Vocabulary) கொண்டுள்ளது என்றும் பேட்டர்ஸன் தெரிவிக்கிறார். சில நேரங்களில் அது பயற்சியாளருடன், ஒரு செயலைக் குறித்து விவாதிக்கவும் அறிந்துள்ளது. அதன்

ஐந்தாவது வயதில் பொய் சொல்வதின் மதிப்பையும் அது உணர்ந்தது. மேலும் அது பல மொழிக் கட்டளைகளுக்குத் தகுந்த விளைவுகளை (Responses) செயற்படுத்துவதால் அதைச் சைகைமொழி மற்றும் வாய்மொழி ஆகிய இருமொழி வழக் கிலும் (Bilingual) வல்லதாக விளங்குகிறது என்பார் பிரான் சைன்.

1.8 நெருக்கவியல் (Proxemics): உரையாடுவோரிடையே அமையும் இடைவெளியும் துணைமொழி அளவில் முக்கியத் துவம் வாய்ந்தது. ஒவ்வொருவரும் தன்னை அறியாமலேயே தனது பண்பாடு அனுமதிக்கும் அளவிற்கு உரையாடல் நெருக்கத்தை (Conversational Proximity) அந்தந்தச் சூழ் நிலைக்கு ஏற்பக் கடைப் பிடிக்கின்றனர் அதிகமான இடை வெளியோ அல்லது மிகுந்த நெருக்கமோ தவறாகக் கருதப் படுவதாக ஹால் என்பார் தம் கட்டுரையில்[18] குறிப்பிடுகிறார். இதற்கு எடுத்துக் காட்டாக அமெரிக்காவில் பயில வரும் அரேபியா நாட்டு மாணவர்கள் (அமெரிக்கர்கள்) தங்களை நெருங்கி பேசவிடாமல் விலகி நின்றே பேசுவதை அவமதிப் பாக எடுத்துக்சொள்வதை கூறலாம் என்கிறார்.

இத்தகைய நெருக்கம் பற்றிய உணர்வானது ஒலிப்புத்தன் மை எவ்விதம் மொழியோடு சேர்ந்து, சார்ந்து இருக்கிறதோ அதைப்போன்றே மனிதனின் நடத்தையோடு பின்னிப் பிணை ந்து காணப்படுவதாக ஹால் கூறுகிறார். எனவே இவைகளைத் தனியே உணர்வுடன் செய்து காட்டல் இயலாது. மேலும் அவர் மொழியியல் ஆய்வு முறையைப் பின்பற்றி நெருக்கன் (Proxeme) என்ற அடிப்படை அலகையும் நெருக்கவியல் நிலையில் குறிப்பிடுகிறார்.[19]

1.9 முகக்குறிப்பு (Facial Expression)

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி. அதற்கேற்ப நமது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் முகக் குறிப்பு தெளிவாகப் பிரதிபலிக்கும். இவை பெரும்பாலும தனிப்பட்டவரின் இயைபுகளாக இருப்பினும் சில சமூகக்குழுக்

களில் துணைமொழிக் கூறாக கொள்ளப்படுகின்றன. தமிழ்ச் சூழலில் வழங்கும் முகக்குறிப்புகளை, தமிழ்ச் சிறுகதை முதலிய வற்றில் நாம் அடிக்கடி படிக்க நேரும் பின்வரும் வாக்கியங் களின் மூலம் உணரலாம். "அதைக கேட்டு அவன் முகம் மலர்ந்தது". என்பது மகிழ்ச்சியையும், "அவன் முகம் சுண்டியது என்பது துககத்தையும் குறிப்பதாக அறிகிறோம். மேலும் நேரடித் தகவல் செய்தியின் சமூகப் பொருளில் (Social Meaning) 35% க்குமேல் ஒலி மொழி மூலம் தெரிவிக்கப் படுவதில்லை என்று ஹாரிசன் (Randall Harrison, 1965; 161) என்பார் கருத்து[20].

1.10 கண்வழித் தொடர்பு (Eye Contact)

உரையாடலில் இதன் பங்கு அண்மைக் காலத்திலேயே அறியப்பட்டுள்ளது (Argyle : 1967). இதைப் பற்றி ஆர்கைல் பின்வருமாறு கூறுகிறார்:

"சமூகக் கலப்பின் (Social interaction) போது அதில் பங்கு பெறுவோர் ஒருவர் கண்களை மற்றொருவர் திரும்பத் திரும்ப ஒரு சில வினாடிகளுக்குச் சந்திக்கின்றனர், அடுத்தவரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது பேச்சாளரின் கண்களை 3 முதல் 10 வினாடிகள்வரை பார்க்கின்றனர். இத்தகைய கண்வழித் தொடர்பு இல்லையெனில் அதில் பங்கு பெறுவோர் முழுமையாக அத்தகவல் தொடர்பில் தாம் ஈடுபட வில்லை என்று நினைக்கின்றனர்.

ஆர்கைல் சில சோதனைகளைச் செய்து கண்வழித் தொடர் பின் இயைபுகளை கீழ்க்காணுமாறு விவரிக்கிறார்[21].

1) மற்றவரின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கும் போதே கண்வழி தொடர்பு அதிகம் நடைபெறுகிறது.

2) பேசுவோர் பேச்சின் முடிவிலும், அதனிடை வரும் சொற்றொடர்களின் முடிவிலும் மேலே பார்க்கின்றனர். ஒரு நீண்ட சொற்கூற்றை (Utterance) ஆரம்பிக்கும் போது விலகி வெளியே பார்க்கின்றனர்.

3) குறைந்த அளவினதாய் அந்தரங்கச்(Less Personal) செய்திகளைப் பேசும் போது அதிகமான கண்வழித் தொடர்பு ஏற்படுகிறது. மேலும் அவை நேரடிச் செய்திகளாக இருத்தல் வேண்டும். தடையுள்ளதும், தயக்கம் கொண்டதுமான பேச்சுக் களில் கண்வழித்தொடர்பு குறைவு (Excline : 1963).

4) கண்வழித் தொடர்பில் மிகுந்த தனிப்பட்ட வேறு பாடுகள் உள்ளன. பெண்கள் கண்வழித் தொடர்பைப் பலவித சூழ்நிலைகளில் பயன் படுத்துகின்றனர். சில சமூகத்தில் கண் வழித் தொடர்பு மறுக்கப்பட்ட செயல்களாகவும் (Taboos) வேறு சிலவற்றில் வழக்கில் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவும் விளங்குகிறது,

5) பேசுவோர் ஒருவரையொருவர் விரும்பினாலும், அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைக்கும் நண்பர்கள் ஆனாலும் கண்வழித் தொடர்பு அதிகம் இருக்கும். பதற்ற நிலையில் கண்வழித் தொடர்பு குறைந்தே இருக்கும்,

இதைத் தமிழ்த் திரைப் படங்களிலும் காணலாம். தந்தைக் கும் மகனுக்கும் கருத்து வேறுபாடு வரும்போதும், கதாநாயகன் வில்லனுக்குச் சவால் விடும்போதும் ஆளுக்கு ஒரு திசையைப் பார்த்துக்கொண்டு பேசுவதைக் கவனிக்கலாம்.

6. குழந்தை பிறந்த 25-முதல் 28ஆவது நாளிலிருந்து அது கண்வழித் தொடர்பிற்குப் பழக்கப்படுகிறது. தாயின்முகம், குறிப்பாக கண்களைக் கண்டு சிரிக்கிறது. ஸ்பிட்ஸ் (Spits: 1946) தன் சோதனைகளின் மூலம் முகமூடிப் (Mask) படத்தில் உள்ள கண்கள்கூட குழந்தையைச் சிரிக்க வைப்பதாகக் கூறுகிறார்.

"திருட்டு முழி முழிக்கிறான்," "பார்வையின் கூர்மை," போன்ற வழக்குகள் நமக்குக் கண்வழித்தொடர்பின் இன்றியமை மயாத பங்கை வலியுறுத்துகின்றன. மேலும் கண்ணோடு தொடர்புடைய புருவங்களை உயர்த்துவதில் 23-வகைகள் இருப்பதாகவும் அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு பொருள் உண்டு என்றும் பேர்டுவிஸ்டல் கூறுகிறார். அதிலும் ஆண்களே இந்தக் கலையில் சிறந்தவர்கள் என்பது அவர் கருத்து.

ரேபார்பஸ் மற்றும் பால்ஜாக்ஸன் (Ray Forbes and Paul Jackson: 1980) என்ற பிரிட்டிஷ் பயன்பாட்டு உளவியலார்[22] (Applied Psychologists) அண்மைக் காலத்தில் நேர்முகத் தேர்வுகளில் ஒருவரின மொழியற்ற தகவல் தொடர்புகளான கண்வழிதொடர்பு, தலையசைவு, முதலியவற்றின் இன்றியமை யாமையை உணர்ந்து வெளியிட்டுள்ளனர். நேர்முகத் தேர்வின் போது இவை உரையாடலைச் சுமுகமாக வழி நடத்துவதுடன் தேர்வாளருக்கு நம்மைப் பற்றிய நல்லெண்ணத்தையும் ஏற் படுத்துகின்றன. அவர்கள் இதனை உடல்மொழி (Body Language) என்று அழைக்கிறார்கள். தேர்வின்போது வினா எழுப்பு வோரை நேராகப் பார்த்துப் பதில் அளிப்போரும், இடையி டையே புன்னகை புரிவோரும், தகுந்த இடங்களில் தலையசை வோடு பதிலளிப்போரும் பெரும்பாலும் தேர்வாளர்களால் தெரிவு செய்யப்படுகிறார்கள் என்பதே அவர்கள் நடத்திய கள ஆய்வில் கண்ட உண்மை. இதற்கான அனுமானங்களை முன்னரே குறித்துக் கொண்டு தேர்வு முடிவுகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அவை ஒத்து இருப்பதாகக் கண்டுள்ளனர்.

1.11 முடிவுரை: அளவுக்கதிகமான பகுப்புகளால் (Over-categorization) துணைமொழி பற்றிய முழுமையான ஆய்வு தடைபட்டு நிற்கிறது என்கிறார் ஆபர்க்குரோம்பி. மேலும் இப்போது பொதுநிலை விளக்கங்களைவிட உண்மை அறிதலே பெரிதும் வேண்டப்படுகிறது. (..."Fact finding and not theorizing what is wanted at this juncture..." (Abercrombie 19). எந்தச் செய்தியாயினும் மொழிவழியோ அல்லது துணை மொழி வழியோ உணர்த்தப்படலாம். எதனைத் துணைமொழி வழிக் கொள்ளல் வேண்டும், எதனை மொழிவழிக் கொள்ளல் வேண்டும் என்பது, எது உணர்த்தப்படுகிறது என்பதைப் பொறுத்ததே அன்றி, அது எவ்விதம் உணர்த்தப் படுகிறது என்பதைப் பொறுத்தது அல்ல. வழக்கமான அமைப்புகளால் (Formal systems and structures) உணர்த்தப்படின் அதை மொழியாகவும் இல்லையெனில் துணை மொழியாகவும் கொள்ளலாம் என்பார் ஆபர்க்குரோம்பி, பேர்ட் விஸ்டல், ஆர்கைல், லாபார், ஹாரிசன், ஹால் போன்றோர் குறிப்பிடு வது போல மேலும் அதிக அளவில் உலகின் வேறுபட்ட சமூகக்

குழுக்களினின்று மொழியல்லாத் தகவல் தொடர்பு மற்றும், துணைமொழித்தொடர்பு பற்றிய விவரங்களைச் சேகரித்தல் இன்று மிகவும் இன்றியமையாததாகிறது. அப்போது இத் துறையில் வழங்கும் உலகப் பொதுமைகளை (Universals) எளிதில் பிரித்தறிய முடியும். அதன் மூலம் மனித இனத்தின் அடிப்படை நடத்தைகளுக்கான காரணங்களை அடையாளங் காண இயலும். முன்னரே குறிப்பிட்டபடி இத்துறையானது மொழியியலுடன் மிகத் தொடர்புடையதாக இருப்பதாலும், இதன் ஆய்வு முறைகள் மொழியியல் ஆய்வு முறைகளைப் பின் பற்றி அமைதலானும், இத்துறையில் நாம் நடத்தும் ஆய்வு மிகப்பலன் தருவதாக அமையும். இந்திய மொழியியல் அறிஞர்கள் இத்துறையில் தம் கவனத்தைச் செலுத்துவதன் மூலம் நல்ல பல சுவையான உண்மைகளை உலகிற்கு உணர்த்த முடியும். மேலும் பயன்பாட்டு நிலையில் பேச்சுத் திருத்த பள்ளிகளிலும், செவிட்டு, ஊமையர் பள்ளிகளிலும் பயனுள்ள பயிற்சி முறைகளைக் கையாள இத்துறை துணைசெய்யும். மேலும் அறிவு வழிநிலைகளுக்கும் செயல்களுக்கும் உள்ள தொடர்பின்மை (The gap between intellectual process — schizophernia) போன்ற மன நோய்களுக்கு மருத்துவம் புரிவதிலும் இது பயன்படும்.

"Action Speaks Louder than words"

— Harrison

கலைச்சொல் விளக்கம்

1. அசைவன் — Kine
2. அசைவுகள் — Kinesic movements
3. அசைவுருபன் — Kinemorph
4. ஆளுமை — Personality
5. கருவி மொழியியல் — Meta linguistics
6. உரப்பு — Intensity
7. உரையாடல் கலப்பு — Conversational interaction

8. உள நிலை — Psychic state
9. ஏற்ற இறக்கம் — Tones of voice
10. ஒலி அழுத்த உயர்வு — pitch height
11. ஒலிப்பளவு — Loudness
12. ஒலியேற்றம் — Intonation
13. ஒலியேற்ற அமைப்பு — Intonation structure
14. ஓசைப்பரப்பு — Pitch range of utterance
15. கண்வழித் தொடர்பு — Eye contact
16. கீழினங்கள் — Lower Animals
17. குரல் கோப்பு — Voice segregate
18. குரலியல் — Voice Dynamics
19. குரல் மாறுபாடு — Register
20. குரல் வழித்துணை மொழிக்கூறு — Vocal - Paralinguistic
21. குரலில்லாத துணை மொழிக்கூறு — Non-Vocal paralinguistic
22. குரல்வளைக் கட்டுப்பாடு — Glottis Control
23. குரல்வளை மடல் கட்டுப்பாடு — Vocal lip control
24. குரல் - வாய்மொழிக் கூறுகள் — Vocal - verbal elements
25. குரல்-வாய்மொழி யல்லாதக் கூறுகள் — Vocal - Nonverbal elements
26. குரலில்லாத-வாய்மொழி இல்லாதக் கூறுகள் — Non - Vocal - Non - Verbal elements
27. குறிமொழி — Sign
28. கேவல்கள் — Sobs
29. ஒலியிசை — Rhythm
30. சைகைகள் — Gestures
31. சொற்கோவை — Vocabulary
32. தனித்தோற்ற அமைவு — Postures
33. தனிப்பட்டவரின் இயல்பு — Idiosyncratic
34. துணைமொழி — Paralanguage

35. நீட்டம் — Extent
36. இசைமை கட்டுப்பாடு — Resonance control
37. நெருக்கவியல் — Proxemics
38. முகக்குறிப்பு — Facial expression
39. முறை மீறல் — Overlap
40. மென்குரல் பேச்சு — Whispering
41. வாய்மொழி — Verbal language.
42. வாய்மொழியல்லாதவை — Non- Verbal
43. வாய்மொழியல்லாதக் கூறுகள் — Non - Verbal elements.
44. விறுவிறுப்பு — Tempo

———o———

1. Conversational interation — உரையாடல் கலப்பு.
2. Extent — நீட்டம்
3. Eye contact — கண்வழித் தொடர்பு.
4. Facial Expression — முகக்குறிப்பு.
5. Gestures — சைகைகள்.
6. Glottis Control — குரல்வளைக் கட்டுப்பாடு
7. Idiosyncratic — தனிப்பட்டவரின் இயல்பு
8, Intensity — உரப்பு
9. Intonation — ஒலியேற்றம்
10. Intonation Structure — ஒலியேற்ற அமைப்பு
11 Kine — அசைவன்
12. Kinemorph — அசைவுருபன்
13. Kinesic movements — அசைவுகள்
14. Loudness — ஒலிப்பளவு
15. Lower Animals — கீழினங்கள்
16. Meta Linguistics — உயரெல்லை மொழியியல்
17. Non- Verbal — வாய்மொழியல்லாதவை.
18. Non Verbal- Elements — வாய்மொழியல்லாதவைக் கூறுகள்
19. Non- Vocal- Non Verbal elements. — குரலில்லாத- வாய்மொழி இல்லாதக்கூறுகள்.

20. Non-vocal Paralinguistics — குரலில்லாத துணைமொழிக் கூறு
21. Overlap — முறைமீறல்
22. Para language — துணைமொழி
23. Personality — ஆளுமை
24. Pitch height — ஒலி அழுத்த உயர்வு
25. Pitch range of utterance — ஓசைப்பரப்பு
26. Postures — தனித்தோற்ற அமைவு
27. Proxemics — நெருக்கவியல்
28. Psychic state — உளநிலை
29. Register — குரல் மாறுபாடு
30. Resonance control — நெகிழ்வொலிக் கட்டுப்பாடு
31. Rhythm — சமச்சீர்
32. Sign — குறிமொழி
33. Sobs — கேவல்கள்
34. Tempo — விறுவிறுப்பு
35. Tones of voice — ஏற்ற இறக்கம்
36. Verbal language — வாய்மொழி
37. Vocabulary — சொற்கோவை
38. Vocal lip control — குரல்வளை மடல் கட்டுப்பாடு
39. Vocal non verbal element — குரல்-வாய்மொழியல்லாதக் கூறுகள்
40. Vocal-paralinguistic — குரல்வழித் துணைமொழிக் கூறு
41. Vocal-verbal elements — குரல்-வாய்மொழிக்கூறு
42. Voice Dynamics — குரலியல்
43. Voice-Segregate — குரல் கோப்பு
44. Whispering — மென்குரல் பேச்சு

அடிக்குறிப்புகள்

1. John Laver & Sandy Hutcheson (1972) "Communication in Face to Face Interaction ",(P:11) Penguin.

2. "It (Paralanguage) seems to me misleading; it can give the impression that, because there exists (a more or less) homogeneous entity called language, there must be existing beside it, a comparably homogeneous entity called paralanguage". (D Abercrombie 1968)

3. Darwin (1872) "Expression of the Emotions in Man and Animals", as quoted by Abercrombie.

4. Edward Sapir (1927) " Speech as a personality trait", in *American journal of sociology*, vol. 32 and "The unconcious patterning of behaviour in society" in Dummer(ed) *The unconcious:* A symposium, Knopf (1927b)

5. La Barre(1947) "The cultural Basis of Emotions and Gestures", originally in Journal of personality (vol.16. 49-68)

6. "In 1951, Trager and Smith, in An Outline of English Structure, put intonation into structural relationship with stress and terminal junctures......... later at the suggestion of A. A. Hill they began to call it paralanguage".

   Birdwhistell as in "Communication in Face to Face interaction" (ed) John Laver & Sandy Hutcheson, Penguin (1972: 90)

7. Birdwhistell (1961) 'Paralanguage - Twenty Five years after Sapir," Penguin (1972).

8. 'Pre- linguistics is concerned with the study of the Physical and biological events which enter into the act of speech (and hearing), Trager (1949) as quoted by Birdwhistell on' Communication in Face to Face interaction, Penguin (1972)

9. 'The distinction between verbal/non-verbal does not correspond to Vocal/Non-vocal, since there are hand-movements which stand for words and vocalizations which do not .... (Argyle : 1975)

10. 'vocal behaviour consists of all actions involed in producing speech. Non-vocal behaviour is made up of all communicative activities other than speech, and therefore includes such factors as gestures, postures and so forth ... ... verbal element in conversation are taken to mean the actual words used (considered as units in language and distinct from all vocal considerations of how they might be pronounced). Non-verbal behaviour is then all vocal and Non-vocal conversational behaviour which is not verbal in the sense given above'

(Laver & Hutcheson-1972-12)

11. "Linguistic phenomena proved to be highly reliable, while the paralinguistic did not; but the reliable linguistic codings were independent of the emotive expressions in the different interviews of the individual differences among the speakers represented by the interviews and radio-programs."

(Dittman & Wyne (1961) as quoted by Vetter 1969:122)

12. "Hall in his book the Silent language marks space and time as two special areas of non-verbal communication worth studying in their own right. As Hall puts it "Time talks", and "space speaks".

Edward Hall : 1959 as quoted by Randall Harrison in campbell and Hepler (ed) Dimensions in communication (1969 : 163)

13. "Kinesics, as a methodology, is concerned with the communicational aspects of learned body motion behaviour"

(Birdwhistell: 1961)

14. La Barre (1947) "The cultural Basis of Emotions and Gestures" in Communication in Face to Face interaction, Laver (ed) Penguin, 1972.

15. "The typical sign is composed of three cheremes, one of position, one of configuration and one of motion"..... "

(Harold Vetter; 1969: 234)

16. "The sign language of deaf mute possesses its own primitive syntax. Definite and indefinite articles are usually omitted, adjectives and verbs are not easily distinguished. The tenses are not differentiated unless the meaning of the phrase absolutely demands this. The order of words is logical rather man conformity with local grammatical construction"

(Harold Vetter, 1969: 235)

17. "The technical, artistic and social elaboration of signal drumming in Africa and is characteristic of that continent .... to some extent a technical language .... as a language it is highly poetic in nature .... the drums are used for any type of message and they usually have other communication functions as well"

(Harold Vetter, 1969: 241- 242)

18. E. T. Hall (1963), "A system for the Notation of Proxemic Behaviour", American Anthropologist. Vol 65, pp 1003- 26.

19. "On the Proxemic level, however each system is treated as a complex of isolates that will result in Proxeme which combine into sets and patterns in larger system. The proxeme equates with the phonemes of a language but on much lower and simpler organizational level".

(Hall, 1959)

20. "...... it has been estimated that in face to face communication no more than 35% of the social meaning is carried in the verbal message."
Randall Harrison (1965) as in "Dimensions in communication" Campbell and Hepler (ed) 1969:161

21. Argyle, M & Dean, J (1965) Eye contact Distance and Affiliation, originally in sociometry vol.28, 1965.

22. Dr. Paul Jackson is an applied Psychologist of the Medical Research council of Scheffield University and Ray Forbes belongs to the Business department of wales university, Britain.

துணை நூல்கள்

1. Abercrombie, D. 1968 'Paralanguage' in *Communication in Face to Face interaction*, John Laver & Sandy Hutcheson (ed) Penguin.

2. Argyle, M. 1975 '*Bodily Communication*' Methuene & co Ltd. London.

3. " & Dean, J 1965 "Eye contact, Distanee and Affiliation" in *Communication in Face to Face interaction*, John Laver & sandy Hutcheson (ed) Penguin

4. Bird whistell, R.L. 1961 'Paralanguage twenty five years after sapir 'in *Communication in Face to Face interactian*, John Laver & Sandy Hutcheson, (ed) Penguin.

5. Francine Patterson, 1979 'Conversations with a Gorilla, *Readers Digest* Nov. 1979, pp 78 - 84 condensed from National Geographic.

6. The Hindu 1980 'Body language in Job interviews Quoting B B.C London letter, Hindu, dated Nov, 30. 1980 p.26

7. Harold vetter 1969 *The Vocal Expression of Emotion*' in *Language Behaviour and Communication* - an Introduction, Peacock.

8. " 'Nonverbal Communication kinesics and Gestural Phenomena' in *Language Behaviour and Communitca tion-an introduction*, *peacock.*

9. La Barre, 1947 'The Cultural Basis of Emotion and gestures' in Communication

in Face to Face interaction, John Laver & Sandy Hutcheson (ed) Penguin (1972)

10. Scheflen A. E 1964 'The Significance of postures in Communication system, in Communication in Face to Face interaction, John Laver & Sandy Hutcheson (ed) Penguin, 1972

12. Randall Harrison, 1965 'Non verbal Communication Explorations into Time. Space Action and object in *Dimensions in Communication* Readings: Campell and Hepler (ed), wadsworth pub. 1965.

மொழியியல் 10: 1 & 2 (1987)

கலைச்சொல்லாக்கமும் தரப்பாடும்

செ. வை. சண்முகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

[சுருக்கம்: மொழி வளர்ச்சி சமூக வளர்ச்சியோடும் சமூக உணர்வோடும் தொடர்பு உடையது. மொழி வளர்ச்சியில் கலைச்சொல்லாக்கம் ஒரு கூறு. கலைச் சொல்லாக்கம் சமூக வளர்ச்சியின் தாக்கத்தால் அமைவது. தமிழில் கலைச்சொல்லாக்கம் தனிப்பட்டவர்களால் ஆக்கப்படுவதால் அவற்றைத் தரப்படுத்துவதுபற்றிப் பொதுவாகவும் மொழியியல் கலைச் சொற்களைத் தரப்படுத்துவதுபற்றிச் சிறப்பாகவும் பொதுநிலையில் இந்தக்கட்டுரை விளக்குகிறது.]

நாடு முழுவதும் புதிய கல்வித்திட்டம் பற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மொழியியல் வல்லுநர்களாகிய நாம் இங்கே கூடி மொழியியல் வளர்ச்சி, அதன் மூலம் மொழி வளர்ச்சி என்ற ஆக்கப்பணிக்கு அடிகோலும வகையில் விவாதிக்க இருக்கிறோம்.

புதிய கல்விக் கொள்கையின் அடிநாதம் எல்லோரையும் கூடிய வரையில் கற்றவர்களாக்கி அவர்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் நல்ல வாழ்வுக்கும் ஊன்றுகோலாகவும் துணையாகவும் இருக்கவேண்டும் என்பதுதான். எனவே இன்றைய கல்வித்துறை அறிஞர்களின் பணி, கடமை அதிகரித்துள்ளது. பொதுநிலையில் விஞ்ஞான உணர்வையும் விஞ்ஞான அறிவையும் பரவலாக்குவது உயர்மட்டத்தாரையும் பொது மக்களையும் ஒன்று சேர்க்கவல்லது; தொழில் வளர்ச்சிக்குத் துணை செய்வது; இதன் மூலம் பொதுமக்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை செய்வது; இதன் மூலம் பொதுமக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது. இந்த

மாபெரும் பணியில் மொழியியலாளரின் கடமை என்ன? பண்டிதர் ஜவஹர்லால் நேரு.

> 'நாட்டின் முன்னேற்றம் பொதுமக்களிடையே விஞ்ஞான அறிவு பரவுவதைப் பொறுத்தேஉள்ளது. அதற்கு நமமுடைய மொழிகள் பொதுமக்கள் மொழியாகச் செயல்பட வேண்டுமே தவிர புலமை பெற்ற சிலரின மொழியாக ஆகக்கூடாது.'

என்று கூறியுள்ளது நினைவு கூறத்தகுந்தது. இந்தக் கருத்துகளை இந்த நூற்றாண்டு ஆரம்பத்திலேயே மகாகவி பாரதி சொல்லியுள்ளதும் பலருக்கு நினைவுக்கு வரலாம்.

> 'காலம் மாற மாற பாஷை மாறிக்கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர்கள் அந்த அந்தக் காலத்துச் சனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும்.'

என்பது மொழியை எளிமைப்படுத்துவது பற்றிய பாரதி கருத்து சொல்லாக்கம் பற்றியும் அதற்கும் சமூகத்திற்கும் உள்ள உறவு பற்றியும் பாரதியின் வாசகமும் குறிப்பிடத் தகுந்தது.

> 'மனுஷ பாஷைகள் மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருட்கள் அல்லவோ? தலைமுறை தலைமுறையாய் எத்தனையோ நூற்றாண்டுகளாக ஒரு நாட்டார் பேசிவரும்பாஷை அவர்களின் உயிரோடு ஒன்றிவிடுகிறது. மனித அறிவுவளர்ச்சிக்குப் பாஷை ஒரு கண்ணாடி. ஒரு நாட்டில் அறிவு வளர்ந்து கொண்டு வரவர அந்நாட்டின் பாஷையும் விசாலம் அடைந்து வருகிறது... இந்த நாட்டார் பொதுவாக அறிவு சுருங்கிப்போய் இருக்கிறார்கள். இதற்குப் பாஷை என்ன செய்யும்? நீராவியினால் ஓட்டப்படும் ரயில் வண்டி இந்தியாவில் வழக்கமாயிருக்கிறது. இப்போது பொது ஜனங்கள் அதற்கு வார்த்தை ஏற்படுத்திக் கொள்ளாமலா இருக்கிறார்கள்? மின்சார சக்தியால்

தந்தி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குத் தமிழ்வார்த்தை உண்டாக்கிக் கொள்ளவில்லையா? கோவணம் இல்லாத நிர்வாண தேசத்தாரின் பாஷையிலே பட்டு அங்கவஸ்திரத்துக்கு பெயர் கிடையாது என்றால் அதற்கு அவர்களுடைய பாஷை மேல் என்ன குற்றம் இருக்கிறது? துணியைக் கொண்டு கொடுத்து வழக்கப்படுத்தினால் முறையே வார்த்தைகளும் உண்டாக்கிக் கொள்வார்கள். **தமிழ்நாட்டில் தொழில் வகைப்பாடும் ஆலோசனை மிகுதியும் ஏற்பட்டால் தமிழ் பாஷை அன்றைக்கே வளர்ந்துவிடும்'**

என்பது பாரதி வாசகம். இங்கு இரண்டு உண்மைகள் சுட்டிக் காட்டத் தகுந்தன. அவையாவன; (1) மொழிவளர்ச்சி சமூக வளர்ச்சியை ஒட்டியது; அல்லது மொழிவளர்ச்சி சமூக வளர்ச்சியில் அடங்கும். (2) பொருள் -சிறப்பாக உருவப் பொருள் தெரிந்தால் பொதுமக்களே சொற்களைப் படைத்துக் கொள்வார்கள். உண்மையில் விஞ்ஞான- தொழில்நுட்ப அறிவு என்பது நுண்நிலையிலும் அமையலாம். அதற்கு எப்படிப் புதுச்சொற்கள் பொது மக்களால் படைக்கமுடியும்? என்ற கேள்வி எழும். 'தொழில் வகைப்பாடும் ஆலோசனை மிகுதியும ஏற்பட்டால் தமிழ பாஷை அன்றைக்கே வளர்ந்துவிடும்' என்று பாரதியார் கூறுவது புறச்சாதனங்களாக அறிவு வளர்ச்சியை மட்டும் அல்லாமல் அகச் சாதனங்களாக அறிவுவளர்ச்சியையும் உணர்ந்திருக்கிறார் என்பதைப் புலப்படுத்துகிறது. இது தான் இயல்வல்லுநர்களால் கலைச்சொல்லாக்கப்படுவதைக் குறிக்கும்.

எனவே பலதுறை அறிவு தமிழில் வளருவது சமூக வளர்ச்சிக்குத் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இன்று நாம் ஒன்று கூடியிருப்பதற்குக் காரணம் மொழியியல் கலைச்சொல்லாக்கம் பற்றியும் அவைகளைத் தரப்படுத்துவது பற்றியும் ஒன்றுகூடிச் சிந்தித்து சில முடிவுக்கு வருவதற்குத்தான். இது மொழியியல கல்வி பரவவும், அதன் பயனாக மொழிப் பற்றிய சிந்தனைத் தெளிவு பிறந்து தமிழை ஒரு செய்திப் பரவல் தொடர்பு சாதனமாக ஆக்கவும், அதன்மூலம் மக்கள்

வாழ்க்கை வளத்துக்கு மறைமுகமாக உதவவும் வழிவகுக்கும் என்ற சமூக உணர்வோடு செயல்பட வேண்டும்.

நாம் விவாதிக்க எடுத்துக்கொண்ட பட்டறைப் பொருள் பற்றிய சில தனிச் சிறப்புகளை உங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன் ஒன்று; தாய்மொழி மூலம் பல விஞ்ஞான பாடங்களை மாணவர்கள் படிக்கவும் பொதுமக்கள் விஞ்ஞான கருத்துகளை அறிந்து கொள்ளவும் பல துறை அறிஞர்கள பல காலமாக பாடுபட்டு வருகிறார்கள். ஆனால் இப்பொழுதுதான் இந்த முயற்சியில் மொழியியலாளர் களின் தேவையை உணர்ந்து வருகிறார்கள். மொழியியலாளரும் சமீப காலமாகத்தான் அறிவியல் கலைச் சொல்லாக்கத்தில் அக்கறை காட்டி வருகிறார்கள். இந்தச் சமயத்தில் நாம் நம் முடைய துறைக்குரிய பிரச்சனையை ஆராய முதன் முதலாகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கூடியிருக்கிறோம். இது ஓரளவு சுயநலம் போலத் தோன்றினாலும்-குறுகிய நோக்கு என்று கருதப்பட்டாலும் நம்முடைய பட்டறை வெற்றிகரமாக அமை யுமானால் பரந்த அளவில் நன்மைகள் ஏற்பட வாய்ப்பு இருக் கிறது. ஒரு துறை பற்றிய சிறப்பாக மொழியியல் கலைச் சொல்லாக்கம் பற்றிய ஆழ்ந்த விவாதம் கலைச் சொல்லாக் கத்தில் உள்ள பல பிரச்சனைகளைத் தெளிவுபடுத்தி கருத்தைக் கூர்மை ஆக்கும். அதாவது நாம் நம்முடைய பிரச்சனைகளைப் பொதுமைப்படுத்தி பிற துறையினருக்கு வழிகாட்டும் வகை யில் விவாதித்து முடிவுக்கு வரவேண்டும்.

மொழியியல் கலைச்சொல்லாக்கத்தின் இன்னொரு சிறப்பும் குறிப்பிடத் தகுந்தது. மொழியல் துறை பல பிற விஞ்ஞானத் துறைகளைப் போல முற்றும் புதிய துறை அல்ல. இந்தியாவிலும் சரி; தமிழகத்தில் சரி; மொழியியல் ஆய்வு தான் முதலில் வளர்ந்த விஞ்ஞானத் துறை. ஆனால் அந்தத் துறை தனிப்பட்ட மொழியின் அமைப்பை விளக்கும் இலக்கண ஆய்வாக, இன்றைய மொழியியல் நோக்கில் கூறுவதானால் விருணனை முறை ஆய் வாக மட்டுமே மலர்ந்து போன நூற்றாண்டு வரை தளர்நடை போட்டு வந்தது, பிற விஞ்ஞானத் துறை மேலை நாட்டுத் தாக்கத்தால் அங்கு ஏற்பட்டது போலவே மொழியியல் துறை

முதலில் திராவிட மொழி ஒப்பிலக்கண ஆராய்ச்சியாகத் துவங்கி இந்த நூற்றாண்டில் பல உள்துறைகளைக் கொண்டு, பல கோணங்களைக் கொண்டு ஓட்டமும் விறுவிறுப்பும் உடைய தாக அமைந்துவிட்டது. அதுதான் புதிய கலைச் சொற்கள் படைக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கியுள்ளது. எனவே இந்த வரலாற்று பின்னணியும் வளர்ச்சியும் கூடத் தனி ஆய்வுக்கு உரியது. பழைய மரபிலுள்ள நன்மைகளை எடுத்துக் கொண்டு புதிய மரபுகளை ஏற்றுக் கொள்ளத் தயங்கும் தயக் கத்தை நாம் போக்க முன்வரவேண்டும.

கலைச்சொல்லாக்கம் பற்றிய பொதுக்கோட்பாடுகளைப் பலரும் விவாதித்துள்ளார்கள். ஒரு மொழியிலுள்ள சொற்களை புதிய பொருளில் கையாளுதல்: (மின் என்பது மின்னலைக் குறிக்க, இன்று மின்சாரத்தைக் குறிக்கப் பயன்படுத்துதல்); புதியவிகுதிகளைச் சேர்த்து புதிய சொல் உண்டாக்கிப் புதிய கருத்தை விளக்குதல் - (ஒலி 'Sound' - ஒலியன் 'Phoneme'; வளி 'காற்று' – வளியம் 'gas') புதிய தொகைக் சொற்களை உண் டாக்குதல் (ஒளி 'light', ஒளிச்சேர்க்கை 'Photosynthesis'; ஒலி யியல் 'Phonetics'; புகைவண்டி ('train'); அனைத்துலகச் சொற் களைச் கடனாக ஏற்றுக்கொள்வது (ஓல்ட், வாட்போன்றவை) ஆகிய முறைகளில் கலைச்சொல் ஆக்கவேண்டும் என்பதை எல்லோரும் பலகாலமாகச் சொல்லி வருவது தான். இங்குள்ள முக்கியபிரச்சனை தனிப்பட்ட சொற்களுக்குரிய கலைச் சொல்லை ஆக்கும் போது எந்த முறையில் ஆக்குவது என் பதும், முன்னர் ஆக்கப்பட்ட சொற்கள் பொருள் விளங்கும் படி அமையவில்லை எனறு கருதிப் புதிய சொற்களைப் படைக்க முன்வருவதும் தான். மொழித்தூய்மையின் பெய ரால் எல்லோருக்கும் தெரிந்த எளிமையானச் சொற்களைத் தாய்மொழிச் சொற்களாக-தனிச்சொற்களைத் தொகைச் சொற் களாக மாற்றும் முயற்சி நடைபெற்று வருவதும் அறிவியல் நோக்கில் விவாதத்துக்கு உரியது.

கலைச்சொல்லாக்கத்தில் முக்கியமாக மொழியியல் நோக் கில் எல்லா அறிவுத்துறையிலும் கவனிக்கவேண்டிய சில

பொதுமைகள் உண்டு. எழுத்தியல் சொல்லியல், தொடரியல் அகராதியியல் ஆகிய நான்கும் மிக முக்கியமானவை. எழுத்தியலில் உள்ள சிக்கல்களை எழுத்துச் சீர்திருத்தவாதிகள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். அதைவிட முக்கியமானது கலைச்சொல்லாக்கும் முறைதான்.

சொல்லியலைப் பொறுத்தவரையில் முன்னொட்டுக்களையும் பின்னொட்டுக்களையும் வரையறுக்க முடியுமானால் ஒரு அடிப்படைச் சொல்லிலிருந்து பல சொற்களை எளிதாகப் படைக்க முடியும். பொதுவாக ஒரு உண்மை குறிப்பிடத் தகுந்தது. மூல மொழியில் பகுதியிலோ, விகுதியிலோ வடிவ ஒற்றுமை இருந்தால் தாய்மொழியிலும் இவ்வடிவ ஒற்றுமை இருக்கும்படி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை; மாறாக மூல மொழியில் ஒற்றுமை இல்லாவிட்டாலும் தாய்மொழியில் ஒற்றுமை ஏற்பட வாய்ப்பு உண்டு. **Hydel Power Station, Thermal Power Station** என்பன முறையே புனல் மின் நிலையம், அனல் மின்நிலையம் என்று படைத்துள்ளதில் மூல மொழியில் இல்லாத ஒலி ஒற்றுமை தாய்மொழியில் ஏற்பட்டுள்ளது என்றாலும் ஒற்றுமை வேண்டும் என்பதை கூடிய வரை நடைமுறைக் கொள்கையாக அமைத்துக்கொள்ளமுடியும். அடுதது தாப்படுத்துவதில் கவனிக்கவேண்டிய சில கருத்துகளைப் பார்ப்போம்.

Sub – என்பதற்கு மொழியியல் அகராதியில் உள், அடி என்ற இரண்டு சொற்கள் கையாளப்பட்டுள்ளன. இங்கு அடி என்பது **Sub-conscions** என்ற சொல்லிலே மட்டும் பயன் படுத்துவதால் அதையும் உள்மனம் என்று அமைப்பது சரியாக இருக்கும். இங்கு ஒரு ஒட்டு எங்கும் ஒரே மாதிரியாக அமைய வேண்டும் என்ற அடிப்படையே மாற்றத்துக்குக் காரணம். **Semi-**என்பது **Semi - Vowel** என்பதில் அரை உயிர் என்றும் **Semi Plosive** எனனும் போது அடைப்பு உரசொலி என்றும் ஆக்கப் பட்டிருப்பது ஏற்றுக்கொள்ளத் தகுந்தது தான். இங்கு ஒட்டு ஒன்றாக இருந்தாலும் கருத்தை ஒட்டி வெவ்வேறு ஆக்கப்பட்டிருக்கிறது ஏற்புடையதுதான்.

Standardisation என்பதற்கு நிலைபேறாக்கம், மொழியியல் நிலைப்பேறு, நிலையாக்கம், செம்மையாக்கம், செம்மொழி யாக்கம் போன்ற பல தொகைகளும் Classification என்பதற்கு செம்மொழியாக்கம் என்ற தொகையும் தரப்பட்டுள்ளன இரண்டும் வேறுபட்ட கருத்துகள் ஆனதால் Classicalaization-ஐ செம்மையாக்கம் என்றும் Standardisation என்பதை நிலை யாக்கம் என்றும் ஏற்றுக்கொள்ளலாம். இந்த உண்மை ஒரு பொருள்துறைச் சார்ந்த பல நுண்ணிய கருத்து வேறுபாடு உடைய பொருளுக்கும் வேறுவேறு பெயர்கள் வைக்கவேண்டும் என்பதை வற்புறுத்தும். இதையே அறிவாக்கம் என்பார்கள். Abstract, summary, abbreviation என்று மூன்று கருத்துக்குச் 'சுருக்கம்' என்று ஒரே சொல்லைப் பயன்படுத்தாமல் வேறு வேறு சொல் ஆக்குவது அவசியம். இதுவே சொற்களஞ்சியம் பெருகவும் மொழிநுண்மை பெறவும் வழி.

தொடர்களைக் கையாளும் போது தொகையாக இருக்கும் படி செய்வது ஒரு சொல் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்க வல்லது. Theory of a Language என்பது மொழிப்பற்றிய கொள்கை என்று ஆக்கப்பட்டிருக்கிறது. அது தொடர் (Phrase) ஆகும். அதுவே மொழிக்கொள்கை என்று அமையுமானால் தொகையாக ஆகி ஒரு சொல் போல அமையும், தொடரில் பொருள் அழுத்தம் உடைய பகுதியை ஒட்டி கலைச் சொல் லாக்கம் அமையவேண்டும். Prehistoric age, Prehistoric archaeology, prehistoric period என்பனவற்றில் prehistoric என்பதே அழுத்தம் பெறுவது. அதற்கேற்ப தமிழாக்கம் காணப்பட வில்லை.

Prehistoric age	முன்வரலாற்றுக் காலம்
Prehistoric archaeology	வரலாற்றுக்கு முற்பட்ட தொல் பொருளியல்
Prehistoric Period	வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

இன்று மூன்று சொல்லும், மூன்று வகையாக ஆக்கப்பட்டிருந் தாலும் முதல் இரண்டிலும் ஓரளவு ஒற்றுமை உண்டு. மேலும் Age, Period என்ற இரண்டு சொல்லும் ஒரே முறையில்

ஆக்கப்பட்டிருக்கிறது. இங்கு Prehistory என்பதும் மற்றொரு பெயரும் சேர்க்கப் பட்டுள்ளது. Prehistory என்பது அரசியல், சமூக, மொழி வரலாறுகளில் காணப்படும் கருத்து. எழுத்துச் சான்றுகள் கிடைக்கும் காலத்துக்கு முற்பட்ட காலவரலாறே Prehistory - அது முன்வரலாற்றுக் காலம் ஆகும். எனவே ஒரு புதுக் கருத்து என்ற முறையில் ஒரே முறையில்]எங்கும் தமிழாக்குவது நல்லது. எனவே மேலே குறிப்பிட்ட மூன்று சொற்களையும் முறையே முன்வரலாற்றுக் காலம், முன்வரலாற்றுத் தொல் பொருளியல், முன்வரலாற்றுக் கட்டம் என்று கூறலாம. இங்கு prehistory என்று ஒரே முறையில் ஆக்கப்பட்டிருப்பதோடு Age, period என்பதும் வேறுபடுத்தப்பட்டிருக்கிறது. பின்னது கொஞ்சம் மாறுபட்ட ஒரு பொருளைக் குறிப்பதால் அறிவாக்கம் என்ற் முறையில் வேறு வேறு சொல் கொண்டு ஆக்கப்பட்டிருக்கிறது.

proto- என்ற சொல் மொழிவரலாற்றில் பயன்படுத்தப்படும் ஒரு முன்னொட்டு. தமிழ் மொழி வரலாறு பற்றிப் பேசும் போது Proto-Dravidian, Proto-South Dravidian என்ற கருத்து அடிக்கடி குறிப்பிடப்படும்.

Proto- Dravidian	- முந்தைத் திராவிடம், மூலத்திராவிடம், திராவிடத்தாய்மொழி தொல் திராவிடமொழி, பழந்திராவிடமொழி முன்னைத்திராவிடம்.
Proto- South Dravidian	- தென் திராவிட மூலமொழி

இங்கு Proto என்பதற்குப் பல வகையான சொல் கையாளப் பட்டிருப்பதோடு அது ஒரே இடத்தில் வராமல் முன்னும் பின்னும் வந்துள்ளது. சொல்லும் தொடரியலும் மாறுபட்டுள்ளன. Proto என்பது முக்கியமான கருத்து ஆனதால் ஒரே ஒட்டை முதல் சொல்லாகப் பயன்படுத்தலாம். அவையாவன: முறையே தொல திராவிடம், தொல் தென் திராவிடம் என்பன

தமிழ் ஒரு வளரும் மொழி என்பதற்கு ஏற்ப கலைச்சொல் லாக்கத்திலும் மொழித்தொடர்பான பிறவற்றிலும் (சொல்

லெழுத்து, புணர்ச்சி) உறழ்ச்சி. அதிகமாக இன்று காணப்படுகிறது எது சரியானது, பொருத்தமானது என்ற சந்தேகம் பலருக்கு இருந்தும் வருகிறது. தரப்படுத்துவதும் அதை அகராதியாக வெளியிடுவதும் தான் பலரைத் தமிழ் எழுத முன்வரத் தூண்டும்.

கலைச்சொல்லாக்கமும் தரப்படுத்துவதும் அறிவுத் துறையைச்சார்ந்தது, கருத்துப் பரிமாற்றத்துக்கும் கருத்து வளர்ச்சிக்கும் அதாவது புதிய கருத்துகள் உருவாவதற்கும் வழிவகுக்கும்.

நிலையாக்கம் மொழியியல் துறையிலும் மொழியிலும் மொழி அமைப்பிலும் செய்யப்படவேண்டும். எனவே மொழியியலாளர்களாகிய நாம் மொழியியலில் மொழி அமைப்பு, மொழி வரலாறு போன்று கோட்பாட்டு நிலையில் சிறப்பாகக் கருதப்படுகிற துறையை மட்டும் அல்லாமல் உடனடியாக மக்களுக்குப் பயன் அளிக்கவல்ல பயிற்றுமொழி, தாய்மொழிக் கல்வி, கலைச்சொல்லாக்கம், மொழிப்புதுமையாக்கம் ஆகிய பயன்பாட்டு மொழியியலில் உழைக்க முன்வரவேண்டும். இங்கு நாம் சமூகத்தோடு மாறுபட நேரிடலாம், அதனை அறிவு வழி நின்று விளக்கி பொது மக்களை நம் பக்கம் இழுக்க வேண்டும்.

இந்திய அரசின் ஆட்சி மொழிக்குழு கூறியது[1] இங்கு பொருந்துமாயினும் அதனைக் கொஞ்சம் மாற்றிக் கூறுவது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இப்பொழுது தமிழ் மொழியியலாளருக்கு ஒரு சவால்விடப்பட்டுள்ளது: அது போலவே நல்ல சந்தர்ப்பமும் அமைந்துள்ளது. தமிழர்கள் அறிவியலைச் சுலபமாகக் கற்றுக் கொள்வதற்கும், சமூகத்தில் அறிவியல் அறிவு பரவி விஞ்ஞான மனப்பான்மை பெருகுவதற்கும், வழி செய்யும் வகையில் தமிழ் மொழியியலாளர்கள் அறிவியல் தமிழை உருவாக்க வேண்டும்.

---

1 Here is a tremendous challenge to the Indian linguists and a like opportunity to help in foregoing linguistic ties to match and sustain the cultural and political unities of the communities of Indian people. Nowhere in history could philologists and linguists have been called to the greater duty, என்பதே இந்திய அரசின் ஆட்சிமொழிக்குழு கூறியகருத்து.

வரலாற்றில் இதுவரை மொழிநூலாருக்கும் மொழியியலாளருக்கும் இப்படிப்பட்ட கடமை ஆற்றும் சூழல் ஏற்படவில்லை, எனவே கிடைத்தற்கு அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் மொழியை வளப்படுத்துவோமாக,*

*இது தமிழ்ப் பல்கலைக்கழகம் நடத்திய 'தமிழில் மொழியியல் கலைச் சொற்களைத் தரப்படுத்துதலும் இயற்றலும்' என்ற பணிப்பட்டறையில் 16-08-86 அன்று நிகழ்த்திய சிறப்பு சொற்பொழிவு.

மொழியியல் 10: 1 & 2 (1987)

தொல்காப்பியமும் பாணினீயமும்: ஓர் ஒப்பாய்வு*

க. பாலசுப்பிரமணியன்

மொழியியல் துறை

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

[**சுருக்கம்:** இக்கட்டுரை தொல்காப்பியமும் பாணினீயின் அஷ்டாத்தியாயீயும் இலக்கணக்கொள்கை போன்ற அக நிலையிலும் விளக்குமுறை உத்திகள் போன்ற புறநிலையிலும் முற்றிலும் வேறுபட்ட இரு இலக்கண மரபுகளின் பிரதிநிதிகள் என்று நிறுவுகிறது. முன்னுரை தொல்காப்பிய மரபையும் வடமொழி இலக்கண மரபுகளையும் ஒப்பிட்டு நிகழ்ந்த ஆய்வுகளைச் சுருக்கமாக அளவீடு (survey) செய்து தொல்காப்பிய மரபு வடமொழி மரபைத் தழுவியது என்ற கருத்தை மறுக்கிறது. மற்ற பகுதிகள் தொல்காப்பியத்தையும் பாணினீயத்தையும் அவை கூறும் செய்திகள், நூல் அமைப்பு, துணைப்பகுதிகளின் உண்மை, இன்மை, சூத்திர நடை, கையாளப்படும் உத்திகள், இலக்கணக்கலைச்சொற்கள், விளககமுறை போன்ற புறக்கூறுகளின் அடிப்படையிலும், கோட்பாட்டு நிலையில் தொடரியல் அல்லது சொல்லியல் செய்திகளுக்குக் கொடுக்கப்படும் சிறப்பிடம், மொழியின் அமைப்பை விளக்கும் மொழிநிலை வடிவங்கள் இவற்றின் அடிப்படையிலும் ஒப்பிட்டு இருநூல்களும் பெரிதும் வேறுபடுவதைக் காட்டுகின்றன. ஒற்றுமைகள் மேம்போக்கான புறக்கூறுகள் பற்றியன; வேற்றுமைகள் அடிப்படை இலக்கண மரபு வேறுபாட்டைக் காட்டுவன என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.]

---

* தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் 1982-இல் தொல்காப்பியக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரையின் திருத்தப்பட்டவடிவம்.

1. முன்னுரை

1.1. மொழியியல் வரலாற்றில் இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. மிகப் பழங்காலத்திலேயே தமிழிலும் வடமொழியிலும் நன்கு வளர்ச்சியடைந்த இலக்கணக் கொள்கைகள் தோன்றியிருந்தன. மிகப் பழமையான மரபுகளின் அடிப்படையில் இருமொழிகளிலும் இலக்கண நூல்கள் தோன்றியிருந்தன. அவ்வாறு இருபெரும் மரபுகள் இருந்தமைக்குச் சான்றாகத் தொல்காப்பியமும் பாணினியின் அஷ்டாத்தியாயீயும் விளங்குகின்றன, இவ்விரு நூல்களையும் தனி நூல்களாகக் கருதுவதைவிட இருமரபுகளின் முழுமையான பிரதிநிதிகளாகக் கருதுவதே பொருத்தமுடையதாகும். இவ்விரு நூல்களுக்கு முன்பே எண்ணற்ற இலக்கண நூல்கள் இருந்தமைக்குரிய சான்றுகள் இந்நூல்களிலேயே இருபபது மட்டுமன்றி, இந்நூல்களின் முதிர்ந்த கோட்பாட்டு அடிப்படையே அதற்குச் சான்றாக அமைந்துள்ளது. இத்தகு நூல்கள் திடுமெனத் தோன்ற இயலாது. காலப்போக்கில் படிப்படியாக வளர்ச்சியடைந்து முதிர்ந்த மரபுகளின் அடிப்படையிலேயே இவை தோன்றியிருக்க முடியும்.

1.2. தமிழ் வடமொழி இலக்கண மரபுகளின் ஒப்பீடு ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பே துவங்கியது [1]. ஆரம்ப கால ஒப்பீடுகள், தமிழ், தொல்காப்பிய இலக்கண மரபினை வடமொழி மரபின் தழுவல்களாகவே கருதின. வடமொழி இலக்கணக் கொள்கைகளிலிருந்தே தமிழ் இலக்கண மரபு வளர்ச்சியடைந்தது; அம்மொழி இலக்கணங்களின் தழுவல்கள் அல்லது தமிழாக்கங்களே தமிழ் இலக்கண நூல்கள் எனற கருத்து நம் நாட்டு, மேனாட்டு ஆய்வாளரிடையே நிலவியது. "தொல்காப்பியனார் வடமொழிப் பிராதிசாக்கியங்கள், யாஸ்கரின் நிருக்தம், பாணினிசிட்சை, பாணினியின் இலக்கணம் அல்லது அவருக்கு முற்பட்டவர்களின் இலக்கணங்களை முன்மாதிரியாகக் கொண்டு, ஆனால் தமிழ்மொழியின் இயல்பைச் சிறிதளவும் சிதைக்காமல் ஓர் அழகிய தமிழ் இலக்கணம் வகுத்துள்ளார்.

---

1. ஒப்புநோக்குக (ஒ.நோ) வேதாசல ஐயர் (1933) பி. சா சுப்பிரமணிய சாஸ்திரி, (1934).

...தொல்காப்பியர் வடமொழி இலக்கணக் கலைச்சொற்களை யும் அவற்றின் வரிசையமைப்பையும் மட்டுமன்றி வடமொழி இலக்கணக் கொள்கைகள் பலவற்றையுமே தழுவியுள்ளார்". என்று பேராசிரியர் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் கூறுகிறார். (1934: 3, 4). இத்தகு கருத்துகளைத் தழுவியே ராபின்ஸ் என்ற மேனாட்டறிஞர் தன் மொழியியல் வரலாற்றுச் சுருக்கத்தில் "வடமொழி தழுவிய இந்தியக்கலை மரபே இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு முன் மாதிரியாக அமைந்தது. திராவிட மொழிகளில் ஒன்றாகிய தமிழின் மிகப்பழைய இலக்கணமாகிய தொல்காப்பியம் தோன்றுவதற்குத் தூண்டு கோலாக அமைந்தது அதுவே (''ராபின்ஸ், 1967: 137) என்று கூறுகிறார்.

1.3. சுப்பிரமணிய சாஸ்திரியார் (1934: 109, 20) வேற்றுமைகளை வரிசைப்படுத்துவதிலும் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது எனப் பெயரிடுவதிலும் அவற்றின் பொருள்களைக் கூறுவதிலும் தொல்காப்பியர் பாணினியைப் பின்பற்றுவதாகக் கூறுகிறார். ஆனால், அவரே பெயர், ஐ, ஒடு, கு போன்றனவே வேற்றுமைகளின் மரபுவழிப் பெயர்கள் என்பதை ஒத்துக்கொள்கிறார். பிறப்பியல் முதல் சூத்திரம் (தொ. எ. 83) ஏறக்குறைய பாணினி சிட்சையின் மொழிபெயர்ப்பு எனக்கூறி ஆனால் அம்மொழி பெயர்ப்பில் தொல்காப்பியர் சில தவறுகள் செய்துவிட்டார் (1934: 6-10) என்று கூறுகிறார்.

ஐயெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி (தொ. சொ. 71)
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி (தொ. சொ. 73)

எனப்பெயர் கொடுக்கும் தொல்காப்பியர் இரண்டாவது, மூன்றாவது என வரிசைப்படுத்தி எண் கொடுப்பதில் பாணினியையோ வேறு வடமொழி இலக்கண ஆசிரியரையோ பின்பற்றியிருக்கக் கூடும். ஆனால் அவற்றிற்குப் பொருள் கூறுவதில் பாணினியைச் சிறிதும் பின்பற்றவில்லை. தொல்காப்பியரின் வேற்றுமை பற்றிய கருத்துகள் தமிழ் வாக்கிய அமைப்பை ஆராய்பவை என்பது எனது (பாலசுப்பிரமணியன், 1978) ,,தொல்காப்பியத்தில் வாக்கிய அமைப்புக் கொள்கை" என்று

கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. சொல் வடிவாக்கத்திற்குப் பயனபடும் பாணினியின் வேற்றுமை ஆய்விலிருந்து தொல்காப்பியர் கொள்கை பெரிதும் வேறுபட்டது.

1.4. தொல்காப்பியர் பாணினி சிட்சையை மொழிபெயர்த்தார் என்ற கருத்தை முருகையன் (1973) தெளிவாக மறுத்து விளக்கியுள்ளார். அவர் கட்டுரையில் தொல்காப்பியர் கருத்தும் சிட்சைக் கருத்தும் பெரிதும் வேறுபட்டவை என்றும், மொழி பெயர்ப்பில் தொல்காப்பியர் செய்த தவறுகளாகக் காட்டப் பெறுபவை ஒலியியல், உடலியல் கூறுகளின் அடிப்படையில் சரியானவை; தொல்காப்பியர் கொள்கை ஒலியியல், உடலியல் உண்மைக்குப் பொருத்தமானது. பாணினி சிட்சையில் நெஞ்சிலும் தலையிலும் ஒலி பிறப்பதாகக் கூறுவது போன்ற கருததுகள் ஒலியியல் உடலியியல் உண்மைகளுக்கு மாறானவை என்று விளக்கியுள்ளார்.

1.5. சுப்பிரமணிய சாஸ்திரியார் தனது தொல்காப்பியச் சொல்லதிகார ஆங்கில மொழிபெயர்ப்பின் (1945) முன்னுரையிலும் தொல்காபபியத்தில் காணப்படும் வடமொழி இலக்கணத் தாக்கங்களைப் பற்றிக் கூறுகிறார். ஆனால் அந்த நூலுக்குப் பதிப்பாசிரியர் என்ற முறையில் முன்னுரை எழுதிய பேராசிரியர் தெ. பொ மீனாட்சி சுந்தரனார் இரு மொழி இலக்கணங்களிடையே காணக் கிடைக்கும் ஒத்த பகுதிகளை (Parallelisms) ஒன்றிலிருந்து ஒன்று கடன் வாங்கியதாகக் கருதுவது சரியல்ல என்று எடுத்துக் காட்டுகிறார். சுப்பிரமணிய சாஸ்திரியாரின் கருத்துகள் அகத்தியலிங்கமும் பாலசுப்பிரமணியமும் (1974) (b) இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1 என்ற நூலின் முன்னுரையாக எழுதிய "தமிழ் இலக்கண மரபு" என்ற கட்டுரையில் விரிவாக மறுத்துரைக்கப் பட்டுள்ளன. இக்கட்டுரையில் நால்வேத பிராதிசாக்கியங்கள் யாஸ்கரின் நிருக்தம், பாணினியின் அஷ்டாத்தியாயீ, காதந்திரம் ஆகிய நூல்களில் காணக்கிடக்கும் வடமொழி இலக்கண மரபிற்கும் தமிழ் இலக்கண மரபிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அக் கட்டுரை, தமிழ் இலக்கண மரபு சிறப்பாகத் தொல்காப்பிய

மரபு வடமொழி இலக்கண மரபிலிருந்து கொள்கையடிப் படையிலும் இலக்கணக் கூறுகளுக்குக் கொடுக்கும் முக்கியத் துவத்திலும் பெரிதும் வேறுபட்டது எனக் காட்டுகிறது. வடமொழி இலக்கண மரபின் தாக்கம் தமிழ் மரபில் இருப்பது உண்மையாயினும் அது புறக்கூறுகளையே பாதித்துள்ளதே தவிர அடிப்படைக் கொள்கைகளைப் பாதிக்கவில்லை என்பது காட்டப்பட்டுள்ளது.

1.6. தொல்காப்பியத்தையும் பாணினீயத்தையும் முறையாக ஒப்பிடும் ஆய்வை துவக்கிய பெருமை டாக்டர் மீனாட்சி அவர்களைச் சாரும். 1972-இல் துவங்கி பல வெளியீடுகளில் பெயர்கள் (1972(a) தொகைகள் (1972,(b) வினை முற்றுக்கள் (1973), சந்தி (1981) ஆகியவற்றைத் தொல்காப்பியரும் பாணினியும் ஆராயும் முறைகளை ஒப்பிட்டு ஒற்றுமைகள் இருப்பினும் வேற்றுமைகளே பெரும்பான்மை என்பதை நிறுவியுள்ளார். ''அஷ்டாத்தியாயிலும் தொல்காப்பியத்திலும் உள்ள இலக்கணக் கோட்பாடுகள்'' என்ற கட்டுரையில் தொல்காப்பியத்திலும், பாணினீயத்திலும் ஆராயப்பட்டுள்ள ஒத்த பெயர் வினை, தொகை, போன்ற இலக்கண வகைகளை விரிவாக ஒப்பிட்டு ஆராய்ந்து கொள்கை அடிப்படையிலான சில வேறுபாடுகளையும் குறிப்பிட்டுச் செல்கிறார். திருமதி ராஜம் (1981) தமது,"இரு பழமையான இந்திய இலக்கண மரபுகளின் ஒப்பாய்வு'' என்ற பென்சில்வேனியாப்பல்கலைக் கழக டாக்டர் பட்ட ஆய்வு நூலில் நால்வேத பிராதிசாக்கியங் கள், பாணினீயம் தொல்காப்பியம் இவற்றில் பேசப்படும் எழுத்திலக்கணச் செய்திகளை மட்டும ஒப்பிட்டு அவற்றிடையே உள்ள வேறுபாடுகளை எடுத்துக் காட்டியுள்ளார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் செப்டம்பர் 1982-இல் நடை பெற்ற இந்திய இலக்கண மரபுகள் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற தொல்காப்பியத்தையும் பாணினீயத்தையும் ஒப்பிடும் இரு கட்டுரைகளில் ஒன்றில் பேராசிரியர் அனந்தநாராயணா (1982) இரு நூல்களிடையே ஒற்றுமை இருப்பினும் வேற்றுமை களே பெரும்பான்மையாதலால் தொல்காப்பியம் ஒரு வேறு இலக்கண மரபையே பின்பற்றி இருக்கவேண்டும் என்று கூறி

னார். அக்கருத்தரங்கிலேயே படிக்கப் பெற்ற எனது கட்டுரையில் (பாலசுப்பிரமணியன், 1982) இரு நூல்களையும் நூலமைப்பு கையாளும் உத்திகள் ஆய்வு முறை, போன்ற புறக்கூறுகளில் அடிப்படையிலும் இலக்கணக் கொள்கை, இலக்கணக் கூறுகட்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் மொழியமைப்பில் காணும் நிலைகள் போன்ற அகக் கூறுகளின் அடிப்படையிலும் முற்றிலுமாக ஒப்பிட்டு இவ்விரு நூல்கட்கிடையேயும் சிற்சில ஒற்றுமைகள் இருப்பினும் வேற்றுமைகளே பெரும்பான்மை இரண்டும் இருவேறு இலக்கண மரபுகளின் பிரதிநிதிகள் என்று நிறுவ முயன்றுள்ளேன். இக்கட்டுரையில் அக்கருத்துக்கள் விரிவாக ஆராயப்படும். பிற ஆய்வாளர் ஆராயாத கருத்துகளே இங்கு பேசப்படுகின்றன.

தொல்காப்பியப் பாணினீய ஒப்பீடுகளில் வேதாசல ஐயர் (1933) ஐக்தேவ்சிங், துரைசாமி (1972) ஆகியோர் கட்டுரைகள் எனக்குக் கிடைக்கவில்லை.

இக்கட்டுரையில் கூறப்படும் பாணினீயச் செய்திகள் பிற ஆய்வாளரின் ஆராய்ச்சி நூல்கள் கட்டுரைகளையே முற்றிலும் அடிப்படையாகக் கொண்டவை. தொல்காப்பியத்தைப் பற்றிய கருத்துகளுக்கு பிற ஆய்வாளர் கருத்துகளையும் என் ஆய்வு முடிவுகளையும் பயன்படுத்தியுள்ளேன்.

2. இரு இலக்கணங்களும் கூறும் செய்திகள்

தொல்காப்பியத்தைத் தமிழ் இலக்கணம் கூறும் நூல் என்றும் அஷ்டாத்தியாயீயை சமஸ்கிருத வியாகரணம் என்றும் கூறுகிறோம். இலக்கணம் என்ற தமிழ்ச் சொல், வியாகரணம் என்ற வடசொல், "grammar" என்ற ஆங்கிலச் சொல் ஆகிய இம்மூன்றும் ஏறக்குறைய ஒரே பொருளில் பயன்படுபவை. ஒன்றின் இடத்தில் இன்னொன்று வழங்கப்படுபவை, ஆனால் இத்தலைப்பின் கீழ் அவ்வம் மொழிகளில் ஆராயப்படும செய்திகளை ஒப்புநோக்கினால் தமிழ் தவிர மற்ற மொழிகளின் மரபுகளில் ஓர் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். அம்மரபுகளில் இலக்கணத்தின் வெவ்வேறு பகுதிகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தில் வேறுபாடு இருக்கலாம். ஆனால், அடிப்

படைக் கூறுகளில் குறிப்பிடதக்க வேறுபாடு இருப்பதில்லை. பொதுவாக, இலக்கணம் என்ற தலைப்பில் இன்றைய மொழியியல் ஆய்வில் ஒலியியல், (Phonetics) ஒலியனியல் (Phonemics) உருபொலியனியல் (morphophonemics) அல்லது புணர்ச்சி, சொல்லியல் (morphology), தொடரியல் (Syntax), பொருளியல் (Semantics) என்ற தலைப்புகளில் ஆராயப்படும் செய்திகளே பேசப்படும். இச்செய்திகளை வகைப்படுத்தும் முறையில் கொடுக்கும் சிறப்பிடத்தில் வேறுபாடு இருக்கலாமே தவிர, செய்திகளில் பெரும் பான்மை வேறுபாடு இருப்பதில்லை. பாணினீயம் ஒலியியல், ஒலியனியல் செய்திகளுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்காவிட்டாலும் மற்ற உருபொலியனியல், சொல்லியல், தொடரியல், ஓரளவு பொருளியல் செய்திகளை ஆராய்கிறது. இதில் பாணினீய மரபு மற்ற பெரும்பான்மை உலக மரபுகளை ஒத்துள்ளது. ஆனால் தொல்காப்பியத் தமிழ் மரபு ஓர் அடிப்படையான வேறுபாட்டைக் கொண்டுள்ளது. மேற்கூறிய மொழியியல் செய்திகள் அனைத்தும் முதல் இரண்டு பகுதிகளான எழுத்ததிகாரச் சொல்லதிகாரங்களில் ஆராயப்படுகிறன. இவ்வளவில், வடமொழி மேனாட்டு இலக்கண மரபுகளில் அடிப்படையில் இவ்விரண்டு அதிகாரங்களுமே இலக்கணம் என்ற பெயரில் வழங்கத் தகுதி பெற்று விடுகின்றன. ஆனால், மூன்றாவதாகிய பொருளதிகாரத்தில் கூறப்படும் செய்திகள், நமக்குத் தெரிந்தவரை இலக்கணம் என்ற தலைப்பில் வேறு எந்த மரபிலும் ஆராயப்பட்டதாகத் தெரியவில்லை, இப்பகுதியில் இலக்கிய மரபு, வாழ்வியல் மரபு அல்லது அகப்புற ஒழுக்க மரபு, யாப்பு, அணி ஆகிய மொழியின்“பொருளாக” -subject-matter- ஆக வருவன அனைத்தும் ஆராயப்படுகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரம் பற்றிய கமில் சுவலபில் (1974) அவர்களுடைய கருத்துகள் இங்கே குறிப்பிடத்தக்கவை. அவர் கருத்துப்படி (1974:4)“தொல்காப்பியப் பொருளதிகாரம் ”இலக்கணம்” என்ற கோட்பாட்டை இலக்கியத்திற்தும் மேலும் பண்பட்ட தலைவன் தலைவியின் காதல் ஒழுக்கம் போன்ற ஒரு வரையறையுடைய சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளுக்கும், முறையாக விரிவுபடுத்தி அவற்றை அமைப்பு விதிகளுக்கு உட்பட்டனவாகக் காட்டுகிறது. இங்கு, தொல்காப்பியர்” இலக்கிய அமைப்புகளும் (மனித ஒழுக்க

அமைப்பொழுங்குகளும் கூட) அடிப்படை மொழியியல் அமைப்புகளைப்போல அமைப்பு விதிகளுக்கு உட்பட்டவை என்று பழந்தமிழ் நூலாசிரியர் கண்டறிந்த உண்மைகளை விளக்குகிறார். மேலும் பொருளதிகாரம் "மொழியின் இலக்கணம் (மக்களின்)மொழித்திறனை (linguistic competence) விளக்குவது போல, இலக்கியத்தை இலக்கணமாக இலக்கியத் திறனை விளக்குகிறது. சிறப்பாக அத்தகு இலக்கணத்தின் அமைப்பு, மொழியல்லாத (பண்பாட்டின்) மற்ற கூறுகளையும் ஆய்வுப் பொருளாக எடுத்துக சொள்கிறது. (மொழ் யமைப்பை) ஒத்த அமைப்பியல் கொள்கைகள் (வேறுபாடுகள், ஒப்புமைகள்) விளையாட்டுகள் போன்றவற்றையும் சிறப்பாக அகப்புற ஒழுக்கங்களை ஆராய்கின்றது. இவ்வடிப்படையில், இலக்கியத்தின் இலக்கணமாகிய பொருளதிகாரம் இலக்கியத்திறன் பற்றிய பொதுக் கொள்கையின் ஒரு வடிவமாகும், இவற்றின் உலகப் பொதுக்கூறுகளையும் (universals) (தமிழின்) சிறப்பு மரபுகளையும் நாம் வேறுபடுத்தி அறிய வேண்டும்." சுவலபில் கருத்துப்படி (1974 : 34) "தொல்காப்பியப் பொருளதிகாரம் மிக உயரிய நாமறிந்த வரையில் சார்பின்மையும் தனித்துவமும் உடைய இலக்கிய, யாப்பியல் கொள்கை ஒன்றினைக் காட்டுகிறது. "தொல்காப்பியம், இலக்கிய இலக்கண ஆய்விற்கு மட்டுமின்றி மானுடப் புவியியல் (human geography) சமூகமாந்தவியல் (social anthropology) பண்பாடு, சூழலியல் (ecology), உளவியல் ஆகியவற்றைப் பற்றிய மிகச்சிறந்த செய்திகளைக் கொண்டு விளங்கும ஒரு கருத்துக் கருவூலம் ஆகும். தமிழ்ப் பண்பாட்டு ஆய்வுக்கு மட்டுமின்றி பொதுவான பண்பாட்டியல் ஆய்விற்கும் அது முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கூறுவது மிகையல்ல."

சுவலபில் அவர்களின் மேற்கூறிய கருத்துகள் தொல்காப்பியம் மொழியியல் கூறுகளை மட்டுமின்றி மனித ஒழுக்கக் கூறுகளையும் இலக்கிய மரபையும் விளக்கும் இலக்கணமாக அமைந்துள்ளமையைத் தெளிவுபடுத்துகின்றன. எனவே, இவ் வடிப்படையில் மொழியியல் கூறுகளை மட்டுமே ஆராயும் பாணினீய மரபிலிருந்து தொல்காப்பிய மரபு முற்றிலும்

வேறுபட்டது என்பது புலனாகும். தொல்காப்பிய மரபு பாணினீய, மேனாட்டு இலக்கண மரபுகளிலிருந்து வேறு பட்டது மாத்திரமல்ல மிக விரிவானதும் ஆகும்.

இனி, பொருளதிகாரச் செய்திகள் இலக்கணம் என்ற தலைப்பின் அடியில் எவ்வாறு கொள்ளத் தக்கன என்ற கேள்வி எழுவது இயல்பே. மைசூர், இந்திய மொழிகள் ஆய்வு மையத்தில் நடைபெற்ற **இலக்கணத்தில் என்ன செய்திகள் கூறப்பட வேண்டும்?** என்ற கருத்தரங்கில் படிக்கப்பட்ட எனது ''தொல்காப்பியரின இலக்கணக் கோட்பாடு என்ற கட்டுரையில் (பாலசுப்பிரமணியன 1983) இக் கேள்விக்கு விடை காண முயன்றுள்ளேன். இங்கே பேராசிரியர் பைக் (Pike) அவர்கள் கூறும் ஒத்த கருத்து ஒன்று ஒப்பிடத் தகுந்தது. பைக் (1967) முதன் முதலாக மொழி உள்ளிட்ட மனித ஒழுக்கம் முழுமைக் குமான ஒரு ஒருங்கிணைந்த ஆய்வு முறை பற்றிப் பேசுகிறார். ''மொழி, ஒருவகை ஒழுக்கம் (behaviour) என முடிவு செய்யப் பட்டுள்ளது. அதாவது, மொழி மனித நடவடிக்கைகளின் ஒரு பகுதி; அதை மற்ற மொழி தவிர்த்த நடவடிக்கைகளிலிருந்து அமைப்பு முறையில் வேறுபட்டதாகக் கருத முடியாது. மனிதனின் நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு முழுமையான அமைப் பொழுங்குடையனவை. அவற்றைத் தனித்தனி வரையறுத்த பகுதிகள் அல்லது நிலைகள் அல்லது பெட்டிகளாகப் பிரித்து அவற்றில் மொழியை மற்றவற்றிலிருந்து தன்மையிலும் அமைப்பிலும் வேறுபட்டுத் தனித்து நிற்கும் ஒரு பகுதியாகக் கொள்ள முடியாது. மொழியும் மொழி தவிர்த்த மற்ற நடவடிக் கைகளும் ஓர் ஒருங்கிணைந்த முழுமுதற் பொருள்; அவற்றை அவ்வாறே முழு முதற் பொருளாக ஆய்வதற்குரிய கோட்பாடு களும் ஆய்வு முறைகளும் உருவாக்கப்பட வேண்டும் (பைக் 1957, .26) ''இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில் மொழி வழக்கும் மற்ற புற (overt) நடவடிக்கைகளும் ஒரே அணுகு முறையால் ஆராயப்பட்டால் மட்டும் போதாது. (மனிதர்களின்) எல்லா வித உளவியல் நிகழ்வுகளும் புற உணர்வு களுக்கு மனிதர்கள் காட்டும் அமைப்பொழுங்குடைய (structured) உள்ளுணர்வு வெளிப்பாடுகளும் எண்ணங்கள், உணர்வு

கள் அனைத்துமே மனித ஒழுக்கத்தின் பகுதிகளாகக் கருதப் பட வேண்டும். மனிதனின் புற (overt) அக அல்லது மறை முகமான (covert) நடவடிக்கைகள் அனைத்தையும் ஒரே சமயத்தில் இடையிடின்றி ஆய்வதற்குரிய ஒரே கோட்பாடு, கலைச்சொற்கள், ஆய்வுமுறை வகுக்கப்பட்டாலே இது சாத்திய மாகும். மொழி மனிதனின் அமைப்பொழுங்குடைய, அத்தகு நடவடிக்கையின் ஒரு கூறே ஆகும் (பைக். 1967 : 32).

பைக் விளக்குகின்ற, மனித ஒழுக்கம் முழுமையும், மொழி உட்பட அக(covert) புற (overt) ஒழுக்கங்களை ஒருங்கிணைத்து இலக்கணம் செய்யப்பட்டுள்ள ஒரு முயற்சியே தொல்காப்பிய மாகும்.

3. புறநிலை ஒப்பீடு

தொல்காப்பியமும் பாணினீயமும அவை ஆராயும் மொழி யியற் கூறுகள் அடிப்படைச் கொள்கைகளில் மாத்திரமின்றி அவற்றைக் கூறும் முறை அதிகார, இயல், அத்தியாயப் பகுப்பு பயன்படுத்தும் உத்திகள், சூத்திர அமைபபு போன்றவற்றிலும் வேற்றுமை ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன. இவை புறநிலைக் கூறுகளாக இங்கு ஆராயப்படும். கோட்பாட்டு அடிப்படையி லான வேற்றுமை ஒற்றுமைகள் அகநிலை ஒப்பீடாக அடுத்த பகுதியில் ஆராயப்படும்.

3.1. நூல் அமைப்பு

தொல்காப்பியம் ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்ட எழுத்து, சொல், பொருள், என்ற மூன்று அதிகாரங்களையும் ஏறக்குறைய 1610 நூற்பாக்களையும் உடையது. அஷ்டாத்தியாயீ எட்டு அத்தியாயங்களைக் கொண்டு அதனால் அப்பெயர் பெற றது. ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு பாதங்கள் உடையவை. ஏறக்குறைய 000 சூத்திரங்களைக் கொண்டது.

தொல்காப்பியம் இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள் என்த் தெளிவாக வரையறுத்து ஆராய்கிறது. ஆராயப்படும்

செய்திகளின் அடிப்படையில் அதிகார, இயல் பகுப்புகள் செய்ய பட்டுள்ளன. ஆனால் அஷ்டாத்தியாயீயின் எட்டு அத்தியாயங் களிலும் இலக்கணக் கூறுகள் பொருள் வரையறை ஏதும் இன்றிக் கலந்து ஆராயப்படுகின்றன. தொல்காப்பிய எழுத்ததிகாரம் எழுத்தின் தொகை, பெயர், முறை, அளவு, வடிவு, பிறப்பு, புணர்ச்சி ஆகியவற்றை ஆராய்கிறது மொழியியல் கண்ணோ ட்டத்தில் எழுத்து அல்லது ஒலியன்களின் தொகை வகை பாடு, அவற்றின் வரன்முறை (distribution) போன்ற செய்திகள் முதல் இரண்டு இயல்களில ஆராயப்படுகின்றன. பிறப்பியல் அவற்றின பிறப்பாக்கத்தை ஒலிப்பிறப்பியல் கண்ணோட்டத் தில் விளக்குகிறது. மற்ற ஆறு இயல்களும் புணர்ச்சியை ஆராய் கின்றன. பெரும்பான்மை புறப்புணர்ச்சியே (external sandhi) ஆராயப்படுகிறது. எழுத்ததிகாரச் செய்திகள் அனைத்தும் இன்றைய மொழியியலாருள் மாற்றிலக்கணமுறை (Transformational Generative approach) யில் எழுதப்படும் இலக்கணத் தின் பகுதியாகிய ஒலியனியல் பகுதி (Phonological Component) யை ஒத்திருப்பது எனது (பாலசுப்பிரமணியன், 1972) தொல் காப்பியரின் ஒலியனியல் கொள்கை என்ற கட்டுரையில் விளக்கபபட்டுள்ளது. அக்கருத்துகள் அமைப்பு முறை மொழி யியல் (structural linguistics) கண்ணோட்டத்தில், ஒலியியல், ஒலியனியல், உருபொலியனியல் பகுதிகளில் ஆராயப்படுவன. வேற்றுமை உருபுகள், சாரியைகள் போன்ற சொல்லியல் செய்தி கள் புணர்ச்சியை விளக்குவதற்காகப் பேசப்படுகின்றன.

சொல்லதிகாரம் பெரும்பான்மை தொடர் அல்லது வாக்கிய இலக்கணத்தையே ஆராய்கிறது. இங்கு சொல் வாக்கியத்தின் பகுதியாகவே ஆராயப்படுகிறது. இவ்வதிகாரத் தில் மொழிப் பொருளியல் (linguistic semantics) செய்திகளும் கூறப்படுகின்றன. தொடரியலோடு தொடர்புடைய உருபனியல் அல்லது சொல்லியல் கூறுகளும் பேசப்படுகின்றன. முதல் இயலாகிய கிளவியாக்கம் பெயர் வினை இயைபு (concord). தொடர்வகைகள், சொற்கள் தொடரில் வரும முறை, போன்ற பல தொடரியற் செய்திகளைப் பேசுகிறது. அடுத்த மூன்று இயல்கள் வேற்றுமை இலக்கணத்தைத் தொடரியல் சொல்லியல், பொருளியல், கண்ணோட்டத்தில் ஆராய்கின்றன.

அடுத்த இரண்டு இயல்களில் பெயர் வினைகள், தொடரியல் நோக்கில் வகைப்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றன. இடைச் சொற்கள் என்னும் இலக்கணச் சொறகளின் (function words) இலக்கணத்தை இடையிலும் வேர்ச் சொற்கள் அல்லது பொருட் குறிச் சொற்களை (content words) உரியியலும் ஆராய்கின்றன. உரியியல் மொழியியல் கண்ணோட்டத்தில் சொற்றொகை (lexicon) என்ற பகுதியோடு ஒப்பிடத் தக்கது. (ஒ. நோ. பால சுப்பிரமணியன், 1985) விடுபட்ட தொகையிலக்கணம் போன்ற வை எச்சவியலில் ஆராயப்படுகினறன.

பொருளதிகாரம் மேலே (2) காட்டப்பட்டதுபோல அகம், புறம், களவு, கற்பு, உவமை, மெய்ப்பாடு, யாப்பு, மரபு போன்ற இலக்கிய, வாழ்வியல் மரபுகளை ஆராய்கிறது. இவ்வாறு மூன்று அதிகாரங்களும் ஒனறுக்கொன்று தொடர்புடையவை யெனினும் வரையறுக்கப்பட்ட பொருள்களை ஆராய்கின்றன. அவற்றின் இயல்களும் பெரும்பாலும் தனித்தனி தலைப்புகளில் வரும் செய்திகளையே ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி ஆராய்கின்றன.

ஆனால், அஷ்டாத்தியாயீன் அமைப்பு தொல்காப்பிய அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும. அத்தியாயங்கள் அவை கூறும் செய்திகளின் அடிப்படையில் பகுக்கப்படவில்லை ஒரே செய்தி பல அத்தியாயங்களிலும் ஆராயப்படும். எடுத்துக் காட்டாக தொகைகள் பற்றி ஆராயும் சூத்திரங்கள், 2, 5, 6, அத்தியாயங்களில் காணக்கிடைக்கின்றன. (அனந்தநாராயணா, 1976 : 16) எழுத்தியல் சொல்லியல், தொடரியல், மொழிப் பொருளியல் செய்திகள் எந்தப் பாகுபாடுமின்றிக் கலந்து ஆராயப்பட்டுள்ளன. புணர்ச்சிவிதிகள் பல அத்தியாயங்களிலும் கூறப்பட்டுளளன. ஒலியனியல் ஒலியியல் செய்திகள் அதிகம் பேசப்படவில்லை, எனினும் அவையும் கலந்தே பேசப்படு கின்றன. அத்தியாயப் பகுப்பில் மொழியமைப்பு நிலைகள் கருத் தில் கொள்ளப்படவில்லை. ஆனால் நூல் முழுவதும் ஓர் ஒருங் கிணைந்த கட்டுக்கோப்புடைய அமைப்பாகச் செயல்பட்டு, சொல் வடிவங்களைத் திறம்பட உருவாக்குவதற்கு உதவும் முறையில் நூல் அமைக்கப்பட்டுள்ளது. பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ள

அஷ்டாத்தியாயீயின் அத்தியாயப் பொருள்பாகுபாட்டு அட்டவணை இத்தன்மையை உணர்ந்து கொள்ள உதவும்.

எனவே நூல் அமைப்பில் பாணினீயமும் தொல்காப்பியமும் முற்றிலும் வேறுபட்டவை என்பது தெளிவு.

3.2. துணைப் பகுதிகள்

தொல்காப்பியமும் அஷ்டாத்தியாயீயும் புறநிலையில் இன்னொரு வகையிலும் வேறுபடுகின்றன. தொல்காப்பியம் கூறும் இலக்கணத்தை முற்றிலும் அறிந்து கொள்ளவும் அதன் விதிகளைப் பயன்படுத்தவும் வேறு துணை நூல்கள் ஏதும் தேவையில்லை. வகுக்கப்படவும் இல்லை. அது முழுவதும் தன்னிறைவுள்ள அமைப்பாகும். ஆனால், அஷ்டாத்தியாயீயில் விதிகளைப் புரிந்து கொள்ளவும் பயன்படுத்தவும் சில துணைப் பகுதிகளும், நூல்களும் தேவைப்படுகின்றன. உணாதி சூத்திரங்கள், தாது பாடம், கணபாடம், லிங்காநுசாசனம், பாணினீய சிட்சை, ஆகிய ஐந்தின் துணை கொண்டே அஷ்டாத்தியாயீயைப் பயன்படுத்தவும் புரிந்துகொள்ளவும் இயலும். உண் என்று தொடங்கும் ஒட்டுகளைப் பற்றிப் பேசும் 758 சூத்திரங்களைக் கொண்ட பகுதி **உணாதி சூத்திரங்கள்.** வேர்ச் சொற்களின் பட்டியல் **தாது பாடம்.** ஒரே வகை இலக்கணங்கொண்ட சொற்களின் தொகுதி **கண பாடம்.** இவ்விரண்டு பகுதிகளுடன் தொடர்படுத்தி நூலில் விதிகள் அமைக்கப்பட்டுள்ளன. **லிங்கா நுசாசனம்** சொற்களின் பால் பகுப்பினைக் கூறும் நூல். **சிட்சை** ஒலிப்பிறப்பியல் நூலாகும். அஷ்டாத்தியாயீயிலுள்ள சூத்திரங்களைச் சூத்திர பாடம் என்பர். இவ்வனைத்தும் இணைந்தே இலக்கண முழுமையையும் கூறுகின்றன. சிட்சை தவிர மற்ற நான்கு பகுதிகளையும் சூத்திர பாடத்தையும் சேர்த்து இலக்கணத்தின் **பஞ்சாங்கங்கள்** அல்லது ஐந்து உறுப்புகள் என வடமொழி இலக்கண நூலார் கூறுவர். (அனந்தநாராயணா, 1976: 19) எனவே முறையே தன்னிறைவுடைமை, துணைப்பகுதிகளைப் பயன்படுத்தல் என்ற அடிப்படையில் தொல்காப்பியமும் பாணினீயமும் வேறுபடுகின்றன.

3.3. சூத்திர நடையும் உத்திகளும்

இவ்விரு நூல்களும் சூத்திர நடை, அமைப்பிலும் கையாளும் உத்திகளிலும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன. பொதுவாக வடமொழிச் சூத்திர நடை சொற் சுருக்கத்திற்குப் பெயர் பெற்றது. பாணினீயமும் இதற்கு விலககல்ல. பாணினீய சூத்திரங்கள் வடமொழி யாப்பு விதிகளையோ சாதாரண வாக்கிய அமைப்பையோ பின்பற்றுவதில்லை. அச்சூத்திரங்களில் வினைப்பயனிலைகள் இருப்பதில்லை. அவற்றைச் சூழலைக் கொண்டு உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும் (ஓ. நோ- மிஸ்ரா, 1966:30 சுருங்கக் கூறல் எனனும் உததியைப் பாணினீ முற்றிலுமாகப் பயன்படுத்துகிறார். அவருடைய சூத்திரநடை அதற்குத் துணைபுரிகின்றது. சே (அ. 1. 1 13) ஓத் (அ. 1. 1.15) பிரத்யயஹ (அ. 3. 1. 1.) போன்ற சூத்திரங்கள் சுருங்கக் கூறும் அவர் இயல்பிற்கு எடுத்துக்காட்டு. சுருங்கக் கூறவேண்டும் என்ற ஆர்வத்திற்கு பொருள் தெளிவை அவர் சில இடங்களில் பலியிடுகிறார் என்று அனந்தநாராயணா (1976:23) பாணினியைக்குறை கூறுகிறார். சொற் சுருக்கத்திற்காக வேறு சில உத்திகளையும் அவர் கையாளுகிறார். (1) அனுபந்தங்கள் அல்லது இத் குறியீடுகள் (2) பிரத்தியாகாரங்கள் என்னும் சுருக்கக் குறியீடுகள் (3) சம்ஜ்ஞைகள் எனனும் இலக்கணக் கலைச் சொற்கள் (5) பரிபாஷைகள் என்னும் விளக்க விதிகள் (6 அதிகாரம், அனுவிருத்தி என்ற பொது விதியும் பொருள் தொடர்புமாகிய உத்திகள். இவ்வுத்திகளைப் பயன்படுத்தி பாணினி வேறு எந்த பழைய இலக்கண மரபிலும் இல்லாத கணித நூல் போனற சொற் சுருக்கத்தைத் தன நூலில் கொண்டு வந்துள்ளார்.

தொல்காப்பியச் சூத்திர நடை பாணினீய நடையிலிருந்து முற்றிலும் வேறு படுகின்றது. சொற் சுருக்கம் பாணினீயத்தின் சிறப்பென்றால் பொருள் தெளிவு தொல்காப்பியத்தின் சிறபபாக அமைகின்றது. "சூத்திரம்" என்ற சொல்லை வடமொழியிலிருந்து தொல்காப்பியர் பயன்படுத்தி இருப்பினும் (தொ. பொ 470, 471), வடமொழிச் சூத்திர அமைப்பை அவர் பின்பற்ற வில்லை. தொல்காப்பிய நூற்பாக்கள் பயனிலையில்லாத வாக்கியங்கள் அல்ல. அவை எப்பொழுதும்

பயனிலை பெற்றே வரும். வினைப் பயனிலையாகவோ பெயர்ப் பயனிலையாகவோ இருக்கலாம்.

மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் (தொ. எ. 46)
அஇஉ அம்மூன்றும் சுட்டு (தொ. எ. 31)

நூற்பாக்கள் தமிழ் யாப்பிலக்கண விதிகட்கும் தொடர் இலக்கண விதிகட்கும் உட்பட்டே வருகின்றன. சூத்திர இலக்கணமாகப் பொருளதிகாரத்தில் கூறப்படுவதற்குப் பொருத்தமாக தொல்காப்பியச் சூத்திரங்கள் முழுதும் அமைந்துள்ளன.

சூத்திரம் தானே
ஆடிநிழலின் அறியத்தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள் நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப்பதுவே (தொ. பொ. 471)

''ஆடிநிழலின் அறியத்தோன்றி நாடுதல் இன்றிப் பொருள் நனி விளங்க'' என்ற தொடர் பொருள் தெளிவுக்குத் தொல்காப்பியர் கொடுக்கும் சிறப்பிடத்தைக் காட்டுகிறது, ''யாப்பினுள்'' தோன்ற என்ற தொடர் சூத்திரம் யாப்பமைதியுடனேயே வர வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. பல நுற்பாக்களில் வரும் தெரியுங்காலை (தொ. எ, 22) ''உணரக்கூறின்'' (தொ. எ. 35) போன்ற தொடர்கள் யாப்பமைதிக்காகவே அமைக்கப்பட்டனவாதல் வேண்டும். பாணினி சொற்சுருக்கத்திற்காக பொருள் தெளிவைப் பலியிட்டார் என்றால் தொல்காப்பியர் பொருள் தெளிவு, யாப்பமைதி ஆகியவற்றிற்காக சொற்சுருக்கத்தைப் பலியிட்டாரோ என்று தோன்றுகிறது. தொல்காப்பியரும் பல உத்திகளையும் (தொ. பொ. 656) பயன்படுத்தினும் அவை சுருக்கத்தைவிடப் பொருள் தெளிவையே மனதில் கொண்டு பயன் படுத்தப்பட்டதாகத் தோன்றுகிறது.

எனவே இவ்வடிப்படையிலும் இருநூல்களும் மாறுபட்டிருப்பது தெளிவு.

3.4. இலக்கணக் கலைச்சொற்கள்

இலக்கணக் கலைச் சொற்களைப் பயன்படுத்துவதில் தொல்காப்பியர் பாணினி இருவரிடையேயும் ஒற்றுமைகளும் வேற்று

மைகளும் புலப்படுகின்றன. பாணினி கிருத்திரும எனப்படும் செயற்கையாக உருவாக்கப்பட்ட கலைச்சொற்களையும் அகிருத்திரும எனப்படும் இயல்பான அதன் சொல்வரலாறு தெரியும் கலைச்சொற்களையும் பயன்படுத்துகிறார். கா (gha) என்பது ஒரு கிருத்திரும கலைச்சொல். விருத்தி போன்றவை அகிருத்திரும கலைச்சொற்கள். தொல்காப்பியர் செயற்கையான கலைச்சொற்கள் எதையும் பயன்படுத்தவில்லை. ஆய்தம் என்ற சொல் கூட தொல்காப்பியத்திலேயே (தொ.சொ. 324) விளக்கப்படும் ஆய்தல் என்ற சொல்லின் அடியாக வந்ததாக இருக்கலாம்.

இரு நூல்களிலும் சில கலைச்சொற்கள் இலக்கணப் பொருள் அல்லாமல் வேறு பொருளிலும் பயன்படுகின்றன. உயிர் என்ற சொல் எழுத்தினைக் குறிப்பதுடன் 'உயிர் வாழ்க்கை' (தொ. பொ. 71. 2) "உயிரினம்" (தொ. பொ. 577. 1) என்ற பொருளிலும் பயன்படுகிறது. இத்தகைய சொற்கள் மிகப்பல. பாணினீயத்தில் விருத்தி என்ற சொல் ஆ, ஐ, ஔ என்ற உயிர்களைக் குறிப்பதுடன் (அ. 1. 1. 1) "கடன் வட்டி" (அ. 1. 5. 1. 4) என்ற பொருளில் பயன்படுகிறது.

சில சொற்கள் இரு நூல்களிலும் கலைச்சொற்களாக வழங்கும் பொழுது தம் வேர்ச்சொற்பொருளைக் கொண்டு வழங்குகின்றன. குறில், நெடில் போன்ற தொல்காப்பியச் சொற்கள் குறு, நெடு என்ற பண்படிச் சொற்களிலிருந்து பிறந்து குறுமை, நெடுமை என்ற பொருள்களை விடாது கலைச் சொல்லாக வழங்குகின்றன. பாணினீயத்தில் சர்வ நாமம் 'பதிலிப்பெயர்' (pronoun) (அ. 1. 1. 27) அத்தகைய ஒரு கலைச்சொல்.

3.5. விதிமுறையும் விளக்கமுறையும்

இலக்கணங்களை அவற்றின் தன்மையைக் கொண்டு விதிமுறை இலக்கணங்கள் (prescriptive grammars) என்றும் விளக்கமுறை இலக்கணங்கள் (descriptive grammars) என்றும் இருவகையாகப் பகுக்கலாம். ஒரு மொழியின் அமைப்பை அது

எவ்வாறு வழக்கில் இருக்கிறதோ அவ்வாறே விளக்கி எழுதப் படும் இலக்கணம் விளக்கமுறை இலக்கணம் ஆகும். அவ்வாறு இன்றி, மொழி வழக்குகளில் சிலவற்றை நல்லவை அல்லது சரியானவை என்றும் சிலவற்றைத் தவிர்க்கப்பட வேண்டியவை என்றும் மதிப்பிட்டு எழுதப்படும் இலக்கணம் விதிமுறை இலக்கணம் (கிளீசன் *1961 : 208*) ஆகும. தொல்காப்பியம், அஷ்டாத்தியாயீ இரண்டனுள் அஷ்டாத்தியாயீ முற்றிலும் விளக்கமுறை இலக்கணமாகக் கருதப்படுகிறது. (ஒ. நோ. கார்டோனா (*1976 ; 182*) மீனாட்சி, (*1980 : 100*). ஆனால், தொல்காப்பியம் பெரும்பான்மை விளக்கமுறை இலக்கணமே எனினும் விதிமுறை இலக்கணத்தின் தன்மைகளையும் கொண்டு விளங்குகின்றது.

> செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் (தொ. சொ. *13*)
> ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
> ஒன்றனைக் கூறும் பன்மைக்கிளவியும்
> வழக்கினாகிய உயர் சொற் கிளவி
> இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல (தொ. சொ. *27*)

போன்ற நூற்பாக்கள் விதிமுறை இலக்கணத் தன்மை உடையவை. மூன்று அதிகாரங்களிலும் காணக்கிடைக்கும் பல நூற்பாக்களும் (தொ. எ. 5, 6 : சொ, *19, 20, 23, 35 36* : பொ. *38, 57, 173, 185* போன்றவை) தொல்காப்பியத்தை ஓரளவு விதிமுறை இலக்கணத்தை உடையதாகக் காட்டு கின்றன.

4. கோட்பாட்டு நிலை ஒப்பீடு

4.1. சொல்லியல் தொடரியல் கூறுகள்

முன்பகுதியில் தொல்காப்பியமும் பாணினீயமும் புறக் கூறுகளின் அடிப்படையில் ஒப்பிடப்பட்டன. அவற்றைக் கோட்பாட்டு அடிப்படையில் ஒப்பிடும்பொழுது மொழி யமைப்பின் பல்வேறு கூறுகளில் எக்கூற்றிற்கு இவ்விரு நூல் களில் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் ஒப்பிடுவதும் ஒன்று. அவ்வடிப்படையில், சொல்லியல் கூறுகள்

தொடரியற் கூறுகள் ஆகிய இவற்றில் எவற்றிற்கு இவ்விரு நூல்களில் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்று இங்கு ஆராயப்படும்.

மொழியியல் வரலாற்றின் முற்பகுதியில் அமைப்பு முறை ஆய்வு (Structural approach) சிறப்புற்றிருந்த பொழுது மொழி பல அமைப்பு நிலைகளை (levels of linguistic structure) உடையதாகக் கருதப்பட்டு, சொல்லின் பகுதி, விகுதி, இடை நிலை அமைப்பு, சொல்லியல் அல்லது உருபனியல் (morphology) என்ற பகுதியிலும் வாக்கிய அமைப்பு தொடரியல் (syntax) என்ற பகுதியிலும் தனித்தனியே ஆராயப்பட்டன. ஆனால் சாம்ஸ்கியின் (1957, 1965) மாற்றிலக்கண ஆய்வு முறை சிறப் பிடம் பெற்ற பிறகு சொல்லமைப்பையும் தொடர் அமைப்பை யும் தனித்தனியாக ஆயும் நிலை மாறி சொல்லமைப்பின் கூறுகள் தொடரியல் ஆய்வின் பகுதியாகவே கருதப்பட்டன. மாற்றிலக்கணம் அடிப்படையான தொடரியற் பகுதியையும் (Syntactic Component) ஒலியனியல் அல்லது எழுத்தியல் பகுதி (Phonological Component) பொருளியல் பகுதி (Semantic component) என்ற இருவிளக்கப் பகுதிகளையும் உடையதாக அமையும். சொல்லியல், தொடரியல் வேறுபாடு முற்றிலும் இல்லை. ஆனால் சமீபத்தில் சொல்லியல், தனியாக ஆராயப் பட வேண்டுவதன் அவசியத்தை மாத்தியூஸ் (1974) மீண்டும் வலியுறுத்தினார். எனினும் சொல்லியல் தொடரியல் கூறுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை என்பதனையும் அவர் உணர்ந்திருந்தார்.

இத்தகைய மொழி அமைப்புப்பற்றிய கொள்கைப் பின்னணியில் தொல்காப்பியத்தையும் பாணினீயத்தையும் ஆராயும் பொழுது, இருவர் நூலிலும் சொல்லியல் தொடரியற் கூறுகள் வேறுபடுத்திக் காட்டவில்லை என்பது உட்கொள்ளத் தக்கது எனினும் ஏதோ ஒரு இயலின் கூறுகளே சிறப்பிடம் தரப்பெற்று மற்ற இயலின் கூறுகள் அதற்கு பயன்படும் வகையில் கையாளப்பெற்றுள்ளன.

இவ்விரு நூல்களில் பாணினீயம் ஆரம்ப காலத்தில் சொல் லமைப்பைப் பற்றி மட்டும் பேசும் இலக்கணமாகவே கருதப்

பட்டது. சொற்களைப் பாகுபடுத்தல் என்ற பொருள் தரும் **சப்தாநுசாசனம்** என்ற அதன் மற்றொரு பெயர் இக்கருத்துக்கு ஆதரவாகப் பயன் பட்டது. (ஒ. நோ. ராபின்ஸ், 1967 : 137) அண்மையில் நிகழ்ந்த ஆய்வுகள்[2] இக்கருத்து தவறானது; அ டாத்தியாயீ ஒரு தொடரியல் அமைப்பை அடிப்படையாகக் கொண்ட இலக்கணம்; பொருளியற் கூறுகளும் அதில் காணக் கிடக்கின்றன என்று நிறுவியுள்ளன. ஆனால், அஷ்டாத்தி யாயீயை ஆராயும் நூல்கள், கட்டுரைகளை நுணுகி ஆராய்ந் தால் ஓர் உண்மை புலனாகும். "அஷ்டாத்தியாயீ அடிப் படையில் ஒரு சொல்லமைப்பை ஆராயும் நூலே; தொடரியல் பொருளியல் கூறுகள் அதற்குத் துணைபுரியப் பயன்படுவன வே'' என்பதே அது. இநத உண்மையை நூல் முழுவதிலும் பகுதி (பிரகிருதி) களையும் **பிரத்யயங்கள்** எனப்படும் ஒட்டு களையும் வேறுபடுத்தி சொற்களின் வடிவாக்கம் (derivation) பேசப்படுவதிலிருந்து அறியலாம். நூலில் உள்ள பெரும்பான் மையான விதிகள் சொல் திரிவு (inflection) அல்லது சொல் லாக்கம் (derivation) பற்றியனவே. பெயர் அல்லது வினை விகுதிகளைக் கொண்டு முடியும் பதங்களின் வடிவாக்கமே பெரும்பாலும் ஆராயப்படுகிறது. இவ்வடிவாக்கத்திற்குரிய காரணங்களாக (Conditions) தொடரியல், பொருளியல் கூறு கள் கூறப்படுகின்றன. காரகக்கோட்பாடு, சொல்வடிவாக் கத்திற்குப் பயன்படும் ஒரு தொடரியல் பொருளியல் (syntactico semantic) காரணமே. கார்டோனாவின் (1976:235) பின்வரும் கருத்துகள் இவ்வுண்மையை வலியுறுத்தும். "பாணினி வாக்கியங் களை வடிவாக்கம் செய்வதுடன் அவற்றிடையே உள்ள உறவுகளையும் விளக்குகிறார். எனினும் அவர் இலக்கணம் உண்மையில் **சப்தாநுசாசனம்** என்ற அதன் பெயருக்கிணங்க வாக்கியங்களின் பகுதியாக வரும் சொல் வடிவங்கள் அவற் றிடையே உள்ள உறவுகளை விளக்குதலையே முக்கிய நோக்க மாகக் கொண்டது.

பாணினி காட்டும் பொருள் வேறுபாடுகளும் ஒரு குறிப் பிட்ட ஒட்டினை இணைக்க, வடிவு மாற்றம் செய்ய அல்லது

2. ஒ. நோ. கிபார்ஸ்கி, ஸ்டால் (1969) கார்டோனா, 1976
வான் நூடன் (1969) சிங் (1974) சுப்பிரமணியன் (1981)

சாரியை இணைக்கத் தேவையானவைகளே தவிர, தொடரியல் அமைப்பைப் பாதிக்கும் பொருள் வேறுபாடுகளை எல்லாம் அவர் பேசுவதில்லை. எனவே, பாணினியின் இலக்கண அமைப்பு சொற்பகுதிகளையும் ஒட்டுகளையும் இணைத்து சொற்களை வடிவாக்கம் செய்தலை மையப்பொருளாகக்கொண்டது என்பது தெளிவு (ஒ. நோ. கார்டோனா, 1976: 235) .

தொல்காப்பியம் பாணினீயத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டு விளங்குகிறது. தொல்காப்பியத்தில் தொடரியல் கூறுகள் அல்லது வாக்கிய அமைப்பே சிறப்பிடம்கொடுக்கப்பட்டு சொல்லியல், பொருளியல், ஒலியனியல் கூறுகள் அதற்குத் துணையாகவே பயன்படுகின்றன. தொல்காப்பியச் சொல்லதிகாரம் தொடரிலக்கணத்தையே பெரும்பாலும் ஆராய்கிறது என்பதை மேலே (3. 1.) கண்டோம். இவ்வதிகாரத்தில், இலக்கணக் கூறுகள் அவர் பேசும் தொடர் இலக்கணத்திற்குப் பயன்படுமாற்றை மனதில் கொண்டே அவற்றின உருபனியல் வடிவு பேசப்படுகிறது. திணை, பால், எண், இடத்துடன் காலத்தையும் ஒரு இலக்கணக் கூறாகத் தொல்காப்பியர் ஆராய்கிறார். ஆனால திணை, பால், எண், இடம் காட்டும் விகுதிகளை விரிவாக ஆராயும் அவர் காலம் காட்டும் எழுத்துக்களைப் பற்றிப் பேசவே இல்லை. வினையின் வரைவிலக்கணத்தைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டே வகுக்கிறார் (தொ. சொ. 198). காலம் மூன்றெனவும் (சொ. 199) அவை இன்னின்ன (சொ. 200) எனவும் விளக்குகிறார். ஆனால், காலங்காட்டும எழுத்துக்கள் பற்றிப் பேசவே இல்லை. திணை, பால், இடம், காட்டும் விகுதிகளைப் பற்றிப் பேசுவது பெயருக்கும வினைக்கும் இடையே உள்ள இயைபினை (concord) விளக்குவதற்காகத்தான் (தொ. சொ. 11). ஆனால், வினைமுற்றின் சொல்லியல் அமைப்பை, பகுபத இலக்கணத்தை அவர் ஆராயவே இல்லை. எச்சங்களைப் பற்றிப் பேசும் பொழுதும் அவற்றை முழுச் சொற்களாக, வாய்பாடுகளாகக் கூறுகிறாரே தவிர (தொ. சொ. 228, 234) அவற்றின உருபனியல் அமைப்பை ஆராயவில்லை. மேலும் செய்து, செய்பு போன்ற பகுதி, விகுதி அமைப்புடைய எச்சங்களுக்கு இணையாக பின், முன், கால், கடை

போன்ற பகுதி மாத்திரமாய் அமைந்த சொற்களையும் அவற்றின் இயல்பின என்று கூறுவது அவற்றின் சொல்லியல் அமைப்பைக் கருதாது வாக்கியத்தில் அவற்றின் பங்கைக் கருத்தில் கொண்டேயாகும்.

வாக்கிய அமைப்பின் கண்ணோட்டத்தில் வேற்றுமை தொல்காப்பியத்தில் சிறப்பிடம் கொடுக்கப் பெற்று மூன்று இயல்களில் சொலலதிகாரத்தில் அதன இலக்கணம் ஆராயப் படுகிறது[3]. இவ்வடிப்படையிலேயே எழுத்ததிகாரத்திலும் வேற்றுமை உருபுகளின் வடிவம் கூறப்படுவதுடன் (தொ. எ 114) புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி அல்வழிப்புணர்ச்சி என இருவகையாகப் பகுக்கப்படுகின்றது (தொ. எ. 113 புணர்ச்சியில், வாக்கியத்தில் சொற்களுக்கிடையே நிகழும் புறப்புணர்ச்சி (external sandhi) யே பெரும்பாலும் ஆராயப்படு கிறது. வேற்றுமை ஆராயப்படுவதால் பெயர்கள், வேற்றுமை உருபுகள் சாரியைகளுக்கிடையே நிகழும் அகப்புணர்ச்சி மாத்திரமே பேசப்படுகிறது. காலங்காட்டும் எழுத்துக்கள் ஆராயப்படாமையாலும் வினைச்சொற்களின் சொல்லமைப்பு பேசப்படாமையாலும் வினைச்சொற்களில் நிகழும் கல்+த்த்+ ஆன்→கற்றான் எனபது போன்ற அகப்புணர்ச்சி ஆராயப் படவில்லை. புணர்ச்சியின் இலக்கணத்தை வரையறுக்கும் பொழுது, தொல்காப்பியர், அதனைப் பெயர்ச் சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் இடையே நிகழ்வதாக விளக்குகிறாரே தவிர, பெயர் வினைகட்கும், விகுதிகள், இடைநிலைகள் உருபு களுக்கிடை யே நிகழ்வதாக விளக்கவில்லை (தொ. எ. 109).

சொல்லியல் கூறுகள் அல்லது சொல்லின் உள்ளமைப்பு ஆராயப்படாமையினாலேயே விகுதி, இடைநிலை, உருபுகள் போன்ற ஒட்டுகளுக்கு வடமொழியில் பிரத்யயங்கள் என்ற பொதுப்பெயர் இருப்பதுபோலத் தொல்காப்பியத்தில் இல்லை. உருபுகள், சாரியை எனத் தனிப்பெயர்கள் வழங்கப்படினும் வினை விகுதிகளைக்[4] குறிக்கத் தனிப்பெயர்கள் இல்லை. சொல், கிளவி

3. ஒ. நோ. பாலசுப்பிரமணியன், 1978.
4. விகுதி நன்னுலார் பயன்படுத்தும் சொல்

என்ற பெயர்களாலேயே அவை வழங்கப்படுகின்றன (தொ. சொ. 5, 6,7,8). சொல், கிளவி என்ற இருசொற்களும் சொற்கள் இடைச்சொற்கள், ஒட்டுகள் அனைத்தையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

சொற்களின் விகுதிகள் பகுக்கப்பெற்றாலும் சொற்களைப் பகுதியாகவும் இடைநிலை, விகுதி, போன்ற ஒட்டுகளாகவும் பகுத்து ஆராயும் சொல்லியல் ஆய்வுக்குத் தொல்காப்பியத்தல் இடமில்லை[5]. சொல்லியல் ஆய்வின் பகுதியாகிய சொல்திரி (inflection) வின் கூறுகள் ஓரளவு தொல்காப்பியத்தில் பேசப் படினும் ஒரு சொல்லிலிருந்து மற்றொரு சொல்லை உருவாக்கும் சொல்லாக்கம் (derivation or word-formation) சிறிதும் ஆராயப்படவில்லை. எண்ணற்ற ஆக்கச் சொற்கள் தொல் காப்பிய நூற்பாக்களிலேயே வந்திருந்தும்[6] அவர் சொல்லாக்கம் பற்றிப் பேசவில்லை. இவை அனைத்தும் சொல் அமைப்பு ஆய்வு தொல்காப்பியத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என் பதையும், தொடரியற்கூறுகளே சிறப்பிடம் கொடுக்கப்பெற்றன என்பதையும் தொல்காப்பியத்தில் வரும் சிற்சில உருபணியற் செய்திகள் தொடரியல் ஆய்வுக்குத் துணையாகக் கூறப்பட்டன வே என்பதையும் தெளிவுபடுத்துகின்றன. எனவே, இவ்வடிப் படையிலும் தொல்காப்பியமும் பாணினீயமும் வேறுபடு கின்றன என்பது புலப்படும்.

4.2. மொழிநிலை வடிவங்கள (levels of representation)

தொல்காப்பியரும் பாணினியும் தாம் ஆராயும் மொழியின் அமைப்பு வடிவங்களை எத்தனை நிலைகள் உடையனவாகக் காட்டியுள்ளனர் என்பதிலும் வேறுபாடுகள் உள்ளன.

பாணினீயத்தில் அமைந்துள்ள மொழி நிலைகள்பற்றி கிபார்ஸ்கி, ஸ்டால் (1969) ஆகியோரும் கார்டோனாவும் (1976 தம்முள் கருத்துவேறுபாடு கொண்டுள்ளனர். கிபார்ஸ்கி, ஸ்டால் பின்வருமாறு கருதுகின்றனர். ''பாண்னியின் இலக்கணம்

5. இக்குறையைக் களையவே நன்னுலார் பதவியல் வகுத்தாகக் கூறுவர்.

6 . ஓ. நோ. பாலசுப்பிரமணியன் (1981 : 400)

பொருள்நிலை வடிவங்களை ஒலி நிலை வடிவங்களாக மாற்றும் விதிகளாகும். இவ்விரு நிலைகளுக்கு இடையே மாற்றிலக்கணத்தின் புதைநிலை (deep structure), புறநிலை (surface structure) களுக்கு இணையான இருநிலைகள் உள்ளன. பாணினியின் விளக்குமுறை பின்வருமாறு அமைந்துள்ளது. அவர் நான்கு மொழிநிலைகளைத் தொடர்பு படுத்துகிறார் (1) செய்பவன் (Agent), குறிக்கோள் (Goal), இடம் (Location) போன்ற கொள்கைகளான பொருள்நிலை உறவுகள் (2) புதைநிலை உறவுகளுக்கு இணையான (புதைநிலை) எழுவாய் (Underlying Subject) (புதைநிலைச்) செயப்படுபொருள் (Underlying object) இடப்பொருள் வினையடை (Place adverbial; போன்ற காரகங்களின் நிலை (3) வேற்றுமைகள், ஆக்க ஒட்டுகள், முன்னொட்டுகள், வினை விகுதிகள் போன்ற சொல்லியல் கூறுகளால் விளக்கப்படும் புறநிலை வடிவு (4) ஒலியனியல் நிலை: வேற்றுமை உருபுகள், வினையுடன் சேரும் ஒட்டுக்களின் வடிவங்கள். பொருளியல் நிலைக்கும் புதைநிலைக்கும் இடையே உள்ள உறவு நேரான ஒன்றுக்கொன்றான உறவல்ல. அது பல வகைப்பட்டதாகும். சில சமயங்களில் ஒரே பொருள் உறவு பல காரகங்களாக வரும். எடுத்துக்காட்டாக

அவன் சூதாடுகிறான்
அவன் சூது கொண்டு ஆடுகிறான்

எனக் கருவிப்பொருள் முறையே கர்மன், கரணம், என்னும் இரு காரகங்களாக வருகின்றது. மாறாக, வேறுபட்ட பொருளுறவுகள் ஒரே காரகமாக வரலாம்.

அவன் சூதாடுகிறான்
அவன் கிராமத்தில் வாழ்கிறான்

என்ற தொடர்களில் கருமகாரகம் முறையே கருவிப்பொருளையும், இடப்பொருளையும் தருகிறது.

கார்டோனா (1976 : 218, 221 222) இந்நான்கு நிலைகளில் மூன்றாவதான புறநிலை ஒரு தனி நிலை அல்ல என வாதாடுகிறார். இந்நிலையில் வரும் பிரதம முதல் துவிதீயா இரண்டாவது

போன்ற வேற்றுமைகள் வேற்றுமை உருபுகளுககுக் கொடுக்கப் பெற்ற பெயர்களே தவிர இலக்கணக் கூறுகள் அல்ல. ஆனால் வினை விகுதிகளாகிய லகாரங்களை ஒரு வகை இல்க்கண நிலையாகக் கொள்ளலாம் என்று கூறும் அவர் காரகங்களைப் பொருளியல் நிலைக்கும், இலக்கண நிலைக்கும் இடைப்பட்ட நிலையாக ஒத்துக்கொள்கிறார். ஆனால், லகாரங்கள் போல பிரதம, துவிதியா போன்றவையும், வேறுபட்ட வேற்றுமை உருபுகளை ஒருவகையில் பருப்பொருள் நிலையிலிருந்து நுண் நிலைக்கு கொண்டு வருவதால் அதனைத் தனிநிலையாகக் கருதும் கிபார்ஸ்கி, ஸ்டால் கருத்து சரியானதாகத் தோன்று கிறது.

இனி, தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தைத் தவீர்த்து பாணினீயத்தோடு ஒப்பிடத்தக்க எழுத்ததிகார சொல்லதிகாரக் கருத்துகளை மாத்திரம் நோக்கினால் மூன்று மொழிநிலைகள் அமைந்துள்ளன. அவை 1) பொருளியல் நிலை 2) தொடரியல் நிலை 3) ஒலியனியல் நிலை என்பவை. பொருளதிகாரத்தையும் சேர்த்தால் உண்மை நிலை (reality) அல்லது இலக்கிய, உலகியல் மரபு என்று ஒரு நிலையையும் கொள்ள வேண்டும்.

பொருளதிகாரத்தை நீக்கிப் பார்க்கும் பொழுது மற்ற நிலைகள் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளன. தொடரீயல் நிலை நடுநாயகமாக அமைந்து சொல்லதிகாரத்தில் விளக்கப் பெறுகிறது. சொல்லதிகாரத்திலேயே அதற்குப் பொருளியல் நிலை விளக்கங்கள் கொடுக்கப்பட்டு விடுகின்றன. எழுத்ததி காரம் அதற்கு ஒலிவடிவம் தருகிறது. எடுத்துக்காட்டாக இலக்கண அமைப்பாகிய வேற்றுமைகளும் அதன் பொருள்களும் சொல்லதிகாரத்திலேயே விளக்கப்படுகின்றன. எழுத்திகார விதிகள் வேற்றுமைகள் தொடரில் வரும்பொழுது அவை பெறும் வடிவ வேறுபாடுகளைனைத்தையும் விளக்குகின்றன.

தொல்காப்பியமும் பாணினீயமும் இவ்வாறு மொழி நிலைகளில் வேறுபடுவதோடுகூட அவை வரிசைப்படுத்தப் பட்டு விளக்கப்படும் முறையிலும் வேறுபடுகின்றன. பாணி னீயத்தில் பொருளியல்நிலை துவக்க நிலையாக (input) அமைந்து ஒலிநிலை இறுதிநிலையாக அமைகிறது. ஆனால்

தொல்காப்பியத்தில் இலக்கணக் கூறுகள் முதலில் கூறப்பட்டு அவை சொல்லதிகாரத்திலேயே பொருள் விளக்கமும் பின் எழுத்ததிகாரத்தில் ஒலி வடிவமும் பெறுகின்றன.

உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே (தொ. சொ. 1)
னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல் (தொ. சொ. 5)
ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல் (தொ. சொ. 6)

போன்ற விதிகளில் உயர்திணை, அஃறிணை, னஃகான் ஒற்று ளஃகான் ஒற்று போன்ற இலக்கணக் கூறுகள் முதலில் கூறப் படுகின்றன. அவற்றின் பொருள் உடன் 'மக்கட் சுட்டு, அவரல பிற, 'ஆடூஉ', 'மகடூஉ' என விளக்கப்படுகின்றன. ன, ள, போன்றவற்றின் ஒலி வடிவத்தை எழுத்ததிகார விதிகள் மூலம அறியலாம் (தொல். எ. 94, 96). ஆனால் அஷ்டாத்தியாயீயின் விதிகள் பொருளில் துவங்கி வடிவில் முடிகின்றன.

வர்த்தமானே லட் 'நிகழ்காலம் லட் விகுதியால் காட்டப் பெறும்' (அ. 3: 2. 125)
ஆதாரோ அதிகரணம் (அ. 1. 4. 5)

'இடப்பொருள் அதிகரண காரகத்தால் குறிக்கப்பெறும்' என்ற விதிகளில் வர்த்தமானம்,, "நிகழ்காலம்" ஆதாரம், இடப் பொருள் போன்ற பொருள்கள் முதலில் கொடுக்கப்பட்டு அவற்றைக் குறிக்கும் இலக்கணக் கூறுகள் அடுத்துத் தரப்படுவ தைக் காண்கிறோம். இவ்விலக்கணக் கூறுகளின் ஒலிவடிவங்கள் பின்னால் வரும் விதிகளால் விளக்கப்பெறும்.

5. முடிவுரை

இதுவரை விளக்கப்பட்ட செய்திகள், தொல்காப்பியமும் பாணினியின் அஷ்டாத்தியாயீயும் முற்றிலும் வேறுபட்ட இரு இலக்கண மரபுகளுக்குரியவை என்பதைக் காட்டுகின்றன. இம் முடிவு தொல்காப்பியத்தில் வடமொழி இலக்கண மரபின் தாக் கமே இல்லை என்று கூறுவதாகாது. தொல்காப்பியர் வட மொழி இலக்கண மரபை அறிந்தவர் என்பதற்குத் தொல்காப்

பியத்திலேயே சான்றுகள் உள்ளன. பனம்பாரனார் எழுதிய தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் தொல்காப்பியரை ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் (தொ. பா.)'' என்று கூறுகிறது. பேராசிரியர் பர்னல் (1976 (1875) : 31) தன்னுடைய ஐந்திர வியாகரணம் பற்றிய நூலில் வடமொழி இலக்கண நூல் காதந்திரமும், தமிழ்த் தொல்காப்பியமும் ஐந்திரவியாகரண மரபைப் பின்பற்றியன என்றும், ஐந்திர மரபு பாணினீய மரபிற்குக் காலத்தால் முந்தியது என்றும் கூறுகிறார். தொல்காப்பியர் சூத்திரம் (தொ.பொ,470-1) பிண்டம் (தொ. பொ.470.4) படலம் (தொ. பொ. 473. 2) போன்ற வடமொழி இலக்கணக் கலைச் சொற்களைப் பயன்படுத்துகிறார். மேலும், தமிழ் இலக்கணத்திற்கும் வடமொழி இலக்கணத்திற்கும் உள்ள வேறுபாட்டையும்[7] ஒத்த பகுதியையும்[8] எடுத்துக் காட்டுகிறார். எனவே, தொல்காப்பியர், ஐந்திர மரபோ அல்லது பாணினீய மரபோ, 'மறை' என்று குறிப்பிடுவதால் நால்வேத பிராதி சாக்கியங்களின் மரபோ அறிந்திருந்தார் என்பதில் ஐயமில்லை. அதன் தாக்கம் தொல்காப்பியத்தில் உள்ளமை வேற்றுமைகளை வரிசைப் படுத்தி எண் கொடுப்பதில் இருந்திருக்கக் கூடும் என்பது முன்னுரையில் (1.2) கூறப்பட்டது. தொல்காப்பிய மரபு ஐந்திர மரபைச் சேர்ந்ததாகக் கருதப்படும் காதந்திரம் என்ற நூலின் மரபிலிருந்தும் வேறுபட்டது என்பதை அகத்தியலிங்கம் பாலசுப்பிரமணியம் (1974) விளக்கியமை முன்னுரையிலேயே

---

7. உணர்ச்சி வாரத்து

அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற்கோடல் அந்தணர் மறைத்தே - (தொ. எ. 102.3-5)
அஃதிவண் நுவலாது எழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே (தொ.எ. 103)

8. இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்
காமக் கூட்டம் காணும் காலை
மறையோர் தோத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே (தொ. பொ. 89)

(1. 5) கூறப்பட்டது. குறிப்பாக, தொல்காப்பியர் தொடரியல் (syntax) அடிப்படையில் வேற்றுமைக்குச் சிறப்பிடம் கொடுத்து மூன்றியல்களில் விளக்கும் வேற்றுமை இலக்கணத்தை, காதந்திரம் சொல்லியலுக்குச் (morphology) சிறப்பிடம் கொடுத்துப் பெயரியலின் பகுதியாக விளக்குகிறது. இம் மரபினை பிற்கால இலக்கணமாகிய நன்னூலில் நாம் காண்கிறோம் (நன் 291 -319). எனவே தொல்காப்பியத்தில் வடமொழி மரபின் தாக்கம் மேம்போக்கான புறக்கூறுகள் சிலவற்றில் காணப்படினும் அடிப்படை இலக்கணக் கொள்கை, இலக்கண கூறுகளுக்குத் தரப்பட்டுள்ள சிறப்பிடம், விளக்குமுறை உத்திகள் (descriptive techniques) ஆகிய அனைத்திலும் தொல்காப்பிய மரபு தனித்து நிற்கிறது என்பதில் ஐயமில்லை.

பின்னிணைப்பு

அஷ்டாத்தியாயீயின் அமைப்பு
அத்தியாயம் பேசப்படும் பொருள்

1. கலைச்சொற்களின் வரைவிலக்கணம், விளக்க விதிகள் (1.1.?)
   ஆத்மனேபதம், பரஸ்மைபத விதிகள் (1.3 12-77)
   · காரகங்கள் (1.4 23-55)
2. தொகைகளின் வகையும் இலக்கணமும் (2.1.3-2.38)
   காரகங்களுக்குரிய விபக்திகள் (2.3.1-75)
   தொகைகளின் பால், எண் பாகுபாடு (2.4.1-31)
   வினைகளின் காலங் காட்டும் விகுதிகள்
   3,4,5. அத்தியாயங்களில் பிரத்தியயங்கள் எனப்படும் ஒட்டுகள் ஆராயப்படுகின்றன.
3. வினை விகுதிகள்
4. விபக்திகளின் அடிப்படை வடிவங்கள் (4.1.2)
   பெண்பாற் சொற்களின் வடிவாக்கம் (4.1.3–75)
   தத்தித விதிகள் (4.1.76–5.4.67)

5. தத்தித விதிகள் (5.4-67 வரை)
தொகைபற்றிய விதிகள் (5.4.68-160)

6. இரட்டித்தல், வேர்ச்சொற்களிலும் விகுதிகளிலும் வரும் புணர்ச்சி மாற்றம் (6.1.1-71)
இணைப்பு (juncture) (6.1-72–157)
ஸ்வர விதிகள் (6.1. 158-6.2.199)
தொகையிலக்கணம் (6.37)
அங்காதிகாரம்-ஒட்டுக்கள் சேரும் அடிச்சொற்கள் பற்றிய விதிகள் (6.4.13-74)

7. அங்காதிகாரம் (தொடர்ச்சி)

8. இரட்டித்தல் விதிகள் (8.1.1–15)
சொல்வடிவாக்க விதிகள் (8.1.16-76)
திரிபாதி - அசித்த சந்தி விதிகள் (8.2,3,4)

துணை நூல்கள்

அகத்தியலிங்கம். ச 1978 "Tolka:ppiyar's concept of Syntax" in S. Agesthialingom and N. Kumaraswami Raja, 1978:1-22.

அகத்தியலிங்கம். ச
பாலசுப்பிரமணியன். க 1974(a) இலக்கண ஆய்வுக்கட்டுரைகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அண்ணாமலைநகர்.

அகத்தியலிங்கம். ச
பாலசுப்பிரமணியன். க 1974 (b) தமிழ் இலக்கண மரபு, இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் அண்ணாமலை நகர்.

அகத்தியலிங்கம். ச
குமாரசாமிராஜா ந. 1978 *Studies in Early Dravidian Grammar*, Annamalai University, Annamalainagar.

அகத்தியலிங்கம். ச 1972 தொல்காப்பிய மொழியியல்
முருகையன் க. (பதிப்பர்) அண்ணாமலைநகர்.

அனந்தநாராயணா. எச். எஸ். 1976 *Four Lectures on Pa:ṇini" Aṣṭa:dhya:yi*, Annamalai University, Annamalai nagar.

அனந்தநாராயணா. எச். எஸ். 1982 "Tolkappiyam and Aṣṭādhyāyi- a study", Paper Presented in the Seminar on Indian Grammatical Tradition, Tamil University, Thanjavur.

கார்டோனா, ஜியார்ஜ் 1976 *Pānini, A survey of Research*, Mouton, The Hague Paris.

கிபார்ஸ்கி. பால்
ஸ்டால். ஜெ. எஃப் 1969 (Kiparsky, Paul "Syntactic and Semantic relations in Panini" in *Foundations of Language*: 83-117,

கிளீசன், எச் ஏ. 1961 (Gleason) An *Introduction to Descriptive Linguistics*, Holt, Rinehart and Winston, New York.

சண்முகம் செ.வை. 1972 "வேற்றுமைபற்றித் தொல்காப்பியர்" தொல்காப்பிய மொழியியல் 276-308, பர்) ச. அகத்தியலிங்கம், க. முருகையன் 1972).

சாம்ஸ்கி, என். 1957 (Chomsky, N.) *Syntactic structures* Mouton: The Hague.

சாம்ஸ்கி, என், 1965, *Aspects of the theory of Syntax, Cambridge:* Massachusets.

சிங், ஜெ. டி. 1972 (Singh, J. D.) "Pāṇini's Theory of Language" IJDL, 1: 80-96

சிங் ஜெ. டி. 1974 (Singh, J.D.) "Paṇini 'Theory of Kārakas" IJDL, 3 : 287-320.

சிங் ஜெ. டி. துரைசாமி கே. 1972 The Case: Tolkappiyam and Pāṇini, a comparative study. Kurukshetra University Research, Journal, 4: 119-29.

சுப்பிரமணியம் சி. 1982 "எழுத்தியல், பாணினீயம், தொல்காப்பியம்" -பதினான் காவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை தொகுப்பு-4. தொல் காப்பியச் சிந்தனைகள்: 181-*186,* இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலைநகர்.

சுப்பிரமணியம் பி. எஸ். 1981 "Pa:ṇiṇi's use of Semantics" paper presented in the International Seminar on panini held under the auspi-

ces of the Centre of San skrit University of Poona, Pune.

சுப்பிரமணிய சாஸ்திரி பி. சா 1934 *History of Grammatical-Theories in Tamil*, The journal of Oriental Research, Madras.

சுப்பிரமணிய சாஸ்திரி பி. சா 1945 *Tolkappiyam Collati karam with an English commentary*, Annamalai University Annamalainagar.

சுவலபில், கமில் 1974 (Zvelebil, K.V) Tamil Literature, otto, Harrasso-witz, Wiesbadon.

பர்னல், ஏ. சி. 1875 (1976) (Burneli, A. C) *On the Sindrs school of sanskril Grammarians*, second edition 1976, Bhakt Bharathe varansii

பாலசுப்பிரமணியன் க. 1972 "தொல்காப்பியரின் ஒலியனியல் கொள்கை," 'தொல் காப்பிய மொழியியல்', (பர்) ச. அகத்தியலிங்கம், க முருகையன், 51-82.

பாலசுப்பிரமணியன் க. 1974 "தொல்காப்பியரின் ஆய்தக் கொள்கை" இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் (பர்) ச. அகத்தியலிங்கம், க. பாலசுப்பிரமணியன், 1974 378–88.

பாலசுப்பிரமணியன் க. 1978 "Concept of Sentence Structure in Tolkappiyam" in S. Agesthialingom and

N, Kumaraswami Raja *(*1978*)*: 23:38.

பாலசுப்பிரமணியன் க. 1981 *A Descriptive Grammar of Tolkappiyam*, Unpublished Ph. D. Dissertation, Annamalai University, Annamalainagar.

பாலசுப்பிரமணியன் க. 1982 "A comparative study of the grammatical Traditions Represented in Tolkappiyam and Astadhyayi" - Paper presented in the Seminar on Indian Grammatical Tradition, Tamil University Thanjavur.

பாலசுப்பிரமணியன் க. 1983 Tolkappiyar's concept of grammar – Paper presented in the Seminar on what should go into a grammar C.I.I.L, Mysore.

பாலசுப்பிரமணியன் க. *1985* "தொல்காப்பிய உரியியல்: ஓர் அகராதியியல் கண்ணோட்டம்", அகராதிக்கலைக் கருத்தரங்கு, தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

பெல்வக்கார் எஸ். கே. *(*Belvalkar, S.K.*)* 1915 Systems of Sanskrit Grammar, Poona.

பைக், கே.எல். 1967 (Pike, K.L.) *Language in Relation to a Unified Theory of the structure of Human Behaviour*, Mouton & Co., The Hague, Paris.

மிஸ்ரா. வித்யா நிவாஸ் 1966 (Misra, Vidya Niwas) *The Descriptive Technique* of *Pāṇini*, Mouton, The Hague, Paris.

மீனாட்சி கு. 1972 (a) *Treatment of Noun in Aṣṭādhyāyī and Tolkappiyam*, unpublished Post-doctoral Research Report CAS in Linguistics, Annamalai University, Annamalainagar.

மீனாட்சி கு. 1972 (b) "Treatment of compounds in Astadhyayi and Tolkappiyam" in *Na:nka:vatu Karuttarauku Malar*, Proceedings of 4th Conference of All India University Tamil Teachers Association Department of Tamil Kerala University, pp. 469-74.

மீனாட்சி கு. 1973 "Treatment of finite verb in Astadhyayi and Tolk-

		appiyam" in *Aindavatu Karuttaranku āyvukkovai*, Dept. of Tamil, Presidency College Madras, pp.746-521.
மீனாட்சி கு.	1980	"அஷ்டாத்தியாயிலும் தொல்காப்பியத்திலும் உள்ள இலக்கணக் கோட்பாடுகள் மொழியியல்-3 17-20 அண்ணாமலைநகர்.
மீனாட்சி கு.	1981	"Sandhi in Tolkappiyam and Aṣṭādhyāyi", *A:yvu-kkovai* Annamalainagar, Annamalai University.
மீனாட்சிசுந்தரன் தெ. பொ.	1974	உரிச்சொல் ச. அகத்திய லிங்கம், க. பாலசுப்பிர மணியன் பர். 1974-; 121-138
முருகையன் க.	1972	"தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை" - தொல்காப்பிய மொழியியல், பதிப்பாசிரியர்கள் ச, அகத்தியலிங்கம் க, முருகையன், 2-50, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.
முருகையன் க.	1973	**"Did Tolkappiyar Translate Pa:ṇini 'Śikṣa.' in** *Aintavatu Karuttaranku A:yvuk kovai* **PP.599-606, Madras.**
மாத்யூஸ் பி. எச்,	1974	(Matthews, P. H) *Morphology: An Introduction*

to the theory of word-structure, Cambridge University Press.

ராபின்ஸ் ஆர். எச். (Robins, R. H.) 1967 A Short History of Linguisttcs, Longmans, London.

இராமசாமி க. 1978, "Tolkappiyar's Treatment of Semantics" in S. Agesthilingom and N. Kumaraswami Raja, 1978: 39-60

இராஜம் வி. எஸ். 1981 *A comparative study of Two Ancient Indian Grammatical Traditions: The Tamil Tolkappiyam Compared with Sanskrit Ṛ. K. Pratisakhya, Taittiriya Pratisakhya, Apisali Siksha, and the Astadh yayi* Ph. D. dissertation of University of Pensylvania, 498 p, 421 1037 p. 1128.

வான் நூடன் பி. ஏ. 1969 (Van Nooten, B.A.) "Panini's Theory of VerbalMean ing" in *Foundations of Language*-5: 242-255

வாசு எஸ். சி. 1962 (Vasu, S. C) 1891 *The Aṣṭādhyāyī of Pāṇini* Vol. I & II, Motilal Banarsidass, Delhi

வேதாசல அய்யர் பி. எஸ். 1933 "The Sources of Tolkappiyam" *Journal of Oriental Research*, 7:53-58, Madras

மொழியியல் 10: 1 & 2 (1987)

மாற்றிலக்கணப் போராட்டம்

ந. செல்லமுத்து

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

[சுருக்கம்: மொழியை மாற்றிலக்கண முறையில் அணுகிய, முதல் அறிஞர் சாம்ஸ்கி (Chomsky). அதன் முதற்படியாக அவர் 1957-ஆம் ஆண்டு தொடரியல் அமைப்புக்கள் (Syntactic Structures) என்னும் நூலை வெளியிட்டார். அடுத்த சில ஆண்டுகளுக்குள்ளாகவே அதாவது 1965-ஆம் ஆண்டு அதனைத் திருத்தம் செய்து, 'தொடரியல் கொள்கைகளின் கூறுகள்' (Aspects of the Theory of Syntax) என்னும் பெயரில் ஒரு நூலை எழுதி மீண்டும் தன் கருத்துக்களை வெளியிட்டார். இங்ஙனம் அவரால் வெளியிடபட்ட தொடரியற் கருத்துக்களில் அமைந்துள்ள கோட்பாட்டை நிலைக்கொள்கை (Standard Theory) என அழைத்தனர். இவ்வாறு தோன்றியதே மாற்றிலக்கணம். கருத்து முரண்பாடுகளால் பின்னர் இது இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தது. அவைதாம் உருவாக்கப் பொருண்மையியல் (Generative Semantics), எடுத்துரை பொருண்மையியல் (Interpretive Semantics) எனப்படுவன. மேற்கண்ட இரண்டு கொள்கைகளையும் விளக்குதலும், தற்காலம் வரை அவை எவ்வாறு வளர்ச்சிப் பெற்றுள்ளன என்பதை எடுத்துக்காட்டுதலும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.]

1.0. எடுத்துரை பொருண்மையியல்

1957-ஆம் ஆண்டு சாம்ஸ்கி வெளியிட்ட தொடரியல் அமைப்புக்கள் என்னும் மாற்றிலக்கண நூலில் (1) தொடரமைப்புப் பகுதி (2) மாற்றுவிதிப் பகுதி (3) உருபொலியனியல் பகுதி என்னும் மூன்று பகுதிகள் பேசப்படுகின்றன.

இவற்றில் முதலாவதான தொடரமைப்புப் பகுதியில் தொடரியல் விதிகளும், இரண்டாவதான மாற்றுவிதிப்பகுதியில் மாற்று விதிகளும் இருக்கின்றன. இவை இரண்டும் மாற்றிலக்கணத்தின் தொடரியல் பகுதியைச் சார்ந்தவைதாம். இத்தொடரியல் பகுதியே வாக்கிய அமைப்பை உருவாக்குகிறது. பிறகு இந்த வாக்கிய அமைப்பிற்கு உருபொலியனியல் பகுதி ஒலி உருவம் கொடுக்கிறது. மேற்கூறிய இரண்டு கருத்துக்களுமே சாம்ஸ்கியின் தொடரியல் அமைப்புக்கள் என்னும் நூலில் வருவனவே. எந்த ஒரு வாசகியமும் சில மாற்று விதிகளைப் பயன்படுத்தினால்தான் பிறக்க முடியும். இங்குக் குறிப்பிடத்தக்கதென்னவெனில், எந்த ஒரு வாக்கியமும் பிறிதொரு வாக்கியத்திலிருந்து தோன்றுவதில்லை. சாம்ஸ்கியின் தொடரியல் அமைப்புக்களில் பொருள் விளக்கப்படவில்லை என்பது ஒரு முக்கியமான கருத்தாகும். இதற்குக் காரணம் தொடரமைப்பு விதிகள் பொருளிலிருந்து முழுமையாகவும், தனிமையாகவும், சுதந்திரமாகவும் இயங்குகின்றன என்று கருதப்பட்டது. இவ்விதிகளே ஒரு மொழியில் உள்ள இலக்கணமுடைய வாக்கியங்களை உருவாக்குகின்றன என்றும் கருதப்பட்டது. அடுத்த கருத்தாக வித்து வாக்கியம் (Kernel sentence) வித்தல்லா வாக்கியம் (Non-Kernel sentence) என இரண்டு வாக்கியங்களை சாம்ஸ்கி குறிப்பிட்டுள்ளார். இவை இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடு மாற்றுவிதிகளாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன என்பதும், மாற்று விதிகள் இரண்டு வகைப்படும் என்பதும், அவை விருப்ப மாற்று விதிகள், கட்டாய மாற்றுவிதிகள் என்பதும், இவற்றில் விருப்ப மாற்று விதிகளைப் பயன்படுத்தாமல் உண்டாக்கிக் கொள்வதே வித்து வாக்கியம் என்பதும், விருப்ப விதிகளைப் பயனபடுத்துவதால் உண்டாகும் வாக்கியத்தை வித்தில்லா வாக்கியம் என்பதும் சாம்ஸ்கியால் தெளிவாக்கப்பட்டுள்ளன.

1.1. நிலைக்கொள்கை

உண்மையில் கத்ஜ் (Katz) போடர் (Fodor) என்பவர்களின் பொருண்மையியல் கொள்கையின் அமைப்பு (The structure of a semantic theory) என்ற கோட்பாட்டிற்குப் பிறகுதான், மாற்றிலக்கணத்தில் தொடரியல் அமைப்பு விதி

களைக் காட்டிலும் பொருளுக்கு மிகுதியான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1964-ஆம் ஆண்டு கத்ஜ், போஸ்டல் (Postal) என்ற இரண்டு அறிஞர்களும் இணைந்து மொழியியல் விளக்கத்தின் ஒருமைப்பாட்டுக் கோட்பாடு (An integrated theory of linguistic description) என்ற நூலை எழுதி வெளி யிட்டார்கள். மேற்குறிப்பிட்ட கட்டுரையும், நூலும் வெளிவந்த பிறகு சாம்ஸ்கி தன்னுடைய கொள்கையைத் திருத்தி வெளி யிட்டார். அதுவே நிலைக்கொள்கை என அழைக்கப்படுகிறது. இக்கொள்கையில் ஒரு வாக்கியத்தின் புற அமைப்பு மாற்று விதிகளால் அக அமைப்பிலிருந்து வருவிக்கப்படுகின்றது என்ற கருத்து வலுப்படுத்தப்பட்டது. ஆகவே ஒரு வாக்கியம் எந்த வகையாய் இருந்தாலும் அக அமைப்பு, புற அமைப்பு என இரண்டு அமைப்புகளைப் பெற்றிருக்கும். ஆனால் இரண்டிலும் தொடரியல்தான் அடிப்படை. ஒரு வாக்கியத்தின் ஓர் உறுப்பை பிறிதோர் உறுப்பாக மாற்றும்போது நீக்கம் (deletion) இயக்கம் (movement) முதலிய செயல்முறைகளுக்கு உட்பட்டுத் தொடரமைப்பு விதிகள் அக அமைப்பைக் குறிப்பிடுகின்றன. தொடரமைப்பு விதிகளே அடிப்படைப்பகுதியைப் பெற்றிருக் கின்றன. அவை பெயர்த்தொடர் (Noun phrase) வினைகள் (verbs) போன்றவற்றைப் பெற்றிருக்கின்றன, இந்தத்தொடர மைப்பு விதிகள்தான் தொடரியலின் அடிப்பகுதியாகும் (Base Components). மேலும் இந்தப் தொடரமைப்பு விதிகள் வெளிப் பாட்டு (output) அக அமைப்பைப் (Deep Structure) பெற்றி ருக்கின்றன. இந்த வெளிப்பாடு சொற்செருகலுக்குப் பிறகு (Lexical insertion) நடைபெறுவதாகும். தொடரியலில் மாற்றுப்பகுதி மாற்று விதிகளைப் பெற்றிருக்கிறது. மேலும் மாற்றுவிதிகள் மாற்றுப்பகுதியினுடைய புற அமைப்பு (Surface Structure) வெளிப்பாட்டைப் பெற்றிருக்கின்றன. தொடரியலுக்கு அப்பால் இலக்கணத்தின் இரண்டு வெளிப் பாட்டுப் பகுதிகளை மாற்றுவிதிகள் பெற்றிருக்கின்றன. அவை ஒலியியல் (Phonetics) பொருண்மையியல் (Semantics) என்பன ஆகும். ஒரு வாக்கியத்தின் ஒலியியல் வெளிப்பாடு (Phonetic interpretation), அதனுடைய புற அமைப்பிலிருந்து ஒலி யனியல் விதிகளால் (Phonological Rules) வருவிக்கப்படும்.

ஒரு வாக்கியத்தினுடைய பொருண்மையியல் வெளிப்பாடு (Semantic interpretation) அக அமைப்பிலிருந்து நீட்டு விதிகளின் (Projection Rules) செயல்கள் (Operations) மூலமாக நேரிடையாக வருவிக்கப்படும். ஆகையால் முழுக்கொள்கையும், மாற்று விதிகளினுடைய பல பகுதிகளின் உட்செயல்களால் (inner Operations) பொருண்மையியல் வெளிப்பாட்டோடு, ஒலியியல் வெளிப்பாட்டையும உள்ளாக்குகிறது. இதைப் பின் வரும் நிலைக்கொள்கை மாற்றிலக்கணப் படத்தின் மூலம் அறியலாம்.



மேலிருந்து கீழாகப்படத்தை நோக்கினால் இப்படம் ஒலியோடு பொருளையும் வழங்குகிறது என்பதைக் காணலாம். இப்படத்தின் மூலம் தொடரியல் பகுதிக்குதான், பொருள், சிறப்பு நிலை கொடுக்கும் என்பது தெரிய வருகிறது. அதாவது நிலைக்கொள்கையின் தொடரியல் புற அமைப்பு, தொடரியல் நிலையோடு, ஒலியியல் வெளிப்பாடாகவும் இருக்கிறது. ஆனால் தொடரியல் அக அமைப்பு என்பது தொடரியல் நிலையோடு மட்டுமே தொடர்புடையதாகவும் பொருண்மையியல் வெளிபாட்டிற்குத் தொடர்புடையதாகவும் அமைகிறது. மேற்கண்ட இரண்டாவது கருத்து மாற்று விதிகள்தான் பொருளைக்

காக்கின்றன என்ற முக்கிய கோட்பாட்டைக் கொண்டு செல்கிறது. மாற்று விதிகள் இயங்கும்போது அவை வாக்கிய அமைப்புகளுடைய பொருளை, எவ்விதத்திலும் பாதிக்காமல் இருக்கின்றன. இதனுடைய பொருள் என்னவெனில், அவை எல்லா வாக்கியங்களிலும் ஒரே அக அமைப்பையும், ஒரே பொருளையும்தான் விளைவிக்கும் என்பதாகும்.

வெளிப்பாட்டுப் பொருண்மையியல் (Semantic Interpretation) பகுதியை நிலைக்கொளகை வழங்குகிறது என்பதிலிருந்து ஒரு வாக்கியத்தின் பொருள், தொடரியல் அடிப்பகுதிக்குப் பொருண்மையியல் விதிகளின் பயன்பாடு தேவை என்பது புலனாகிறது. நிலைக்கொள்கையில் ஒரு முக்கிய மாறுதல் பின்னர் ஏற்பட்டது. சாம்ஸ்கி (1970) ஜாக்கண்டோப் (Jackendoff 1972) போன்றவர்கள் பொருளின் சில கூறுகளை (முக்கியமாக எதிர் மறுத்தல், அளத்தல், முதன்மை (Negation, Quantification and Focus) அக அமைப்பைவிட, புற அமைப்பில் நேரிடையாகவே பிறப்பிக்கலாம் என்றும் கூறினர். அதாவது நீட்டுவிதிகளைப் புற அமைப்பில் பயன்படுத்தினால் பொருளை வரவழைக்கலாம் என்றனர். நிலைக்கொள்கையினர் ஒரு வாக்



கியத்தின் அதே அமைப்பு, அதே பொருளைப் பெற்றிருக்கிறது என்றும் கூறினர். திருத்தி அமைக்கப்பட்ட எடுத்துரை பொருண் மியலின் நிலை முன்பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தப்பட்ட கொள்கையில் அக அமைப்பு தொட ரியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. இவ்விவாதம் தொடரியல் அடிப்படையில் அமைகிறது

1.2. உருவாக்கப் பொருண்மையியல்

ஒரு வாக்கியத்தில் அக அமைப்புப் பகுதியைவிட, ஆழமான பகுதி (Deepening) ஒன்று இருக்கிறது. எனவே அக அமைப்பு போதாது; இன்னும் ஆழ்ந்த அமைப்புப்பகுதி தேவைப்படுகிறது என்பதுதான் உருவாக்கப்பொருண்மையியலின் அடிப்படை. நிலைக்கொள்கையிலிருந்து வளர்ந்த ஒரு கொள்கையாக இது கருதப்பட்டாலும் இது முற்றிலும் மாறுபட்ட பாதையில் வளர் ந்தது என்பதை லேகாப் (Lakoff) மெக்காலே (McCawley) ராஸ் (Ross) போன்றவர்கள் விளக்கியுள்ளனர். எனவே ஒரு வாக்கியத் தினுடைய பொருளின் வெளிப்பாடு அக அமைப்பை விட ஆழ மானது இந்த ஆழமான பகுதியில் மாற்றுவிதிகளைப்பயன் படுத்தி, அக அமைப்பிலிருந்து புற அமைப்பை வருவிக்கலாம். ஒரு வாக்கியத்தின் அக அமைப்பு இன்னும் ஆழம் உடையது என்று அறிவித்தபோது, அது பொருண்மையியல் வெளிப்பாட் டிற்குச் சமமானது என்பதுதான் இந்த உருவாக்கப் பொருண் மையியல் முறையில் தர்க்க எல்லையின் (Logical level) நிலை யை அடைந்தது என்றும் கூறலாம். சாம்ஸ்கியின் 1965-ஆம் ஆண்டின் அடிப்பகுதி (Base component) தொடரியலைச் சார்ந் தது அல்ல; ஆனால் அது பொருண்மையியலைச் சார்ந்தது என் பதுதான் இக்கொள்கையினரின் வாதம். இப்படிப் பார்க்கும் போது அக அமைப்பு என்பது வேறொன்றுமல்ல; பொருண்மை யியல் வெளிப்பாடுதான் என்று அறிய முடிகிறது. ஆகையால் அக அமைப்பின் பொருண்மையியல் வெளிப்பாட்டுக்கூற்றிற்கு நீட்டு விதிகள் (Projection rules) தேவையில்லை. எனவேதான் நீட்டு விதிகள் மறைகின்றன. ஏனைய எஞ்சிய பகுதியைப் படத்தில் காண்போம்.

உருவாக்கப் பொருண்மையியலின் நிலை



நீட்டு விதிப் பகுதியை உருவாக்கப் பொருண்மையியல் நீக்குகிறது மேலும் உருவாக்கப் பொருண்மையியலின் மாதிரி மிகவும் எளிமையாக இருக்கிறது. ஆனால் இந்த எளிமை மாற்றுப் பகுதியின் விரிவிற்குத் தேவையாக இருக்கிறது. ஒவ்வொரு வாக்கியத்திற்கும் தொடர்ச் சங்கிலியான மாற்று விதியின் வருவிப்பில் நீண்டதாக உருவாக்கப் பொருண்மையியல் கருதப்படுகிறது. எனவே உருவாக்கப் பொருண்மையியல் சாம்ஸ்கியால் முன்பு கருதப்பட்டதைவிட நீளமாக அமைகிறது.

ஓர் இலக்கணத்தின் அடிப்பகுதிக்கும், வருவிப்புப்பகுதிக்கும் இடையே உள்ள வேறுபாடுதான் உருவாக்கம், எடுத்துரை பொருண்மையியல் (Interpretive Semantics) என்ற இரண்டு தெரிவிப்புக்களும் தோன்றக் காரணமாகின்றன. தொடரியல் வெளிப்பாடு ஒரு பொருண்மையியல் அடிப்பகுதியிலிருந்து பிறப்பிக்கப்படுகிறது. இது தான் உருவாக்கப் பொருண்மையியல் என்பது. அடிப்பகுதி என்பது வாக்கியத்தை உருவாக்கும். வருவிப்புப்பகுதி என்பது அடிப்பகுதியின் வெளிப்பாட்டை வெளியிடும். ஒரு வாக்கியத்தின் பொருண்மையியல் வெளிப்பாடு, ஒரு தொடரியலின் அடிப்பகுதியிலிருந்து வருவிக்கப்படுகிறது, இது வெளிப்பாட்டுடன் தொடர்பு உடையது. இந்தச் செய்தி மேற்காட்டிய படத்தில் காட்டப்பட்டுள்ளது. எனவே மாற்றிலக்கணத்தார் இருவருள் ஒருவர் கருத்தைப் பிறிதொருவர்

மறுக்கின்றார். வருவிப்பதில் உள்ள முறையில் (திசையில்) (direction) எந்தப் பொருளும் வினாக் குறியாகவே இருக்கின்றது. X என்பது Y- இலிருந்து வருவிக்கப்படுகிறது. Y- இலிருந்து X வருகிறது. Y- இன் வருவிப்பில் X அடுத்ததாக Y இருக்கிறது. X எனபது Y- இன் வெளிப்பாடு. 'X'→ Y என்ற கருத்தை மறுப்பது சற்றுக்கடினமாக இருக்கின்றது. விரும்பினால் Y→ X என்ற முறையில் வருவிக்கலாம்.

3. உருவாக்க வெளிப்பாட்டிடையே காணப்படும் கருத்து மாறுபாடுகள்

மொழியியல் அறிஞன் அவனுடைய விதிகளை அமைப்பதற்கு வாக்கியத்தை எவ்வாறு தேர்ந்தெடுக்கிறான் என்ற கேள்வி எழுகிறது. அதன் பயனாக உருவாக்கப் பொருண்மையியலாருக்கும் நிலைக்கொள்கையினர்க்கும் இடையே விவாதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மேற்கண்ட இரண்டு விதக் கொள்கைகளிலும் நடைமுறையில் தொய்வு ஏற்பட்டு தேக்க நிலை உண்டாகிவிட்டது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. இந்தக் கருத்து மொழியின உள்ளார்ந்த குணத்தினைப் பொறுத்தது அல்ல. உருவாக்கப் பொருண்மையியலார் வற்புறுத்துவது மாற்றுவிதிகள் பொருளை மாற்றாது என்பதுதான். இக்கொள்கையைத்தான் நிலைக்கொள்கையினர் கடுமையாக விமர்சனம் செய்தனர். நாம் முன்பு பார்த்தது போலவே, எதிர் மறுத்தல் (Negation), அளத்தல் (Quantification), போன்ற காரணிகள் புறத்தொடரியல் முறையால் நிபந்தனைக்குட்படுகின்றன. அது புறப்பகுதி அமைப்பாகும். நோக்கம் (Scope), அழுத்தம் (Emphasis) முதன்மை (Focus) முதலியவைகளும் நிபநதனையுடன இணைந்திருக்கின்றன. மற்றொருபிரச்சினையையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. மாற்றிலக்கண வருவிப்பின்போது சொற்றொகுதியை (சொற்களஞ்சியத்தை) (Lexicon) ஓரிடத்திற்கு பதிலாகப் பல இடங்களில் பொருத்த வேண்டியிருக்கின்றது. வாதங்கள் சில (Postal 1971 b) மாற்றியமையமாட்டாது சொற்செருகலைப் பின்தொடர வேண்டும் என்று காட்டுவதற்கு நோக்கம், அழுத்தம், முதன்மை போன்றவை முன்மொழியப்பட்டன. இதன பொருள் யாதெனில் சொற்செருகல் விதிகள் (Lexical insertions rules) மாற்று விதியின் ஒரு துணை உறுப்பு

எனலாம். (Come + Become + Not + Alive by die) இந்த வாக்கியத்தை இடம் மாற்றலாம். ஆனால் இந்த மாற்றிலக் கணம் கொஞ்சம்தான் பொருளை மாற்றுகிறது. சொற்பொருள் மீது தொடர்ச்சியாகத் தனி முரண்பாடு இருந்ததன் காரண மாக, பொதுவாக இந்த வாக்கியம் நிலைபெற்றது. (எ. கா.) கண்ணன் இரக்கமுள்ளவனாக இருந்தான் என்ற வாக்கியம் கண்ணன் முழுமையாக இரக்கமுள்ளவனாக இருந்தான் என்று பொருள்படும்.

நிலைக்கொள்கைப்படி அக அமைப்பு என்பது எண்ணற்ற மாறுபட்ட வேலைகளைச் செய்கிறது. பொருண்மையியல அதற்கப்பால் முற்றிலும் வெளியீட்டிற்குத் தொடர்புடைய அளவில் இருக்கிறது. எனவே உருவாக்கப்பொருண்மையியலாளர் நிலைக்கொள்கையினரின் குறைப்பட்ட பகுதிமீது அவர் களுடைய கவனத்தைச் செலுத்தினர். அதாவது நிலைக்கொள் கையில் அக அமைப்பிற்குத தொடர்புடைய மொழியியல் சுருக்க அளவையை சொல்கின்றனர். (அ) உருவாக்கப் பொருண்மையியல் தொடரியல் வருவிப்பிற்குப் பொருத்தப்படு கின்ற சொல்லியல் அளவாக இருக்கிறது. (ஆ) உருவாக்கப் பொருண்மையியல் தேர்வுக் கட்டுப்பாடு (Selection restriction) பாலெண் இயைபு விதி (Concord rule முதலியவற்றுடன் தொடர் புடையதாக இருக்கிறது உருவாக்கப்பொருண்மையியல் பெய ரைப் பகுக்கும்போது எண்ணக்கூடியவை, வினையைப் பகுக் கும் போது தேர்வுக்கட்டுப்பாட்டையும் கொண்டு இருக்கிறது. இவற்றை நாம் பெயரையும் வினையையும் பாகுபடுத்துகின்ற விதிகள் (Subcategorization Rules) என்று கூறலாம். (இ) உரு வாக்கப் பொருண்மையியல்தான் மாற்றுவிதி பயன்படுத்தப் பெறும் தொடக்கப்புள்ளியாக இருக்கிறது. (ஈ) எழுவாய்,செயப் படுபொருள் போன்ற கருத்துகள் கொண்ட அளவாக உருவாக் கப் பொருண்மையியல் இருக்கிறது என்ற நான்கு கருத்துகளும் இங்கு முக்கியமானவை. மேலே கூறிய குணங்கள் யாவற்றை யும எந்த ஒரு தனி அளவும் பெற்றிருக்கும் என்று கருதுவதற்குக் குறிப்பிட்ட காரணம் இல்லை என்று லேகாப் 1968-இல் விளக் கினார். மாறுபட்ட முறையில் உருவாக்கப் பொருண்மையியலி

னுடைய வாழ்விற்குச் சவாலாக நல்ல காரணங்கள் இருக்கின்றன. மெக்காலே தேர்வுக்கட்டுபாடு பொருண்மையியலைச் சார்ந்தது என்றார். அக அமைப்பில் பெயரையும், வினையையும் பாகுபடுத்துகின்ற விதியின் வேலை ஐயத்திற்கிடமாக இருக்கிறது என்றும் காட்டினார். மேலும், உருவாக்கப் பொருண்மையியலாளர் (சிறப்பாக போஸ்டல் 1971பி) அந்த விதியே சொற்செருகலுக்கு முன்பே செயல்படுவதற்கு தேவைப் படுகிறது என்றும் கூறினார், ஆகையால் நிலைக்கொள்கையினர் இரண்டு வேறுப்பட்ட வழிகளில் அந்தத் குணத்தை உணர்த்துவதற்குக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அவற்றில் ஒன்று நீட்டுவிதி மற்றொன்று மாற்றுவிதி. இவ்வாறாக நிலைக்கொள்கைப் பொருண்மையியல் மாற்றுவிதி சொற்செருகல் செயல்முறைக்கு (operations) முதன்மையையும், ஒரு தனி அளவையும் வற்புறுத்துவதால், பொதுமைப்படுத்தலை அங்கீகரிக்க இயலவில்லை.

1.4. இன்றைய பொருண்மையியல்

1970-ஆம் ஆண்டின் இடையில் உருவாக்கப் பொருண்மையியலாளரும் நிலைக்கொள்கையினரும் ஏறுமாறான வழிகளில் சிந்தித்தனர். அதன் விளைவாக, விரிவுப்படுத்தப்பட்ட நிலைக்கொள்கைத் தோன்றியது. இது தோன்றியது 1970- இல்ஆகும். 1975-ஆம் ஆண்டிலிருந்துதான் இது விரிவுப்படுத்தப்பட்ட நிலைக்கொள்கையாக வளர்ந்தது. அண்மைக்காலத்தில் திருத்தப் பட்டதில் தொடரியல் பொருண்மையியல் இடையே நிலைக்கொள்கையிலிருந்ததுபோல் அல்லாமல் மாறுபட்டு இருந்தது. ஒரு வாக்கியத்தின் வெளிப்பாட்டை, அதனுடைய புற அமைப்பிலேயே வருவிப்பது. அக அமைப்பில் வருவிப்பதைவிட புற அமைப்பில் வருவிக்கலாம். அக அமைப்பு இன்னும் வாழ்கிறது. ஆனால் தொடக்கத் தொடர்க் குறியீடு (Initial phrase marker) தவறாகக் குறிப்பிடப்படலாம். அதுதான் மாற்றிலக்கண முறைக்கு இடுபொருள் (Input) ஆகும். ஆனால் பொருண்மையியல் வெளியீட்டின் இருப்பிடத்திற்கு அப்பால் இடுபொருள் இல்லை. அது அண்மையில் இருக்கிறது.

திருத்தி விரிவுபடுத்தப்பட்ட நிலக்கொள்கை



இம்மாற்றிலக்கணம் ஒலியியல் உருவம் (**Phonetic form**) தர்க்க உருவம் (**Logical form**) ஆகிய இரண்டையும் தொடர்பு படுத்துகிறது. அடிப்பகுதி (**Base component**) தொடரமைப்பு விதிகள் (**Phrase structure rules**), சொற்களஞ்சியம் (**Lexicon**) முதலியவற்றால் அமைந்துள்ளது. அடிப்பகுதி சில அமைப்பிற்கு

தொடக்கத் தொடர்க்குறியீடாக (Initial phrase marker) விளங்குகிறது. தொடக்கத் தொடர்க் குறியீடு மாற்றிலக்கணப் பகுதிக்கு இடுபொருளாக (அல்) உட்பாடாக (input) இருக்கிறது. மாற்றிலக்கணப்பகுதி (Transformational Component) மாற்றிலக்கண விதிகளால் திருத்தி அமைக்கப்படுகிறது. தொடக்கத் தொடர்க் குறியீடு, மாற்றிலக்கணப்பகுதி ஆகிய இரண்டு துணைப்பகுதிகளும் (Sub-Components) தொடரியல் பகுதியை (Syntactic Component) உண்டாக்குகின்றன. தொடரியல் பகுதியின் வெளிப்பாடு (அல்) ஆக்கப் பொருள் (output) புற அமைப்பு ஆகும். புற அமைப்பு ஒலியனியல் பகுதிக்கு (Phonological Component) இடு பொருவாக அமைகிறது. ஒலியனியல் பகுதி ஒலியியல் தெரிவிப்பை (Phonetic Representation) உருவாக்குகிறது. புற அமைப்பு இடுபொருளாக இருப்பதோடு, பொருண்மையியல் வெளியீட்டு விதிகள் (Semantic Interpretation rules), பொருண்மையியல் தெரிவிப்பு (Semantic representation), தர்க்க உருவம் (Logical form) முதலானவற்றையும் உருவாக்குகிறது. தர்க்க உருவம் பொருண்மையியல் வெளியீட்டைக் கொண்டிருக்கிறது. தர்க்க உருவம் ஒரு வாக்கியத்தின் பொருள் பற்றிய தர்க்கரீதியான தகவலைத் தெரிவிக்கிறது. தர்க்க உருவம் பொருளின் ஒரு பகுதியாகக் குறிப்பிடப்படுகிறது. தர்க்க உருவம் பொருள் இலக்கண அமைப்பால் தீர்மானிக்கப்படுகிறது. அளவுக் கணக்கீடுகள் (Quantifiers)[1], திரும்பத்திரும்ப வரும் உறவுகள் (Anaphora relations)[2], பெயர்த்தொடரின் தலைப்பு செயற்பாடுகள் (Thematic functions of N Ps), எழுவாய் - பயனிலை உறவுகள் (Subject-predicate relations) பற்பல கட்டுப்படுத்தப் பட்ட உடைமைகள் (Various entailments)[3] போன்ற இலக்குகளைத் தர்க்க வடிவம் விவரிக்கிறது. தர்க்க உருவம் பொருண்மையியலின் எண்ணத்தை வெறுமையாக்குவதோடு, புறஅமைப்பின் எண்ணத்தை வளமாக்குகிறது. இலக்கணம் ஒலி—பொருளைக் கொண்டிருக்கிறது என்று முன் குறித்ததுபோல, சாம்ஸ்கியால் மீண்டும் இங்கே ஒலியியல் வெளிப்பாடு குறிக்கப் பெறுகின்றது. சாம்ஸ்கி பொருண்மையிபலை இலக்கணமுடைய

வாக்கியத்திற்கு முழுவதுமே ஒன்று சேர்க்க முடியாது என்று வாதிடுகிறார்.

1.5. தொடரியலின் அடிச்சுவட்டுக்கொள்கை (Trace Theory of Syntax)

சாம்ஸ்கியும் அவரின் இணைப்பணியாளர்களும் தொடரியலின் அடிச்சுவட்டுக்கொள்கை ஒன்றை முன் மொழிந்தனர். அடிச்சுவடு (Trace) மாறும் இயல்புள்ளதால் புற அமைப்பில் குறிக்கப்படுகிறது. கீழ்க்காட்டியுள்ளபடி,

எ. கா. who did John see t
John Seems t to have won.

அடிச்சுவடு (Trace) பெயர்த் தொடரிலிருந்து ஒரு நிலையை 't' குறிக்கிறது. ஒரு சமயம், அடிச்சுவடு ஒலியன்யல் முறையில் அமைதியாக இருக்கிறது. ஆனால் ஒலியியல் விட்டிசை (Juncture) யிலிருந்து (Ghost) பொய்த் தோற்றத்தை வருவிக்க முடியும் என்று வாதிடப்படுகிறது. எனவே இந்தக் கொள்கை மூலம் சாம்ஸ்கியும் மற்றவர்களும் எவ்வாறு மூலகங்கள் (சொற்கள்) மாற்றுவிதிகளால் நீக்கப்படுகின்றன என்பதையும், அவை இன்னும் புற அமைப்பில் குறிப்பிடப்படுகின்றன என்பதையும் கூறினர். எ. கா. ஆங்கிலப் பேச்சில் want to என்பது wanna என்று பேசப்படுகிறது. ஆனால் இந்தக் குறைப்பு ஏனைய பொருள் குறைப்பாகத் தோன்றாது.

எ. கா. The people that I want to read this book.
I want to read this book.
(wanna என்பது குறைக்கப்படுகிறது)
The people that I want to read this book.
(wanna என்பது குறைப்பதில்லை)

இந்த முறையில் அக அமைப்பின் குறிப்பிட்ட குணங்கள் புற அமைப்பால் பாதுகாக்கப்படுகின்றன என்று கருதப்படுகிறது. ஒலியியல் வெளிப்பாடு கூட அவ்வாறுதான் இருக்கிறது.

1.6. முடிவுரை

இவ்வாறு மாற்றிலக்கணத்தாரிடையே கருத்து முரண்பாடுகள் நிலவி வருகின்றன. எனினும் ஒவ்வொருவரின் அணுகுமுறையும் வெவ்வேறாக இருக்கின்றது. ஒன்று தொடரியல் அணுகுமுறையில் உள்ளது. மற்றொன்று பொருண்மையியல் அணுகுமுறையில் உள்ளது. இவ்வாறாக அணுகுமுறையில் வேறுபாடு இருந்தும், இவர்கள் போராட்டம் தொடர்ந்து நடைபோடுகிறது; இன்னும் ஓய்ந்தபாடில்லை.

குறிப்புகள்

1. Quantifier. A term used in semantic or logical analysis referring to status of some of these items has particular significance in the construction of logicol systems, and the distinctions made in logic between universal Quantification and existential Quantification may be found in semantic studies (David crystal, 1985: P. 253)

2. 'Anaphoric reference' is one way of marking the identity between what is being expressed and has already been expressed. (ibid.p. 17)

3. Entailment as a relation between sentences such that the truth of the second necessarily follows from the truth of the first. Thus any statement S_1 will entail a statement S_2 if when S_1 is true, S_2 must also be true. (Ruth .M. Kempson, 1975: p. 48)

துணை நூல்கள்

Chomsky, N. 1957, syntactic structures, The Hague: Mouton.

——— 1965, Aspects of the theory of syntax, Cambridge, Mass: M. I. T. Press.

——— 1970, Deep Structures, Surface Structures and semantic Interpretation. In Jokobson, RS, and Kowamote, (eds)

studies in General and oriental Linguistics, Tokyo: T. E. C. Company Repr. in Chomsky (1972 a)

——— 1975, The Logical Structure of linguistic theory. plenum press.

—— — 1982, Lectures on Goverment and Binding. The pisa lectures (sec. rev. ed.) Foris publications, U.S.A.

David crystal, 1985, A Dictionary of linguistics and phonetics

Jackendoff, R.S. 1972, semantic Interpretation in Generative Grammar. cambridge, Mass. M. I. T. Press.

Katz, J.J. 1920, Interpretive semantics vs Generative Semantics Foundations of language, 6, 220-259.

Katz, J. J & Fodor, J. A. 1963, The Structure of a semantic theory. Language 39, 170-210.

Katz, J.J. and Postal, P.M. 1964, An intergrated theory of linguistic Descriptions Cambridge, Mass: M. I. T. Press.

Kempson, M. Ruth. 1975, Presupposition and the delimitation of semantics, Cambridge University Press.

Lakoff, G. 1971, 'In Generative semantics' semantics /An interdisciplinary Reader in Philosophy, linguistic and Psychology, (Steinberg and Jokobovits, L (A), (eds), Cambridge University Press. New York.

Leech, Geoffrey, 1983, Semantics Penguin Books.

Lightfoot, D. W. 1979, Principles of diachronic syntax, Cambridge University Press.

McCawley, James D 1968, The role of Semantics in a grammar in Bach, E. and Harons, R-T (eds) Universals in Linguistics theory. Holt, Rinehart & winston: New york.

மொழியியல் 10: 1 & 2 (1987)

தமிழில் வினையடைகள்

வீ. ரேணுகாதேவி

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்

[**சுருக்கம்:** தமிழ்மொழியின்கண் காணப்பெறும் வினையடைகளின் பண்புகளை ஆய்ந்தறிந்து அவற்றை வகைப்படுவத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.]

ஒரு வினையை (Verb) அன்றி வினைப் பதிலியைச் (Verb-Substitute) சிறப்பித்து வரும் வடிவம் வினையடை (adverb) எனப்படும். வினையடை அது சிறப்பித்து வரும் வினை அல்லது வினைப்பதிலியோடு எண்- பால் இயைபு கொண்டு விளங்குவதில்லை.[1]

ஒரு வினை அல்லது ஒரு வினைப்பதிலியும், அதனைச் சிறப்பித்து வரும் வினையடையும் இணைந்து வினையடைத்தொடர் (adverbial Construction) அமையப்பெறுகின்றது.

1.0. தமிழ் வினையடைகள்

தமிழ் மொழியில் வினையடைகள் வினை, பெயரடை, வினையடை, வாக்கியம் ஆகியவற்றிற்கு அடையாக வரும். பெரும்பான்மையும், வினையடைகள் அவற்றால் சிறப்பிக்கப்படும் வடிவங்களுக்கு முன்னால் வரும். வினையடைகள் காலம் எண், இடம், பால் ஆகிய உருபன்களை ஏற்பதில்லை. இவை தழுவி வரும் வடிவங்களோடும் பால்- எண் இயைபு கொண்டு விளங்குவதில்லை.

1.1. வினையடைகளின் இயல்புகள்

1. வினையடைகள் ஒரு வினையையோ, அல்லது ஒரு பெயரடையையோ, அல்லது ஒரு வினையடையையோ அல்லது ஒரு வாக்கியத்தையோ சிறப்பித்து வரும்.

அவன் வேகமாக வந்தான் - வினை.
ராமன் மிக நல்ல மனிதன் - பெயரடை.
முகம் இப்பொழுது நன்றாகத்
தெரிந்தது - வினையடை.
உண்மையாக சீதா இங்கு
வநதாள் - வாக்கியம்.

2. ஒரு வினை அல்லது ஒரு வினைப்பதிலியும், அதனைச் சிறப்பித்து வரும் வினையடையும் இணைந்து வினையடைத் தொடர் அமையப்பெறுகின்றது.

3. தமிழில் வினையடைகள் பெரும்பான்மையும் இவற்றால் தழுவப் பெறும் வடிவங்களுக்கு முன்னால் வரும்.

மந்திரி உரக்கப்பேசினார்.
அவனுக்குச் சுமையாகத் தெரியவில்லை.

4. மிகச் சில இடங்களில் வினையடைகள் வினையடையால் சிறப்பிக்கப்படும் வடிவத்திற்குப் பின்னாலும் அமையப் பெறுதலுண்டு.

கூடவே ஓர் இளம் பெண்ணும் வந்தாள், அடக்கவொடுக்கமாக.
எனக்குப் புரியவில்லையே என்றாள் மறுபடியும்.
இருக்காதா, பின்னே:

5. வினையடைகள் காலம், இடம், எண், பால் உருபுகளை ஏற்பதில்லை.

ராமன் வேகமாக வந்தான்.
மீனா கோபமாக இருக்கிறாள்.
நான் மெல்ல வருவேன்.
அவர்கள் தாமதமாக வருவார்கள்.

6. வினையடைகளால் சிறப்பிக்கப்படும் வடிவங்கள் முற்று வினைகளாகவும் (முதல்வினை அல்லது துணை வினை), வினையடைகளாகவும், பெயரடைகளாகவும், செயவென்ச்சமா

கவும், செய்து வாய்பாட்டு வினையெச்சமாகவும், நிபந்தனை வினையெச்சமாகவும், பெயரச்சமாகவும், தொழிற்பெயராகவும், வினையாலணையும் பெயராகவும் அமையப் பெறுகின்றன.

கமலா நன்கு **பாடினாள்** - முற்று வினை (முதல் வினை).
சீதாவுக்கு என்னை மிகவும் **தெரியும்** - முற்று வினை (துணை வினை).
பலகாரம் ரெம்ப **நல்லா** இருக்கு — வினையடை.
கண்ணகி மிக நல்ல **பெண்** — பெயரடை,
நான் நாளைக்குப் **போக** வேண்டும் — செயவெனெச்சம்.
அடிக்கடி **வந்து** போ — செய்து வாய்பாட்டு வினையெச்சம்.
நீ இப்ப **வந்தால்** தருவேன் — நிபந்தனை வினையெச்சம்.
கூட்டத்தில் உரக்கப் **பேசிய** மந்திரி — பெயரெச்சம்.
கலா வேகமாக **வந்ததைப்** பார்த்தால்........ — தொழிற் பெயர்.
நல்லா **சாப்பிடாதவள்** நோய்வாய்ப்படுவாள் — வினையாலணையும் பெயர்.

7. சில இடங்களில் வினையடைகளின் அடிப்பகுதி மட்டும் வலியுறுத்தல் பொருண்மையினைச் (emphatic meaning) சுட்டும் பொருட்டு இரட்டித்து வருதலும் உண்டு.

அவர்களுக்கு **முதன்முதலாகத்** தெரிவித்தோம்.
அமைச்சர் **வேகவேகமாகப்** பேசினார்.

8. ஒன்றிற்கு மேற்பட்ட வினையடைகள் அடுக்கி வருதலையும் தமிழ் மொழியின்கண் காணமுடிகின்றது.

விழா நினைத்த அளவு **பெரிசா சிறப்பா** இல்லை;
ராணி **மெல்ல மெல்ல** நடந்து வந்தாள் — இரண்டு வினையடைகள்.

முகம் இப்பொழுது மிக நன்றாகத் தெரிந்தது;
கோபமாக வெளியே விரைவாய் வந்தார்
— மூன்று வினையடைகள்.

எப்ப இப்படி நல்லா வேகமா பேச கத்துகிட்டே
— நான்கு வினையடைகள்.

9. சில வினையடைகளுடன் 'உம்'விகுதி சேர்க்கப்பெறும் நிலையில் அவை சில நுண்ணிய பொருட் கூறுகளைச் (different shades of meaning) சுட்டுகின்றன.

அதிகமாக உண்டான்.
அதிகமாகவும் உண்டான்.
ரொம்ப வேண்டியவங்க.
ரொம்பவும் வேண்டியவங்க.

1.2. வினையடை வகைகள்

1.2.1. வினையடைகளை அவற்றின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு 1. தனிவடிவ வினையடைகள் (simple adverbs) 2. கூட்டு வடிவ வினையடைகள் (compound adverbs) என இரண்டு வகைகளாகப் பகுக்கலாம்.

1.2.1.1. தனிவடிவ வினையடைகள்

தமிழில் அடிச்சொல்லோ அன்றி ஆக்க விகுதியுடன் கூடிய அடிச்சொல்லோ தனிவடிவ வினையடையாகச் செயல்படும்.

தமிழ்மொழியில் 'பின்', 'முன்', 'இனி', 'காலை', 'மாலை,' 'இன்று', 'நேற்று', 'சீக்கிரம்', 'பைய', போன்றவை ஆக்க உருபின்றி வினையடைகளாகச் செயல்படுகின்றன.

உமா இன்று வருவாள்.
நீ இனி போகலாம்.

ஆக்க விகுதிகளை ஏற்றுவரும் தனிவடிவ வினையடைகள் சிலவற்றிலிருந்து, ஆக்க விகுதிகளைத் தனியே பிரித்துக் காண முடியும். ஆனால் சில தனிவடிவ வினையடைகளிலிருந்து ஆக்க விகுதிகளைப்பிரித்து காண முடியாத அளவு அடிச் சொற்களும், ஆக்க விகுதிகளும் இணைந்திருக்கும்.

தமிழில் 'இன்றைக்கு', 'நாளைக்கு', 'நேற்றைக்கு', 'காலையில்', 'முன்னால்', 'பின்னால்', 'மாலையில்', 'முன்னுக்கு'[2], போன்ற தனிவடிவ வினையடைகளிலிருந்து அதன் ஆக்க விகுதிகளைப் பிரித்துக் காணுதல் இயலும்.

முன்னால் — முன் + ஆல்.
நேற்றைக்கு — நேற்று + ஐ + க்கு.
நாளை மாலையில் பார்க்கிறேன்.
ஊரிலிருந்து இன்றைக்கு வந்தேன்.

தமிழில் 'ரெம்ப', 'மெல்ல', 'சற்று', 'முந்தி', 'பிந்தி' 'வலிய', 'ஒக்க'. போன்ற வினையடைகளில் அடிச் சொற்களையும் விகுதிகளையும் பிரித்துக் காண இயலாது.

வகுப்பிற்கு சீதா பிந்தி வந்தாள்.
உமா பைய நடந்து வந்தாள்.

1.2.1.2. கூட்டு வடிவ வினையடைகள்

இரண்டு அடிச்சொற்கள் இணைந்து அமைந்த வினையடைகள் இவண் கூட்டுவடிவ வினையடைகள் எனப்படுகின்றன.

இக்கூட்டு வடிவ வினையடைகளை அவற்றின் அமைப்பு அடிப்படையில் இரு வகைகளாகப் பகுக்கலாம்.

முதல்வகைக் கூட்டு வடிவ வினையடைகள், ஒரு பெயர்ச் சொல்லுடன் வினையடை ஆக்க அடிச்சொற்கள் இணைவதால் ஆக்கம் பெறுகின்றன.

தமிழில் 'ஆ,' 'ஆக,' 'ஆய்'[3] என்பவை வினையடை ஆக்க அடிச்சொற்களாகச் செயல்படுகின்றன.

பக்குவம் + ஆ > பக்குவமா.
எதிர் + ஆக > எதிராக.
நிம்மதி + ஆய் > நிம்மதியாய்.

தமிழ்மொழியில் 'லேசா', அதிகமா', 'கொஞ்சமா, உறுதியா, 'பிரமிப்பாக,' 'பரிதாபமாக', 'இதமாக', 'ஆழமாக, நன்றாக,

'நிம்மதியாய்', 'நேர்மையாய், சீக்கிரமாய், போன்ற வடிவங்கள் முதல் வகைக் கூட்டு வடிவ வினையடைகளுக்குத் தக்கச் சான்றுகளாகும்.

பெயர் + ஆ சீக்கிரமா வா.
எதையும் தெளிவா சொல்லு.
பெயர் + ஆக பத்மா முதலாவதாக வந்தாள்.
எனக்கு எதிராக அவள் அமர்ந்தாள்.
பெயர் + ஆய் ஆசிரியர் தெளிவாய்ச் சொன்னார்.
அருணா நேர்மையாய்ப் பேசினாள்.

இரண்டாவது வகைக் கூட்டு வடிவ வினையடைகள், சுட்டு அடியுடனோ அல்லது வினையடியுடனோ, ஒரு பெயரடி இணைவதால் ஆக்கம் பெறுகின்றன.

அ + புறம் > அப்புறம்.
எ + படி > எப்படி.

தமிழில் 'எப்படி', 'அப்படி', 'எவ்வாறு', 'இவ்வாறு' 'இப்பொழுது, 'அப்பொழுது' 'அப்புறம்', 'இப்புறம்' போன்ற வடிவங்கள் இரண்டாவது வகைக் கூட்டுவடிவ வினையடைகளுக்கு எடுத்துக்காட்டுகளாக அமையப் பெறுகின்றன.

கடைக்கு இப்பொழுது போக வேண்டும்
எப்படி எதிர்பார்க்க முடியும்.

1.2.2. தமிழ்மொழியின்கண் உள்ள வினையடைகளை அவை உணர்த்தும் பொருண்மை அடிப்படையில் 1. கால வினையடைகள் (time adverbs), 2. இட வினையடைகள் (place, adverbs)[3], 3. முறைமை வினையடைகள் (manner adverbs), 4. அளவு வினையடைகள் (quantity/ degree adverbs), 5. செயல் தொடர் வினையடைகள் (frequency adverbs), என ஐந்து வகைகளாகப் பகுக்கலாம்.

1.2.2.1. கால வினையடைகள்

கால வினையடைகள் செயல் எப்பொழுது நடைபெற்றது என்பதைக் குறிப்பனவாக அமையும். இவை வாக்கியத்தில் 'எப்பொழுது' என்னும் வினாவிற்கு விடையாக அமையும்.

தமிழ்மொழியில் ‘இன்று’, ‘நாளை’, ‘இப்பொழுது’, நேற்று, ‘உடனே’, ‘பிந்தி’, ‘காலை’, ‘சற்று’, ‘முன்’, ‘பின்’, ‘மாலை’, ‘சீக்கிரமாய்’, ‘முதலாவதாக’, ‘இன்னும்’ எப்பொழுதும் போன்ற வடிவங்கள் காலவினையடைகளாகச் செயல்படுகின்றன.

நீ எப்போ பார்த்தாய்.
சுமதியை நேற்று பார்த்தேன்.

1.2.2.2. இட வினையடைகள்[4]

இட வினையடைகள் செயல் நடைபெறும் குறிப்பனவாக அமையும். இவை வாக்கியத்தில் 'எங்கே' என்னும் வினாவிற்கு விடைகளாக அமையும்.

தமிழ் மொழியின்கண் ‘இங்கே’, ‘அங்கே’, ‘பின்னால்’, ‘முன்னால்’, ‘உள்ளே’, ‘வெளியே’, ‘நடுவே’, ‘மேலே’, ‘கீழே’, எதிரே’, ‘கிட்டே’, ‘அப்படி’, ‘இப்படி’, போன்ற வடிவங்கள் இடவினையடைகளாகச் செயல்படுகின்றன.

உள்ளே வந்து உட்காருங்க.
பாப்பா மேலே போகாதே.

1.2.?.3. முறைமை வினையடைகள்

முறைமை வினையடைகள் செயல் நடைபெறும் முறைமையைக் குறிப்பதாக அமையும். இவை வாக்கியத்தில் 'எப்படி' என்னும் வினாவிற்கு விடையாக அமையப்பெறும்.

தமிழ்மொழியில் ‘மெல்ல’, ‘நன்கு’, ‘வலிய’, ‘பைய, மட்டமா’, ‘குளிரா’, ‘மலிவா’, ‘கூர்மையாக’, ‘லேசாக’, ‘பிரமிப்பாக‘, ‘பக்குவமாக’, ‘உறுதியாக’, ‘இதமாக‘, ‘உண்மையாக’, ‘அரிதாக’ ‘கறராய்’, ‘நேர்மையாய்’, போன்ற வடிவங்கள் முறைமை வினையடைகளாகச் செயல்படுகின்றன.

1.2.2.4. அளவு வினையடைகள்[5]

அளவு வினையடைகள் செயல் நடைபெறும் அளவினைக் குறிப்பதாக அமையும். இவை வாக்கியத்தில் பொதுவாக ,எவ்வளவு’, என்னும் வினாவிற்கு விடையாக அமையப்பெறும்

தமிழில், 'அதிகமா', 'கொஞ்சமா', 'நிறைய', 'மிகுதியா', 'ரொம் ', 'முழுவதுமா', 'எல்லமா', 'பெரிதும்', 'ஆழமாக', போன்றவை அளவு வினையடைகளாகச் செயல்படுகின்றன.

அவர்கள் பொருள் அதிகமாய் கேட்டனர்.
விலை மிகுதியாக இருக்கு.

1.2.2.5. செயல் தொடர் வினையடைகள்[6]

செயல் தொடர் வினையடைகள் செயல் 'எந்நிலையில்', (how often) நடைபெறும் என்பதனைக் குறிப்பதாக அமையும். இவை வாக்கியத்தில் 'எத்தனை முறை' என்னும் வினாவிற்கு விடையாக அமையும்.

தமிழ் மொழியில் 'அடிக்கடி', 'நிதம்', 'நித்தம்', (நித்தம்) 'அரிதாக', 'அபூர்வமாக', போன்றவை செயல் தொடர் வினை யடைகளாகச் செயல்படுகின்றன.

வீட்டிற்கு அடிக்கடி வா.
தேவி நிதம் சினிமாவிற்குப் போவாள்.

வினையடைகள் அவை உணர்த்தும் பொருண்மையியல் அடிப்படையில் பாகுபாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் சில வினையடைகள் அவை வழங்கப்படும் சூழலுக்கு ஏற்றவாறு ஒன்றிற்கு மேற்பட்ட பொருண்மையை உணர்த்துகின்றன,

சான்றாக 'முன்னால்', 'பின்னால்', என்னும் வினையடைகள் கால வினையடைகளாகவும் இட வினையடைகளாகவும் செயல்படுகின்றன,

பள்ளிக் கூடத்திற்கு முன்னால் வந்தாள்
— கால வினையடை.
எனக்கு முன்னால் உட்கார்ந்தாள்
— இட வினையடை.

'பிந்தி', 'உடனே', சீக்கிரமாய் என்னும் வினையடைகள் கால வினையடைகளாகவும், முறைமை வினையடைகளாகவும் செயலாற்றுகின்றன.

வீட்டிற்குச் சீக்கிரமாய் போகணும்

— கால வினையடை.

சீக்கிரமாய்ச் சாப்பிட்டார்

— முறைமை வினையடை.

'இப்படி', 'அப்படி,' என்னும் வினையடைகள், இட வினையடைகளாகவும், முறைமை வினையடைகளாகவும் செயலாற்றுகின்றன.

இப்படி உட்கார்

— இட வினையடை.

இப்படிச் சொல்லாதே

— முறைமை வினையடை.

1.2.3. தமிழ் மொழியின்கண் காணப்பெறும் வினையடைகளை அவற்றின் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு ஒரு செயல் வினையடைகள் (mono-functional adverbs) இரு செயல் வினையடைகள் (difunctional adverbs) என இருவகைகளாகப் பகுக்கலாம்.

1.2.3.1. ஒரு-செயல் வினையடைகள்

பெரும்பான்மையான வினையடைகள் தமிழில் வினையடைகளாக மட்டுமே செயல்படும். இவை செயல் வினையடைகள் எனப்படும்.

தமிழ் மொழியில் 'மெல்ல', 'நன்கு', 'சிறிது,' 'லேசாக', 'பிரமிப்பாக', நிம்மதியாய்', 'பெரிதாய்', என்பன ஒரு-செயல் வினையடைகளுக்குச் சில எடுத்துக் காட்டுகளாகும்.

மெல்ல அவளிடம் முணுமுணுத்தாள்.
நீ சொல்வது சரியாக இருக்கலாம்.

1.2.3.2. இரு-செயல் வினையடைகள்

சில வினையடைகள் வினையடைகளாக மட்டுமின்றி வேறு சில சொல்வகைக் கூறுகளாகவும் செயற்படும். இத்தகு வினையடைகள் இரு-செயல் வினையடைகள் எனப்படும்.

சான்றாக 'எங்கு', 'என்று', என்னும் வடிவங்கள் வினையடைகளாக மட்டுமின்றி வினாப்பெயர்களாகவும் செயல்படுகின்றன.

எங்கு வருவ?
என்று ஊருக்கு போறீங்க?

1.3. முடிவுகள்

ஒரு வினையை அல்லது ஒரு வினைப்பதிலியைச் சிறப்பித்து அவற்றுடன் எண- இடம்- பால் இயைபு இன்றி, காலம் காட்டாது வரும் வடிவங்கள் வினையடைகள் எனப்படும்.

ஒரு வினை அல்லது ஒரு வினைப்பதிலியும் அதனைச் சிறப்பித்து வரும் வினையடையும் இணைந்து வினையடைத்தொடர் அமையப்பெறுகின்றது.

வினையடைகள், ஒரு வினை, அல்லது ஒரு வினையடை அல்லது ஒரு பெயரடை அல்லது ஒரு வாக்கியம் ஆகியன வற்றைச் சிறப்பித்து வரும்.

வினையடைகள் பெரும்பான்மையும் தழுவப்பெறும் வடிவங்களுக்கு முன்னால் வருகின்றன.

வினையடைகள் காலம், எண், இடம், பால் உருபுகளை ஏற்று வருதில்லை.

வினையடைகளால் சிறப்பிக்கப்படும் வடிவங்கள் முற்று வினைகளாகவும் வினையடைகளாகவும், பெயரடைகளாகவும், செயவெனெச்ச மாகவும், செய்து வாய்பாட்டு வினையெச்சமாகவும், நிபந்தனை வினையெச்சமாகவும், பெயரச்சமாகவும், தொழிற்பெயராகவும், வினையாலணையும் பெயராகவும் அமையப்பெறும்.

வினையடைகள் மொழியில் அடுக்கி வருதலும் உண்டு. சில இடங்களில் வலியுறுத்தும் பொருண்மையைச் சுட்டும் பொருட்டு

வினையடையடி மட்டும் இரட்டித்து வரும். மிக நுண்ணிய பொருண்மையைச் சுட்டும் பொருட்டு வினையடைகள் 'உம்' விகுதியுடன் இணைந்து வரும்.

தமிழ்மொழியின்கண் அமைந்துள்ள வினையடைகளை அவற்றின் அமைப்பு அடிப்படையில் தனி வடிவ வினையடைகள் எனவும் பகுக்கலாம்.

வினையடைகளை அவை உணர்த்தும் பொருண்மை அடிப்படையில் கால வினையடைகள, இட வினையடைகள், முறைமை வினையடைகள், அளவு வினையடைகள், செயலதொடர் வினையடைகள் எனப்பகுககலாம்.

வினையடைகள் அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் ஒரு-செயல்வினையடைகள் என்றும, இரு-செயல்வினையடைகள் என்றும் பகுக்கலாம்.

இடவினையடைகள் பெரும்பான்மையும் அமைப்பு நிலையில் பெயாகளே. இவற்றுள் சில வேற்றுமை உருபுகளையும் ஏற்று வருகின்றன. அமைப்பு நிலையில் வேற்றுமை உருபேற்ற பெயர்களை வினையடைகளாகக் கருதுவது மேலும் ஆராய்தற்குரியது.

அடிக்குறிப்புக்கள்

1. வினையடைகளாகச் செயல்படும் வேற்றுமை ஏற்ற பெயர்கள் சொல்வகை நிலையில் பெயர்களாக அமைவதால் அவை இவண் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.
   வினையெச்சங்கள் வினையைச் சிறப்பித்து வந்த போதிலும் இவை காலக்குறிப்பினைக் கொண்டு விளங்குவதால் இவைகளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

2. காலம், இடம் உணர்த்தும் பெயர்கள் சில எண் வேறுபாடு ஏற்காமல் ஒரு சில வேற்றுமை உருபுகளை ஏற்றுச் செயலாற்றுகின்றன. அமைப்பில் அவை பெயர்களே. ஆனால் தொடர் நிலையில் அவை ஓரளவு பெயர்களாகக் காணப்பட்டு, பெரும் அளவில் வினையடைகளாகச் செயலாற்றுகின்

றன. எனவேதான், இவை வினையடை(ப்பெயர்கள்) எனப் படுகின்றன. (மோ. இசரயேல் 1976 : 92)

3. 'ஆ', 'ஆக', 'ஆய்', என்பன 'ஆகு' என்னும் அடியிலிருந்து தோற்றம் பெற்ற வடிவங்களாகும்.

4. இடவினையடைகள் பெரும்பான்மையும் வேற்றுமை உருபினை ஏற்றுப் பெயராகச் செயல்பட்ட போதிலும் தமிழ் இலக்கண அறிஞர்கள் பலர் இவற்றை வினையடைகளாகவே கருதுகின்றனர். ஆதலின் இக்கட்டுரையிலும் இவை வினையடைகளாகக் கருதப்பட்டுள்ளன.

5. அளவு வினையடைகள் என ஈண்டு ஒரு பாகுபாடு அமைத்திருப்பினும் இவற்றை முறைமை வினையடைகளில் ஒரு வகையாகக் கருதுதல் இயலும்.

6. செயல்தொடர் வினையடைகளையும் தனி ஒரு வகையாகக் கருதினாலும் இவற்றையும் முறைமை வினையடைகளில் ஒருவகையாகக் கொள்ளவியலும்.

Bibliography

1. Andronov, M., 1969 : A Standard Grammar of Modern and Clasical Tamil, New Century Book House pvt. Ltd., Madras.

2. Bowers, John, S., 1975 : "Adjectives and adverbs in English, Foundation of Linguistics, Vol. 13, pp. 529- 562.

3. Daswani C. J., 1970 : "English Manner Adverbials, 'Indian Linguistcs, Vol. 31 pp- 28- 40.

4. Friend, A., Jewell, 19/6 : Traditional grammar, Southern University Press, London and Amesterdam.

5. Israel, M., 1976 : Ilakkana Āyvu-peyarccol, Cintamani veliyitu, Madurai.

6. James, E., &Danieal R., 1983 : "Farmulaic Adverbials in English", Āyvukkō vai, Vol. 15:2, pp. 182-186.

7. KothandaRaman, P., 1972 : 'Sentence Adverbs in Tamil and Telugu', Third Seminar on Dravidian Linguistics, Agestialingom S., and Shanmugam S. V. (Edrs) pp. 293- 306, Annamalai University, Annamalainagar.

8. Lindholm, James, M, 1972 : 'Adverbial Pariticiples in Tamil' All India Conference of Dravidian Linguistics, pp. 97-104. Trivandrum,

9. Sunders, Gerald, A., 1978 : 'Adverbial Constructions'

Universals of Human Languages, Vol. 4, pp, 51-84.

10. Zvelabil, K., 1958 : "The Existance of Adverbs in Tamil", Tamil Culture, Vol. VIII- 1, pp. 44- 50.

அமைப்பு அடிப்படையில் வினையடைகளின் வகைகள்*

தனிவடிவ வினையடைகள்			கூட்டுவடிவ வினையடைகள			
அடிச் சொற்கள்	அடிச் சொற்கள்	ஆக்க விகுதிகள்	பெயர் & வினையடை ஆககவிகுதி கள்			சுட்டு/சுட்டுவினா அடி பெயரடி
	ஆக்கவிகுதி களைப் பிரித் துக்காண இயலுபவை	ஆக்கவிகுதி களைப்பிரித் துக்காண இயலாதவை	பெயர் + அ	பெயர் + ஆக	பெயர் + ஆய்	
பின்	இன்றைக்கு	மெல்ல	முதலாவதா	குரூரமாக	உட்புறமாய	எப்படி
முன்	நாளைக்கு	பைய	உடனடியா	லேசாக	சீக்கிரமாய்	அப்படி
இனி	காலையில்	ரெம்ப	சீக்கிரமா	பக்குவமாக	உடனடியாய்	இப்படி
காலை	முன்னால்	சற்று	உட்புறமா	பிரமிப்பாக	கறாராய்	அவ்வாறு
மாலை	பின்னால்	பிந்தி	கேள்வியா	இதமாக	நேர்மையாய்	இப்பொழுது
இன்று	மாலையில்	வலிய	மட்டமா	நன்றாக	அதீதமாய்	அப்பொழுது
நேற்று	முன்னுக்கு		அதிகமா	உண்மையாக	பெரிதாய்	அப்புறம்
சீக்கிரம்	நேற்றைக்கு		தெளிவா	அதிகமாக	வழக்கமாய்	இப்புறம்
			மலிவா	அரிதாக	நிச்சயமாய்	எவ்வாறு
			குளிரா	பெரிதாக	வெகுவாய்	இவ்வாறு
			வெயிலா	வழக்கமாக	கொஞ்சமாய்	எவ்வளவு
			நிம்மதியா	பொதுவாக		
			வழக்கமா	கொஞ்சமாக		
			உறுதியா	மொத்தமாக		
			வேகமா			

[* 1981 ஆம் ஆண்டிலிருந்து 1983-ஆம் ஆண்டு வரை வெளியான 'ஆனந்த விகடன்', 'குமுதம்', வார இதழ்களிலிருந்து திரட்டப்பட்ட வினையடைகளே இவண் பாகுபாடு செய்து தரப்பட்டுள்ளன.]

அட்டவணை -2

	பொருண்மை அடிப்படையில் வினையடைகளின் வகைகள்				
கால வினையடைகள்	இடவினை யடைகள்	முறைமை வினை யடைகள்		செயல்தொடர் வினையடைகள்	அளவு வினை யடைகள்
இன்று	இங்கு	மெல்ல	கேள்வியாய்	எப்பொழுதும்	அதிகமா
நாளை	அங்கு	நன்கு	மட்டமா	வழக்கமாக	மிக
உடனே	மேலே	அப்படி	அதிகமா	அடிக்கடி	வெகு
முன்னால்	கீழே	இப்படி	தெளிவா	நிதம்	ரெம்ப
நேற்று	உள்ளே	வலிய	மலிவா	அரிதாக	உரக்க
பின்னால்	வெளியே	பைய	குளிரா	மறுபடியும்	நன்கு
இன்றைக்கு	முன்னால்	வேகமாக	வெயிலா	முதலாவதாக	நிரம்ப
நேற்றைக்கு	பின்னால்	கரூரமாக	கூட்டமா	பொதுவாக	சிறிது
காலை	எங்கும்	லேசாக	சத்தமா		ஒருமிக்க
மாலை	எதிரே	பிரமிப்பாக			ஒக்க
இரவு	நேரே	பக்குவமாக			ஆழமாக
பகலில்	நடுவே	இதமாக			லேசாக
	கிட்ட	நன்றாக			நன்றாக
	இப்படி	உண்மையாக			முழுவதுமாக
	அப்படி	அதிகமாக			பெரிதாக
	உட்புறமாக	அரிதாக			சிறிதாய்
	எதிராக	பெரிதாக			மிகுதியாய்
	எங்கும்	நிம்மதியாய்			சிறிதும்
		நேர்மையாய்			பெரிதும்
		கறாராய்			மிகுதியும்

கணிப்பொறியும், மொழி பயிற்றுதலும்-ஒரு கண்ணோட்டம

மு பாலகுமார்,

தென்மண்டல மொழி பயிற்று மையம், மைசூர்.

[சுருக்கம்: மொழியைக் கற்பிக்கவும், கற்கவும் கணிப்பொறி எவ்வாறு பயன்படும் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.]

முன்னுரை

இன்று மனித வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் அறிவியல் தவிர்க்க இயலாதபடி ஒன்றிவிட்டது. அறிவியலின் பல்வேறு கண்டுபிடிப்புகளும் மனித சமூகத்தை முன்னேற்றப்பாதையில் செலுத்திக் கொண்டிருக்கின்றன. அவை வகுத்தளிக்கும் கருத்துக்களால் மானுட உலகு மென்மேலும் செழுமையுற்று வருகிறது.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் அறிவியல் தொழில நுட்பத்தின் அமோக சாதனைகளைக் கண்டது. அவ்வகையில் கணிப்பொறி முதன்மை கொண்டது. கணிப்பொறியின் நுண மாண் நுழை புலத்தால் தொழில் நுட்பம, பொருளாதாரம், மருத்துவம் மேலும் கல்வித் துறையும் வளமுற்று வருகின்றன. மேலை நாடுகளில் குறிப்பாய் அமெரிக்கா, இங்கிலாந்து போனற நாடுகளில் கணிப்பொறி கல்வித் துறையில் பெரும் பங்கினைப் பெற்றுவிட்டது. அங்கெல்லாம் மொழி, மொழியியல் துறை களிலும், மொழி பயிற்றுதலிலும் கணிப்பொறி கால்கொண்டு மிகச் சிறப்பாய் உதவுவதாகச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. சமூகத்துடன் தொடர்பு கொண்ட அறிவின் பல்வேறு துறைகளிலும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டுள்ள கருவி எனற வகையில் கணிப்பொறி பெரிதும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகிறது.

மொழிபயிற்றுதலில் கணிப்பொறி

மொழி பயிற்றுதல் துறையில் இன்று தொழில் நுட்பக் கருவிகள் பெரிதும் இடம் பிடித்துக் கொண்டன. இரண்டாம் மொழி பயிற்றுவித்தலில் மொழிப்பயிற்சிக்கூடம் சிறப்பு வாய்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. மொழிப்பயிற்சிக்கூடம் மிகுந்த பயனுள்ளதாய்த் திகழ்வதாக ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. தொழில் நுட்ப அறிவியல் நல்கும் புத்தறிவின் மூலம் மொழி பயிற்றுதல் இன்று ஒரு புதிய வடிவினைப் பெற்றுள்ளது. மொழி பயிற்றுதலில் மேலும் வளமூட்டப் புதிய துணையாய்க் கணிப்பொறி வந்துள்ளது.

20-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலேயே கணிப்பொறி கல்வித்துறையில் பயன்பட்டு வந்தாலும், அன்றிலிருந்து செய்யப் பட்ட ஆய்வுகளும், பயன்களும் இன்றுதான் வெளிச்சத்துக்கு வந்த வண்ணம உள்ளன. மொழியியலைப் பொறுத்தமட்டில் கணிப்பொறி முதன் முதலில் இயந்திரக் கணிப்பொறி மொழி பெயர்ப்புக்குப் (MACHINE TRANSLATION) பயன்படுத்தப் பட்டதாம். அது அப்போது அவ்வளவாக வெற்றி பெறாவிட் டாலும், மொழியியலில் மற்ற துறைகளுக்குக் கணிப்பொறியைப் பயன்படுத்தும் நோக்கிற்கு அது ஊறுசெய்யவில்லை. அதன்பின் பல ஆய்வுகளுக்குப் கணிப்பொறியின் வளர்ச்சி பெற்ற நிலை கள் பெரிதும் துணை செய்தன. பல்வேறு ஆய்வுகளுக்குப் பின்னரே கணிப்பொறி மொழி பயிற்றுதல் துறையில் புகுந்தது "The idea of Mechanizing the analysis of Language eaching methods was first enunciated by Mackey in 1956. Some what earlier the principles of Language teaching method analysis has been fornulated. But it was not until Mepham (1973) under-took thier Computerization"...... என மேஃபாம் கூறுவதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

கணிப்பொறி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் முதன் முதலில் மொழிச் சோதனைத் திட்டத்தில் (LANGUAGE TESTING PR-OGRAMME) பயன்பட்டது. ஸ்டாக்கோம் பல்கலைக் கழகத்தில்

இத்திட்டத்திற்குக் கணிப்பொறி பெரிதும் பயன்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் எந்தக் கூறுகளில் பின்தங்கியுள்ளனர்' எதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கண்டறிய முடிந்தது.

இந்த முயற்சிகளுக்குப் பின்னரே மொழி பயிற்றுதலில் கணிப்பொறி இடம்பெறலாயிற்று. 1960-இன் ஆரம்பத்தில் கணிப்பொறி சார்ந்த குறிப்புகள் (**Computer-Aided Instruction**) அமெரிக்காவில் மொழி பயிற்றுதலில் ஒரு புதிய பார்வைக்கு வழிவகுத்தது. அதற்குப் பின்னர்க் கிடைத்த நுண் கணிப்பொறி (**Micro Computer**)யாலும் கணிப் பொறி சார்ந்த குறிப்புகள் மொழிப் பயிற்றுதலில் மட்டுமல்லாது கல்வித் துறையிலும் பெரும் பங்கினைப் பெற்றுவிட்டன.

அமெரிக்காவில் கட்டுப்பாட்டுத் தரவுக் கழகம் (**Control data Corporation**) **PLATO** (**Programmed Logic for Automatic Teaching Operations**) என்னும் திட்டத்தை வகுத்தது. அத் திட்டம் மொழி பயிற்றுதற்கான கணிப்பொறி சார்ந்த குறிப்புகளை நல்கிப் பெரிதும் உதவியது. (**PLATO**) என்ற திட்டத்தின் வெற்றிக்குக் கீழ்கண்ட குறிப்புச் சான்று பகரும். **'The use of PLATO to teach basic skills in a programme for school Dropouts in Baltimore has been quite successful. Of particular interest to Language Instructers is the Prelimnary evaluation that showed students who completed the programme to have gained a grade level in reading ability for every 32 hours of study compared to 150 hours of traditional class room instruction ordinarly required to produce comparable results" (William Salganik : 1979).**

கீழ்க்கண்டவை மொழி பயிற்றுதலில் கணிப்பொறி சம்பந்தப்பட்ட சில ஆய்வுகள் ஆகும்.

வெஸ்டன் ஒன்டாரியா (**Western Ontario**) பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கிளன் ஹோம்ஸ் (**Glyn Holmes**), மரிலின் கிட் (**Marilyn kidd**) என்பவர்கள் மேற்கண்ட முயற்சியில் முதல்

இடைநிலை மொழிக் குறிப்பில் கணிப்பொறி சார்ந்த குறிப்புகள் மிகுந்த பயனளித்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். (1).

இல்லினாய் பல்கலைக் கழகத்தில் எபிரேய மொழியைப் பயிற்றக் கணிப்பொறி சார்ந்த குறிப்புகள் கொண்ட நிகழ்ச்சி நிரலை (Programming) மொழியியல் துறையினரான பீட்டர் கோலே (Peter Cole,) இராபர்ட் லோபோ விட்ஸ் (Robert Lobo Witz) இராபர்ட் ஹர்ட் (Robert Hart) என்பவர்கள் தயாரித்தனர். (2).

இது போன்று இந்தி பயிற்றுவிக்க ஒரு நிகழ்ச்சி நிரலை இதே துறையினரான யமுனா (Yamuna), சிசில் நெல்சன் (Cecil Nelson), இராபர்ட் ஹர்ட் (Robert Hart) என்பவர்கள் தயாரித்தனர். அது கீழ்க்கண்ட அணுகு முறையைக் கொண்டிருந்தது.

(அ) இலக்கண வடிவங்களைப் புரிந்து கொள்ளப் பல்வேறு பயிற்சிகளைத் தருதல் (Building understanding of a number of grammatical costructions by using varied exercises)

(ஆ) மாணவர்களின் திறனைப் பலப்படுத்தும் தரவுகளைத் தருதல் (Exposing data to build up students' overall competence in the Language)

இதே பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சுத் துறையின் பெர்னான்டு மார்ட்டி (Fernand Marty) இரண்டாம் மொழி பயிலுதலைக் (Second Language Acquisition) கண்டறிய ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தார் (4). இது போன்றே பல பல்கலைக் கழகங்களிலும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது போன்ற முயற்சிகள் இங்கிலாந்திலும் மேற்கொள்ளப்பட்டன. கல்வித் துறையில் கணிப் பொறியின் பயனைக் கண்டறியவும், கணிப்பொறி நுழைவுக்கு வகை செய்யவும் இங்கிலாந்து அரசு NDPCAL (National Development Programme In Computer ASSISTED LEARNING)...... என்னும் அமைப்பை (1973 to 1977)

உருவாக்கியது. கணிப்பொறி சார்ந்த குறிப்புகள் மூலம் கற்றலை மேம்படுத்துவதை இது முக்கியக் குறிக்கோளாய்க் கொண்டது. "The major aim was to Develop and Secure the Assimilation of Computer- assisted and Computer managed learning on a regulate instructional basis at resonable Cost" .... என்று இந்த அமைப்பின் நோக்கை ஹூப்பர் (Hooper: 1975) கூறுகிறார். சூல் பல்கலைக்கழகத்தின் ஜெர்மன் மொழித் துறையைச் சேர்ந்த முனைவர் ரெக்ஸ் லாஸ்ட் (Dr. REX LAST) கணிப்பொறி சார்ந்த கற்றலைத் (COMPUTER ASSISTED LEARNING) திறம்பட நடத்தப் பெரிதும் உதவினார்.

EXTOL (East Angalia And Essex Teaching Oriented Languages) என்ற திட்டத்தை ஈஸ்ட் அங்காலியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மரியா மாடலின் (MARIE MADELINE) இசக்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மைக்கேல் கென்னிங் கும் (MICHAEL KENNING) என்பவர்கள் தயாரித்தனர் (5). "In this System the Drill facility was designed to simplify the Construction of exercises by minimizing the amount of writing" என்று இவர்கள் கூறுகின்றனர். இவ்வாறாக மொழிப்பயிற்றலில் கணிப்பொறி ஆற்றிவரும் பயன்கள் குறித்துச் சான்றுகள் வந்தவண்ணமுள்ளன. மேற்குறிப் பிடப் பெற்றவையெல்லாம் ஒரு சில தகவல்களே. இவை போன்ற முயற்சிகளை ஜெர்மன், ஜப்பான் போன்ற நாடுகளும் மேற்கொண்டு வருகின்ற தகவல்கள் கிடைத்த வண்ணமுள்ளன.

இந்திய அரசு கணிப்பொறி அறிவை (COMPUTER LITERACY) அளிக்கும் பொருட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட மேல் நிலைப் பள்ளிகளில் கணிதம், அறிவியல் போன்ற பாடங்களில் கணிப்பொறி சார்ந்த குறிப்புகளை இடம் பெறச் செய்துள்ளது. எதிர்வரும் காலத்தில் மொழித்துறையிலும் அதன் நடமாட்டம் அதிகமாகலாம். மொழியியல், மொழித்துறையில் கணிப்பொறி யைப் பங்கேற்க வைக்கப் பல்வேறு நிறுவனங்கள் ஆய்வுகளை மேற்கொள்வதாய்த் தகவல்கள் வருகின்றன. அவ்வகையில்

தமிழ்ப் பல்கலைக் கழகம் (தஞ்சாவூர்), இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம் (மைசூர்), ஆகியன குறிப்பிடதக்கன.

முடிவுரை

கணிப்பொறி பல்வேறு துறைகளிலும் புதிய வீடியலைத் தோற்றுவிக்கும் அகவொளியோடும் புது நெறியோடும் பயணத்தைத்துவக்கியுள்ளது. மேலை நாடுகளில் கணிப்பொறி கல்வித் துறையின் பல நிலைகளில் பயன்படுகிறது; மொழி பயிற்றுதலிலும், கற்றலிலும் மிகச்சிறப்பாய் உதவுகிறது. நிலைமை இவ்வாறிருக்க, இங்கும் கல்வித் துறையில் கணிப்பொறியைப் பயன்படுத்துவதும் கணிப்பொறி அறிவைப் பெறுவதும் பெரிதும் அவசியமாகின்றன. இந்திய மொழிச் சூழலில் கணிப்பொறி மொழியின் பல்வேறு புலங்களுக்குத் துணை சேர்க்கும் செழுமையான ஊற்று மூலமாவது என்பது மொழியியலாளர்கள், கணிப்பொறி வல்லுநர்கள் ஆகியவர்களின் கூட்டு முயற்சியில் இருக்கிறது. இவர்களின் ஒருங்கிணைப்பும், கருத்துப் பரிமாற்றங்களும் இதற்குப் பெரிதும் துணை செய்யும். இத்தகு முயற்சிகள் ஏற்படும் நிலைகள் தென்படுவது வரவேற்கத் தக்கதாகும்.

இக்கட்டுரையின் செழுமைக்கு உதவிய முனைவர்
ந. நடராசபிள்ளைக்கு நன்றி.

துணை நூல்கள்

1. Constance E. Putnam — "Technology and Foreign Language Teaching". B. J. L. T. Vol. 19, No. 2, Sum: 1981, P-63-68.

2. PETER COLE, Robert Lobowitz and Robert Hart. — "Computer - Assisted program for the teaching of Modern Hebrew".

Studies in Language learning Vol. 3, No. 1; 1981, P. 74 — 91.

3. Yamunakachru-Cecil Nelson and Robert Hart. "Computer - based Instruction in Elememtary Hindi" Studies in language learning Vol. 3; No. 1; 1981, P. 54-73

4. Fernand Marty "Reflections on the use of Computers in Second Language Acquisition". Studies in language learning Vol. 3; No. 1; 1981- P. 25- 53.

5. Mariemadeline and Micheal Kenning. "Computer Assisted Language Teaching made easy" BJLT Vol. 19; No. 1, 1981 P. 119- 124.

6. Michael S. Mepham "Computation in language text analysis- 1973

"பாரதிதாசனும் வடமொழியும் — ஒரு மொழியியற் கண்ணோட்டம்"*

அ. காமாட்சிநாதன்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

[சுருக்கம்: பட்டுக்கோட்டை அழகிரிசாமி போன்ற பலர் எதிர்த்த போதிலும் பாரதிதாசன் தமது வட மொழிப் பெயரை மாற்றவில்லை. தமது கவிதைகளில் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தக் கூடிய இடங்களிற் கூட வடமொழிச் சொற்களைத் தாராளமாகப் பயன் படுத்தியுள்ளார். வடசொற்களைத் தமிழ் இலக்கண விதிகளுக்கேற்பத் தற்பவமாக்காமல் கிரந்த எழுத்துக் களைப் பயன்படுத்திக் கையாண்டுள்ளார். தமது இறுதிக் காலம் வரையில் வடசொற்களைக் கையாளு வதை அவர் நிறுத்தவில்லை. வடசொற்களைக் கை யாளுவதில் அவர் சற்றுப் பரந்தமனப்பான்மையுடனே யே வாழ்ந்திருக்கிறார். என்றாலும், தாம் சார்ந்திருந்த அரசியல் இயக்கங்களின் கொள்கைகளுக்கேற்ப வட மொழியை வெறுத்தும் தனித்தமிழ் இயக்கத்தை ஆதரித்தும் பாரதிதாசன் பாடத் தவறவில்லை.]

"பிக்ஷணீயம் என்ற நூல் சமஸ்கிருதம் முதலிய பல பாஷைகளில் காணப்படுகிறது. தமிழிலும் அதைத் தழுவித் தற்கால இந்தியாவிற்கு ஏற்ற முறையில் எழுதினேன்-" என்பது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் வாசகம்[1]. இந்த வாசகத்தில் மூன்று வடமொழிச் சொற்கள் காணப்பட்டு

---

* பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகத்தின் ஆதரவில் பாண்டிச் சேரியில் நடந்த பாவேந்தர் பாரதிதாசன் 97-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கில் 30-4-1987-இல் படிக்கப்பட்டது.

கின்றன. அவை பில்கணீயம், சமஸ்கிருதம், பாஷை என்பவை யாகும். தமிழ் மொழியில் வடமொழிச் சொற்களைக் கை யாளும் போது செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றித் தொல்காப்பியமும் நன்னூலும் கூறுகின்றன. தமிழ்மொழியின் அமைப்புக்கு மாறான முறையில் அமைந்துள்ள வடமொழிச் சொற்களில் உள்ள கிரந்த எழுத்துக்களையும் சொல்லமைப்புக் களையும் தமிழ்மொழியின் அமைப்புக்கேற்ப உருமாற்றிக் கையாளவேண்டும் என்பது தொல்காப்பியம், நன்னூல் ஆகிய வற்றின கொள்கையாகும்[2].

பில்கணீயம், சமஸ்கிருதம், பாஷை என்ற மூன்று வட சொற்களில் பில்கணீயம் என்ற ஒரு சொல் மட்டுமே மூலவட சொல்லில் உள்ள 'ஹ' என்ற கிரந்த எழுத்தைத் தமிழ்மொழி யின் அமைப்புக்கேற்பக் 'க' என்ற எழுத்தாக மாற்றிக் கை யாளப்பட்டுள்ளது. ஏனைய வடசொற்களான சமஸ்கிருதம், பாஷை என்பவை தமிழ்மொழியின் அமைப்புக்கு மாறாக ஸ, ஷ என்ற வடமொழிக் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்திக் கையாளப்பட்டுள்ளன. இது மட்டுமல்ல. வடமொழிக்குரிய ஏனைய கிரந்த எழுத்துக்களான ஹ, ஜ, க்ஷ ஆகியவற்றையும் தமிழ் மொழியின் அமைப்புக்கேற்ப மாற்றாமல் அவ்வாறே தமது படைப்புக்களில் பாரதிதாசன் பயன்படுத்தியுள்ளார்.

ஸரோஜா, உஸ், விஸ்வரூபம், இந்துஸ்தான்,
உத்ஸாகம், ஸ்ருங்காரவனம், ஸ்ரேஷ்டர்,
விஷயம், நிமிஷம், சந்தோஷம், குஷ்டரோகி,
விஷம், வேஷம், பாலாபிஷேகம்,
புருஷர்கள், புஷ்பவாசம், உத்க்ருஷ்டமானது.
ஹீ, ஊஹூ, ஓஹோ, ஹம்சா, அட்டஹாசம்,
பஹு, நிக்ரஹம்,
ஜய ஜய, ஜாம்பவந்தன், ஜானகி காந்தஸ்மரணே,
புவிராஜன், கவிராஜன், ஜார்ஜ், துவஜாரோகணம்,
கஜகேது, ஜலம், ராஜ்யம்,
லக்ஷ்மணன், சூக்ஷமம், பாதரக்ஷை.[3]

பாரதிதாசன் தொடக்க காலத்தில் தாசன் என்ற சொல்லில் 'ஸ' என்ற கிரந்த எழுத்தைதான் பயன்படுத்திப் பாரதிதாஸன் என்றே வழங்கி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 'ஸ' என்ற கிரந்த எழுத்தை நீக்கிவிட்டு, 'ச' என்ற தமிழ் எழுத்தை அவர் பயன்படுத்த ஆரம்பித்தது மிக மிகப் பிற்காலத்தே தான்.[4]

கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தியதோடு மட்டுமல்லாமல், தமிழ்மொழியின் ஒலியமைப்புக்கும், சொல்லமைப்புக்கும் பொருந்தாத த்ர, க்ர போன்ற மெய்யிணைகளையும், தமிழில் சொல்லுக்கு முதலில் வரக்கூடாத ர, ல போன்ற மெய்யெழுத்துக்களையும், ப்ர போன்ற மெய்யிணைகளையும் தமிழின் சொல்லமைப்புக்கேற்ப மாற்றாமல் சொல்முதலில் பாரதிதாசன் பயன்படுத்தியுள்ளார்.

சித்ரம், சக்ரவர்த்தி, நிக்ரஹம், பாத்ரம், நேத்ரம்,
ப்ராணேசா, ஸ்ருங்காரவனம், ஸ்ரேஷ்டர்,
ஹிரண்யன், பர்வதம், அர்ப்பணம்
ப்ரகலாதன், ப்ரவாகம்,
ராஜன், ரத்தவெறி, ரூபாய், லக்ஷ்மணன்,
ராஜபாட்டை, ராணி, ராசாங்கம்,
லங்கை, லாவகம்.

இன்னும் ஒரே வடசொல்லை ஓரிடத்தில் தமிழ்மொழியின் இயல்புக்கேற்ப மாற்றியும், பிறிதோர் இடத்தில் அவ்வாறு மாற்றாமலும் பாரதிதாசன் வழங்கியுள்ளார்.

சித்ரம்	சித்திரம்,	ராமன்	இராமன்,
லங்கை	இலங்கை,	ராஜன்	ராசன்,
இராசர்	அரசர்,	துஷ்டர்	துட்ட(ச்சிறுக்கி),
இரண்ய	இரணிய,	ராசாங்கம்	அரசாங்கம்.

இவையேயன்றித் தற்சமமாகவும், தற்பவமாகவும் பல வடமொழிச் சொற்களைப் பாரதிதாசன் தமது படைப்புக்களிற் கையாண்டுள்ளார்.

புதல்வி, உபாத்தியாயன், மார்க்கம், ஞானம், அபசகுனம், தேகசுகம், பாபம், கோபம், பிரசங்கம், சந்தேகம், சபை, சனங்கள், சங்கீதம், உதயசூரியன், ஏகமனது, சத்தியம், அரசாங்கம்.[5]

பாரதிதாசன் கையாண்டுள்ள பல வடசொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்கள் இல்லாமல் இல்லை. உதாரணமாக புதல்வி = மகள், ஞானம் = அறிவு, தேகசுகம் = உடல் நலம், கோபம் = சினம், பிரசங்கம் = சொற்பொழிவு, சபை = மன்றம், சங்கீதம் = இசை, சத்தியம் = உண்மை ஆகிய சொற்களைக் காட்டலாம். என்றாலும் பாரதிதாசன் வடசொற்களையே கையாண்டுள்ளார். அதுமட்டுமல்ல; தாம் வட சொற்களைச் சற்று அதிகமாகக் கையாளுவதும், அதனால் பிறர் தம்மைக் குறை கூறுவதும் பாரதிதாசனுக்குத் தெரியாமல் இல்லை. இதனை அவரது இரணியன் என்ற நாடக நூலின் 1959-ஆம் ஆண்டுப் பதிப்பில் "தாம் இந்த நாடகத்தில் சற்று வடசொற்கள் அதிகமாகக் கையாண்டிருப்பதாகவும், அவற்றை இக்காலத் தமிழ் இளைஞர்கள் திருத்திப் படித்துக் கொள்ளும் ஆற்றல் உடையவர்கள் என்று நினைப்பதாகவும்" பாரதிதாசன் கூறியுள்ளதிலிருந்து அறியலாம்.[6]

இந்த இடத்தில் பாரதிதாசன் என்ற வடமொழிப் பெயர் பற்றி அஞ்சாநெஞ்சன் என்று அவர் காலத்தில் அழைக்கப் பட்ட பட்டுக்கோட்டை அழகிரிசாமிக்கும், பாரதிதாசனுக்கும் நடந்த காரசாரமான விவாதத்தை நினைவுகூர்தல் பொருத்த மாகும். அந்த விவாதம் பின்வருமாறு:-

"பாரதி ஒரு பார்ப்பான் ; மேலும் தாசன் என்பது வட சொல் பாரதிதாசன் என்றால்-பாரதிக்கு அடிமை என்றல்லவா பொருளாகிவிடும்?" இது அழகிரிசாமியின் குத்தலான கேள்வி.

"ஆமாண்டா, நான் பாரதிக்கு அடிமைதாண்டா !" - இது பாரதிதாசனின் சூடான பதில்.[7]

இதிலிருந்து, வடமொழிச்சொற்களைப் பயன்படுத்துவதைப் பொறுத்தவரையில் தாராள மனப்பான்மையும் விரிந்த நோக்கும் கொண்டவராகப் பாரதிதாசன் திகழ்ந்திருக்கிறார் என்பது ஓரளவுக்குப் புலனாகும். மேலும், பொதுவாகப் பிற மொழிச் சொற்களைத் தேவையைப் பொறுத்து ஏற்றுக் கொள்ளலாம் என்பதும் பாரதிதாசனின் கருத்தாக இருந்திருக்கிறது. இதனை அவருக்கும் ஏ. கே. செட்டியாருக்கும் நடந்த கீழ்வரும் உரையாடலிலிருந்து அறியலாம்.

ஏ.கே. செட்டியார் : பிற பாஷைகளிலுள்ள வார்த்தைகளைத் தேவையான அளவு தமிழில் சேர்த்துக் கொள்ளலாமா?

பாரதிதாசன் : அவசியம் சேர்த்துக் கொள்ளலாம்[8]

இந்த உரையாடலில் பாஷை, வார்த்தை ஆகிய வட சொற்களை ஏ.கே. செட்டியார் பயன்படுத்தியுள்ளார். அதற்குப் பாரதிதாசன் மறுப்புத் தெரிவிக்காதது மட்டுமல்ல; அவசியம் என்ற வடசொல்லையும் தமது பதிலில் பயன்படுத்தியுள்ளார்.

பாரதிதாசன் வடசொற்களைப் பயன்படுத்துவதில் காலப் போக்கில் தமது நடைமுறைப் பழக்கத்தை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. அவரைப் பொறுத்தவரையில், முன்பு குறிப்பிட்டவாறு, தாஸன் என்ற சொல்லில் உள்ள 'ஸ' என்ற கிரந்த எழுத்தைத்தான் பிற்காலத்தில் 'ச' என்ற தமிழ் எழுத்தாக மாற்றிக்கொண்டார் பாரதிதாசன். அவ்வளவுதான். ஆனால் மன்னர் மன்னன் கீழ்வருமாறு கூறுகிறார்.

''இலக்கிய விழா ஒன்றில் இப்படி ஒரு வினா எழும்பிற்றாம்.

தனித்தமிழை ஆதரிக்கும் பாரதிதாசன் தம்மக்களுக்கு, சரசுவதி, கோமதி, வசந்தா, ரமணி என்று பெயர் சூட்டியிருக்கிறார். எல்லாமே வடமொழி; ஏன், இவர் பெயரே வடமொழி தானே ? - இது கேள்வி.

1921ல் என் தமக்கை சரசுவதி, 28ல் நான், 31ல் என் தங்கை வசந்தா, 1933ல் என் இளைய தங்கை ரமணி-பிறந்தோம் 1944ல்தான் மறைமலையடிகளுக்குத் தமது நூலைத் திருமுன் படைத்தல் மூலம் தனித்தமிழ் நடைக்கு ஒப்படைத்துக் கொள் கிறார் பாவேந்தர்.[9]

பெருஞ்சித்திரனாரும் இது போன்றதொரு சமாதானத்தை யே பாரதிதாசனின் அளவு மீறிய வடசொற்கலப்புக்குத் தமது 'பாவேந்தர் பாரதிதாசன்' என்ற நூலிற் கூறுகிறார்.

"பாரதிதாசன் தமிழ்ப்பற்று நிரம்பியவராகவும் தமிழ்மொழி வளர்ச்சியில் மிகுந்த நாட்டம் கொண்டவராகவும் விளங்கினாலும் தனித்தமிழ் இயக்கம் அக்கால் மிகுதியாகப் பரவாத காரணத்தால் தம்பிள்ளைகள் நால்வருக்கும் வடமொழிப் பெயராகவே வைத்திருப்பது குறிக்கத் தக்கது ... ... இளமைக் காலத்தே தாம் எழுதிய பாடல்களில் வரைதுறையின்றி ஏராளமான வடசொற்களைப் புணர்ந்து எழுதியுள்ளமையாலும் பாவலர் பாரதிதாசன் அவர்கள் தொடக்கக் காலத்தே தனித்தமிழ்ப் பற்று நிரம்பியவராக இருந்திலர் என்று கருதவேண்டியுள்ளது."[10]

ஆனால், 1944-ஆம் ஆண்டிற்கு முன்பு மட்டுமன்றி அதற்குப் பின்பும் அதாவது மறைமலையடிகளாரோடு தொடர்பு ஏற் பட்ட பின்பும் இறப்பதற்கு நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் பாரதிதாசனது வடசொற்கலப்புப் பழக்கத்தில் எந்தவிதக் குறிப்பிடத்தக்க மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை. இரண்டாவது முறையாக 1950-க்குப் பின் ஆரம்பித்த 'குயில்' இதழ்களில் வந்துள்ள அவரது உரைகளில் தவிர்க்கக் கூடிய இடங்களிற்கூட வடசொற்களை அவர் பயன்படுத்தி யுள்ளார்.

"(இந்தியாப் பத்திரிக்கையில்) சித்திர விளக்கம் தெளிவாக எழுதியிருக்கும். படங்கள் ராஜீய சம்பந்தமானவை. அர்த்த புஷ்டியுள்ளவை."

இதில் பத்திரிக்கை, சித்திரம், ராஜீய சம்பந்தம், அர்த்தபுஷ்டி ஆகிய வடசொற்களைக் காணலாம்.

இதுகாறும் கூறியவற்றால் பாரதிதாசனைப் பொறுத்த மட்டில் நடைமுறையில்(Practice) அவர் வடசொற்களைத் தமிழில் கலந்து எழுதுவதை வெறுக்கவில்லை எனபதும், தமக்கு விருப்பம் உள்ள அளவிற்கு வடசொற்களைக் கலந்து எழுதும் பழக்கமுடையவராகவே இறுதிவரைக்கும் விளங்கினார் என்பதும் புலனாகும். முன்பு கூறியபடி தமது பெயரில் உள்ள தாஸன் என்ற சொல்லிற் கண்ட 'ஸ' என்ற கிரந்த எழுத்தைத் தான் பிற்காலத்தில் 'ச' என்ற தமிழ் எழுத்தாக மாற்றி வைத்துக் கொண்டார். மற்றப்படி சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்பதைச் சஞ்சீவி மலையில் சாரல் என்றோ, சேரதாண்டவம் என்பதைச் சேரனாட்டம் என்றோ தமிழாக்கம் செய்துகொள்ள வில்லை.[12] ஆனால். பாரதிதாசனின் மறைவுக்குப் பின்னர் வடசொற்களை அவரது நூல்களிலிருந்து நீக்குவதற்கு ஒரு சிறிய முயற்சி நடைபெற்றதாகத் தெரிகிறது. இதனை இரணியன் என்ற அவரது நாடகத்தின் 1943-ஆம் வருஷத்திய பதிப்பினையும், 1978-ஆம் வருஷத்திய பதிப்பினையும் ஒப்பிட்டு நோக்கினால் அறியலாம். 1943-ஆம் வருஷத்திய பதிப்பில் காணப்படும் அத்தியாயம், புஷ்பம், ஜலம், துவஜாரோகணம் ஆகிய வடசொற்கள் 1978-ஆம் வருஷத்திய பதிப்பில் காட்சி, மலர், நீர், கொடியேற்று விழா என்று தமிழாக்கம் செய்யப்பட்டுக் காணப்படுகின்றன. அதோடு ஸ, ஷ போன்ற கிரந்த எழுத்துக்களும் ஒரு சில இடங்களில் நீக்கப்பட்டுத் தமிழ் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஸ்ருங்காரவனம் > சிருங்காரவனம்;
ஹம்சா > அம்சா; ஸ்ரேஷ்டர் > சிரேஷ்டர்;

ராக்ஷஸர்கள் > ராட்சசர்கள்; பஹு > பகு;
நிக்ரஹம் > நிக்கிரகம்.

இன்னும் ப்ரகலாதன் > பிரகலாதன்; சக்ரவர்த்தி > சக்கரவர்த்தி; பாபிகள் > பாவிகள் என்பன போன்ற மாற்றங்களும் 1978-ஆம் பதிப்பிற் காணப்படுகின்றன.[13]

வடமொழி நூலைத் தமிழாக்கம் செய்தும், அழகிரிசாமி போன்ற அவரது இயக்கத் தோழர்கள் எதிர்த்த போதிலும் பாரதிதாசன் என்ற வடமொழிப் பெயரை மாற்றாமல் இறுதி வரைக்கும் தக்க வைத்துக் கொண்டும் மறைவதற்குச் சில ஆண்டுகள் வரையிலும் வடசொற்களைத் தமது விருப்பப்படிக் கலந்து எழுதிக்கொண்டும், அவசியம் ஏற்பட்டால் பிறமொழிச் சொற்களைக் கலக்கலாம என்ற கொள்கையை வைத்துக்கொண்டும் வாழ்ந்த போதிலும் பாரதிதாசன் மொழிக்கலப்பையும், வடமொழியையும் கீழ்வருமாறு வெறுத்துப்பாடியுள்ளார்.

''ஏங்க வைக்கும் வடமொழியை இந்தியினை
எதிர்த்திடுவீர்! அஞ்சவேண்டாம்!''
''செந்தமிழுக்கு வாய்ப்பளித்திங்கு உலகறியச் செய்தால்
செத்தமொழி வடமொழிக்கும் இந்திக்கும் என்று
சொந்த நலம் ஒன்றிருக்கக் காணார்கள யாரும்!''
''தாய்ப்பாலில் நஞ்செனவே தமிழில் வட
மொழி சேர்த்தார் தவிர்தல் வேண்டும்!
தமிழ்ப் புலவர் தனித்தமிழில் நாடகங்கள்
படக்கதைகள எழுதல் வேண்டும்!''
''தனித்தியங்கும் தன்மை தமிழினுக்குண்டு.''
''கமழும் தமிழினை உயிரென ஓமபு;
காணும் பிற மொழிகளோ வெறும்வேம்பு;
நமையெலாம் வடமொழி தூக்கிவிடும் தாம்பு;
நம் உரிமைதனைக் கடித்தது அப்பாம்பு''.
''தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்
தூய் தமிழ் பிதற்றும் என்வாய்.''[14]

மேற்கண்டவாறு பாரதிதாசன் தமது நடைமுறைப் பழக்கத்திற்கு முற்றிலும் மாறாக வடமொழிக்கலப்பை இழித்தும், வடமொழியை வெறுத்தும், தனித்தமிழில் எழுதுவதை ஆதரித்தும் பாடியுள்ளார். இதற்கு அவரது அரசியற் கொள்கையே காரணமாகும். இங்கே தி.மு.க.வினரின் மொழிக் கொள்கை ஒப்பு நோக்கற்பாலது. தி.மு.க.வினர் தமிழ்ப்பற்றில் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை. அன்பழகன், நெடுஞ்செழியன், மதியழகன், தில்லைவில்லாளன் என்று தமது வடமொழி இயற்பெயர்களையே தமிழ்ப்பெயர்களாக மாற்றிக் கொண்டவர்கள். இருந்தாலும் 1957-இல் பொதுத் தேர்தல் வந்த போது, தமது தேர்தல் சின்னத்துக்கு "உதய சூரியன்" என்ற தூய வடமொழிப் பெயரையே வைத்துக் கொண்டார்கள். உதயசூரியன் என்ற தலைப்பில் பாரதிதாசனும் ஒரு கவிதை எழுதியுள்ளார்.[15] அண்ணா, தமிழ்ப்பற்று மிக்கவராக இருந்த போதிலும் தமிழ்நாட்டைச் சென்னை ராஜ்ஜியம் அல்லது சென்னை இராச்சியம் என்றே குறிப்பிடுவார்; நேசம் பாசம், கஷ்டநஷ்டங்கள் என்பன அவர் அடிக்கடி பயன்படுத்திய வடமொழித் தொடர்கள். வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் தமது பெயரைப் பரிதிமாற்கலைஞர் என்று தமிழாக்கம் செய்து கொண்ட போதிலும் வடமொழியை வெறுக்கவும் இல்லை; வடமொழியைக் கலந்து எழுதாமலும் இல்லை. மானவிஜயம், ரூபாவதி என்ற வடமொழிப் பெயர்களில் அவர் நூல்கள் எழுதினார். மற்றும் சுதேஷ பாஷை, தமிழ்ப்பாஷை, சர்வகலா சாலை, விசாரணை, அங்க ஜீவ சாஸ்திரம், பௌமிய நூல், விசயைப் பொது சந சபை, கோதீர்த்தபுரி போன்ற பல வட சொற்களையும், வடசொற்றொடர்களையும் அவர் தாராள மாகவும் ஏராளமாகவும் கையாண்டுள்ளார்.[16] சுவாமி வேதாசலம் என்பவர் தமது பெயரை மறைமலையடிகள் என்று தனித் தமிழில்- தூய தமிழில் மாற்றிக் கொண்டார். இதற்குக் காரணம் 1916-இல் அவருக்கேற்பட்ட தனித்தமிழ்ப்பற்றே. அதனால் பிற்காலத்தில் இயன்றவரையில் தனித்தமிழில் பேசினார் எழுதினார்; தமது பழைய நூல்களில் காணப்பட்ட வடசொற்களை நீக்கித் தமிழாக்கமும் செய்தார். என்றாலும் அவர் வட

மொழியை வெறுக்கவில்லை. சாகுந்தலம் என்ற வடமொழி நாடகத்தைத் தமிழாக்கம் செய்தார். தனித்தமிழுக்கு அவருடன் உழைத்த தமது மகளின் வடமொழிப் பெயரான நீலாம்பிகை என்ற பெயரைத் தமிழாக்கம் செய்ய முயற்சி செய்யவில்லை அதோடு சிவம், சைவம், சித்தாந்தம், போன்ற பல வட சொற்களைப் பயன்படுத்தத் தவறவில்லை அவர்.[17] அடுத்து, பாரதியார் தொடக்க காலத்தில் ஆங்கிலத்தையும் ஆங்கிலக் கல்வி முறையையும் மிக வெறுத்துப் பாடினார்[18] அவரே பிற்காலத்தில் காசிக்குச் சென்று முன்பு தான் வெறுத்த ஆங்கிலத்தைப் படித்தார்; ஆங்கிலக் கல்வி முறையிற் பயின்று பட்டமும் பெற்றார். அதுமட்டுமா? ஆங்கிலத்தில் சிறந்த எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் விளங்கினார். மேலும், மதுரையில் இருந்துவரும் சேதுபதி உயர்நிலைப் பள்ளி என்ற ஆங்கிலக் கலாசாலையில் ஆசிரியராகவும் பணியாற்றினார்.[19]

மொழிக்கலப்பும் எதிர்ப்பும் தமிழ் நாட்டில் மட்டும் ஏற்பட்டவை அல்ல. ஜப்பான், ஜெர்மனி, இங்கிலாந்து, போன்ற பிறநாடுகளிலும், முற்காலங்களில் மொழிக்கலப்பும் எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. ஜப்பானியர்களும் கொரியர்களும தமது மொழிகளில் சீனமொழிக்கலப்பை எதிர்த்தனர். பாரசீகர்கள் தமது மொழியில் அராபிய மொழியைக்கலப்பதை வெறுத்தனர். துருக்கியர்கள் தமது மொழியில் அராபிய மொழியையும் பாரசிக மொழியையும் கலப்பதை விரும்பவில்லை. 19-ஆம் நூற்றுண்டில் ஜெர்மன் நாட்டில் ஜெர்மன் மொழியில் பிரெஞ்சு மொழியைக்கலப்பதை அறிஞர்களும் அரசாங்க அதிகாரிகளும் ஓரளவுக்கு எதிர்த்தார்கள். ஆனால் எதிர்ப்பினால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. மாறாக மேலும் மேலும் பிரெஞ்சுமொழிச் சொற்களை அதிகமாகவே ஜெர்மானியர்கள் தமது ஜெர்மன் மொழியிற்கலந்து வழங்கினார்கள்.[20] ஆங்கில நாட்டிலும் மொழிக்கலப்பும் எதிர்ப்பும் தோன்றாமல் இல்லை.

ஆங்கில மொழியில் இலத்தீன், கிரீக்கு போன்ற ஐரோப்பிய மொழிகளைக் கலக்கும் பழக்கம் பல நூற்றாண்டுகளாகவே

இருந்து வந்தது. என்றாலும் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மறுமலர்ச்சியின் காரணமாக இலத்தீன், கிரீக்கு, போன்ற மொழிகளிலிருந்து எண்ணிறந்த சொற்களை ஆங்கில மொழியில் கலக்கும் பழக்கம் உச்ச கட்டத்தை அடைந்தது. இதற்கு ஆங்கில நாட்டில் கி. பி. 16-ஆம் நூற்றாண்டளவில் ஒரு பெரும் எதிர்ப்புத் தோன்றியது. இலத்தீன், கிரீக்கு போன்ற மொழிகளிலிருந்து சொற்களை ஆங்கிலத்தில் அளவுக்கு மீறிக் கலப்பதைக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில், கிரீக்கு மொழிப் பேராசிரியராக இருந்த சர் ஜான் செக் என்பவரே எதித்தார். அவரோடு ரோஜர் ஆஸம என்பவரும் சேர்ந்து மொழிக் கலப்பை எதிர்த்தார்.[21] மில்டன், டாக்டர் ஜான்சன், கிப்பன் போன்ற ஆங்கில இலக்கியக் கலைஞர்கள் இலத்தீன், கிரீக்கு ஆகிய மொழிகளிலிருநது அளவிறந்த முறையில் சொற்களைக் கடன் வாங்கி ஆங்கிலத்தில் கலந்து எழுதுவதை ஆங்கில அறிஞர்கள் கடுமையாக எதிர்தனர்.[22] இந்த எதிர்ப்பின் விளை வாக 1913-இல் தூய ஆங்கில மொழிச்சங்கம் (Society for Pure English) -என்ற ஒரு சங்கமே மொழிக் கலப்புக்கு எதிராகத் தோன்றிச் செயல்படலாயிற்று.[23] ஆனால் அதன் பலன், மேலும் மேலும் இலத்தீன், கிரீக்கு, பிரெஞ்சு ஆகிய மொழிகளிலிருந்து மட்டுமல்லாமல், சீனம் போன்ற ஏனைய உலகமொழிகள் பல வற்றிலிருந்தும் சொற்கள் வந்து ஆங்கில மொழியில் கலக்க லாயின. தூய ஆங்கிலமொழிச் சங்கமும் பல ஆண்டுகளுக்கு முன்பே செயலற்றுப் போய்விட்டது. இன்றைய உலகமொழி களிலே ஆங்கிலத்தில்தான் பிறமொழிச் சொற்கள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த ஓர் அரிய உண்மையாகும்.[24]

பின் குறிப்புகள்

1. மன்னர் மன்னன் 1985 : பக். 272

   பில்ஹணர் 11-ஆம் நூற்றாண்டினர் : விக்கிரமாங்க தேவ சரிதம், சௌரபஞ்சாசிகா, கர்ணசுந்தரி, ஆகிய இலக்கியங்களையும் எழுதியவர். (நடராஜன் 1979:298)

பில்கணக்கவி:— இவர் இன்கவிதைகளைக் காதல் துறை யில் பாடியவர். அரசகுமாரிக்கு இவர் கல்வி கற்பிக்க

ஏற்பாடாகியிருந்தது. அழகிய அரசகுமாரிக்கும் குருவுக்கும் காதல் ஏற்பட்டுவிடக் கூடாது என்று கருதி ஒருவரையொருவர் பார்க்ககூடாத வகையில் நடுவே ஒரு திரையிட்டும் ஒருவரைப் பற்றி ஒருவரிடம் விகாரமாயிருப் பவர் எனறும் சொல்லி வைத்திருந்தும் ஒருவரையெருவர்அறிந்து காதல் கொண்டனர். அரசன் கவியைக் கழுவேற்றக் கட்டளையிட்டான். கவிஞர் தம் கடைசிநேரத்தில் தம் மனக்கண்முன் நிற்கும் காதலியைப் பற்றியும் தமக்கும் அவளுக்கும் உள்ளஉறவையும் நடந்திருந்த நிகழ்ச்சிகளையும் ஐம்பது பாக்களிற் பாடினார், "சௌர பஞ்சாசிகை — கள்ளக் காதல் ஐம்பது"— என்ற இப்பாக் களைக் கேட்டு மனமுருகிய அரசன் கவிஞரைவிடுவித்தான். ....யாமினி பூர்ண திலகை என்னும் அவ்விளவரசிக்கும் இக்கவிக்கும் பிறகு திருமணம் நடந்தது.

—இராமசாமிப் புலவர் (1970)—சிறப்புப்பெயரகராதி.

இக்கதை தமிழில் சினிமாவாக எடுக்கப்பட்டுள்ளது. திரு. ஹொன்னப்பா பாகவதர் பில்ஹணனாக நடித்துள்ளார்.

2. தொல்காப்பியம் 1945 சூ. 2 — 9 — 5, 6.
பவணந்தி 1953 சூ. 146 — 150

3. பாரதிதாசன் (1943, 1974, 1978). இந்தக் கட்டுரையிற் காட்டப்படும் சொற்களிற் பெரும்பாலானவை பாரதி தாசன் கவிதைகள் முதல் தொகுதி, இரணியன் என்ற இரண்டு நூல்களிலிருந்து மட்டுமே தொகுக்கப் பட்டவை.

4. பாரதிதாசன் (1943, 1978:) 1983-இல் வெளியிடப் பட்ட பாரதிதாசன் கவிதைகள் என்ற முதற்பதிப்பில் 'ஸ' என்ற வடமொழிக் கிரந்த எழுத்துடன் கூடிய 'பாரதிதாஸன்' என்ற பெயரே காணப்படுகிறது. கவிஞர் பெயரிலும் அவ்வாறே. அக்காலத்தில் இக்கவிதைத் தொகுதிக்கு மதிப்புரைகளும் புக ழுரைகளும் வழங்கிய கா. சுப்பிரமணிய பிள்ளை,

வேங்கடசாமி நாட்டார், சோமசுந்தர பாரதியார், முதலிய தமிழ்ப் பேராசிரியர்களும், பெரியார், அண்ணா முதலிய அரசியலறிஞர்களும் கவிஞரைப் பாரதிதாஸன் என்றே குறிக்கின்றனர். ஸ என்ற கிரந்த எழுத்து நீக்கம் சுமார் 1946-க்குப் பிறகு தொடங்கிற்று எனலாம். (மன்னர் மன்னன் 1985 : 262 - 270). 1942-இல் ஏ. கே. செட்டியாருக்கு அளித்த பேட்டியில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அண்ணாமலை ஸர்வகலாசாலை என்று 'ஸ'வுடன் கூடிய வடமொழிப் பெயராலேயே பாரதிதாசன் குறிப்பிடுகிறார். (மன்னர் மன்னன் 1985 : 318). இரணியன் என்ற நூலின் 1938, 1943 -ஆகிய இரண்டு வருசப் பதிப்புகளிலும் பாரதிதாஸன் என்ற கிரந்த எழுத்துடன் கூடிய பெயரே காணப்படுகிறது. 1959 -இல் வெளிவந்த 3-ஆம் பதிப்பில்தான் கிரந்த எழுத்து நீக்கப்பட்டு, ச என்ற தமிழ் எழுத்து காணப்படுகிறது.

5. பாரதிதாசன் 1943, 1974, 1978.
6. பாரதிதாசன் 1959
7. மணி. பெ. சு. 1983 : 151
8. மன்னர் மன்னன் 1985 : 317
9. பாரதிதாசன் 1943, 1978
10. மன்னர் மன்னன் 1985: 447, 448: பாரதிதாசன் எந்த நூலை மறைமலையடிகளுக்குப் படைத்தார் என்ற விவரம் இல்லை. "தமக்குப் புனைபெயரைச் சூட்டிக் கொண்ட 1908, 1909-ஆம் ஆண்டுகளில் வடமொழிப் பெயர்தான் வழக்கத்தில் இருந்தது" என்ற கருத்துச் சரியாக இல்லை. கவிஞர் பாரதிதாஸன் என்று புனை பெயர் சூட்டிக்கொண்டது 1922–ஆம் ஆண்டில்; அதாவது பாரதியார் மறைந்த 1921–ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் (மணி (1983 : 149).

11. பெருஞ்சித்திரனார் 1984 : 8

12. பாரதிதாசன் 1943, 1948.
பாரதிதாசன் 1964-இல் மறைந்துவிட்டார். ஆனால் இந்தக் கருத்து அவர் கூறியதாக 10 — 6 — 1967-இல் குயிலில் வெளியாகியுள்ளது. இதன் கால உண்மை விளங்கவில்லை

13. பாரதிதாசன் 1943, 1948

14. பெருஞ்சித்திரனார் 1984 : 27. பாரதிதாசன் இந்தியை எதிர்ப்பதிலாவது ஒரு பொருத்தம் உண்டு. ஆனால் வடமொழியையும பிராமணர்களையும் வெறுப்பதற்கு அவர் சார்ந்திருந்த அரசியலமைப்பே காரணமாகும்.

15. பாரதிதாசன் 1974

16. கைலாசபதி, க. 1977 ; 50 — 52

17. அழகரடிகள் 1977 ; 17 — 18

18. சுப்பிரமணிய பாரதியார், சி. 1958 : 214
"நெல்லையூர் சென்று அவ் ஊணர் கலைததிறன்
நேருமாறு எனை எந்தை பணித்தனன்."

19. Mahadevan, P. 1957 : 22

20. Hockett 1970;- 396 :- "In the 19th century a fashion of strong resistance to borrowed words developed in Germany, at least in educated and official circles; the consequence, as we shall see later, was not in the cessation of borrowing but an increase of borrowing of one kind rather than of others. At the opposite extreme, English and the Romance languages have long had the fashion of borrowing learned words from Latin and Greek; similarly, Japanese and Koreau from Chinese, Persian from Arabic, and Turkish from Arabic and Persian." Lehmann, Winfred P. 1975 : 217:-

As a further well-documented example we may cite Germany in the 18th century. At the courts French was the language of prestige, German that of everyday communication. Frederick the Great of Brussia considered German a language fit for peasants. He often wrote French; when he did, he avoided German importations. His German letters on the other hand abound with French loanwords".

21. Brook G. L. 1965 : 58:- "One of the Characteristic features of the Modern English period has been the enlargement of the vocabulary. At the time of the Renaissance, many English writers deliberately set out to enrich the language by borrowings words from Latin and Greek. But opinion in the 16th century was divided on the value of such borrowings, and some well-known English men, who were themselves classical scholars, protested against the introduction into English of so-called 'ink-horn terms' from Latin and Greek. Among those who protested were Sir John Cheke, first Regius Professor of Greek at Cambridge, and Roger Ascham...... The influence of Italian literature, together with the growing fondness shown by young Englishmen for travel in Italy, led to an increase in the number of Italian loan-words, and this influence in its turn met with some hostility from those who disliked the "Englishman Italianate", who brought back from his travels many Italian habits of speech, dress and manners".

22, Kamatchinathan, A. 1963 : 22

23. Baugh, A. C. 1970 : 394; Brock, G. L. 1965 : 208

24. Broke, G. L. 1965 : 58:- "Since the 16th century there has been a very considerable increase in the

number of languages from which English has adopted words. The chief resaon for these adoptions has been the increase of trade with all parts of the world......"

மேற்கோள் நூற்பட்டியல் (Bibliography)

அழகரடிகள் (1977) 'மறைமலையடிகள் வரலாற்று மாட்சி', சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

இராமசாமிப்புலவர், சு. அ (1970) சிறப்புப்பெயரகராதி'- சைவ... கழகம், சென்னை.

கைலாசபதி, க. (1977) பரிதிமாற்கலைஞர் - மறு மதிப்பீடு, பரிதிமாற்கலைஞர் நூற்றாண்டு விழா மலர், மதுரை

சுப்பிரமணியபாரதியார், சி. (1958) பாரதியார் கவிதைகள், சக்தி வெளியீடு, சென்னை.

திருநாவுக்கரசு. மறை. (1959) மறைமலையடிகள் வரலாறு, கழகம், சென்னை.

தொல்காப்பியம் (1945) 'தொல்காப்பியம்- சொல்லதிகாரம், பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார் ஆங்கில ஆக்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

நடராஜன், நாவலியூர் (1979) வடமொழி இலக்கிய வரலாறு', சென்னை

பவணந்தி	(1953)	நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை.
பாரதிதாஸன்	(1943)	இரணியன், குடியரசு பதிப்பகத்தார், ஈரோடு.
பாரதிதாசன்	(1959)	,,
பாரதிதாசன்	(1974)	பாரதிதாசன் கவிதைகள், பாரிநிலையம், சென்னை.
,,	(1978)	'இரணியன்', பூம்புகார்
பெருஞ்சித்திரனார்	(1984)	பாவேந்தர் பாரதி தாசன், தென்மொழிப் பதிப்பகம், சென்னை.
மணி, பெ. சு.	(1983)	'பாரதி புகழ் பரப்பிய முன்னோடிகள்' மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
மன்னர்மன்னன்	(1985)	'கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்' முத்துப் பதிப்பகம், விழுப்புரம்.
Broke, G. L.	(1965)	A History of the English Language, London.
Baugh, A. C.	(1970)	'A History of the English Language, Allied Publishers, Madras.
Bhushan, V. N.	(1935)	A poet professor principal P. Seshadri" Educational Review 41: 873-874
Earnest Weekly	(1952)	'The English Language,' London.

Hockett, C. F. (1970) 'A Course in Modern Linguistics, Macmillan Company, London.

Kamatchinathan, A (1963) 'The Place of Tirupukal in the History of Tamil Literature, (to appear)

Lehmann, Winfred, P. (1975) Historical Linguistics, Oxford, New Delhi.

Mahadevan, P, (1957) Subramania Bharati, Madras

Manuel, T. M. (1962) The 17th Century Critics and Biographers of Milton, Kerala University, Trivandrum.

Srinivasa Iyengar, K. R (1933) Principal P. Seshadri-A sketch, Educational Review Madras 39: 254-257

Seshadri, P. (1914) 'Bilhana' Srinivasa Vardachari & co, Madras

Sir Edwin Arnold (?) 'Chaura Panchasika',

*கறுப்பு என்ற சொல்லைக் கோபம் என்ற பொருளில் தாம் பயன்படுத்தியிருப்பதாக நான் நேரில் கேட்டபோது நூலாசிரியர் என்னிடம் சொன்னார். அதுமட்டுமல்ல; தமது தந்தையார் பாரதிதாசன் நல்ல சிவப்பு, அதாவது பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக இருக்கும் டாக்டர் வெங்கட சுப்பிரமணியன் அவர்கள் போன்று சிவந்த நிறமுடையவர் என்றும் சற்று அழுத்தமாகக்கூறினார். ஆனால் இதற்கு மாறாக திரு இரா. நெடுஞ்செழியன் கீழ்வருமாறு கூறியுள்ளார்:- "கறுப்புக்குயில் என்பது கருநிற "வண்ண" ரான புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரையும் 'நெருப்புக்குரல்' என்பது அவரது புரட்சிக் கருத்துக்களையும் ………… குறிப்பனவாகும்".- அணிந்துரை, 'கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல்'- பக்கம் IV

மொழியியல் 10: 1 & 2 (1987)

பாகூர்-ஊர்ப்பெயராய்வு*

மு. முருகேசன்

புதுவை மொழியியல் மற்றும் பண்பாட்டு
ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.

[சுருக்கம்:- இந்தக்கட்டுரை, புதுவை மாநிலத்தில் உள்ள பாகூர் என்ற ஊரின் பெயர்பற்றிய ஆராய்ச்சியைக் கல்வெட்டுக்கள், கிளை மொழியியற் கூறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்கிறது.]

புதுவை மாநிலத்தில் உள்ள தொன்மையான ஊர்களில் பாகூரும் ஒன்று இவ்வூர் புதுச்சேரி நகருக்குத் தென்மேற்கே சுமார் 20 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இன்று பாகூர் என்றழைக்கப்படும் இவ்வூர் பல்லவர், சோழர் காலங்களில் மிகவும் சீரும் சிறப்பும்மிக்க ஒரு பேரூராகவே விளங்கி இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மிகப்பழங்காலம் முதற் கொண்டு, இவ்வூர் மிகவும் குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியினைப் பெற்று ஏற்றமுடன் திகழ்ந்ததைக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பறைசாற்றுகின்றன.

இராஷ்டிரக்கூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணன் (கன்னரதேவன்), ஆதித்த கரிகாலன், முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன், இரண்டாம் இராசேந்திர சோழன், முதலாம் குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன் ஆகிய பேரரசர்களின் காலங்களில் வரையப்பட்ட 21 கல்வெட்டுகளும் காஞ்சிப்பல்லவனான நிருபதுங்கவர்மனின்

* 22. 2. 86 அன்று புதுவை இடப்பெயர் ஆய்வுக் கழகம் நடத்திய இடப்பெயர் ஆய்வுக் கருத்தரங்கில் படிக்கப்பட்டதன் திருந்திய வடிவம்.

செப்பேடுகளும் பாகூரின் முற்கால வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைசெய்கின்றன என்று புலவர் குப்புசாமி (1974) குறிப்பிடுகிறார்.[1]

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதற்கொண்டு பாகூர் பற்றிய கல்வெட்டுக்கள் நமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. அக்கல்வெட்டுக்கள் யாவும் பாகூரை, **வாகூர்** என்றே குறிப்பிடுகின்றன.

கி. பி. 858-ஆம் ஆண்டு பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனின் பட்டயம் இவ்வூரின் பெயரை வாகூர் என்றே குறிப்பிடுகிறது. இது இன்று நமக்குக் கிடைக்கும் மிகப்பழமையான சான்றாகும்.

> * "கொவிசய நிறுபதொங்கவருமற்கு யாண்டு எட்டாவது வெசாலிப் பெரரயன் விண்ணப்பத்தால்
> விடொலை விடுகு காடுபட்டித் தமிழ்ப் பெரரயன்
> ஆணத்தியாக அருவநாட்டுக் கீழ்வரி **வாகூர்நாட்டு**
> நாட்டார் காண்க"

என்பதாம்.

கன்னரதேவரின் 22-ஆவது ஆண்டுக் (கி.பி. 962) கல்வெட்டும்இரண்டாம் ஆதித்த சோழனின் 3-ஆவது ஆண்டுக் (கி.பி. 962) கல்வெட்டும் இவ்வூரை வாகூர் என்றே குறிப்பிடுகின்றன. அதனை,

"ஸ்ரீகன்னர தெவர்கியாண்டு 22-ஆவது **வாகூர்** ஸ்ரீமூலஸ்தானம் அம்ஸமுடைய திருக்கோவிலுடையார்"

என்பதாலும்

"ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டியன் தலைக்கொண்ட கொப்பரகெஸரி பன்மர்க்கு யாண்டு 3-ஆவது **வாகூர்** ஸ்ரீமூலஸ்தானத்து மஹாதெவர்க்கு"

என்பதாலும் அறியலாம்.

---

1. கல்வெட்டுச்சான்றுகள் அனைத்தும் புலவர் சு. குப்புசாமி அவர்களின் நூலிலிருநது எடுத்தாளப்பட்டுள்ளன.

மேற்குறித்த கல்வெட்டுச் சான்றுகளால் இவ்வூர் வாகூர் என்று அழைக்கப்பட்டது இனிது புலனாகும். பின்னர், முதலாம் இராசராச சோழனின் 25-ஆவது ஆண்டுக் (கி. பி. 1010) கல்வெட்டுமுதற்கொண்டு இவ்வூர், கல்வெட்டுகளில் அழகிய சோழச் சதுர்வேதி மங்கலம் என்று குறிக்கப்படுகிறது. அதனை

ஸ்ரீகொ இராஜராஜ கெசரி பந்தமரான ஸ்ரீஇராஜராஜ தெவற்கு யாண்டு 25-ஆவது சயங்கொண்ட சொழ மண்டலத்து வாகூரான ஸ்ரீஅழகிய சொழச்சதுப்பெதி மங்கலத்து ஸ்ரீமூலஸ்தானமுடைய மஹாதெவற்கு"

என்பதாலும்,

முதலாம் இராசேந்திர சோழனின் 17-ஆவது ஆண்டுக் (கி. பி. 1029) கல்வெட்டு

"கொப்பர கெஸரி வந்மரான உடையார் ஸ்ரீரா ஜெந்திர சொழ தெவர்க்கு யாண்டு 17-ஆவது ஜெயங் கொண்ட சொழமண்டலத்து பவித்திரமாணிக்க வள நாட்டு வாகூரான அழகிய சொழ சதுவேதி மங்கலத்து உடையார் ஸ்ரீமூலஸ்தானுடைய மஹாதெவற்கு"

என்பதாலும்

இரண்டாம் இராசேந்திர சோழனின் 10-ஆவது ஆண்டு (கி. பி. 1061) க் கல்வெட்டு

"கொப்பர கெஸரிபந்தரான உடையார் ஸ்ரீராஜெந்திர தெவற்கு யாண்டு 10-வது ராஜேந்திர சொழ வள நாட்டு பவித்திரமாணிக்க வளநாட்டு வாகூரான அழகியச் சொழச் சருப்பெதி மங்கலத்து மூலஸ்தாநமுடையார்"

என்பதாலும்,

முதலாம் குலோத்துங்க சோழனின் 22-ஆவது ஆண்டு (கி. பி. 1092) க் கல்வெட்டு

"நடுவில் நாடான ராஜெந்திர வளநாட்டுப் பவித்திர மாணிக்க வளநாட்டு வாகூர் நாட்டு வாகூரான அழகிய

சொழ சருப்பெதி மங்கலத்து நின்றும் விருதராஜ பயங்கர வள்நாட்டு மெற்கா நாட்டொயிறிந்து''

என்பதாலும்,

முதலாம் குலோத்துங்க சோழனின் 35-ஆவது ஆண்டு கி. பி. 1105) க் கல்வெட்டு

''கொராஜ கெசரி வந்தமராக சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலொதத்துங்க சொழ தெவர்க்கு யாண்டு 35-ஆவது கங்கைகொண்ட சொழ வளநாட்டு வாகூரான அழகிய சொழச் சதுப்பெதி மங்கலத்து மஹாஸபையொம்''

என்பதாலும்,

விக்கிரம சோழனின் 5-ஆவது ஆண்டுக் (கி. பி. 1123) கல்வெட்டு ''கொராஜகெஸரி பந்மராந திரிபுவந சக்கரவர்த்திகள் ஸ்ரீவிகிரம சொழ தெவர்க்கு யாண்டு அஞ்சாவது கங்கைகொண்ட வளநாட்டு வாகூராக அழகிய சொழக் சதுர்பெதி மங்கலத்து உடையார் ஸ்ரீமூலஸ் தா(ன)ம் உள்ளிட்டோம்''

என்பதாலும்,

வாகூருக்கு அழகிய சோழச் சதுர்வேதி மங்கலம் என்ற ஒரு பெயர் பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் வழங்கியது இனிது புலனாகிறது.

பல்லவ மன்னனின் செப்பேடுகள் இரண்டில் **வாகூர்** என்பது **பாகூர்** என்று திரிந்து வழங்குவதைப் புலவர் குப்புசாமி (1974) குறிப்பிடுகிறார். பல்லவர்கள் காலத்தில் வாகூர் அல்லது பாகூர் ஒன்று அழைக்கப்பட்ட இவ்வூர், சோழர்கள் காலத்தில் அழகிய சோழ சதுர்வேதி மங்கலம் என்ற பெயருடன் விளங்கியதும் தெளிவாகிறது. நான்கு வேதங்களையும் ஓதும் பிராமணர்கள் குடியிருந்த பகுதியே சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டது என்றும், அப்பகுதியே வட்டாரக்கல்விக் கழகங்களாகச் செயல்பட்டுக் கல்வியறிவையளித்தன என்றும், சதுர்வேதி மங்கலம் என்னும் பின்னொட்டுக் குறித்து ஆள

வந்தார், ஆர் (1983) குறிப்பிடுகிறார். சதுர்வேதிமங்கலம் என்பது பல ஊர்களின் பெயர்களுக்குப் பின்னொட்டாக அமைந்து வருகிறது. எடுத்துக் காட்டாகப் புதுவை மாநிலத்தில் இன்று 'திருபுவனை' என்று வழங்கும் ஊர், திருபுவனமாதேவி சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பட்டதாக அறிகிறோம்.

கல்வெட்டு ஊர்பெயர்களில் காணப்படும் 137 பின் னொட்டுகளில் தொகைப் பொதுக்கூறாக அமைந்த சதுர்வேதி மங்கலம் என்பதும் ஒன்று. நாற்பதுக்கும் மேற்பட்ட ஊரின் பின்னொட்டுகளில் தொகைப்பொதுக் கூறாகச் சதுர்வேதி மங்கலம் அமைந்துள்ளது என்பதனை ஆளவந்தார் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக

(1) அமபலத்தாடு சதுர்வேதி மங்கலம்.

(2) இராசசுந்தரி சதுர்வேதி மங்கலம்.

(3) இராஜாராஜ சதுர்வேதி மங்கலம்

(4) செம்பியன் மாதேவி சதுர்வேதி மங்கலம்.

இவற்றைக் கொள்ளலாம்.

அழகிய சோழ என்னும் முன்னொட்டு சிறப்புக்கூறாக சதுர்வேதி மங்கலம் என்னும் தொகைப் பொதுக்கூறுடன் இணைந்து அழகிய சோழ சதுர்வேதிமங்கலம் என்று வழங்கிற்று. அழகிய என்னும் சிறப்புக் கூறு இவ்வூரைத் தவிர்த்து கல்வெட்டுக்களில் அழகநழகச் சதுர்வேதி மங்கலம், அழகியச் சொழ நல்லூர், அழகிய சொழபுரம், அழகிய பாண்டியபுரம் ஆகிய ஊர்களில் அமைகிறது. அழகிய சோழ சதுர்வேதி மங்கலம் என்று வழங்கப்பட்ட ஊர் சோழவள நாட்டில் வாகூர் ஒன்று மட்டும்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. அன்றும் இன்றும் சீருடனும் சிறப்புடனும் திகழும் சிவன் கோவிலும், அன்றிருந்த வடமொழிக்கல்லூரியும் இவ்வூருக்கு அருகே உள்ள ஏரியும் இவ்வூரைச் சோழவள நாட்டிலேயே இயற்கை எழில்மிகு நகராக விளங்க வைத்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. இக்காரணங்களால் வாகூ

ருக்கு அழகிய சோழ என்பது சிறப்புக்கூறாக அமைந்ததாகக் கொள்ளலாம். ஊர் என்னும் விகுதியைப் பொதுக்கூறாகக் கொண்ட வாகூர் என்பதிலும் 'வாகு' என்னும் சிறப்புக்கூறு 'அழகு' என்னும் பொருள்படும். (a) 1.Beauty அழகு (சூடா.) வாகாரிபமினாள் (திருப்பு 135) -Tamil Lexicon P 3574 (1936) பாகு என்ற சொல்லுககும் அழகு என்று பொருள் உண்டு. எ. கா. பாத 'Beauty', 'Charm'; அழகு பாகாரிஞ்சிப் பொன் மதில் (கம்பரா, ஊர்தே. 82)— (சி. ஆ-ர்.) 'வாகு' + ஊர் வாகூர் என்பது அழகிய ஊர், என்று பொருள்தரும். இயற்கை அழகு நிரம்பப் பெற்றுள்ளமையினால் வாகூர் என்பது ஒரு காரணப்பெயராக விளங்கியதாகவே கொள்ளலாம். ஊர் என்னும் பெயரைப் பொதுக்கூறாகக் கொண்ட ஊர்கள் புதுவை மாநிலத்தில் 37 உள்ளன. அவற்றுள் 18 புதுவைப் பகுதிகளிலும 19 காரைப் பகுதிகளிலும் உள்ளன.

ஊர் பின்னொட்டாக வரும் ஊர்ப்பெயர்களில் சில:-

காரைக்கால்பகுதி	புதுவைப்பகுதி
(1) பச்சூர்	(1) திருக்கனூர்
(2) அம்பகரத்தூர்	(2) வில்லியனூர்
(3) கண்ணாப்பூர்	(3) கரசூர்
(4) வாஞ்வூர்	(4) வாதானூர்
(5) ஃஉசுப்பூர்	(5) நல்லூர்
(6) அண்டூர்	(6) கரையாம்புத்தூர்

அனைத்துலகத்திராவிட மொழியியற் கழகத்தின் புதுவை மையம், புதுவை மாநிலத்தின் இருதமிழ்ப்பகுதிகளாகிய புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட கிளைமொழி ஆய்வு (Dialect Survey) பாகூரின் ஊர்ப்பெயர் குறித்த கிளைமொழி வேறுபாடுகளைக் (Dialect Variation) கொண்டதாக அமைந்துள்ளது.

இப்பகுதிகளில் முறையான ஆய்வு தொடங்கும் முன்னர் ஒரு முன்னோடி ஆய்வு (Pilot Survey) நிகழ்த்தப்பட்டது. இம் முன்னோடி ஆய்வு எந்த ஓர் இனத்தவரையும் அடிப்படையாகக்

கொண்டு நிகழ்த்தப்படவில்லை. ஆனால் முறையான ஆய்வு இவ்விருபகுதிகளிலும் மிகுந்து காணப்படும் வன்னிய இனத்தாரிடையே (கவுண்டர், படையாட்சி) மேற்கொள்ளப்பட்டது. பாகூரின் ஊர்ப்பெயர் புதுவைப் பகுதியில் மட்டுமே திரட்டப்பட்டது. காரைக்கால் பகுதியில் உளளவர்களுக்குப் பாகூர் பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால, இவ்வூர்ப்பெயர் பற்றிய வினா காரைக்கால் பகுதித் தகவலாளிகளிடம் கேட்கப்படவில்லை. மேலும் புதுச்சேரிப் பகுதியிலும் பாகூர்க் கொம்மியூனுக்குத் தொலைவில் உள்ள கிராமங்களில் இவ்வூரின் பெயர்களைத் எளிதாகத் திரட்ட இயலவில்லை. தகவலாளிகள் இவ்வூரின் பெயரை அறிந்திலர் என்று கொள்ளவும் முடியாது. எங்களுடைய களஆய்வின்போது தகவலாளிகளிடமிருந்து இவ்வூரின் பெயர்கள் எளிதாக வெளிப்படவில்லை என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது.

இவ்வாய்வின்போது திரட்டப்பட்ட கிளைமொழி வேறுபாடுகள் பத்தும் முறையே (இங்கே அடைப்பில் கொடுக்கப்பட்டுள்ள எண், தகவலாளிகளின் எண்ணிகை)

1.	பாக்கூரு	(1)	6.	வாவுர்	(1)
2.	பாகுரு	(4)	7.	பாவுரு	(15)
3.	பாகூரு	(36)	8.	பாவூரு	(12)
4.	பாகூர்	(2)	9.	வாவுரு	(39)
5.	வாகூர்	(4)	10.	வாவூரு	(10)

என்பனவாகும்.

களஆய்வின்போது வாகூர் என்பதன் திரிபுகள் மட்டுமே கிடைத்தனவே ஒழிய, கல்வெட்டுகளில் மிகுந்து காணப்படுகிற இவ்வூரின் மற்றொரு பெயரான அழகிய சோழ சதுர்வேதி மங்கலம் என்பதும், அதன் திரிபுகளும் இவ்வாய்வில் கிடைக்கப் பெறாததால், பதினொன்றாம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் பெரிதும் பயன்பட்டு வந்த இப்பெயர் இன்று பாமர மக்களின் பேச்சில் இல்லை என்பது இக்கிளைமொழி ஆய்வின் மூலம் தெளிவாகிறது.

அழகிய சோழ சதுர்வேதி மங்கலம் என்பது ஒரு தகுதி வழக்காகவே **(Formal Style)** இருந்து கல்வெட்டுகளிலும்

செப்பேடுகளிலும் அரசர்களால் மட்டுமே பயன் படுத்தப்பட்டு வந்து இருக்கலாம் என்றும், அது பாமர மக்களின் பொதுப்பேச்சு வழக்கினை எட்டவில்லை என்றும் எண்ணத் தோன்றுகிறது. வாகூர் என்பது மட்டும் மக்களின் பேச்சு வழக்கினைக் கண்டு மேற்கூறிய மாற்றங்களுடன் விளங்குகிறது என்பது இனிது புலனாகிறது.

கல்வெட்டுக்களில் மிகுந்து காணப்படுகின்ற வாகூர் என்ற வடிவத்தினை அடிப்படைப் பொதுமையாகக் கொண்டு இப் பகுதியில் கிடைக்கப்பெற்ற ஏனைய கிளைமொழி வேறுபாடு களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை மொழியியல் அடிப்படையில் விளக்கலாம். திரட்டப்பட்ட பத்து வேறுபாடுகளில் இரண்டு வேறுபாடுகள் **வாகூர் (4) பாகூர் (2)** என்பன மட்டுமே இலக்கிய வழக்கத்தின் வடிவங்களைப் பெற்றுள்ளன. மீதமுள்ள எட்டுக் கிளைமொழி வேறுபாடுகளும் சிற்சில ஒலியன்களின் மாற்றம் பெற்று ஒலிக்கக் காண்கிறோம். இவ்வொலியின் மாற் றங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையே

(1) சொல்லீற்றுமெய் உயிர்பெறுதல்
(2) நெடில் குறிலாகத் திரிதல்
(3) மெய் ஒலியன்களின் மாற்றங்கள் என்பனவாம்.

(1) சொல்லீற்றில் மெய்வரின் மெய்யினை அடுத்து உயிர் தோன்றும் என்பது (பொதுப்) பேச்சுத் தமிழின் பொது வானவிதி.* பேச்சுமொழியில், வாகூர் என்பதின் ஈற்றில் உள்ள ரகர மெய் உகர உயிர் ஏற்று ஒலிக்கிறது. கிடைக்கப்பெற்றுள்ள வடிவங்கள பெரும்பான்மையும இவ்வடித்தினை உடையனவாக வே உள்ளன. எடுத்துக்காட்டு

(1)	பாக்கூரு	(1)	5.	பாவூரு (12)
(2)	பாகுரு	(4)	6.	வாவுரு (39)
(3)	பாகூரு	(36)	7.	வாவூரு (10)
(4)	பாவுரு	(15)		

*தெலுங்கு மொழியில் இது இலக்கிய வழக்குப் பெற்றுவிட்டது. (சிறப்பாசிரியர்).

(பொதுப்) பேச்சுத் தமிழில் இவ்வொலிமாற்றம் இயல் பாகவே நிகழக்கூடிய ஒன்றாகும். எடுத்துக்காட்டாக

மோர் > மோரு
தயிர் > தயிரு
பார் > பாரு
பேர் > பேரு

ஆகியவற்றைக் காணலாம்.

வாகூர் என்ற சொல்லின் இரண்டாவது அசையில் உள்ள உகரம் குறிலாகத் திரிந்து ஒலிக்கிறது. இம்மாற்றம் இப்பகுதி முழுமையும் காணப்படுகிறது.

பாகுரு (4), வாவுர் (1), பாவுரு (15), வாவுரு (39), ஆகிய நான்கு கிளைமொழி வேறுபாடுகளில் இவ்வொலி மாற்றம் நிகழப்பெற்று இருக்கிறது. வேறுசில சொற்களிலும் இவ்வொலி மாற்றம் இப்பகுதியில் காணப்படுகிறது என்பதனை இக்கிளை மொழி ஆய்வு எடுத்துக்காட்டுகிறது. உதாரணமாக

1. மாங்கல்யம் > மங்குலியம்
2. மகசூல் > மாசுல்
3. தாம்பூலம் > தாம்புலம்

ஆகியவற்றைக் காணலாம்.

மெய்யொலிகளின் மாற்றங்கள்:-

திரட்டப்பட்ட கிளைமொழி வேறுபாடுகளில் மூன்று வகையான மெய்யொலியன்களின் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன,

(1) வகர பகரத் திரிபு
(2) மெய்யிணை ஏற்றல்
(3) ககரம் வகரமாகத் திரிதல்

என்பனவாம் அவை.

பாக்கூரு, பாகுரு, பாகூரு, பாகூர், பாவுரு, பாவூரு ஆகிய வேறுபாடுகளில் வாகூர் என்பதில் சொல்லின் முதலில் உள்ள வகரம் பகரமாகத் திரிந்து வழங்குகிறது. இவ்வாறு வகரம்

பாகூர் 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் வாகூர் என வழங்கியதைக் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. பின்னர் இவ்வூரை அழகிய சோழச் சதுர்வேதிமங்கலம் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அழகிய சோழச் சதுர்வேதிமங்கலப் என்பது தகுதி வழக்காகவே வழங்க, பாமர மக்கள் இப்பெயரைக் காலங் காலமாக தங்கள் வழக்கில் கொள்ளவில்லை என்பது இவ்வாய்வின் மூலம் பெறப்படுகிறது. 'வாகு' என்னும் சிறப்புக் கூற்றைக் கொண்ட 'வாகூர்' என்பதே இதன தொன்மை வடிவம் என்பதும் பாகூர் < (பாகு + ஊர்) என்பதில் 'பாகு' என்பது வகரம் பகர மாற்றத்தின் விளைவு என்பது, இம்மாற்றம் பல்லவர் காலததிலிருந்தே வழக்கில் உள்ளது என்பதும் இவ்வாய்வின் மூலம் பெறப்படுகிறது. ஊர்ப்பெயராய்வினை, கிளைமொழி ஆய்வினைப் போன்று பல தகவலாளிகளிடமிருந்து பெறப்பட்ட செய்தி தரவுகளைக் கொண்டு ஆராயும்போது, ஊர்ப் பெயர்களானவை இலக்கியங்கள், கல்வெட்டுகள் இவைகளில் காணப்படுகிறது. பெயர்களிலிருந்து எவ்வகையில் மொழியியல் மாற்றங்களைப் பெற்றுப் பாமர மக்களின் பேச்சு வழக்கில் வழங்குகின்றன என்பதை அறிய முடிகிறது,

துணை நூல்கள்

ஆளவந்தார். ஆர், 1983. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

குப்புசாமி, சு. புலவர். 1974. கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள், புதுவை வரலாற்றுச் சங்க வெளியீடு. புதுவை.

புதுவை- காரைப் பகுதிகளின் கிளைமொழி ஆய்வின் குறிப்பேடுகள் (வெளியிடப்படாதவை) புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுவை.

மொழியியல் 10: 3 & 4 (1987)

"உம்" எனும் இடைச்சொல்:

எஸ். ஆரோக்கியநாதன்

புதுவை மையப் பல்கலைக் கழகம்.

[சுருக்கம்: இக்கட்டுரை இடைச்சொல் தோன்றும் முறையைக்கூறி, "உம்" என்னும் இடைச்சொல்பற்றி விரிவாக ஆராய்கிறது. இடைச் சொற்கள் பெயர், மற்றும் வினையோடு மட்டும் அல்லாமல், பெயரடை, பெயர்த் தொடர், வினையடை, வினைத்தொடர் ஆகியவற்றோடும் வருகின்றன என்பதையும் காட்டுகிறது. மற்றும் 'கூட' என்னும் இடைச்சொல்லிற்கும், 'உம்' என்னும் இடைச்சொல்லிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டையும் காட்டுகிறது. அதோடு சில வழக்குத் தொடர்களில் உம் என்னும் இடைச்சொல் பயின்று வருவதைப் பற்றியும் விளக்குகிறது.]

இடைச்சொல் என்பது பெயர் வினையிடத்துப் பிறக்கும் என்றும் அவைகளைச் சார்ந்து நின்று பொருள் உணர்த்தும் என்றும் பண்டைத் தமிழ் இலக்கணங்கள் கூறுகின்றன. தமக்கு இயல்பின்றிப் பெயரோடும் வினையோடும் நடைபெற்றியலும் இடைச்சொற்களில் 'உம்' எனும் இடைச் சொல் தொல்காப்பியர் காட்டும் ஏனைய இடைச்சொற்களைக் காட்டிலும் கூடுதலான பொருளில் இடம் பெறுகிறது. எச்சம், சிறப்பு ,ஐயம் எதிர்மறை முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் எனும் எட்டுப் பொருள்கள் உம்மிற்கு உரியதாகக் காட்டப்படுகின்றன. பெயரோடும் வினையோடும் சேர்ந்து வரும்போது மேற்கூறிய எட்டு நிலைகளில் பொருள் நீட்சி (**semantic extension**) பெற்றுத் திகழலாம் என்று தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். அத்துடன் எண்ணுப் பெயர்களுடன் வரும்போது உம் எனும் இடைச்சொல், தான் சார்ந்து வருகின்ற பெயர், வினைச்சொற்களுக்கு ஏற்பவும்

இடம்பெறும் வாக்கியத்தின் தொடரமைப்புக்கு ஏற்பவும் எட்டு வகைப் பொருள்களில் வருவதாக தொல்காப்பியர் அமைத்துள்ளார் என்பதில் ஐயமில்லை. ஆனால் உம் என்பது பல்வேறு பொருள்களில் வருகின்ற ஒரே சொல்லா அல்லது ஒரு பொருள் கொண்ட சொல் ஒன்று தனது பயன்பாட்டின் காரணமாகப் பொருள் நீட்சி பெற்றுப் பல்வேறு பொருள்களில் விரிவடைந்து இடம்பெறுகிறதா எனும் ஆய்வு நம் சிந்தனைக்குரியது. இதற்கு மேலாக, உம் என வரும் விகுதிகள் அனைத்துமே இடைச்சொல்லாக அமையுமா என்பதும் நம் ஆய்வுக்குரியதாகும். தொல்காப்பியர் கூற்றுப்படி உம் எனும் இடைச்சொல் எச்சமாகவும் எதிர்மறையாகவும் வரலாம். ஆயினும் இரண்டும் தம்முள் மயங்கி ஒரே வாக்கியத்தில் இடம்பெறுவதில்லை.

1. அ. அவன் வருவதற்கு உரியன்.
   ஆ. சோழன் வரலுரியன்.

என்பன போன்ற வாக்கியங்கள் எதிர்மறையாகவும்,

2. அ. அரசனும் வந்தான்.
   ஆ. சாத்தானும் வந்தான்.

என்பன போன்ற வாக்கியங்கள் எச்சப்பொருளிலும் வருவதாக கூறப்படுகின்றன. ஆனால் கூர்ந்து நோக்கினால் இதில் சற்று வேறுபாடிருப்பதை உணரலாம். உம் வினையுடன் இடம்பெறும்போது மட்டும் எச்சம், எதிர்மறை ஆகிய இருபொருள்களும் வருகின்றன.

'ஆசிரியர் திட்டவும் செய்வார்' எனும் வாக்கியத்திற்கு ஆசிரியர் திட்டவும் அழைக்கவும் செய்வார் என்று எச்சப் பொருளும் அமையும். அத்துடன் 'ஆசிரியர் திட்டவும் செய்வார் திட்டாமல் இருக்கவும் செய்வார்' எனும் எதிர்மறைப் பொருளிலும் இதனை விவரிக்கலாம். பெயர்ச்சொல்லுடன் உம்மை இடம்பெறும்போது எச்சமாக மட்டுமே அமைகிறது.

3. அ. அரசனும் வந்தான் (அரசியும் வந்தாள்).
   ஆ. அரசனும் வரவில்லை (அரசியும் வரவில்லை).
   இ. அரசனும் வந்தான் (அரசியும் வரவில்லை).

இங்கு 3 (ஆ) எனும் வாக்கியத்தில் உள்ள எதிர்மறை இரண்டு வாக்கியங்களுக்கும் பொதுவாக அமைந்திருக்கிறது. மேலும் பெயரோடு அமைந்த இடைச்சொல்லிற்கும் வினையோடு அமைந்த எதிர்மறைக்கும் எவ்வித நேரடித் தொடர்பும் இல்லை இதனால், பெயர்ச்சொல்லில் இடம்பெறும் 'உம்' மைக்குத் தனியே எதிர்மறைப்பொருள் இருப்பதாகக் கருத வாய்ப்பில்லை.

அது ஒன்றே உம்மை சிறப்புப்பொருளில் வருவதாகக் கூறி, அதில் உயர்வுச் சிறப்பு இழிவுச் சிறப்பு என வகுத்திருப்பது மிகச் சிறப்பாகும். ஆயினும் உம்மைக்கும் இச்சிறப்பு தனியாக உண்டா என்பது கேள்விக்குறியாகும்.

4. அ. இந்தத் திட்டத்தை அரசனும் விரும்புவான்.
   ஆ. இந்தத் திட்டத்தை அறிவிலியும் விரும்ப மாட்டான்.

மேற்கூறிய வாக்கியங்களில் (4, அ, ஆ) அரசனுடன் வரும் உம்மை உயர்வு சிறப்பாகவும், அறிவிலியுடன் வரும் உம்மை இழிவு சிறப்பாகவும் கருதப்படுகிறது. இச்சிறப்புப் பண்பு 'அரசன்' அறிவிலி, எனும் சொற்களால் பெறப்படுகின்றன என்பதை நாமறிவோம்.

4. இ. எனக்குக் கார்ல் மார்க்ஸையும் பிடிக்கும், கர்த்தர் ஏசுவையும் பிடிக்கும்.

மேற்கூறிய இவ்வாக்கியத்தில் பேசுவோன் யார் என்பதைப் பொறுத்து, எது உயர்வுச் சிறப்பு 'உம்மை', எது இழிவுச் சிறப்பு உம்மை என்பது அமைகிறது. அவ்வாறாயின் இச்சிறப்பு வகைபாடு மிகவும் மேலோட்டமானவை (arbitrary) என்பதில் ஐயமில்லை. மேற்கூறிய எச்சம் எதிர்மறை எனும் வேறுபாட்டிலும் உயர்வுச் சிறப்பு மற்றும் இழிவுச் சிறப்பு எனும் வகைப்பாட்டிலும் அடிப்படை நிலையில் உம்மை கூட்டுப்பொருளில் இடம் பெறுவதை நாம் உணரலாம். உம் எச்சொல்லுடன் இணைந்து வருகிறதோ அதனோடு பொருள் நிலையில் தொடர்புடைய இன்னும் 'சிலவும்' எனும் பொருள் தொக்கி நிற்குமாறு உம் பொருளுணர்த்துகிறது.

5. அ. அவன் காலையில் பாடத்தையும் படித்தான்.
ஆ. அவன் காலையில் நாள்இதழ்களையும் படித்தான்.
இ. அவன் காலையில் பாடத்தையும் நாளிதழ்களையும் படித்தான்.

6. அ. அவன் காலையில் பாடத்தையும் படித்தான். நண்பர்களுடன் அரட்டையும் அடித்தான்.
*ஆ. அவன் காலையில் பாடத்தையும் நண்பர்களுடன் அரட்டையும் அடித்தான் / படித்தான்.

5 (அ) எனும் வாக்கியத்தில் படி எனும் வினைக்கு செயப்படு பொருளாக அமைதற்குரிய வேறு சிலவற்றையும் 5 (ஆ) வாக்கியத்தில் உள்ளது போல உய்த்துணர இயலும். ஆனால் 6 (அ) எனும் வாக்கியத்தில் அவ்வாறு உய்த்துணர வாய்ப்பில்லை. செயல் எனும் விரிவான நிலை கொண்ட உரைக்கோவை அமைப்பில் 6 (அ) வாக்கியங்கள் இணைக்கலாம். ஆனால், ஒரு வினையின் கீழ் வாக்கிய நிலையில் இணைப்பது எளிதில்லை. இதனால் உம் எனும் இடைச்சொல் கூட்டுப் பொருளையே அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளதை உணரலாம்.

எண்ணுப்பெயர்கள் ஏறுமுக நிலையில் அடுக்கிவரும் போது ஐயப்பொருளைத் தரும். ஆனால், தெரிநிலைப் பொருளைத் தருவதில்லை. சான்றுகள்:-

7. அ. நீ நான்கு ஐந்து நாட்களில் திரும்பி வந்துவிடுவாயா?
ஆ. இந்த நிகழ்ச்சி பத்து பதினைந்து நிமிடங்களில் முடிவடையும்.
இ. அவருக்கு முப்பது நாற்பது வயதிருக்கும்.

வாக்கியத்தில் எண்ணுப் பெயர்கள் இறங்கு முக நிலையில் அமைவதில்லை.

7. *ஈ. நான் பத்து ஒன்பது நாட்களில் திரும்பி வந்து விடுவேன்.

*உ. இந்த நிகழ்ச்சி பதினைந்து பத்து நிமிடங்களில் முடிவடையும்.

மேலும் எண்ணுப் பெயர்கள் ஏறுமுக மற்றும் இறங்குமுக மாகிய இருநிலைகளிலும் தேற்றப் பொருளைத்தருவதில்லை, அவ்வாறிருக்கையில் 'பத்தும் எட்டும் உள' எனும் வாக்கியம் இன்றைய நிலையில் உம் எனும் இடைச்சொல் தேற்ற நிலையில் வருவதற்குரிய சானறாகாது.

இடைச்சொற்கள் பெயர் இடத்து வரும் என்றாலும் பெயர், பெயரடை, பெயர்த்தொடர், இவற்றோடும் வினை, வினையடை, வினைத்தொடர் இவற்றோடும் இடைச்சொற்கள் இடம் பெறுவதாக விரித்துக் கூறலாம்.

8. நேற்று ⇑ மாலை ⇑ மாலதி ⇑ ராமனுடன் ⇑ கோவிலுக்குப் ⇑ போனாள்.

கூட எனும் இடைச்சொல்லும் உம் போன்று கூட்டுப் பொருளில் வழங்கப்படுகிறது. ஆயினும் இவையிரண்டும் வெவ்வேறாகச் செயல்படுகின்றன. பெயர் சொற்களையோ வினைச்சொற்களையோ கூட்டிச் சொல்லும் போது 'கூட' வருவதில்லை. மாறாக உம் மட்டுமே இடம் பெறுகிறது.

9. அ. ராமனும் ரவியும் ரங்கனும் ஊருக்குப் போனார்கள்.

*ஆ. ராமன்கூட ரவிகூட ரங்கன்கூட ஊருக்குப் போனார்கள்.

10. அ. நேற்றுக் கலையரங்கில் சீதை ஆடவும் பாடவும் நடிக்கவும் செய்தாள்.

*ஆ. நேற்றுக் கலையரங்கில் சீதை ஆடகூட பாடகூட நடிக்கக்கூட செய்தாள்.

எதிர்மறை வாக்கியங்களில் இடம்பெறும் வினாச்சொற்களுடன் உம் எனும் இடைச்சொல் வருவதுபோல கூட எனும் இடைச்சொல் வருவதில்லை.

11. அ. இங்கே யாரும் வருவதில்லை.

*ஆ. இங்கே யார்கூட வருவதில்லை.

எல்லா எனும் பெயரடையோடுவரும் பெயர்சொற்கள் உம்மைப் பெற்று வரும். ஆனால், கூட அவ்வாறு வருவதில்லை.

12. அ. எல்லாக் கூட்டங்களிலும் அவர் கலந்து கொண்டார்.

*ஆ. எல்லா கூட்டங்களில் கூட அவர் கலந்து கொண்டார்.

வாக்கியங்களில் ஒரு தடவை மட்டும் இடம் பெறும்போது, பொது நிலையில் கூட எனும் இடைச்சொல் உம் போன்று கூட்டுப்பொருளில் (additive sense) இடம் பெறுகிறது. ஆயினும் கூட எனும் இடைச்சொல் சிறப்பித்துக் காட்டும் பண்புடன் (focusive function) விளங்குகிறது.

13. அ. நேற்று அவரை அமைச்சரும் பாராட்டினார்.

ஆ. நேற்று அவரை அமைச்சர்கூடப் பாராட்டினார்.

மேற்கூறிய இருவாக்கியங்களில் முதல் வாக்கியம் (13, அ)' பலர் அவரைப் பாராட்டினார்கள் அமைச்சரும் பாராட்டினார் எனும் கூட்டுப்பொருளில் அமைந்துள்ளது. இரண்டாவது வாக்கியம் அமைச்சரின் பாராட்டுதலை மட்டும் ஏனையவர்களிடமிருந்து பிரித்து, பின் சிறப்பித்துக் காட்டுவதை உணரலாம். கூட, உம் எனும் இரண்டு இடைச்சொற்களும் முன்னும் பின்னும் மாறிமாறி இணைந்து வருவதுண்டு. இதனால் பொருள் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. தாம் இணைந்துள்ள சொல்லைச் சிறப்பித்துக் கூட்டுப்பொருளில் பொருள் பெற வைக்கிறது.

14. அ. நேற்று அவரும்கூட இதுபற்றிக் கேள்விப்பட்டார்.

ஆ. நான்கூடவும் இதுபற்றிக் கேள்விப்பட்டேன்.

எதிர்மறை வாக்கியங்களில் இடம் பெறுகிற வினாச் சொற்களுடன் வரும்போதும், ஒன்று எனும் எண்ணும் பெயருடன் இடம் பெறும் போதும் உம் எனும் இடைச்சொல் முற்றுப் பொருளில் அமைவதை தொல்காப்பியம் கூறுகிறது.

14. அ. யாருக்கும் அவனை ரொம்பப் பிடிக்கும்.
  ஆ. நீ எங்கேயும் போகக்கூடாது.
  இ. காலையில் நான் ஒன்றும் சாப்பிடவில்லை.

காலம் உணர்த்தும் பெயரடைகள் சிலவற்றுடன் வரும்போது அச்சொல் அழுத்தம் பெறுவதை நாம் உணரலாம்.

15. அ. தினம் நான் கோவிலுக்குச் சென்று வருகிறேன்.
  ஆ. தினமும் நான் கோவிலுக்குச் சென்று வருகிறேன்.

வரை என்னும் இடைச்சொல்லுடன் உம் இணைந்து வரலாம். ஆயினும் 'வரை' என்பதற்கும் 'வரைக்கும்' என்பதற்கும் பொருளழுத்தம் உள்ளதாக கருதலாமேயன்றி தகுந்த ஆதாரங்களைக் காட்ட இயலாது.

16. அ. அவர் சரியாக நான்கு மணி { வரை / வரைக்கும் } உங்களுக்காகக் காத்திருந்தார்.
  ஆ. உங்களைத் தேடி நான் வீடு { வரைப் / வரைக்கும் } போய் விட்டு வந்தேன்.

சில வழக்குத் தொடர்களில் உம் இடம் பெறுகின்றது. உம்மை இல்லாமல் இவ்வழக்குத் தொடர்கள் பொருளின்றிப் போய் விடும். மேலும் இவ்வழக்குத் தொடர்களில் இடம் பெறும் உம் எனும் இடைச்சொல் கூட்டுப்பொருளை உணர்த்துவதாகவும் கருதமுடியாது. சில வழக்குத் தொடர்கள் இங்கே சான்றாகத் தரப்பட்டுள்ளன.

17. புத்தகமும் கையுமாக, குடியும் குடித்தனமாக, வாயும் வயிறுமாக, கையும் கரண்டியுமாக, காதும் காதும் வைத்தது போல், போயும் போயும், சொல்றதையும், சொல்லிட்டு.

பெயரெச்சத் தொடரில் உம் எனும் விகுதி இடம் பெறுகிறது. இது எதிர்காலம் காட்டும் விகுதியென்பதை நாம் அறிவோம்.

18. அ. படிக்கும் பையன்.
ஆ. பேசும் கிளி.
இ. ஓடும் குதிரை.

கட்டளை வாக்கியத்தில் உம் எனும் விகுதி கட்டளை விகுதியாக இடம் பெறுகிறது.

19. அ. என்னுடைய பேராசிரியர் அண்ணாமலை அவர்களுக்கு என் வணக்கங்களைக் கூறவும்.
ஆ. நீங்கள் நாளைக்கு அவசியம் என் வீட்டுக்கு வரவும்.

இறந்தகால வினையெச்சத்துடன் உம் இணைந்து சலுகைத் தொடரில் (Concessive Clause) இடம் பெறுகிறது.

20. அ. அவன் வந்தாலும் நான் வரமாட்டேன்.
ஆ. நீ கேட்டாலும் நான் இதைத்தரமாட்டேன்

செயல் தொடர் நிலையிலும் உம் இடம் பெறுகிறது.

21. அ. அவள் என்னைப் பார்த்ததும் நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.
ஆ. உன் கடிதம் கிடைத்ததும் நான் பதில் எழுதுகிறேன்.

உம் விகுதி மேற்கூறிய நான்கு இடங்களிலும் வினைத் தொடருடன் மட்டுமே ஒரு குறிப்பிட்ட நிலையில் வெவ்வேறு தெளிவான பொருளில் இடம் பெறுகிறது. மேலும் குறிப்பிட்ட தொடரமைப்புகளில் உம் இடம் பெறுவது கட்டாயமாக (Obligatory) அமைந்திருக்கிறது. நம் கூற்றின்படி சலுகைத் தொடரில் சலுகை விகுதியாக ஓர் உம் விகுதியும், பெயரெச்சத் தொடராக ஓர் உம் விகுதியும், கட்டளை விகுதியாக ஓர் உம் விகுதியும், சொல் தொடர் விகுதியாக ஓர் உம் விகுதியும் அமைந்துள்ளன. வேற்றுமை உருபு சாரியை போன்றனவெல்லாம் இலக்கண (grammatical Classification) இடைச்சொல்லாகக் கருதப்படு மானால் மேற்கூறிய நான்கு விகுதிகளும் இடைச்சொற்களே. ஆனால் பெயரிடத்தும் வினையிடத்தும் தமக்கு இயல்பின்று

வரவேண்டும் எனும் பண்புக் கூறுகளை (Characteristic feature) அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், பெயரோடு வராமல் வினையோடு மட்டும் குறிப்பிட்ட தொடரமைப்பில் குறிப்பிட்ட பொருளோடு வரும் இந்நான்கு விகுதிகளும் இடைச்சொற்களாக அமையாது. கூட்டுப்பொருளில் அமைந்த உம் எனும் இடைச்சொல் மட்டுமே இடைச்சொல்லாகும். கூட்டுப்பொருளில் அமைந்த உம் எனும் இடைச்சொல் சில சொற்களில் தன்மைகளாகவும், தொடரியல் கூட்டமைப்புகளாகவும் சிற்சில இடங்களில் அடிப்படைப் பொருளிலிருந்து பொருள நீட்சிப்பெற்று வழங்கப்படுகிறது என்பதை நாம் அறியலாம். ஏனைய உம் விகுதிகள் பல பொருள் ஒரு சொல்லாக (Homonym) அமைந்துள்ள இலக்கணப் பொருள் விகுதிகளாகும்.

*13- 9- '87 அன்று புதுவையில் நடைபெற்ற சுந்தரக் குமரனார் இலக்கணக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரையின் திருந்திய படிவம்.

உதவிய நூல்கள்

1. Arokianathan, S. 1981. Tamil Clitics Trivendrum DLA Publication.

2. Israel, M. 1973. The Treatment of Morphology in Tolka:ppiam. Madurai: Madurai University.

3. தொல்காப்பியம்: சேனாவரையர் உரை. (கந்தசாமி பதிப்பு) சென்னை: சைவசித்தானந்த கழகம்.

மொழியியல் 10: 3 & 4 (1987)

முன்னிலைப் பெயர்

ச. வையாபுரிப்பிள்ளை*

(**சுருக்கம்:-** முன்னிலைப்பெயர்களின் வரலாற்றை இக் கட்டுரை ஆராய்கிறது. ஆராய்ச்சியின்போது முன் னிலைப்பெயர்கள் பற்றிய நன்னூல் சூத்திரங்களிற் காணப்படும் ஒருசில குறைகள் எடுத்துக்காட்டப்படு கின்றன. முன்னிலைப்பன்மைப் பெயராகிய நீம் என்ப தன் பழைமையும் அதன் பின்னைய திரிபுகளும் இலக் கியம், இலக்கணம், அவற்றுக்கெழுந்த உரைகள் ஆகிய வற்றிலிருந்து சிறந்த சான்றுகளுடன் விளக்கப்படு கின்றன.)

இனி, 'உன்' முதலிய சொற்களை நோக்குவோம். இது 'நீ' என்னும் முன்னிலை யொருமைச் சொல், வேற்றுமை உருபேற் குமிடத்துத் திரிந்துவரும் வடிவமாகும். தன்மை முதலிய இடப் பெயர்கள் வேற்றுமை கொள்ளுமிடத்துத் திரிந்து வருதல் மொழிகள் பெரும்பாலானவற்றிற்கு ஒத்த வழக்காம். வடமொழி யில் அஹம் என எழுவாய் வேற்றுமையிலும், மாம், மயா, மஹ்யம் முதலியனவாகப் பிற வேற்றுமைகளிலும் வருகின்றன.[1] லத்தின் மொழியில் ego என்பது எழுவாய்; me, mei, mihi, me என்பன பிறவேற்றுமைகள். ஜெர்மன் மொழியில் ich என்பது எழுவாய்; mein (er),[+] mir, mich என்பன பிறவேற்றுமைகள். பிரஞ் மொழியில் je என்பது எழுவாய்; me, moi, mon என்பன பிற வேற்றுமைகள். ஆங்கிலத்தில்; எழுவாய் I me, my என்பன பிற வேற்றுமைகள். திராவிடமொழிகளிலும் இங்ஙனமே வேற்றுமை யில் எழுவாய்கள் திரிந்தனவே. இவ்வழக்கினோடு ஒத்துத் தமிழிலும் நீ என்பது நின் எனத் திரிந்துவரும். தொல்காப்பியர்

---

*பதிப்பாசிரியர்;- அ, காமாட்சிநாதன்.

[+]இதற்கு 'he' என்பது பொருள்.

"நீ யென் னொருபெயர் நெடுமுதல் குறுகும்"
ஆவயின் னகரம் ஒற்ருகும்மே, (உருபியல் 7)

என்றனர். பவணந்தி முனிவரும் இங்ஙனமே கூறினர்.

யான், யாம், நீ, நீர், என் எம், நின் நும் ஆம்பிற (உருபு.8) என்பது நன்னூல். இங்குக் கூறிய நின் என்பதுவே பழமையான வடிவம். பிற திராவிடமொழிகளில் முன்னிலை யொருமைப் பெயர்களை நோக்கி இதனை அறியலாம். சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியர் காட்டும் சொல் வழக்கே காணப்படுகிறது. இவ்விலக்கியங்களில் 'நின்' என்பதுவே[2] யாண்டும் வழங்கப் பட்டுள்ளது. சங்க காலத்து இறுதியில் தோன்றிய கலித்தொகை பரிபாடல் என்ற நூல்களிலும் இவ்வழக்கேயுள்ளது.[3]

நீ என்பதன் பன்மை நீயிர் எனவே தொல்காப்பியர் கூறினர். 'நீயிர் நீயென வருஉங் கிளவி' (பெயர். 34) என்பது சொல்லதிகாரச் சூத்திரம், ஆனால், இவ்வாசிரியர் கருத்தின் படி நும் என்பது நீயிர் எனத்திரிந்ததெனல் வேண்டும்.

அல்லதன் மருங்கின் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இ இடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
(புள்ளி மயங்கியல். 31)

இச் சூத்திரத்தின் கருத்து ஊன்றி நோக்கற் பாலது. நும் என்பது 'நீம், என்றாகிப் பின் நீஇர் என முடிந்ததெனல் அதன் கருத்து. இதனால் நும் என்பது முற்கால வழக்காயிருந்து அதன் பிற்பாடு நீஇர் எனபது கால அடைவில் தோன்றியதென்று தொல்காப்பியர் கொண்டார். தொல்காப்பியர் கருத்து அமைதி யுடையதென்பது மேற்கூறுவதனானே உணரலாகும். 'நன்னூ லார் இச்சொல் வரலாற்றை நுனித்து நோக்கினாரில்லை. எழு வாய் வேற்றுமை திரிபில் பெயரே[4] என்னும் பொது நியதியை மறைத்துக்கொண்டு, நீயிர் என்பதன் பிற்கால வடிவமாகிய நீர் என்பது 'நும்' எனத் திரிந்தது என்றனர்.[5] கால முற்பாடுகளை

அவர் பொருட்படுத்தவில்லை என்பது இதனால் தெளிவாகின்றது. இந்நுண்பொருளில் அவர் பிழைபட்டனர் என்றுதான் கூறவேண்டும். ஆசிரியர் தொல்காப்பியர் நீம் என நிறுத்தியது வெறுங்கற்பிதமன்று. கன்னடத்திலும் கோதமொழியிலும நீம் நீமெ என்பன முறையே காணப்படுதலால், தமிழிலும் ஒரு காலத்து நீம் வழங்கியிருத்தல் வேண்டுமென ஊகிககலாம். ஆனால் தொல்காப்பியர் காலத்து அவ்வழக்கு வீழ்ந்து ,நீஇர் என்பது உலக வழக்கில் புகுந்திருத்தல் வேண்டும். தம் காலத்து வழங்கிய நும் என்ற சொற்கொண்டு வழக்கு வீழ்ந்த சொல்லினைப் புலப்படுத்தி, பிற்கூறிய சொல்லினின்றும் நீஇர் என்பது தோன்றிற்று எனக் காட்டுதலே தொல்காப்பியர் கருத்தாம். கால அடைவை நோக்கி இவர் உண்மை வரலாற்றைக் கூறியுள்ளது பெரிதும் பாராட்டற்பாலதாம். சீவக சிந்தாமணியில் (1932)[a] "நீம்-ஏ, வென்றிக் களிற்றானுழைச் செல்வது வேண்டும் என்றான்', என வருகின்றது. இங்கே நச்சினார்க்கினியர் 'நும் என்னும் சொல் நீஇர் என முழுவதுந் திரியாது மகரம் நிற்பத் திரிந்து நீம் என நின்றது' எனக் குறிப்பெழுதினர். செந்தமிழ் வழக்கொழிந்து நீம் கொடுந்தமிழ் நாடொன்றில் திசைச்சொல்லாய் வழங்கலுற்று எஞ்சி நின்றதனை ஆசிரியர் எடுத்தாண்டனர் என்று கொள்ளுவதே நேரியதாகும். இதுபற்றியே இனி 'நீமென்று ஒரு திசைச் சொல்லுமாம், என்று பக்ஷாந்தரமாக அவர் எழுதியதென்க.

தொல்காப்பியர் அமைத்த நீஇர் என்பதனை ஒழித்து நன்னூலார் (12- ஆம் நூற்றாண்டினிறுதி) நீயிர், நீர், நீவிர் என்ற மூன்றனையும் முன்னிலைப் பன்மைகளாகத் தந்துள்ளார்.

'தான் யான் நான் **நீ** யொருமை: பன்மை தாம்
யாம் நாம் எலாமெலீர் **நீயிர், நீர், நீவிர்**'

(நன். பெயரியல் 30)

என்பது சூத்திரம். இவர் நீஇர் என்பதற்குரிய உடம்படுமெய் தோன்றிய வடிவங்களையே (நீயிர், நீவிர்) கொண்டனர்.

---

a1932- 3

11-ஆம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியத்தில், நீர் என்பது குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதன் உரை, 'நீர் என்பது நீயிர் நீவிர் என ஆதேசமாம்' எனக் கூறுகிறது.[6] 13ஆம் நூற்றாண்டினதாகிய நேமிநாதம்

பேராம்பெயர்; பெயர்த்துப் பேர்த்தாம்; ஓடுவோடாம்;
நீராகும் நீயிர்; எவனென்ப- தோருங்கால்
என் என்னை யென்றாகும்; யாமுதற்பேர் ஆமுதலாம்;
அன்ன பொழுது போதாம்.

எனத் தெரிகின்றது. நீயிர் என்பது நீர்[7] எனத் திரிந்தது. பழையவாய் நடைபெற்று வருஞ் சொற்களில் திரிந்து நடப்பன வற்றை வழுவல்லவென்று அமைத்தலை உணர்த்துதல் நுதலிற்று என்பது பழையவுரை. இதனால் நீர் என்பது வழுவமைதியாதல் தெளியப்படும். முதன்முதல் உலகவழக்கிலே இச்சொல் தோன்றுதல் இயற்கை. ஐயப்பாடியின்றிக் 'காலவரையறை செய்யக்கூடிய இலக்கியங்களை நோக்குவோமானால், கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து முன்னிலைப் பன்மையில் நீர் வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக அப்பர் தேவாரத்தில்,

அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டு **நீர்**
கரும்பற்றப் படத் தூவித் தொழுமினோ (V.12)[b]

என வந்துள்ளது. உலக வழக்குச் சொற்களை மிகுதியாக எடுத்துக் கையாண்டுள்ள தேவாரம், திவ்வியப் பிரபந்தம் முதலியவை தவிர ஏனை இலக்கியங்களில் இச்சொல் வருமாயின் இவற்றை அத்தேவாரம் முதலியனவற்றிற்கு மிகப் பிற்பட்டன வென்று கொள்ளுதல் சொல் வழக்காறொடு (c) பொருந்துவதே யாம். கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திணைமாலை நூற்றைம்பதில்,

'வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க
கோடாது **நீர்** கொடுப்பி னல்லது- கோடா

b. V 1. 2- 1
c வழக்காற்றொடு என்பது சரியான வடிவம்.

எழிலு முலையும் இரண்டிற்கும் முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து’

என வருகின்றது[8]. இந்நூலினை 9-ஆம் நூற்றாண்டினதாகக கொள்ளுதலே நேரிது. சிலப்பதிகாரத்தில் ‘அடிகள் நீரே அருளுக’ (பதிகம், 62) எனவும், ‘அடிகள் நீரே அருளுதிராயின் (X.62), ‘இட்ட சித்தி யெய்துவீர் நீரே’ (XI. 103), ‘பெறுதிர் போலு நீர்’ (XI, 123) எனவும் வருதல் இங்குக் கருதத்தக்கது. பஞ்ச காவியங்களுள் ஒன்றாகிய இதுவும் மேற்குறித்த காலத்த தென்பதற்கு இப்பிரயோகங்களும் சான்றாயமையும்[9]. பிற் காலத்து வழக்கு ‘நீர்’ என்பதனோடு அமைந்து விடவில்லை. நீர்கள் என்பதனை,

அக்கும் ஆமையும் பூண்டன லேந்தி இல்
புக்குப் பல்பலி தேரும் புராணனை
நக்கு நீர்கள் நரகம் புகேன்மினோ
தொக்க வானவரால் தொழுவானையே
(V. 97,14)

என அப்பர் வழங்கியுள்ளார். நீங்கள் என்பதனை,

‘நூலவையார் போல் நீங்கள்
நோக்குமினே யென்றாள்’ (1045)[d]

எனத்திருத்தக்கத் தேவரும்,

‘பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்’
(VI, 27, 1)[e]

என அப்பரும் வழங்கினர். ஆகவே முன்னிலைப் பன்மைப் பெயர்களைக் கால அடைவில்

நீம், நீஇர், நீயிர், நீவிர், நீர், நீயிர்கள்,
நீவிர்கள், நீர்கள், நீங்கள்

d- 1045—1, e vi.27.1-1

என நிறுவலாம். இவற்றுள் நீஇர், நீயிர் என்பன சங்க இலக்கிய காலத்தன. நீர், நீங்கள் என்பன 6-ம் நூற்றாண்டளவில் வழக்கிற் புகுந்து இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. நீம், நீஇர் நீயிர், நீவிர், நீர்கள் இவ்வைந்தும் வழக்கொழிந்து விட்டன. நீயிர்கள் நீவிர்கள் என்பன வீரசோழியத்திற்கு உரைவகுத்த பெருந்தேவனாராற் கொள்ளப்பட்டன;[10] இவையும் வழக்கொழிதனவே. இவற்றுள் சிலவற்றை மீண்டும் வழக்கில் புகுத்துதற்கு ஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் முதலியோர் சில ஆண்டுகட்கு முன்னர் முயன்றனர்.

இனி 'நும்' என்பதை நோக்குவோம். இது சங்க இலக்கியங்களுள் பெருவரவிற்றாயுள்ளது.[11] இதுவே முன்னிலைப் பெயர்களுள் காலத்தால் முற்பட்டதென்பது மேலே குறிக்கபட்டது. முதலில் நின்ற நகர வொற்றுக் கெட்டு 'உம்' எனப் பிற் காலத்தாரால் ஆளப்பட்டது.

> ஒன்றா லுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
> றொற்றியூர் உம் ஊரே யுணரக் கூறீர் (அப்பர். VI,9,8)[f]
> காலவியாப் பொன்விளக்குந் தந்து உம்-ஐக்
> கைதொழுவேன் (சீவக. 1045)[g]

இவ்வாறு நகரவொற்றுக் கெடுதற்கு இரண்டு காரணங்கள் கூறுதல் கூடும். முதலாவது நகரவுகரத்திற்குரிய ஒலியை உச்சரிப்பது சிறிது சிரமமாகும். இவ்வெழுத்தில் தொடங்கும் சொற்களில் பெரும்பாலன உலகவழக்கில் சாதாரணமாய்க் காணப் படுவனவல்ல. காணுமவற்றுள்ளும் ஒருசில நகரவொகரம் முதலியனவாகத் திரித்து உச்சரிக்கப்படும். இதனால் சிரமமின்மை அறியலாம். இரண்டாவது 'சந்தியில்' உம் எனப் பிரிக்கத் தக்கபடி நும் அமைந்து விடுதலும் உண்டு. உதாரணமாக, 'நின்னுமாம்பிற' (நன். உருபு புணர் 8) என்றது, நின், நும் என்றேனும் நின் உம் என்றேனும் பிரிக்க இடங்கொடுக்கும். இது போன்று பிரிந்து. கெட்டு உகர மாத்திரையாய் நின்று

f vi.9.8—1—. g 1045—2

'உம்' என வருதலும் கூடும்[12]. ஆங்கிலத்தில் 'orange' என்ற சொல்லின் சரிதத்தை உணர்ந்தார் இதனை எளிதில் ஒப்புவர்.[13]

உருபேற்றவழி முன்னிலைப் பன்மை வடிவங்கள் மேலை இரண்டனோடு அமைந்து விடவில்லை. நுங்கள், உங்கள் என்பனவும் தொடர்ந்தன.

நுங்கள்-க்கு யானுரைக்கேன் வம்மின் யான் வளர்த்த
கிளிகாள்

திருவாய் (6, 8, 5)[h]

எனவும்,

உன்னுருவிற் சுவை யொளியூறோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்

(அப்பர் VI. 27. 4)[i]

எனவும்,

பொங்குமத மானமே ஆர்வச் செற்றக்
குரோதமே யுலோபமே பொறையே நீங்கள்
உங்கள் பெரு மாநிலத்தி னெல்லை யெல்லாம்
உழறுமிது குறை முடிப்பீர்க் கரிதேயானேல்

(அப்பர் VI. 27. 7)[j]

எனவும் வரும் மேற்கோள்களால் இதனை உணரலாம். இங்குக் கவனிக்கத் தக்கது பிறிதொன்றுளது. நீர்கள், நீங்கள், நுங்கள் உங்கள் என்ற சொற்களில், அஃறிணைப் பன்மைக்குரியதாகத் தொல்காப்பியர் கூறிய 'கள்' விகுதி, பன்மைச் சொற்களோடு சார்த்தி வழங்கப்பட்டுள்ளது. எனவே நும், உம் என்பன பன்மை என்ற உணர்ச்சி மறையத் தொடங்கிய காலத்து, இவ் விகுதி புணர்க்கப்பட்டதாகல் வேண்டும். உருபேற்கும் நிலையில் முன்னிலைக்குரிய சொற்கள் நும், உம், நுங்கள், உங்கள் என்ற

h. 6. 8. 5- 1
i. VI. 27. 4- 1
j. VI. 27. 7- 1, 2

நான்குமாம். இவற்றுள் நும் ஒன்றே மிகப் பழமையானது.[14] மற்றைய மூன்று சொற்களும் பெருந்தேவனாரால் வீரசோழிய உரையில் (காரிகை. 37) காட்டப்பட்டன. மயிலைநாதர் உம் என்றதனை மட்டும் தம் உரையில் கூறினர்.[15] 'உம்' முதலியன 6-ம் நூற்றாண்டளவில் வழக்கில் வந்தனவெனக் கொள்ளலாம்.

இனி, முன்னிலை யொருமையில் உருபேற்றுவரும் வடிவினை நோக்குவோம் 'நின்' என இது வருமென்பது முன்பே குறிக்கப்பட்டது. இதுவே பண்டை இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் பயின்றுவருவது. ஆனால் இதுவும் நாளடைவில் உன் என உருமாறத் தொடங்கிவிட்டது. உன் என்பது பிற்காலத்துத் தோன்றி இன்று வரையும் நிலைத்திருக்கிறது.

> ஒருவனே எம்பிரானே **உன்** திருப் பாதங் காண்பான்,
> (அப்பர் IV. 26. 10)[k]

> அவ்வைக்கு மூத்தமாம னொருமகற்கின்று **உன்** தாதை
> (சீவக. 1046)[l]

என்பனவற்றில் 'உன்' னும்,

> பொன்னானாய் மணியானாய் போக மகனாய்
> பூமிமேல் புகழ்தக்க பொருளே **உன்னை**
> (அப்பர் IV. 95, 7)[m]

என்பதில் 'உன்னை'யும்,

> **உனை** உனு முணர்வை நல்கா
> யொற்றியூ ருடைய கோவே
> (அப்பர் VI, 46. 2)[n]

என்பதில் 'உனை'யும்,

> **உன்னோடு** உடனே யொருகடலில் வாழ்வாரை
> (நாச்சி. திருமொழி 7. 5)[o]

k IV. 26. 10- 3
l 1046- 3
m VI. 95. 7- 3
n IV. 46. 2- 4
o 7. 5-1

என்டதில் 'உன்னோடும்',

உன்னை யெப்போது மறந்திட்டு உனக்கு இனிது
ஆயிருககும்
(அப்பர் IV, 112. 4)[p]

என்பதில் 'உனக்கும்,

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்,
உனது அருளால்
(அப்பர் IV, 94- 6)[q]

வந்து உனது அடியேன மனம் புகுந்தாய்
(பெரிய திருமொழி 111 5—1)[r]

உத்தமன் உனது நாமல்ல தொன்றுரைத்தல் தேற்றான்
(சீவக. 1048)[s]

என்பனவற்றில் 'உனது' ம்,

உன்னுடையவிக்கிரமமொன்றொழிய யாமெல்லாம்
(பெரியாழ் v. 4. 6)[t]

என்பதில் 'உன்னுடைய'வும் வருதல் காணலாம்.

மேற்காட்டியவற்றுள் உருபுகள் பலவும் 'உன்' என்பதனைச் சார்ந்து வந்தமை நோக்கத்தக்கது. இங்ஙனம் பெருவழக்காக வரும் இச்சொல்லினை வீரசோழியம்தான் முதன் முதற் கூறுகின்றது.[16] நன்னூல் இதனைக் கூறாதே விடுத்தொழிந்தது இதற்குரிய காரணம் யாதென்று நோக்குதற்குரியது. இலக்கண ஆசிரியர்கள் வழக்கும் செய்யுளும் என்னும் இரண்டினையும் ஆராய்ந்து நூலியற்றுதல் கடமை. தொல்காப்பியர் இம்முறையில் தமது பேரிலக்கணத்தை இயற்றினார் என அந்நூற்பாயிரம் தெரிவிக்கின்றது. செய்யுள் வழக்கை ஆராய்தல் தானும் எளிதில் இயலுவதன்று. தம் காலம் வரை தமது மொழியில் இயன்றுள்ள நூல்கள் அனைத்தையும் கற்றறிதல்

p IV. 112 4- 3 q IV. 94. 6- 1,2
r. 111. 5.1—1
s. 1048—2
t. V. 4. 6—1

எத்துணை அரிய காரியம் என்பது சொல்லித்தெரிய வேண்டா. நூல்கள் கிடைப்பதற்கு இக்காலத்தில் வாய்த்திருக்கும் வசதிகள் முற்காலத்தில் இல்லை. நூற்றுக்கணக்கில், வேண்டுமானால் ஆயிரக்கணக்கில், பிரதிகளை வெளியிடுதற்கு வேண்டும் அச்சு யந்திரம் முற்காலத்தில் கிடையாது. பிரதிகளைப் பல இடங்களிலும் பரவச் செய்வதற்கு வேண்டும் போக்குவரவு வசதிகளும் இல்லை. இவை போன்றன இல்லாத காலத்து நூல்வழக்கை முற்ற அறிதல் என்பது இயலாத காரியமாம். இதுவே இயலாததாயின், உலக வழக்கை வேண்டிய அளவு அறிதல் தானும் கூடாததொன்றாகவே இருக்கும். என்றாலும் ஓராசிரியர் இவ்விரண்டின் இன்றியமையாமையையும் உணர்ந்து இவற்றை அறிய ஒருவாறு முற்படுவாராயின், அதுவே நமக்கு வியப்பை விளைக்கவல்லது. தொல்காப்பியர் இங்ஙனம் செய்தவர். நன்னூலார் முதலியோரெல்லாம் முன்னோர் நூலின் வழியே சென்றனரே அன்றிப் புதுவதாகத் தம் காலத்துத் தமிழை வேண்டுமளவு ஆராய்ந்தாரென்று கூறுதற்கு இயலவில்லை.

உலக வழக்கை முந்து நூலோர்கள் நன்கு ஆராயவில்லையென்பது ஒருபுறமிருக்க, ஆராயவேண்டும் அவசியமில்லை என்ற கருத்தும் கொண்டிருந்தார்கள். 'உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற ஒரு நியதியை மேற்கொண்டு விட்டார்கள். தம் கருத்தின்படி உயர்ந்த நூலாசிரியர்களது வழக்குத்தான் இவர்களால் கொள்ளப்பட்டது. பக்திநூல்களோ இதற்கு முற்றும் மாறான கொள்கையுடையன. தமிழ்ச் சமுதாயத்தில் பல்வேறு திறத்தினரும் எளிதில் உணர்ந்து ஈடுபடும்படி இந்நூல்கள் அமைந்தன. இன்னிசையோடு பாடுதற்கு உரியன. எனவே சாதாரண மக்களது சொல்வழக்காற்றைப் பெரிதும் பின்பற்றியன. ஆதலால் கல்வியாளர்கள் வழங்காத வழக்குகள் இவற்றில் பெரும்பான்மையாய்க் காணப்படும். இவற்றுள் ஒன்று உன, உன்னை என்ற வரிசை. எனவே இலக்கண நூலோர் இவற்றைப் புறக்கணித்து வந்தனர். உயர்ந்த இலக்கிய ஆசிரியர்களும் இவற்றைக் கையாளாது விடுத்தனர். இவ்வழக்குகளுக்கு கால அடைவில் தகுதியேற்பட்டதன் பின்னரே உயர்ந்த இலக்கிய

ஆசிரியர்கள் இவற்றை ஆளத் தொடங்கினர். ஆகவே, சீவக சிந்தாமணி போன்ற ஓர் உயர்தர இலக்கியத்தில் இவை காணப்படுமாயின், அவ்விலக்கியங்கள் தேவாரம் முதலியவற்றிற்கு மிக பிற்பட்டன என்று எளிதில் கூறிவிடலாம். இவ்வகைச்சொல்லாராய்ச்சியின்றியே சீவகசிந்தாமணி காலத்தாற் பிற்பட்டதென வேறு சரித்திரக் காரணங்களால் துணியப்பட்டிருப்பது இச்சொல்லாராய்ச்சியையும் முடிபையும் வலியுறுத்துகின்றது. கீழ்க்கணக்கு நூலாகிய திணைமாலை நூற்றைம்பதில்,

முலையாலும் பூணாலும் உன்கணதாஞ் சேர்ந்த
இலையாலும் இட்டகுறியை — உலையாது.
நீர் சிதைக்கும் வாய்ப்புதல்வன் நிற்கும் உனை முலைப்பால்
தார் சிதைக்கும் வேண்டா தழூஉ (152)

என்ற செய்யுளில் உன், உனை என்பவை வந்துள்ளன. ஒருகால் இச்செய்யுளில் ஏதேனும் ஐயப்பாடிருப்பின், திணைமொழியைம்பதில் பின்வரும் செய்யுளைக் காண்க:

செந்தாமரை மலரும் செவ்வயல் நல்லூர
நொந்தால் மற்று உன்னைச் செயப்படுவ தென்னுண்டாம்
தந்தாயும் நீயே தரவந்த நன்னலம்
கொண்டாயும் நீயாயக் கால். (36)

இங்கே, உன்னை என்ற சொல்லை ஆசிரியர் வழங்கியிருக்கிறார் என்பதில் சிறிது ஐயமில்லை. கீழ்கணக்கைச் சார்ந்தனவாகப் போற்றப்படுதலாலே இவை உயர்ந்த இலக்கியங்களாகும். மேற்கூறிய நெறியே நோக்கின் இவற்றின் காலம் அப்பரது காலத்திற்கு ஒரு நூற்றாண்டளவாவது பிற்பட்டிருக்கலாம். இங்ஙனம் கீழ்க்கணக்கு நூல்களை எடுத்தாண்டுள்ள சிலப்பதிகாரத்தில் 'உன் பெருந்தானத்துறுதி யொழியாது' (XV. 34) என வருகின்றது. இங்ஙனம் வருதல் இக்காவியம் இன்னும் பிற்பட்டதாதலை உணர்த்துகிறது.*

*நன்றி— "சொற்களின் சரிதம்" (1956) பாரிநிலையம்.

அடிக்குறிப்புகள்

1) aham, mām, mayā, mahyam

2) 'என்பது' என்ற சொல்லின் கடைசியில் நிற்கும் உகரம் குற்றியலுகரம். பின்னர் உயிர் வந்தால் முன் உள்ள சொல்லின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் கெட வேண்டும் என்பது தமிழ்ச் சந்தி விதி (நனனூல் சூ163). ஆனால், இங்கே 'என்பது' என்ற சொல்லின் கடைசியில் உள்ள குற்றியலுகரம் பின்னர் 'ஏ' என்ற உயிர் வந்தபோதும் கெடாமல் முற்றியலுகரம் போல நின்று வகர உடம்படு மெய் பெற்று வந்துள்ளது.

3) குறு. 22-5; நற். 9-3; அக. 2-8; புற. 2-9; ஐங். 29-4 பதி. 11-19; கலி. 2-27; பரி. 1-11; முரு. 272; பொரு 61; பெரு. 38; முல். 20; மது. 176; குறி. 181; மலை. 46.

4) நன்னூல் 294, 246.

5) Ko. niim; Ka. niim; Kur. niim; Malto. niim. (Krishnamurthy, Bh. [1968], Subrahmanyam, P.S (1967-68).

6) வீரசோழியம் 37

7) குன்று முண்டு நீர் பாடினிர் செலினே (110-6) எனவும் நீரும் மண்முழா அமைமின் பண்யாழ் நிறுமின் (152- 14) எனவும், புறநானூற்றுப் பதிப்பில் காணப்படுகின்றன. முற் செய்யுளில் 'குன்று முண்டு பாடினிர் செலினே, என்பது பாடமாதல் வேண்டும். மதுரைக்காஞ்சியில், 'நீர்யா ரென்னாது, (738) எனக் காணப்படுகிறது, இதுவும் 'நீயிர்யா ரென்னாது, என்றிருத்தல் வேண்டும். நீர் என்ற பிற்கால வழக்குப் புறநானூறு முதலியவற்றில் வருதல் அசம்பாவிதமாம். 'பிறர்க்கு நீர், இந்நீர ராகுதிர் என்று' எனவும், 'அனைத்துநீர் யாருள்ளி நோக்கினீர் என்று' எனவும் குறளில் (1319, 1320) வருதல், அவர் காலத்தோடு ஒத்த வழக்கேயாகும்.

8) திணைமாலை நூற்றைம்பது 15

9) வடமொழியிலும் 'பஞ்சகாவ்யம்' என்ற வழக்குக் காணப் படுகின்றது. பஞ்ச மஹா காவ்யாநி ராமாயண ரகு வம்ச குமாரஸம்-பவ மாக கிராதார்ஜுநீய ரூபாணி, (கவிகல் பலதா, 78.) Pañca mahākāvyāni Rāmāyaṇa Raghuvamsa Kumā rasambhava Māgha Kirātārjunīya rūpāṇi (Kavikalpaltā- 78)

10) வீரசோழியம் 37

11) பொரு. 151, பெரு. 104, மலை. 165, நற். 12-9, குறு. 58-1, ஐங். 83-2, பதிற். 20-1, கலி. 6-9, அக. 30-14, புறம். 9-5.

12) திராவிட மொழிகளில் சொல்முதல் நகர மெய் கெடு தல் பொதுவாகக் காணப்படுகிறது:- நீர் > ஈர் > ஈரம். வினைமுற்றில் முன்னிலைப் பன்மை நகரம் இழந்த இர், ஈர் ஆகியன வழங்குகின்றன. எ. கா. வந்தனிர் வந்தீர்.

13) **Orange <* nāraṅga (Skt), nārangī (Hindi). The loss of initial n in Fr, Eng, and Ita.** is usually ascribed to its absorption in the indefinite article in une narange, una narancia" —The Oxford English Dictionary on Historical Principles -p. 169.

14) ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே (புறம். 45) எனப் பதிப்பித்துள்ளது பிழையாதல் வேண்டும். உரையில் 'நுங்குடியன்றோ' என வருதலால் 'தோற்பது நுங்குடியே' என்பதே பாடமெனக் கொள்க. இங்ஙனமே நற்றிணையில் 'கோடேந்தல்குல் தழையணிந்துமோடு' (368) என்பதும், கோ டேந்தல்குல் தழை யணிந்து நும்மோடு என்றிருத்தல் வேண்டும். தொலகாப்பியம், எழுத்து. 187.

[மேற்கண்ட பின் குறிப்புகள் சிறப்புப்பதிப்பாசிரியரால் கொடுக்கப்பட்டவை.]

15) நன்னூல் 16; 16) வீரசோழியம் 37

இக்கட்டுரைக்குத் தொடர்புடைய நூல்கள், கட்டுரைகள்:-

அகநானூறு (1935) கம்பர் விலாசம், சென்னை. ரா. ராகவையங்கார் பதிப்பு.

அப்பர் தேவாரம் (1985) IV, V, VI- திருமுறைகள், **French Institute of Indology Pondicherry.**

இளங்கோவடிகள் (1920) சிலப்பதிகாரம் - உ. வே. சாமி நாதய்யர் பதிப்பு, சென்னை.

ஐங்குறுநூறு (1920) உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

கலித்தொகை (1925) இ. வை. அனந்தராம சென்னை.

குறுந்தொகை (1937) உ. வே. சாமிநாதய்யர் சென்னை.

குறிஞ்சிப்பாட்டு (1918) பத்துப்பாட்டு-உ.வே. ச நாதய்யர் பதிப்பு, சென்

சிறுபாணாற்றுப்படை (1918) பத்துப்பாட்டு உ.வே. நாதய்யர் பதிப்பு, சென்

திணைமாலை நூற்றைம்பது (1981) கணிமேதாவியார் நியூ செஞ்சரி புக்ஹவுஸ், சென்னை.

திணைமொழி ஐம்பது (1981) கண்ணாஞ் சேந்தன செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.

திருத்தக்கத் தேவர் (1969) சீவக சிந்தாமணி: நச் கினியர் உரை'- உ.வே தய்யர் பதிப்பு. சென்

திருமுருகாற்றுப்படை	(1956)	பத்துப்பாட்டு'- உ. வே. சாமிநாதய்யர், பதிப்பு, சென்னை.
திருவாய் மொழி	(1981)	நம்மாழ்வார்-நாலாயிரத் திவ்யப்பிரபந்தம்' திருவேங் கடத்தின் திருமன்றம், சென்னை.
தொல்காப்பியம்	(1941)	தொல்காப்பியம் - சொல்லதி காரம், நச்சர் பவானந்தர் கழகம், சென்னை.
நற்றிணை	(1915)	அ. நாராயணசாமி ஐய்யர் பதிப்பு, சென்னை.
நாச்சியார் திருமொழி	(1981)	ஆண்டாள்-நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்-திரு வேங்கடத்தின் திரு மன்றம், சென்னை.
நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்	(1981)	திருவேங்கடத்தின் திருமன்றம், சென்னை.
நெடுநல் வாடை	(1956)	பத்துப்பாட்டு, உ.வே. சாமி நாதய்யர் பதிப்பு, சென்னை.
நேமிநாதம்	(1977)	குணவீர பண்டிதர் பழைய உரை, கா.ர. கோவிந்தராச முதலியார் பதிப்பு-சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
பட்டினப்பாலை	(1956)	பத்துப்பாட்டு-உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.
பத்துப்பாட்டு	(1956)	உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

பதிற்றுப்பத்து (1949) உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

பரிபாடல் (1980) உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

பவணந்தி (1925) நன்னூல் - சங்கர நமச்சிவாயர் உரை - உ. வே. சாமி நாதய்யர் பதிப்பு, சென்னை.

புத்தமித்திரனார் (1970) வீரசோழியம்- பெருந்தேவனார் உரை - கா.ர. கோவிந்தராச முதலியார் உரை. கழகம்.

புறநானூறு (1971) உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

பெரியதிருமொழி (1981) திருமங்கையாழ்வார்-நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்-திருவேங் கடத்தான் திருமன்றம்,சென்னை.

பெரியாழ்வார் திருமொழி (1981) பெரியாழ்வார்-நாலாயிரத் திவ்யப்பிரபந்தம்- திருவேங்கடத் தான் திருமன்றம். சென்னை.

பெருந்தேவனார் (1970) வீரசோழிய உரை-சைவசித் தாந்தகழகம், சென்னை.

பெரும்பாணாற்றுப் படை (1956) பத்துப்பாட்டு-உ. வே. சாமிநா தய்யர், பதிப்பு, சென்னை.

பொருநராற்றுப் படை (1956) பத்துப்பாட்டு 'உ.வே, சாமிநாத ய்யர் பதிப்பு, சென்னை.

மதுரைக் காஞ்சி (1956) பத்துப்பாட்டு உ, வே. சாமிநா தய்யர் பதிப்பு, சென்னை.

மலைபடுகடாம் (1956) பத்துப்பாட்டு - உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

முல்லைப்பாட்டு (1956) பத்துப்பாட்டு - உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை.

Agesthialingom, S. (1977) 'A Grammar of old Tamil,- with Index of Patiṟṟpattu, Annamalai University.

Andiappan, D. (1970) 'DescriptiveG rammar of Kalittokai' with index' Ph.D. Thesis Kerala University.

Elayaperumal, M (1975) 'Grammar of Aiṅkuṟunuuṟu' with index, Kerala University.

Index of Ancient Tamil literature (1968-70) 3. vols, French Institute of Indology. Pondicherry.

Kamatchinathan, A. (1964) 'Grammatical study of Naṟṟiṇai, with Index Ph.D. thesis, Kerala University.

Kandaswamy S.N. (1962) 'Paripaaṭal-A Linguistic study' with index, M. Litt. Thesis, Annamalai University,

Krishnambal, S.R. (1974) 'Grammar of Kuṟuntokai' with Index, Kerala University

Krishnamurthy, Bh. K. (1968) 'Dravidian Pronouns' Studies in Indian Linguistics, Deccan College, Poona.

Subramanyam P.S. (1968) The personal pronouns in Dravidian, Bulletin of the Deccan college, Poona.

Sundaram, RM. (1964) 'Grammatical Study of pattupaaṭṭu' with Index Ph.D. thesis, Kerala University.

மொழியியல் 10: 3 & 4 (1987)

வங்கமொழியிலிருந்து சொல்விளையாட்டுக்களை மொழிபெயர்க்கும்போது ஏற்படும் மொழியியல் பிரச்சனைகள்

இரா. பானுமதீ.

கல்கத்தாப் பல்கலைக் கழகம்.
கல்கத்தா.

[சுருக்கம் வங்கமொழியிலிருந்து சொல் விளையாட்டுக் களை மொழி பெயர்க்கும்போது சில மொழியியற் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அவற்றுள் இரண்டனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.]

சொல் விளையாட்டுக்கள் மொழி பெயர்ப்பாளருக்கு ஓர் அறை கூவலாகும் என்று இத்துறையில் ஈடுபட்டிருக்கும் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

''சொல் விளையாட்டுக்களை மொழிபெயர்ப்பது ஏறத்தாழ இயலாத செயல்'' என்கிறார் நைடா.[1]

''மயக்கச் சொற்கள், சிலேடைகள், சொல்விளையாட்டுக்கள் ஆகியவையே மொழிபெயர்ப்பில் மிகக் கடினமான பிரச்சனை களை ஏற்படுத்துகின்றன. இவற்றுள் சிலவற்றை மொழி பெயர்க்க இயலாத காரணத்தால் இவை அமைந்திருக்கும் பகுதியை மொழிபெயர்க்காமல் விடுவதைத் தவிர வேறு வழி யில்லை.'' என்பது பாட்ரிக் வாடிங்க்டனின் கருத்து.[2]

வங்கமொழியிலிருந்து சொல்விளையாட்டுக்களை மொழி பெயர்க்கும்போது பலவகையான மொழியியற் பிரச்சனைகள் எழுகின்றன. அவற்றுள் சொல்விளையாட்டுக்களை மொழி பெயர்ப்பதில் சொற்களின் பொருட்பரப்பு ஏற்படுத்தும் பிரச்சனைகளும், மூல மொழிக்கும் மொழிபெயர்ப்பு மொழிக்கு மிடையே உள்ள ஒலியன் வேறுபாடுகளால் சொல்விளையாட்டுக்

களை மொழிபெயர்ப்பதில் ஏற்படும் பிரச்சனைகளும் இக் கட்டுரையில் ஆயப்பட்டுள்ளன.

I. சொற்களின் பொருட்பரப்பும் சொல்விளையாட்டுக்களை மொழி பெயர்ப்பதில் அவை ஏற்படுத்தும் பிரச்சனைகளும்:-

ஒவ்வொரு மொழியிலும் பெரும்பாலான சொற்கள் ஒரே ஒரு பொருளைக் குறிப்பதில்லை. அவை ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களடங்கிய பொருட்பரப்பைக் கொண்டு உள்ளன.

"ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும்
பல பொருள் குறித்த ஒரு சொல்லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் ஆகும்."
(நன்னூல்: 272)

என்று நன்னூல் சொற்களின் பல பொருள் குறிக்கும் தன்மையைப்பற்றிக் குறிப்பிடுகின்றது.

"சொற்கள் ஒரே ஒரு பொருளைக் குறிக்காமல் ஒரு பொருட்பரப்பைக் கொண்டுள்ள காரணத்தாலும்...... என்று நைடாவும் சொற்களின் பல பொருள் குறிக்கும் தன்மையைப் பற்றிக் கூறுகிறார்.[3]

இவ்வாறு சொற்கள் ஒரு பொருளைக் குறிக்காமல் ஒரு பொருட் பரப்பைக் கொண்டுள்ளமையால் சொல்விளையாட்டுக் களுள் ஒரு முக்கிய வகையான சிலேடையை அமைக்க முடிகிறது.

சிலேடையை மொழி பெயர்ப்பதில் சொற்களின் பொருட் பரப்பு சில பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றது.

மூலமொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் அதே பொருட்பரப்பைக் கொண்ட ஒரு சொல் மொழி பெயர்ப்பு மொழியில் பெரும்பாலும் இருப்பதில்லை.

"ஒரு மொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் முற்றிலும் இணையான சொல் பிற மொழியிலும் உள்ளது. என்னும்

கருத்து அனுபவத்தோடு பொருந்தி வரவில்லை....... பொருத்தமான சொல்லைத் தேடுவதில் மொழிபெயர்ப்பாளர் பல பிரச்சனைகளைச் சந்திக்கிறார்.[4] என்று தியோடர் சாவ்ரி சொல்கிறார். மூலமொழிக்கும் மொழிபெயர்ப்பு மொழிக்குமிடையே சொற்களின் பொருட்பரப்புகளிலுள்ள இவ்வேறுபாடு சிலேடையை மொழிபெயர்பபதில் பிரச்சனை ஏற்படுத்துகின்றது.

இப்பிரச்சனைகளை நன்கு புரிந்து கொள்ள மூல மொழியிலும், மொழிபெயர்ப்பு மொழியிலும், சொற்களின் பொருட்பரப்புகள் கொண்டுளள தொடர்புகளைப் பற்றிய அறிவு இன்றியமையாதது. ஆகவே அவற்றைப்பற்றிய விளக்கம் முதற்கண் தரப்பட்டுள்ளது.

சொற்களின் பொருட்பரப்புகள் இரு மொழிகளிலும் கொண்டுள்ள தொடர்புகளை ஐவகைப்படுத்தலாம். அவை வருமாறு:-

(வங்கமொழி 'அ' என்றும் தமிழ் 'ஆ' என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளன.)

வகை: 1.

இருமொழிகளிலும் ஒரே பொருட்பரப்பைக் கொண்டிருத்தல்:-

அ, ஆ.

எடுத்துக்காட்டு:-

இரு மொழிகளிலும் முற்றிலும் ஒரே வடிவத்தையுடைய சொற்கள்:

bākki அ, ஆ.

(adj)
remaining, outstanding, unrealized or unpaid, over due. (n) remainder, the balance, the arrears,

ஏறத்தாழ ஒத்த வடிவத்தையுடையசொற்கள்.

அ. -āscɔrjɔ.

ஆ. -āccariyam.

அ, ஆ
amazlment, admiration, surprise, astonishment, wcnder.

வகை:- 2

இரு மொழிகளிலும் அவ்வவ்மொழிக்கேயுரிய பொருட்பரப்பும் பொதுவாக ஒரு பொருட்பரப்பும் இருத்தல்.

அ	அ ஆ	ஆ

எடுத்துக்காட்டு:-

முற்றிலும் ஒரே ஒலியை உடைய சொற்கள்

muṣṭi

அ	அ ஆ	ஆ
cupped palm of the hand a handle, a half, firm hold grip	fist, a hand ful	blow with the fist, alms.

ஏறத்தாழ ஒத்த ஒலியையுடைய சொற்கள்.

அ — ɔiśɔrjɔ.

ஆ — aiśvariam.

அ	அ ஆ	ஆ
Splendour, magnificence, glory, god head, supremacy, over-londship, majesty, super natural person, obtained through ascetici-sm, divine grace.	wealth, riches, divinity.	prosperity, felicity.

வகை 3

'அ' மொழிக்கேயுரிய ஒரு பொருட் பரப்பும் இரு மொழிகளுக்கும் பொதுவான ஒரு பொருட்பரப்பும் இருத்தல்.

அ	அ ஆ

எடுத்துக்காட்டு:

முற்றிலும் ஒரே வடிவத்தையுடைய சொற்கள்:

Śrișți

அ making, production, designing, institution, instituting, something made or instituted, the universe.	அ ஆ creation, what is created.

ஏறத்தாழ ஒத்த வடிவத்தையுடைய சொற்கள்:-

அ- mośi
ஆ- maśi

அ Soot, a dark stain or spot.	அ ஆ ink.

வகை : 4

'ஆ' மொழிக்கேயுரிய ஒரு பொருட்பரப்பும் இரு மொழிகளுக்கும் பொதுவான ஒரு பொருட்பரப்பும் இருத்தல்.

அ ஆ	ஆ

எடுத்துக்காட்டு.

முற்றிலும் ஒரே வடிவத்தையுடைய சொற்கள்.

nir.

அ	ஆ
ஆ water army liquid	sea, juice, wine, mois, ture, nature, quality, state bustre in a gem.

ஏறத்தாழ ஒத்த ஒலியை உடைய சொற்கள்:

அ — Kuli.
ஆ — Kūli.

அ	ஆ
ஆ a porter, a labourer.	1. Hire, wages, pay, daily, pay 2. fare freight 3. Rent 4. A hired servant

வகை : 5

இரு மொழிகளிலும் முற்றிலும் வெவ்வேறான பொருட் பரப்பைக் கொண்டிருத்தல்.

அ		ஆ

எடுத்துக்காட்டு.

முற்றிலும் ஒரே வடிவத்தையுடைய சொற்கள்.

ruju

அ	ஆ
1. Submitted, preferred, brought before a court, filed 2. Straight facing.	proof

ஏறத்தாழ ஒரே வடிவத்தையுடைய சொற்கள்.

அ — Prɔtāp

ஆ — Pradabam

அ	ஆ
might, power prowess domin-ce, ring influ-ence, neat.	fame, glory, bravery, great-ness.

இங்கு இரண்டு வகைச் சொற்களைக் குறிப்பிட வேண்டும்

(1) இரண்டு மொழிகளுக்கும் பொதுவாகவுள்ள முற்றிலும் அல்லது ஏறத்தாழ ஒரே வடிவத்தையுடைய சொற்கள்:-

தமிழும் வங்க மொழியும் இரு வேறு மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவை. தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. வங்கமொழி மாகதி, பிராகிருத மொழியிலிருந்து தோன்றிய இந்தோ ஆரிய மொழிக் குடுமபத்தைச் சேர்ந்த மொழி. இவ்விரு மொழிகளும் வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவையாக இருப்பினும் முற்றிலும் அல்லது ஏறத்தாழ ஒரே வடிவத்தையுடைய சொற்கள் நூற்றுக் கணக்கில் இவ்விரு மொழிகளுக்கும் பொதுவாக உள்ளன.

(2) இரண்டு மொழிகளிலுமுள்ள அவ்வவ் மொழிக்கேயுரிய சொற்கள்.

முதல் வகைச் சொற்களுக்கு மட்டும் மேலே எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் வகைச் சொற்களின் பொருட் பரப்புகளும் இரு மொழிகளிலும் இவ்வைந்து வகைத் தொடர்புகளையே கொண்டுள்ளன.

இவ்வைந்து வகைகளுள் முதல் வகையும் நான்காம் வகையும் சிலேடையை மொழிப்பெயர்ப்பதில் எவ்விதப் பிரச்சினையும் ஏற்படுத்துவதில்லை.

முதல் வகையில் மூல மொழிச் சொல்லும் மொழிபெயர்ப்பு மொழிச்சொல்லும் ஒரே பொருட்பரப்பைக் கொண்டிருப்பதால்

மூல நூலிலுள்ள சிலேடை எந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களைக் குறித்தாலும அப்பொருள்கள மொழிபெயர்ப்பு மொழிச் சொல்லின் பொருட் பரப்பிலும் இருக்குமாதலால் அச்சிலேடையை மொழிபெயர்க்க இயலும்.

நான்காம் வகையில் மொழிபெயர்ப்பு மொழிச் சொல் தனக்கேயுரிய ஒரு பொருட் பரப்பையும் மூல மொழிச் சொல் லுடன் பொதுவான ஒரு பொருட்பரப்பையும் கொண்டிருப் பதால் மூல நூற் சிலேடை எந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களைக் குறித்தாலும் அச்சிலேடையை மொழிபெயர்க்க இயலும். இவ்விரு வகைகளிலும் மூல மொழிக்கு மட்டுமேயுரிய பொருட்பரப்பு இல்லை.

இரண்டாவது வகையில் இருசொற்களுக்கும் இரு மொழிகளிலும் அவ்வவ் மொழிக்கேயுரிய பொருட் பரப்பும் பொதுவாக ஒரு பொருட் பரப்பும் இருக்கின்றன. மூன்றாவது வகையில் 'அ' மொழிக்கேயுரிய ஒரு பொருட்பரப்பும் இரு மொழிகளுக்கும் பொதுவான ஒரு பொருட் பரப்பும் இருக்கின்றன. இவ்விரு வகைகளிலும் மூலமொழிக்கேயுரிய பொருட் பரப்பு உள்ளது. ஆகவே இவ்விரு வகைப் பொருட் பரப்புத் தொடர்பு களைக் கொண்ட சொற்களால் அமையும் சிலேடைகள் இரண்டு வகைப்படுகின்றன. (1) மொழிபெயர்க்கக கூடிய சிலேடைகள். மூல நூலிலுள்ள சிலேடைச் சொல்லின இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்கள் இரு மொழிச் சொற்களுக்கும் பொதுவாகவுள்ள பொருட் பரப்பில் இருந்தால் அச்சிலேடையை, மொழி பெயர்க்க முடியும்.

(2) மொழிபெயர்க்க இயலாத சிலேடைகள்: மொழி பெயர்க்க இயலாமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவை: (அ) மூல நூற் சிலேடையின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்கள் மூல மொழிக்கு மட்டுமே உரிய பொருட் பரப்பில் இருந்தால் அச்சிலேடையை மொழிபெயர்க்க இயலாது. (ஆ) மூல நூலிலுள்ள சிலேடைச் சொல்லின் பொருள்களுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை மூல மொழிக்கு மட்டுமே உரிய பொருட்பரப்பிலும் எஞ்சியவை பொதுப் பொருட்பரப்பிலும் இருந்தால் அச்சிலேடையை மொழிபெயர்க்க இயலாது.

ஐந்தாவது வகையில் மூல மொழிச் சொல்லும் மொழி பெயர்ப்புமொழிச் சொல்லும் முற்றிலும் வெவ்வேறான பொருட் பரப்புகளைக் கொண்டுள்ளன. மூல நூலிலுள்ள சிலேடைச் சொல் குறிக்கும் பொருள்களுள் ஒன்று கூட மொழிபெயர்ப்பு மொழிச் சொல்லின் பொருட் பரப்பில் இருக்காதாகையால் மூலச் சிலேடையை மொழி பெயர்ப்பது இயலாத செயலாகிறது.

கீழே மொழிபெயர்க்கக் கூடிய சிலேடைகளுக்கும் மொழி பெயர்க்க இயலாத சிலேடைகளுக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டு தரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டுகள் வங்கச் சிறுகதைக ளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

மொழி பெயர்க்கக் கூடிய சிலேடைகள்:-

எடுத்துக்காட்டு:

"ஸ்திரீ ரத்ன சாடா அன்ய கோறோ ரத்னேர் ப்ரதி அமார்லோப் சிலோ நா.,"[5]

இவ்வெடுத்துக்காட்டில் ஒரே வாக்கியத்தில் ஒரு சொல்லை இரு முறை இரு வேறு பொருள்களில் பயன் படுத்தியுள்ளார் ஆசிரியர்.

வங்கமொழியில் 'ரத்ன' என்னும் சொல்'a jewel, the best specimen of a class ஆகிய இரு பொருள்களடங்கிய சிறு பொருட் பரப்பைக் கொண்டுளளது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டில் முதலில் 'the best specimen of a class' என்ற பொருளிலும் இரண்டா வதாக 'jewel' என்ற பொருளிலும் 'ரத்ன' பயன்படுத்தப் பட்டுள்ளது.

தமிழிலும் இச்சொல்லின் பொருட் பரப்பில் மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு பொருள்களும் உள்ளன, ஆகவே இச்சிலேடை மொழிபெயர்க்கக் கூடியது. மூல நூல் வாக்கி யத்தை "ஸ்திரீ ரத்தினத்தைத் தவிர வேறு எந்த ரத்தினத் திலும் எனக்கு நாட்டம் இல்லை." என்று மொழி பெயர்த்தால் மூலச் சிலேடையை மொழி பெயர்ப்பிலும் தர இயலும்.

மொழி பெயர்க்க இயலாத சிலேடைகள்.

எடுத்துக்காட்டு.

இரவீந்திர நாத தாகூரின் சிறுகதைத் தலைப்பான 'சுட்டி' மொழிபெயர்க்க முடியாத சிலேடையாகும். இச்சிறுகதையின் சுருக்கம் வருமாறு:

'படிக்' குறும்புத்தனமும் பொல்லாத்தனமும் நிறைந்த பதினான்கு வயதுப் பையன். கைம்பெண்ணான அவனுடைய தாய்க்கு அவன் அடங்காத காரணத்தால் அவனுடைய தாய் மாமன் அவனைத் தம்முடன் கல்கத்தாவுககு அழைத்துச் சென்று அஙகு ஒரு பள்ளியில் சேர்க்கிறார். மாமியின் கண்களுக்கு அவன் வேண்டாத விருந்தாளியாகிறான். மாமனின் மகனும் அவனைப பலவிதத்திலும் துன்புறுத்துகிறான். பள்ளியிலும் 'படிக்' தனிமையை உணர்கிறான். இந்நிலையில் தரையில் போட்ட மீனாகத் துடிக்கும் 'படிக்' தன்கிராம வாழ்க்கைகாக ஏங்குகிறான். தன்னை மீண்டும் கிராமத்தில் கொண்டுவிடும்படி மாமனிடம் கூறுகிறான். அவர் விடுமுறை விட்டதும் கொண்டு விடுவதாக கூறுகிறார். 'படிக்' விடுமுறைக்காக ஆவலுடன் காத்திருக்கிறான்.

ஒரு நாள் 'படிக்' பாடபுத்தகத்தைப் பள்ளியில் தொலைத்து விடுகிறான். அதனால் வீட்டில் அவன் நிலைமை இன்னும் மோசமாகிறது. கொடுமை தாங்காமல் வீட்டை விட்டு ஓடி விடுகிறான். 'படிக்' காவல் துறையினர் அவனைத் தேடிக் கண்டு பிடித்து வீட்டில் சேர்க்கின்றனர். 'படிக்'குக்குக் கடுமையான காய்ச்சல் அடிக்கிறது. நினைவிழந்த நிலையில் தனக்கு எப்போது விடுமுறை விடும் என்று பிதற்றுகிறான். இரண்டு நாட்களுக்குப் பிறகு இறந்து விடுகிறான்.

வங்க மொழியில் 'சுட்டி' என்னும் சொல் 'leisure, recess, break, break up, a holiday, a vacation, a leave of absence, retirement, relief, release.' ஆகிய பொருள்களடங்கிய பொருட் பரப்பைக் கொண்டுள்ளது.

இச் சிறுகதையின் தலைப்பு விடுமுறை (vacation), விடுதலை (release), துன்பம் நீங்குதல் (relief), ஆகிய மூன்று பொருள்களைக் குறிக்கின்றது. இச்சிறுகதையில் 'படிக்' கின் பள்ளி விடுமுறை யாவராலும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒருமுக்கிய நிகழ்ச்சி. ஆகவே கதைத் தலைப்பு இப்பொருளைக் குறிப்பதாகக் கொள்ளலாம். கதை இறுதியில் 'படிக்' இறக்கிறான். அவனுக்குப் பிறவித் துன்பத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது. ஆகவே கதைத் தலைப்பு பின்னிரு பொருள்களை ஒருங்கே குறிப்பதாகவும் கொள்ளலாம். இக்கதையின் இறுதி வாக்கியம் இக்கதைத் தலைப்பு மூன்று பொருள்களைக்குறிப்பதைக் காட்டுகிறது.

''படிக்' திரும்பிப் புரண்டவாறு கண்கள் எங்கோ நிலைக்க 'எனக்கு லீவு (சுட்டி) விட்டாச்சும்மா. நான் வீட்டுக்குப் போறேன்.' என்று பிதற்றினான்.''

நினைவிழந்த நிலையீல் தனக்கு 'சுட்டி' கிடைத்து விட்டதாகவும் தான் வீட்டுக்குப் போவதாகவும் பிதற்றும்போது 'சுட்டி' அவன் மனம் ஏங்கிய, அவன் அடிமனதில் பொதிந்திருந்த விருப்பமாகிய வடுமுறையைக் குறித்து அவன் பிதற்றுவதாகக் கொள்ளலாம். ஆசிரியர் அவனுடைய ஆன்மாவுக்கு இவ்வுலகத் துன்பங்களிலிருந்து விடுதலை கிடைக்கப் போவதை இறக்கும் தறுவாயிலிருக்கும் அவன் வாய் மூலம் குறிப்பாகக் கூறுவதாகக் கொள்ளலாம். இங்கு 'பாடி' (வீடு) என்ற சொல்லின் சொந்த ஊர், இறைவனடி ஆகிய இரு பொருள்களும் முறையே விடுமுறை, விடுதலை ஆகிய இரு பொருள்களுடன் பொருந்தி நிற்கிறது. அதாவது 'படிக்' தனக்கு விடுமுறை கிடைத்து விட்டதாகவும் தான் சொந்த ஊருக்குப் போகப் போவதாகவும் பிதற்றுவதாகக் கொள்ளலாம்; அல்லது அவனுடைய உயிர் இவ்வுலகத் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று இறைவனடியைச் சேரப் போவதை ஆசிரியர் குறிப்பாக அவன் வாய்மூலம் கூறுவதாகக் கொள்ளலாம்.

விடுமுறை, விடுதலை,(துன்பம் முதலியவை) நீங்குதல் ஆகிய மூன்று பொருள்களடங்கிய பொருட் பரப்பைக் கொண்ட ஒரு சொல் தமிழில் இல்லை. ஆகவே இச்சிலேடை மொழி பெயர்க்க இயலாத சிலேடையாகும்.

II மூல மொழிக்கும் மொழிபெயர்ப்பு மொழிக்குமிடையே உள்ள ஒலியன் வேறுபாடுகளால் மொழிபெயர்ப்பில் ஏற்படும பிரச்சனைகள்:-

எந்த இரு மொழிகளும் ஒரே ஒலியன்களைக் கொண்டிருப் பதில்லை. ஒவ்வொரு மொழிக்கும் அதற்கு மட்டுமேயுரிய சில ஒலியன்கள் உள்ளன. தமிழும் வங்க மொழியும் இதற்கு விதி விலக்கல்ல. இவ்விரு மொழிகளிலும் சில பொதுவான ஒலியன் கள் இருப்பதோடு அவ்வவ் மொழிக்கேயுரிய சில ஒலியன்களும் உள்ளன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் தமிழுக்கும் வங்க மொழிக்கும் பொதுவான உயிர், மெய் ஒலியன்களும் அவ்வவ் மொழிக்கேயுரிய உயிர், மெய் ஒலியன்களும் தரப்பட் டுள்ளன:-

இரு மொழிகளுக்கும் பொதுவான உயிர் ஒலியன்கள்.

	முன்	நடு	பின்
மேல்	i		u
இடை	e		o
கீழ்		a	

தமிழ் மொழிக்கேயுரிய உயிர் ஒலியன்கள்.

	முன்	நடு	பின்
மேல்	ī	ụ	n̄
இடை	ē		ō
கீழ்		ā	

வங்க மொழிக்கேயுரிய உயிர் ஒலியன்கள்.

	முன்	நடு	பின்
மேல்	ĩ		ũ
இடை	ẽ		õ
கீழ்இடை	x̃		ɔ ɔ
கீழ்		ã	

தமிழுக்கும் வங்க மொழிக்கும் பொதுவான மெய் ஒலியன்கள்:-

	ஈரிதழ் ஒலி	பல்லொலி	அண்பல் ஒலி	நாமடி ஒலி	அண்ண ஒலி	பின் அண்ண ஒலி
ஒலிப்பிலா தடையொலி	p		t	ṭ		k.
ஒலிப்புடை	b		d	ḍ		g.
ஒலிப்பிலா இரண்டிட ஒலி					č	
ஒலிப்புடை					j	
மூக்கொலி	m		n			
மருங்கொலி			l			
உரப்பொலி			r			
அரையுயிர்						yĩ

தமிழ் மொழிக்கேயுரிய மெய் ஒலியன்கள்:-

	நாமடியொலி	அண்ண ஒலி
மூக்கொலி	ṇ	ñ
மருங்கொலி	ḷ	
உரசொலி	ṣ	
தொடரொலி	l	

வங்கமொழிக்கேயுரிய மெய் ஒலியன்கள்.

	ஈரிதழ்	பல்லொலி	நாமடி ஒலி	அண்ண ஒலி	பின் அண்ண ஒலி	குரல்வழித் தடையொலி
ஒலிப்பிலா மூச்சுடைத் தடையொலி	ph	th	ṭh		kh	
ஒலிப்புடை	bh	dh	ḍh		gh	
ஒலிப்பிலா மூச்சுடை இரண்டிடஒலி				čh		
ஒலிப்புடை				ǰh		
மூக்கொலி					ṅ	
வரு						

டொலி		ṭ	
உரசொலி		š	h
அரைஉயிர்	o̧	e	

மொழிகளுக்கிடையேவுள்ள இவ்வேறுபாடுகள் சொல் விளையாட்டுக்களை மொழிபெயர்ப்பதில் பிரச்சனையை ஏற் படுத்துகின்றன.

இரவீந்திர நாத தாகூரின் 'சிதைந்த கூடு' (நஷ்டா நீட் என்னும் நெடுங்கதையிலிருந்து ஓர் எடுத்துக்காட்டு கீழே விளக்கப்பட்டுள்ளது.

"அன்று அமலின் காலடி சத்தத்தைக் கேட்டதும் மன்மத தத்தரின் 'கலகண்டம்' என்னும் பெயருடைய புத்தகத்தை முகத்தருகே வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள்.

... ...
... ...

சாரு பதில் சொல்லாதிருக்கவே அமல் நாற்காலியின் முன்னால் வந்து புத்தகத்தைப் பார்த்தான் மன்மத தத்தரின் 'கலகண்டமா?' என்று கேட்டான்."

இச்சொல் விளையாட்டு 'Kalkantha' 'galagaṇḍa' ஆகிய இரு சொற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஒலி ஒப்புமை யுடைய இச்சொற்கள் முற்றிலும் வெவ்வேறான பொருட் பரப்பை உடையவை. 'Kalakanthạ' வின் பொருள்கள் 'making a sweet low and indistinct sound, sweetly murmuring, warbling, babling, sweet voiced, sweet toned, (fig) composing sweet poems ஆகியவை. galaganda' என்பது கண்டகாமாலை என்னும் நோயைக் குறிக்கிறது. இச்சொல்லின் உட்பொருள் என்பது கழுத்தில் கட்டிய பாரம் அல்லது துன்பம் ஆகும்.

இச்சொல் விளையாட்டமைந்துள்ள பின்னணி வருமாறு.

இந்நெடுங்கதையில் ஒரு பாத்திரமான அமலன் ஓர் எழுத்தாளன். அவனுக்கு மன்மத தத்தர் என்னும் எழுத்தாளரின் படைப்புக்கள் பிடிக்காது.

ஒரு நாள், அவன் மேல் சினங் கொண்டியிருந்த அவனுடைய அண்ணி சாரு, அவன் தன்னுடைய அறைக்கு வருகிற நேரம் மன்மத தத்தருடைய **'Kalakanṭha'** என்னும் கவிதை நூலை முகத்துக்குநேரே பிரித்து வைத்துக் கொண்டு படிப்பதுபோல் பாவனைசெய்கிறாள். அவன் அவளுடைய அறைக்குள் நுழைந்து அவளுடைய நாற்காலியின் முன்னால் வந்து நின்று கொண்டு மன்மத தத்தரின் **'galagaṇḍa'** வா? என்று வேண்டுமென்றே கிண்டலாகக் கேட்கிறான், அதாவது மன்மத தத்தரின் நூல்கள் வாசகர்களுக்குக் கழுத்தில் கட்டிய பாரம் என்று கேலி செய்கிறான்.

கதை நிகழ்ச்சியோடு பின்னிப் பிணைந்துள்ள இச்சொல் விளையாட்டை நீக்கி விட்டு வேறொரு சொல்விளையாட்டை மொழிபெயர்ப்பில் தரமுடியாது. ஆகவே மூலச்சொல்விளையாட்டை மொழிபெயர்ப்பிலும் தர வேண்டியுள்ளது. இங்கு மொழி பெயர்ப்பாளர் இரண்டு வித வேறுபாடுகளைத் தமது வாசகர்களுக்குக் காட்ட வேண்டும். (1) இருசொற்களுக்குமிடையே வுள்ள பொருள் வேறுபாட்டைக்காட்ட வேண்டும். பொருள் வேறுபாட்டைக்காட்ட அடிக்குறிப்பு, அடைப்புககுறிகள் போன றவை. மொழிபெயர்ப்பாளருக்கு உதவுகின்றன. (2) இரு சொற்களுக்குமிடையேவுள்ள உச்சரிப்பு வேறுபாட்டைக்காட்ட வேண்டும். உச்சரிப்பு வேறுபாட்டைக் காட்டுவதில் இருஒலியன் வேறுபாடுகள் பிரச்சனையை ஏற்படுத்துகின்றன. (1) வங்க மொழியில் ஒலிப்புடை ஒலிகளும், ஒலிப்பிலா ஒலிகளும் ஒலியன்களாக விளங்குகின்றன, இவற்றைக் குறிக்க இருவேறு வரி வடிவங்கள் உள்ளன. தமிழில் ஒலிப்புடை ஒலிகளும் ஒலிப் பிலா ஒலிகளும் ஒலியன்களாக விளங்கினாலும் இவற்றைக் குறிக்க வெவ்வேறு வரிவடிவங்கள் இல்லை.

(2) வங்கமொழியில் மூச்சுடைத் தடையொலிகளும் மூச்சுடை இரண்டிட ஒலிகளும் ஒலியன்களாக விளங்குகின்றன. தமிழில் மூச்சுடை ஒலிகளே இல்லை.

'Kalakanthạ' galagaṇḍa' ஆகிய இருசொற்களுக்ளிலுள்ள k, g ஆகிய இரு ஒலிகளுக்கிடையே உள்ள வேறுபாட்டையும் th.ḍ ஆகிய இரு ஒலிகளுக்கிடையே உள்ள வேறுபாட்டையும் மொழிபெயர்ப்பில் காட்ட முடியாது. ஆகவே இவ்விரு சொற்களுக்கிடையேவுள்ள உச்சரிப்பு வேறுபாட்டை மொழிபெயர்ப்பில் காட்ட முடியாது.

மொழியியற் பிரச்சனைகள், குறிப்பாகச் சொல்விளையாட்டுக்களை மொழிபெயர்க்கும்போது ஏற்படும் பிரச்சனைகள் பெரும்பாலும் தீர்க்க முடியாதவையாக இருக்கின்றன. ஆகவே தான் ஜே. பி. போஸ்ட்கேட் "எல்லா மொழிபெயர்ப்புகளும் தீர்க்க முடியாத பிரச்சனையைத் தீர்க்கச் செய்யப்படும் முயற்சியே" 'என்கிறார். சொல்விளையாட்டுக்களை மொழிபெயர்ப்பதில் ஏற்படும் பிரச்சனைகளை நோக்கின் அவர் கூற்று சரியானதே என்று தோன்றுகிறது. இருப்பினும் பழங்காலந்தொட்டு இருந்து வரும் மொழிபெயர்ப்புக்கலை இன்று ஒரு தனித்துறையாக வளர்ந்துள்ளமை அவர் கூற்றினைப் பொய்யாக்குகிறது. மூலச் செய்தியின் பொருள், மொழிபெயர்ப்பின் இயற்கைத் தன்மை ஆகிய இரண்டையும் கருத்திற் கொண்டு தகுந்த ஒரு முறையைக் கையாண்டு மொழிபெயர்க்க வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. "It is almost impossible to reproduce a play on words"

p. 19 . Toward a science of Translation -E.A. Nida.

2. "The most difficult problem of all perhaps, is that o ambiguities, puns and play on words some are absolutely impossible to translate so that there is no question of translating the passages in which they occur,"

p. 7, On translating from Russian prose patrick waddington,

3. "Since words cover areas of meanings and are not mere points of meanings and since in different languages the semantic areas of corresponding words are not identical, it is invitable that the choice of the right word in the receptor language is essential."

P. 15. The theory and practice of translation-E.A.Nida.

4. "The notion that for every word in any one language there is another word accurately equivalent to it in every other language, is not in accordance with experience ... . In his search for the equivalent of a word the translator meets many difficulties."

P. 14. Art of translation- Theodre savory.

P, 14, Art of translation- Theodre savory.

5, P.745., patro O patri, galpa gucha (short story collection) Rabindranath Tagore,

6 "All translations seem to me simply an attempt to solve an insoluble problem.- P. 40. Translation and translations- Theory and practice-J,P. postgate.

இக்கட்டுரைக்குப் பயன்பட்ட அகராதிகள்

1. Samsad Bengali-English Dictionary.

2, Winslow's Tamil-English Dictionary.

3. Lifco Tamil-English Dictionary.

இந்த இதழின் அச்சுப் பிரதிகளைத் திருத்தி உதவியவர் திரு. த. செல்லமுத்து. — சிறப்புப்பதிப்பாசிரியர்.

உறுப்பினர்களுக்கு

மிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் ட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டு றோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் eprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டுபடிகள் அனுப் தல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக றுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டு றோம். கட்டுரைகள் மொழியியல் இதழில் இருபத்தைந்து க்கங்களுக்கு மிகாமலிருக்கும்படி அனுப்பக் கேட்டுக்கொள் றோம்.

மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு

வெளியீட்டாளர் & ஆசிரியர்	டாக்டர் ச. அகத்தியலிங்கம், செயலாளர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613001.
அச்சிட்டோர்	சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர் - 608 002.